தமிழ்ப்புலவர் சரித்திரம்

குமாரசுவாமிப் புலவர்



அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள்

1855—1922.

குமாரசுவாமிப் புலவர்

இயற்றிய

தமிழ்ப்புலவர் சரித்திரம்

புலவரவர்கள்

இளைய புதல்வர்

கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை B. A.

அவர்களால்

புதியன சில சேர்த்து வெளியிடப்பட்டது

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD

புலவரகம்:

மயிலணி, சுன்னாகம்

1951

பதிப்புரிமை] [விலை ரூபா 5·00

புலவரக வெளியீடு—5

முதற் பதிப்பு 1916;   இரண்டாம் பதிப்பு 1951

சைவப் பிரகாச யந்திரசாலை
யாழ்ப்பாணம்

இரண்டாம் பதிப்பு முகவுரை

'தமிழ்ப் புலவர் சரித்திரம்' என்னும் இந் நூல் எமது தந்தையாரவர்களால் 1916 - ம் ஆண்டு இயற்றி வெளியிடப்பட்டது. பிரதிகள் செலவாயினமையால் இரண்டாம் பதிப்பு வேண்டப்பட்டது. முதலாம் பதிப்பிற் சேர்க்கப்படாத புலவர்களுள் 1916 - ம் ஆண்டுக்கு முன் வாழ்ந்த இருபத்தறுவருடைய சரித்திரங்கள் புதிதாக இப்பதிப்பிற் சேர்க்கப்பட்டுள்ளன. சேர்க்கப்பட்ட புலவர்களின் எண்கள் பின்வருவன;— 12, 20, 25, 45, 55, 56, 67, 68, 73, 78, 84, 90, 98, 99, 102, 107, 114, 116, 127, 135, 147, 149, 149, 157, 168, 204. இன்னுஞ் சேர்க்கவேண்டிய புலவர் சிலருளரெனினும், அவர்கள் வரலாறுகள் எம்மால் நன்கு அறியப்படாமையால் சேர்க்க முடியவில்லை. 1916 - ம் ஆண்டுக்குப் பிற்பட்ட புலவர்களின் சரித்திரங்கள் இரண்டாம்பாகமாக விரைவில் வெளியிட எண்ணியிருக்கின்றோம்.

புலவரகம், சுன்னாகம்
யாழ்ப்பாணம்

கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை

உபக்கிரமணிகை

தமிழ்ப் புலவர் சரித்திரம் என்பதற்குத் தமிழ் மொழிக்கண்ணுள்ள இலக்கிய லக்கணங்களைக் கலக்க மறக் கற்றுத் தெளிந்த மெய்யுணர்வும், பிரபந்தஞ் செய்யும் பெருவலியுமுடைய புலவர்களின் சரித்திரமுரைக்கும் நூல் எனப் பொருள்கொள்க.

தமிழ் என்பது பண்டைக்காலந்தொட்டுப் பரத கண்டத்தின் தென் பாகத்தில் வழங்கிவருவதொரு பாஷை. இது தென்மொழி, தென்சொல் எனவும், வடமொழியிலே திராவிடம் எனவும் வழங்குவது. முதற்கண் இறையனாரும், முருகவேளும் அகத்தியனார்க்குச் செவியறிவுறுத்தியுஞ் சில சில கவிகள் பாடியுஞ் சிறப்பித்தது; இறையனார் தம் பெயர் நாட்டி இலக்கணஞ் செய்யப்பெற்றது; இறையனார் முதலிய புலவர்களாலும், காய்சினவழுதி முதலிய பாண்டியர்களாலும் போற்றப்பட்டுச் சங்கங்கள் மூன்றிலுந் தலைமைபெற்றிருந்து பல நூல்களாய் விரிந்து வளர்ந்தது; பின்னும் புலவர்கள் பலராலும் பிரபுத்துவம் மிக்க பெருமக்களாலும் போற்றப்பட்டு வேறும் பல நூல்களாய் விரிந்து பரந்தது; தொண்டர்நாதனைத் தூது விடுத்தது; முதலையுண்ட பாலனை அழைத்தது; எலும்பு பெண்ணுருவாக் கண்டது; மறைக்காட்டிற் பூட்டிய கபாடந் திறந்தது; நீரும் நெருப்பும் அறிந்தது; ஆரும் விரும்பும் அழகு செறிந்தது; தேருந்தோறும் இனிமை பயப்பது.

திருவிளையாடற்புராணம்

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை யழைத்தது மெலும்புபெண் ணுருவாக்
கண்டதும் மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்.

இப்பெருமைகளையெல்லாம் நோக்கியே தமிழ் என்பதை அடைமொழி கொடுத்துச் செந்தமிழ், பைந்தமிழ் முதலியனவாக நந்தமிழ்ப்புலவர் வழங்குவர். செந்தமிழ், பைந்தமிழ், வண்டமிழ், ஒண்டமிழ், தண்டமிழ், மென்றமிழ், இன்றமிழ், தீந்தமிழ், மாண்டமிழ், நறுந்தமிழ், செழுந்தமிழ், பெருந்தமிழ், அருந்தமிழ், நற்றமிழ், சொற்றமிழ், மெய்த்தமிழ், திருத்தமிழ், சுவைத்தமிழ், வடிதமிழ், முதுதமிழ், தெய்வத்தமிழ், கன்னித்தமிழ் என இவ்வாறே புலவர்கள் தத்தம் நூல்களிலே ஆங்காங்கு விசேடித் துரைத்தலையும், அந்தந்த அடைமொழிப் பொருள்களையும் ஆராய்ந் துணர்க.

இத்தமிழும் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என மூவகைப்படும். இயற்றமிழாவது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் இலக்கணம் ஐந்துந் தழுவிவருவது. இசைத்தமிழாவது சுருதி. சுரம், வண்ணம் என்பன தழுவிவருவது. நாடகத்தமிழாவது இயலிசைகளோடு தாளம், அபிநயம், அணி, சுவை என்பன தழுவிவருவது.

மதிவாணர் வெண்பா

எழுத்தொடு சொற்பொருள் யாப்பணி யென்று
வழுத்துஞ் சுருதிசுரம் வண்ணம்—அழுத்தும்
தனியொத்துப் பாவஞ் சரச மிரசம்
பனிரண் டிலக்கணமாம் பார்.

தமிழ் வழங்கும் நாடு வேங்கடமலைக்குத் தெற்கே தென்கடற்கு வடக்கே மேலைக்கடற்குங் கீழைக்கடற்கும் நடுவே விளங்குந் தென்னாடு. இது தமிழ்நாடு எனவும், தமிழகம் எனவும் படும்.

தமிழ் என்பதற்குப் பொருள் கூறுவார் பலராவர். பிரயோகவிவேகநூலார் திரமிளம் என்னும் வடசொல்லே தமிழ் எனத் தற்பவமாயிற்று என்பர். மற்றொருவர் இனிமையுடையது என்பர். பேரிசைகாரருந் "தமிழ்சிமிழினிமையெனுந் தனிப்பொருளாம்" என்பர். மற்றொருவர் ஒப்பில்லது என்பர். மற்றொருவர் தனி ழகரமுடையது என்பர். மற்றொருவர் தகவுடையது என்பர். மற்றொருவர் மூவினமுமுடையது என்பர். இங்ஙனம் பொருள் கூறுவார் இன்னும் பலராவர்.

திரமிளம் என்பதின் தற்பவம் என்றவர் திரமிளம்- அறியாமை நீக்குவது என்பர். இனிமையுடையது என்றவர் தமிழ்-இனிமை; ஆகுபெயர் என்பர். ஒப்பில்லது என்றவர் தமி-ஒப்பின்மை; ழகரம் விகுதி என்பர். தனி ழகரமுடையது என்றவர் தமி-தனி; தனி ழகரம் வடமொழிக்கும் உரியதாகாது தமிழ்மொழிக்கே உரியதாய்த் தனியே நிற்கும் ழகரம் என்பர். தகவுடையது என்றவர் தகு என்னும் பகுதி இறுதி கெட்டு மிழ் என்னும் விகுதி சேர்ந்து முடிந்தது என்பர் மூவினமுமுடையது என்றவர் தமிழ் என்பதிலே தகரம் வல்லினம், மகரம் மெல்லினம், ழகரம் இடையினம் என்பர்.

புலவர் என்பது அறிஞர் எனப் பொருள்படும். புலம் - அறிவு. அர் ஒரு விகுதி. வடநூலார் கூறும் வித்வான் என்பதும் இப்பொருட்டு. வித் - அறிதல்.

வான் ஒரு விகுதி. வித்வானுவான் இருக்கு, யசு, சாமம், அதர்வணம் என்னும் வேதம் நான்கும், சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதி, சோதிடம் என்னும் வேதாங்கம் ஆறும், ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தருவவேதம், அருத்தவேதம் என்னும் உபவேதம் நான்கும், புராணம், நியாயம், மீமாஞ்சை, மிருதி என்னும் உபாங்கம் நான்குமாகிய வித்தைகள் பதினெட்டுங் கற்றவன் என ஆறுமுகநாவலர் கூறுவர். வடநூலார் கூறும் மற்றை நாமங்களாகிய தோடஞ்ஞன், கோவிதன். புதன், பிராஞ்ஞன் முதலிய நாமங்களும் அறிவுடைமை பற்றி வந்த நாமங்களாம். தோடஞ்ஞன் என்னும் நாமத்தாலே நாலுரை முதலியவற்றிற் காணப்படும் வழுக்களை எடுத்துரைத்தலும் புலவர்க்கு முறை என்பது புலப்படும். தோடஞ்ஞன் - வழுக்களை அறிவோன். தோடம் - வழு. ஞன் - அறிவோன்.

புலவராவார் இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழும் முறையே பயின்று ஐந்திலக்கண நெறிகளுந் தழுவிக் கடுங்கவி, இன்பகவி, அருங்கவி, பெருங்கவி என்னும் நால்வகைக் கவிகளையும் பாடும் வலியமைந்த அறிஞர் என நிகண்டுநூலார் கூறுவர் கடுங்கவி — ஆசுகவி. அருங்கவி — சித்திரகவி. புலவரும் கவி, கமகன், வாதி, வாக்கி என நால்வகைப்படுவர். கவியாவான் கடுங்கவி முதலிய நால்வகைக் கவிகளையும் பாடுந் தொழில்வல்ல புலவன். கவி - பண்டிதன். கமகனுவான் பலகலையுணர்ச்சியானும், மதிநலவலியானும் கற்றுணராத நூற்பொருள்களையும் கற்றுணர்ந்தவன் போலக் கற்றுணர்ந்தோர் வியக்குமாறு போதிக்கும் புலவன். கமகன் — போதிப்பவன். வாதியாவான் ஏதுவும் மேற்கோளும் எடுத்துக்காட்டிப் பரமதங்களை

மறுத்துச் சுவமதம் ஒன்றையே நிறுத்தி வாதிக்கும் புலவன். வாதி — வாதஞ்செய்பவன். வாக்கியாவான் அறம், பொருள் முதலிய புருடார்த்தங்கள் நான்கையுந் திறம்பட விரித்துரைக்கும் புலவன். வாக்கி — வாக்கில் வல்லவன்.

புலவராய் முற்காலத்திருந்தார் பலர் அரசர்களும் பிரபுத்தன்மையுடைய செல்வர்களும் விரும்பிக் கொடுக்கும் பொருளும் வரிசையும் பெற்று வறுமை என்பது சிறிதும் அறியாது வாழ்ந்தனர். அரசர், செல்வர் என்னும் அவர்களும் புலவர் கவிகளில் அமைந்து புவிகளிற் பரந்து நிலைபெறும் புகழுடம்புமுடையராய் வாழ்ந்தனர். பெருநில மன்னர்களாகிய சேர சோழ பாண்டியர்களும், குறுநிலமன்னர்களாகிய பாரி,ஓரி, நள்ளி முதலிய வள்ளல்களும், பிற்காலத்துச் சேதுபதியரசர்களும், கல்விப்பிரியர்களாகிய செல்வப்பிரபுக்களும் மிக்க வரிசை கொடுத்தும், தக்க பொருள் கொடுத்தும் புலவர்களைப் போற்றி வந்தார்கள் என்பதும், அவர்கள் புகழ்களும் புலவர் கவிகளால் இன்றும் விளங்குகின்றன என்பதும் பழைய தமிழ் நூல்களைப் படிப்பவர் கேட்பவர் யாவரும் இனிதுணர்வர்.

பதிற்றுப்பத்து என்னும் நூலினுலே சேரர்குலவரசர் புகழ்களும். பட்டினப்பாலை என்னும் நூலினுலே சோழன் கரிகாலன் புகழும், மதுரைக் காஞ்சி எனனும் நூலினுலே பாண்டியன் நெடுஞ்செழியன் புகழும், அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை முதலிய நூல்களினுலே பாரி, ஓரி, நள்ளி முதலிய சிற்றரசர் புகழ்களும் இன்றும் விளங்குகின்றன. வில்லி பாரதத்தினுலே "கொங்கர்குல வரபதி யாட்கொண்டான்" புக

ழும், கம்பராமாயணத்திலே "மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்தன சடையன்" புகழும், அரசகேசரி ரகு வமிசத்திலுலே "பன்னு செஞ்சொற் பரராச சேகர மன்னன்" புகழும் இன்றும் விளங்குகின்றன. ஒரு துறைக்கோவை, தளசிங்கமாலை, கல்லாடசாரக் கலித் துறை முதலிய பிரபந்தங்களாலும் பல தனிநிலைகளா லும் இரகுநாதசேதுபதி, பாஸ்கரசேதுபதி முதலிய சேதுபதியரசர்களின் புகழ்களும், ஆபிதானிக நூலா கிய சேந்தன் திவாகரத்திலுலே அம்பற்கிழான் அரு வந்தை என்னுங் குருசில் புகழும், வாணன் கோவையி லுலே தஞ்சாக்கூர்ச் சந்திரவாணன் புகழும் இன்றும் விளங்குகின்றன. இவருள்ளே சேதுபதியரசர்களின் மர பினோர் இன்றும் புலவர் பாடும் புகழுடையராய் விளங் குகின்றனர்.

புலவர்களை அரசர்களும் பிரபுக்களுமன்றித் திருக் கைலாச பரம்பரைத் திருவாவடுதுறையாதீனம் முதலிய ஆதீன மடாலயங்களிலே அதிபதிகளாய் வீற்றிருந்த தேசிகமூர்த்திகளும் நன்கு மதித்துப் பேணிவந்தார்கள். இப்போது திருவாவடுதுறை யாதீன மடாலயத்திலே அதிபதியாய் வீற்றிருக்கும் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்திகளும் புலவர்களை நன்கு மதித்துத் தமிழ் மொழி யையும் அபிமானித்து வருகின்றார்கள். அவர்களுடைய அறிவு, விவேகம், அருங்கலை விநோதம் முதலியன நோக்கி யாங் கூறிய துதி கவிகளுள்ளும் இரண்டு கவி கள் ஈண்டுக காட்டுதும்:—

சட்டளைக்கலித்துறை

தேவார மாதி யருட்பெருஞ் செல்வர் திருமுறைகள்
நாவா ரவோதிக் குசையினுங் கூரிய நன்மதியாற்

பாவாண ருங்கொள நற்பொரு ளாய்ந்து பகர்ந்துமகிழ்
கோவே நமோநம வல்பல வாண குருமணியே. 1

விருதமர் கோகழி யம்பலவாண வியன்குருவின் [பொன்
அரிதுணர் கல்வியை யீகையை ஞானத்தை யாடகப்
பொருதிந யேனியைச் சைவநல் வேடப் பொலிவழகைக்
கருதிடுஞ் சுன்னைக் குமார சுவாமி கவியிவையே. 2

புலவருள்ளே பலர் ஆக்கமுங் கேடும் அப்பொழுதே பயக்கும்படி கவிபாட வல்ல வரகவிகளாயும் வாழ்ந்தனர். கடைச்சங்கப் புலவராகிய நக்கீரர் கொண்டான் என்னுங் குயவன் இறக்கப் பாடினர். பின்னர் உயிர்க்கவும் பாடினர்.

இறக்கப் பாடியது

முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி — அரணிலா
ஆனந்த வேட்சையான் வேட்கோக் குயக்கொண்டான்
ஆனந்தஞ் சேர்கசுவா கா.

உயிர்க்கப் பாடியது

ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச் — சீரிய
அந்தண் பொதியி லகத்திரு ராணையாற்
செந்தமிழே தீர்க்கசுவா கா.

ஔவையார் வெட்டுண்டு முண்டமாய் நின்ற பலா மரம் ஒன்று இலையுங் கொம்பும் பலமுங் காயுங்கொண்டு தழைத்துச் செழித்துப் பண்டுபோனின்று பயன்தந்து விளங்கப் பாடினர்;

பலாமரந் தழைக்கப் பாடியது

கூரிய வாளாற் குறைபட்ட கூன்பலா
ஓரிலையாய்க் கொம்பா யுயர்மரமாய்ச் — சீரிய
வண்டுபோற் கொட்டை வளர்காயாய்ப் பின்பழ
பண்டுபோ னிற்கப் பணி. [மாய்ப்

ஔவையார் தம்மீது பாடல் ஒன்று கூறச்சொன்ன மூடன் ஒருவனை நோக்கி "நீவிர் அவிச்சுவையல்லது தமிழ்ச்சுவை அறியீர் உம்மை எங்ஙனம் பாடுவேன்" என்று நகையாடினர். குமர குருபர சுவாமிகளும் "கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறாஉங் — குற்றம் தமதே" என்றார்: வேறும் புலவர் பலர் மூடர்மீது பாடல் கூறலை வெறுத்தொழிந்தனர். வடநூலாருள்ளே ஆசிரியர் வரருசியாரும் நீதிரத்தினம் என்னும் நீதிநூலிலே பிரமாவை விளித்துப் "பிரமாவே! உமது இச்சைப்படி வேறு துயர்களை நூறுவரையுந் தாரும்! அவைகளையெல்லாம் நான் பொறுத்துக்கொள்வேன். கவிச்சுவையறியாரிடத்துக் கவிச்சுவையறிவித்தலாகிய இத்துயரை எனது தலையிலே எழுதாதே! எழுதாதே! எழுதாதே!" என்று சுலோகம் ஒன்றினாற் பிரார்த்தித்தார்.

சுலோகம்

இதர தாப சதாநி யதேச்சயா
விதர தாநி சகே சதுரானன!!
அரசி கேசு ரஸஸ்ய நிவேதனம்
சிரசி மாலிக மாலிக மாலிக!!

அக்காலத்திலே அரசர்களும், செல்வப் பிரபுக்களும் அபிமானித்துப் பேணுதலாற் புலவரும் பலராயினர். நூலுரைகளும் பலவாயின. தனிநிலைக் கவிகளும் பலவா

யின: கற்பவர் கேட்பவரும் பலராயினர். பிழைதெரிவார்க்கஞ்சி பிழைநுழையாது பாடுவாரும் பலராயினர். இக்காலத்திலோ கவிச்சுவைதெரிந்து செவித்துணைகொடுக்கும் பெருமக்களுங் குறைந்தனர். கவிபாடும் புலவருங் குறைந்தனர்! நூலுரைகளுங் குறைந்தன! கற்பவர் கேட்பவருங் குறைந்தனர்! திருத்தங்களுங் குறைந்தன!

புலவர் கதைகளுட் சில சில பாகமும், அதனோடு சம்பந்தமுடைய சில சில கவிகளும், பிரபந்தநாமாதிகளும் வரல்நோக்கி இதனைச் சரித்திரம் என்றும். சர் - நடத்தல். இத்ர - ஒரு விகுதி. இச்சரித்திரம் வித்தைக்கண் விருப்புடைய பாலகர்பொருட்டுச் செய்தது. பூரணம்பெறச்செய்த ஒரு சரித்திரமன்று. வித்தையின் விருத்திக்கு நன்கு பயன்படாமையும் விரிந்து நீளுதலும் நோக்கித் தெரிந்த சரித்திரங்களுள்ளும் சில பல சரித்திரங்களை வரைந்து சேர்த்திலம். புலவர்களுள்ளும் இலக்கிய இலக்கண வுணர்ச்சியிலே தக்கவர் என்றும், நூலுரைகள் செய்தலிலே மிக்கவர் என்றும், பல்வகைக் கவிகளையும் பாடுதலிலே வல்லவர் என்றும் எமக்குப் புலப்பட்ட புலவர்களையே பெரும்பாலும் ஈண்டுக் கூறினும். சரித்திரம் நன்கு புலப்படாப் புலவர்களுட் பலர் நாமங்களை இதன் முடிவிற் காட்டினும். அவைகளையும் நோக்கி ஆராய்க.

இதனை அவாவொடுங் கற்பவர் அக்காலத்திலே அரசர்களும் பிரபுக்களும் புலவர்கட்குச் செய்த ஔபசாரிகங்களையும், கல்வி வளர்ச்சிக்கும் உள்ளக் கிளர்ச்சிக்குங் காரணமான சரித்திரபாக தேயங்களையும், பல்வகை நூல்களின் நாமதேயங்களையும், நுதலிய பொருள்களையும், சொல்லும் பொருளுஞ் சுவைபடப் பாடிய பல்

வகைக் கவிகளையும், கவிகளின் பொருள்களையும், திருக்கு மடக்குச் சிலேடை முதலிய சொல்லணிச் சுவைகளையும், வேறு சுவைகளையும் அரிய சொற்களையும் அறிய வல்லவராவர்.

இவைகளை அறிந்தவர் இன்னும் அறியவேண்டும் என்னும் ஆர்வமுடையராய்ப் பேரளவிலே அறிந்த நூல்களையெல்லாம் பரிவொடுந் தேடிப் பரிச்சிரமத்தோடும் படித்துப் பண்டிதர்களோடும் பயின்று பயன்பெறுவோமென முயன்று தக்கோர் வாக்குக்களையும், பாக்களின் போக்குக்களையும், சொற்பொரு ணோக்குக்களையும், தொடை நோக்குக்களையும், இளவியாக்கங்களையும், நோக்க ஞேக்கங்களையும், உறுதிப்பொருள்களையும் அறிய வல்லவராவர்.

இவ்வளவி லமையாது மேலனவாயுள்ள நூலுரைகளையுந் தேடிப் படித்துப் பரிசீலனஞ் செய்வோர் பேதைமை என்பது நீங்கிச் சுகம் பயப்பனவாகிய ஆதரம், பத்தி, அடக்கம், பொறுமை, நீதி, இன்சொல், நெறிநிலை முதலிய புண்ணியங்களையும், துக்கம் பயப்பனவாகிய கோபம், பொறாமை, கொலை, களவு முதலிய பாவங்களையும், "கற்றவர் விழுங்குங் கற்பகக் கனி" யாகிய கடவுளையும், சிற்றறிவுடைய ஆன்மா எனப்படுந் தம்மையும், அக்கடவுளை வழிபட்டுத் துக்கம் என்பன நீங்கியொழியும் நெறிகளையும் நன்கறிந்து நல்வழிக் கண்ணே நிற்க வல்லவராவர்.

பல்வழிக்கணுஞ் சேறலைவிட்டு நல்வழிக்கணின்று கற்ற நூலுரைகளை யெல்லாம் அநுசீலனஞ் செய்வோர் அறிவெல்லாம் நிறைவாகிப் பண்டிதர்களாய்ப் பாடஞ் சொல்லும் பெருமையையும், சவையகத்து முந்தியிருக்

கும் பெருமையையும், உறுதிபயக்கும் உண்மைப் பொருள்களை உபதேசிக்கும் பெருமையையும், பிரபந்தஞ் செய்யும் பெருமையையும், பெருமக்களும் பிரபுக்களும் "வருக வருக" என உவகையோடழைக்கும் பெருமையையும், சேரும் நாடும் ஊருந் தமவேயாகி ஆரும் போற்ற அமையும் பெருமையையும், பேரும் பொருளும் ஒருசேரச் சேரும் பெருமையையும், பின்னும் பெறற்பாலனவாகிய ஐகிக லௌகிக சுகங்களையும், பாரலௌகிக சுகங்களையும் பெற்று நன்கு வாழ்குவர் என்பதே நமது கருத்து.

புலவர் சிலவருடைய நாடு, நகர், குலம், சமயம், காலம், நூலுரிமை, கவி, கவிப்பாடம், கதை முதலியவைகளிலே சரித்திரகாரர் பலர் தம்முள்ளே முரணுவர். நகர் - ஊர். இடைக்காடர் நாட்டினைச் சிலர் பாண்டிநாடு என்பர். சிலர் மலைநாடு என்பர். ஒட்டக்கூத்தர் நாட்டினைச் சிலர் சோழநாடு என்பர். சிலர் பாண்டிநாடு என்பர். செயங்கொண்டார் நாட்டினைச் சிலர் தொண்டைநாடு என்பர். சிலர் சோழநாடு என்பர்.

ஒட்டக்கூத்தருரைச் சிலர் சீகாழி என்பர். சிலர் மலரி என்பர். சீகாழி என்றவர் "கம்பனென்றுங் கும்பனென்றுங் காழியொட்டக்கூத்த னென்றும்" என்ற பாட்டுங் காட்டுவர். மலரி என்றவர் "மலரிவருங் கூத்தன்றன் வாக்கு" என்ற தண்டியலங்காரக் காட்டுங் காட்டுவர். பொய்கையாரூரைச் சிலர் காஞ்சிபுரம் என்பர். சிலர் பொய்கை என்ற ஓரூர் என்பர். காளமேகப்புலவரூரைச் சிலர் நந்திபுரம் என்பர். சிலர் கும்பகோணம் என்பர். நந்திபுரம் என்றவர் "வாச வயனந்தி வரதா" என்ற பாட்டுங் காட்டுவர்.

வெண்பா

வாசவய னந்தி வரதா திசையனைத்தும்
வீசு கவிகாள மேகமே — பூசுரா
விண்கொண்ட செந்தழல்வாய் வேகுதே யையையோ
மண்டின்ற பாணமென்ற வாய்.

இதன் முதலடியைச் சிலர் பாடம் வேருகவுங் கூறுவர். அதிமதுர கவிராயருரைச் சிலர் கோவலூர் என்பர். "கோக்குதிரை நின்குதிரை கோவன்மது ராவொன்னுர்", என்ற பாட்டுங் காட்டுவர். நெற்குன்றவாணருரைச் சிலர் காஞ்சிபுரம் என்பர். சிலர் நெற்குன்றம் என்பர். திருவேங்கடநாதருரைச் சிலர் ஆமாத்தூர் என்பர். சிலர் மாயூரத்தருகிலுள்ள மாந்தை என்பர். தாயுமானவருடைய தாதையாருரைச் சிலர் வேதாரணியம் என்பர். சிலர் யாழ்ப்பாணத்துள்ள தென்மராட்சி என்பர்.

நக்கீரர் குலத்தைச் சிலர் பரவர் குலம் என்பர். சிலர் வேதியர் குலம் என்பர். கபிலர் குலத்தைப் பழைய திருவிளையாடல் பாடினவர் வேதியர் குலம் என்பர். வேறு சிலர் வேறு குலம் என்பர். வேறுசிலர் கபிலநாமந் தரித்துப் புலவராயிருந்தார் பலர் என்பர். கம்பநாடர் குலத்தைச் சிலர் காவலர் குலம் என்பர். சிலர் உவச்சர் குலம் என்பர். அருணகிரிநாதர் குலத்தைச் சிலர் வேதியர் குலம் என்பர். சிலர் வேறு குலம் என்பர்.

திருவள்ளுவர் சமயத்தைச் சிலர் ஆருகதம் என்பர். சிலர் வைஷ்ணவம் என்பர். வேறுசிலர் சைவம் என்பர். செயங்கொண்டார் சமயத்தைச் சிலர் ஆருகதம் என்பர். சிலர் சைவம் என்பர். அபிராமிபட்டர் சமயத்தைச் சிலர்

சாக்தேயம் என்பர். சிலர் சைவம் என்பர். பரிமேலழகர் சமயத்தைச் சிலர் வைஷ்ணவம் என்பர். சிலர் சைவம் என்பர். புத்தமித்திரர் சமயத்தைச் சிலர் ஆருகதம் என்பர். சிலர் பௌத்தம் என்பர்.

திருவள்ளுவர் காலத்தைச் சிலர் கடைச்சங்ககாலம் என்பர். சிலர் அதற்கும் பிற்காலம் என்பர். கம்பநாடர் காலத்தைச் சிலர் 'எண்ணிய சகாத்த மெண்ணூற் றேழின்மேல்'' என்பர். சிலர் சகாத்தம் நூற்றேழின் மேல்'' என்பர். காளமேகப் புலவர் காலத்தைச் சிலர் முந்நூறு வருடங்களுக்கு முன்னர் என்பர். சிலர் அறு நூறு வருடங்களுக்கு முன்னர் என்பர். கச்சியப்ப சிவா சாரியர் காலத்தை யாம் "அந்தகக் கவிவீரராகவ முதலி யார் காலம் என்பர்" என்றும், அது தமிழ்நாவலர் சரி தையிலே வீரராகவ முதலியாரது வித்தியா கம்பீரங் கூறும் "பொங்குபுக ழயோத்தியில் வாழ்" என்னும் விருத்த முகத்திலே "கவிவீரராகவன் காஞ்சிபுரத்திலே படித்தபோது கந்தபுராணம் கச்சியப்பர் பாடியது" என்ற கூற்றை அனுசரித்தெழுதியது. எமது சம்மத மான கூற்றன்று. கச்சியப்ப சிவாசாரியர் காலங் கூறும் "ஏதமறு சகாத்த மெழுநூற்றின்மேலா யிலகுகந்தபுராண மரங் கேற்றினனே" என்ற கூற்றையும் நோக்குக. காலங் களைக் கணித்துத் துணிந்து கூறுதல் நமக்கியலாமைபற் றியே பலர் கூற்றுக்களையும் படியெடுத்துக் கூறி "என் பர், என்பர்" என்றும் காலங்களைக் கணித்து வாதித் துரைப்பார் பலர். திருவாதவூரர் காலத்திலே பெரு வாதம் நிகழ்த்திய காலவாதிகளும் உளர். நூல்களிற் பிரவேசித்து நுதலிய பொருள்களைப் பலமுறை நோக்கி ஆராய்ந்து பயன்கோடல் கற்பவர் யாவர்க்கும் ஆவசி யகம். பண்டைக்காலப் புலவர்கள் பலர் அறம்,

பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பயன்களைத் திறம்பெறக் கூறலையன்றிக் காலங் கூறலை மேலதாகக் கொண்டிலர் ஆதலாற் புலவர்கள் காலங்களை நிரூபணஞ் செய்து நிச்சயித்தல் அருங்குறைத்து.

குலோத்துங்கசோழன் கோவையைச் சிலர் கூத்தர் பாடல் என்பர். சிலர் மற்றொருவர் பாடல் என்பர். தெக்கிணகைலாசபுராணத்தைச் சிலர் செகராசமன்னவர் பாடல் என்பர். சிலர் மற்றொருவர் பாடல் என்பர். கருவைப்பதிற்றுப்பத்தந்தாதியைச் சிலர் அதிவீரராமபாண்டியர் பாடல் என்பர். சிலர் வரதுங்கராமபாண்டியர் பாடல் என்பர். யாப்பருங்கலகாரரைப் பாயிரகாரர் "அளப்பருங்கடற்பெய ரருந்தவத்தோனே" என்பர். சிலர் அளப்பருங்கடற்பெயரோன் என்றது அமிர்தசாகரரை என்பர். சிலர் ரகாரம் நீக்கி அமிதசாகரரை என்பர். அமிதம் - அளவின்மை என்பதுங் கூறுவர்.

"கல்லாத வொருவனை" என்னுங் கவியைத் தமிழ் நாவலர் சரிதைகாரர் ஔவை பாடல் என்பர். வேறு சிலர் இராமச்சந்திரகவிராயர் பாடல் என்பர். "காவலரீகை கருதுங்கால்" என்னுங் கவியைத் தமிழ்நாவலர் சரிதைகாரர் செயங்கொண்டார் பாடல் என்பர். வேறு சிலர் இரட்டைப்புலவர் பாடல் என்பர். "வாய்த்த வயிரபுர மாகாளியம்மையே" என்னுங் கவியைத் தமிழ் நாவலர் சரிதைகாரர் பொய்யாமொழிப் புலவர் பாடல் என்பர். வேறு சிலர் கம்பநாடர் பாடல் என்பர். கவியிற் பாடவேறுபாடுங் கொள்வர்.

வெண்பா

வாய்த்த வயிரபுர மாகாளி யம்மையே
ஆய்த்த வருகா ரணிவயலிற் — காய்த்த

கதிரைமா ளத்தின்னுங் காளிங்க னேறுங்
குதிரைமா ளக்கொண்டு போ.

கம்பநாடர் பாடிய "மன்னவனும் நீயோ" என்னுங் கவியின் முன்னிரடியையுந் தமிழ் நாவலர் சரிதைகாரர் "மன்னவனு நீயோ, மண்ணுலகு மிவ்வளவோ, உன்னையோ யான்புகழ்ந் தோதுவது" என்று பாடங்கொள்வர். மற்றொருவர் "மன்னவனுநீயோ வளநாடுமிவ்வளவோ — உன்னையறிந் தோதமிழை யொதினேன்" என்று பாடங்கொள்வர். கம்பராமாயணத்திலே வருங் கவிப் பாடபேதங்களுங் கணக்கில. கற்பவர் பொருட்டுச் சில காட்டுதும்.

ஆற்றுப் படலத்திலே மறியுடையாயர் மாதர் என்பதை "மறிவிழியாயர் மாதர்" எனவும், சேர்த்தநீர்த் திவலை பொன்னு முத்தொடு என்பதைச் "சேர்த்தநீர்த் திவலை யென்னு முத்தொடு" எனவும், நகரப்படலத்திலே கமைப்பெருஞ் செல்வக் கடவுளு முதலோர் கண்டிலா நகரது காண்பான் என்பதைக் "கமைப்பெருஞ் செல்வக் கடவுளு முவமை கண்டில ரங்கது காண்பான்" எனவும், திருவவதாரப் படலத்திலே போகமா மலருறை புனிதன் மீட்டமை — தோகைபா கற்குறச் சொல்லினரோ என்பதைப் "போகமா மலருறை புனித வொல்லையின் — ஏகிநீ மீட்டமை யியப்ப வேண்டுமோ" எனவும் பாடங்கொள்வர்.

விருத்தம்

பாகசா தனன்றனைப் பாசத் தார்த்தடல்
மேகநா தன்புகுந் திலங்கை மேயநாட்
போகமா மலருறை புனித வொல்லையின்
ஏகிநீ மீண்டமை யியம்ப வேண்டுமோ.

பாகசாதனன் — இந்திரன்; எழுவாய். மேகநாதன்- இந்திரசித்து. புகுந்து ஆர்த்து மேய என முடிக்க. போக - தானுங் கட்டுண்டு செல்ல. சில பிரதிருப லேக்ககர்களால் எழுதப்பட்டுக் கதைச் சுருக்கம் உரைக்குங் கவியும் ஒன்றுளது. காட்டுதும்.

கதைச்சுருக்கக் கவி

பராவரு மிராமன் மாதோ டிளவல்பின் படரக் கான்போய்
விராதனைக் கரனை மானைக் கவந்தனை வென்றி கொண்டு
மராமரம் வாலி மார்பு துளைத்தனை வகுத்துப் பின்னும்
இராவணன் குலமும் பொன்ற வெய்துட னயோத்தி வந்தான்.

கவிப்பாடங்களிலன்றிக் கதைகளின்கண் வரும் மாறுபாடுகளும் பல. கலிங்கட்பரணிகாரர் "பத்தொடாறுநூ றயிரம்பெறப் பண்டு பட்டினப் பாலை கொண்டதும்" என்னும் பாட்டினுற் பட்டினப் பாலை என்னும் நூலுக்குக் கொடுத்த பரிசில் பதினறிலக்கம் பொன் என்பர். சோழமண்டலசதககாரர் "குணக்கின் மலைபோற் பதினறுகோடி செம்பொன் கொடுத்த விலை — இணக்குமொரு பட்டினப் பாலை" என்னும் பாட்டினுற் பதினறு கோடி பொன் என்பர். சிதம்பரச் செய்யுட் கோவையைச் சிலர், யாப்பிலக்கணத்துக்கு உதாரணமாகச் சைவ நூற்கவிகள் வேண்டும் என்றபோது பாடியது என்பர். சிலர் ஆக்கியோர் தம்மை வரகவி என்று புலவர் ஒருவர் அசதியாடியபோது யாப்பிலக்கண வலிமை புலப்படப் பாடியது என்பர். கம்பநாடர் பாடிய "ஆழியான் பள்ளி யணையே" என்ற கவியைத் தமிழ்நாவலர் சரிதைகாரர் புதுவைச் சேதிராயனைத் தீண்டிய விடந் தீர்க்கப் பாடிய பாடல் என்பர். வேறு சிலர் தில்லைவாழந்தணர் ஒருவரைத் தீண்டிய விடந் தீர்க்கப் பாடிய பாடல் என்பர்.

ஆழியான் பள்ளி யணையே யவன்கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே — பூழியான்
பூணே புரமெரித்த பொற்சிலையிற் பூட்டுகின்ற
நாணே யகல நட.

புலவர்களுட் பலர் தாம் இயற்றிய நூல்களிலே தத்தம் நாடு நகர் காலம் முதலிய கூறுதொழிந்தமை யானும், இடையிலே காலம் எண்ணில கழிந்தொழிந் தமையானும், சரித்திரகாரர் பலர் ஒருவர் சென்ற வழியே ஒருவர் சேறலைத் தழுவிச் சென்றமையானும், வேறு வழி தெரியாமையானும் புலவர் சரித்திரங்களில் இங்ஙனமாய மாறுபாடுகள் சம்பவித்தல் பெரும்பான் மையாகும்.

இப்பிழைகளும் வேறு பிழைகளும் இந்நூலகத் தும் சம்பவித்தல்கூடும். பிழைகளைக்காணும் அறிஞர் கள் செந்தமிழ் முதலிய பத்திரிகைகளில் அவைகளைப் பிரகடனஞ்செய்தல் நன்று. பிழை கூறல் அவமானஞ் செய்தலன்று. அது சம்மானமாய் நமக்கும் பயன்படும். கற்போர் பிறர்க்கும் பயன்படும். திருத்தமும் பலவாகும். பிழை திருத்தப்பட்டதென்று யாம் பிரகடனஞ்செய்த யாப்பருங்கலக்காரிகை சில வருடங்களின் பின்னர் நோக்குழிப் பிழையுடையதாகிப் பின்னுந் திருத்தப் பட்டுப் பிரகடனமாயிற்று.

நூலுரைகளைப் பிழைநோக்கி நகைப்பாரும், பிழை யின்மை நோக்கித் துதிப்பாரும், தாரதம்மியம் நோக்கி மதிப்பாரும், ஆராய்ந்து திருத்தம் நோக்கி ஆக்குவோ ரும், நிரம்பிய புலமையிலார் கூற்றுக்களை நீக்குவோரும், அறிஞர் அங்கீகாரம் நோக்குவோரும் இக்காலத்தில்

அரியராய்ச் சிலராயினர். துவர நோக்காது பாயிரங் கொடுத்துத் துதிப்பாரும், முழுவறியமுடியாத வடிவம் நோக்கி மதிப்பாரும், பாடந் தோடங்கூடலை நாடலின்றி ஆக்குவோரும், தோடஞ்சூராயிருந்துங் கூறலஞ்சி மௌனம் நோக்குவோரும், தக்கனவாயினும் "கடினம்! கடினம்!" என்று நீக்குவோரும், பழைய நூலுரைகளின் பயிற்சியின்றிப் புதிய நூலுரைகள் ஆக்குமாறு நோக்குவோரும் எளியராய்ப் பலராயினர். புதிய நூலுரைகளை ஆக்குமுன்னரே பழைய நூலுரைகளைப் படித்து நோக்கி அநுசீலனஞ் செய்தல் ஆக்குவோர் யாவருக்கும் ஆவசியகம். அநுசீலனஞ் செய்யின், ஆக்கும் பயிற்சியுந் திருத்தமும் அதிகம் வளரும்.

இதனை எழுதத் தொடங்குமுன் யாம், இங்கே வழங்கும் பழைய நூலுரைகளையே முதற்கண் அநுசீலனஞ் செய்தேம். பின்னர் ஆங்காங்கெய்திய பாயிரங்கள் தனிநிலைக் கவிகள், புலவர் நாமங்கள் முதலியவைகளையும் ஆராய்ந்தேம். அதன்பின் தொண்டைமண்டல சதகம், சோழமண்டல சதகம், தமிழ் நாவலர் சரிதை, புலவர் புராணம், தனிச்செய்யுட் சிந்தாமணி, பாவலர் சரித்திர தீபகம், ஆழ்வார் சரித்திரம், தனிப்பாடற்றிரட்டு முதலியவைகளையும் ஆராய்ந்தேம். அதன்பின் மஹாமகோபாத்தியாயர் வே. சாமிநாதையரவர்களும், சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களும், வேறும் புலவர்கள் பலரும் தத்தம் பிரகடன நூல்களின் முகத்தில் எழுதியிருக்குஞ் சரித்திரங்களையும், சேது சமஸ்தான வித்துவான் ரா. இராகவையங்காரவர்களும், வேறும் பலருஞ் செந்தமிழ்ப் பஞ்சிகையில் எழுதியிருக்குஞ் சரித்திரங்களையும், பிரத்தியேகமாகப் பிரகடனஞ் செய்த சில சரித்திரங்களையும், பிறவற்றையும் ஆராய்ந்தோம்.

துணைபுரியுங் குணசீலராய சில சில உபகாரபுருடர்களையும் பலவாறாய துணைவிரும்பித் தழுவினும். அங்கில திராவிட பண்டிதரும், வித்தியா விநோதருமாய்ச் சென்னைமாநகரில் வசிக்கும் திரு. த. கனகசுந்தரம்பிள்ளையவர்கள் பற்பல திருத்தங்கள் கொண்டு துணைபுரிந்தார்கள். ஆசிரியகல்லூரித் தமிழ்ப்பண்டிதர் தென்கோவைக் கந்தையப்பிள்ளை, புன்னைக் கணேசையர், கொக்குவில் முருகேசையர், தெல்லிச் சின்னத்தம்பியையர், இளவாலைச் சங்கரப்பிள்ளை, உபாத்தியாயர் வண்ணைக் கிருஷ்ணபிள்ளை என்னும் இவர்களுந் திருத்தமும் பிறவுமாகச் சில சில துணைபுரிந்தார்கள்.

நல்லூர் உபயவேதாகமபண்டிதர் கனகசபாபதியையரவர்கள் சில சில தனிநிலைக்கவிகளும், கந்தசாமிப்புலவர், கவிராயபிள்ளை, கந்தப்பையர் என்னும் புலவர்கள் சரித்திரமும், பிறவும் உபகரித்துத் துணைபுரிந்தார்கள். திருவாரூர் இலக்கண விளக்கப் பரம்பரைச் சோமசுந்தரதேசிகரவர்கள் சோழமண்டல சதகமும், பிறவும் உபகரித்துத் துணை புரிந்தார்கள். நியாயப்பிரதிநிதி பொன்னம்பலப்பிள்ளை, நாவலர்கோட்டம் வித்துவான் முத்துத்தம்பிப்பிள்ளை என்னும் இவர்களுஞ் சில சில துணைபுரிந்தார்கள்.

முன்னர்ப் பிரகடனஞ் செய்த நூலுரைகளுட் பல விக்கிரயம் பெற்றுத் தக்க இலாபந் தந்திலவாயினும் உத்தமபுருடர் பலர் அபிமானித்துச் செய்த உபகாரத்தால் அவை மனத்திருத்தியையும் மதிப்பையுந் தந்தனவாயின. அவற்றுள்ளே தண்டியலங்காரப் புத்துரைக்கு உபகரித்தவர், பாலவனத்தம் ஜமீந்தார் பாண்டித்துரைத் தேவரவர்கள், யாப்பருங்கலக்காரி

கைப் புத்துரைக்கு உபகரித்தவர் சிதம்பர சைவப்பிர காசவித்தியாசாலைத் தருமபரிபாலகராயிருந்த சதாசிவப் பிள்ளையவர்கள். அகப்பொருட்புத்துரைமுதலியவற்றுக்கு உபகரித்தவர், மேற்படி வித்தியாசாலைத் தருமபரிபால கராயிருக்கும் பொன்னம்பலப்பிள்ளையவர்கள். இலக்கி யச் சொல்லகராதிக்கு உபகரித்தவர், வ.ண்ணைச் சைவப் பிரகாசவித்தியாசாலையின் அத்தியக்ஷர் கைலாசப்பிள்ளை யவர்கள்.

நீதிநெறி விளக்கப் புத்துரைக்கு உபகரித்தவர், கீரிமலைத் தருமமடாலயப் பிரதிட்டாபகர் சிறுப்பு கதிரை வேற்பிள்ளையவர்கள். இலக்கண சந்திரிகைக்கும் இரகு வமிசக் கருப்பொருட்கும் உபகரித்தவர், நீதிபதி கதிரை வேற்பிள்ளையவர்கள். சதாசாரக் கவித்திரட்டுக்கு உப கரித்தவர் கந்தரோடை நியாயப் பிரதிநிதி பொன்னம் பலப்பிள்ளையவர்கள். சாணக்கிய சதகம் முதலியவை கட்கு உபகரித்தவர் சோதிட மடாலய பரிபாலகர். முத் தக பஞ்சவிஞ்சதிக்கு உபகரித்தவர் சைவவித்தியாநு பாலன யந்திரசாலைத் தலைவர் சுவாமிநாத பண்டிதரவர் கள். ஏகவிருத்த பாரதாதிக்கும் வினைப் பகுபத விளக் கத்துக்கும் உபகரித்தவர். நாவலர் கோட்டம் வித்து வான் முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள். ஞானக்கும்மிக்கு உபகரித்தவர், செங்கோட்டைச் சிமான் இலக்குமணப் பிள்ளையவர்கள். மேகதூதக் காரிகைக்கு உபகரித்தவர், சட்டநிரூபணசபைத் தமிழ்ப் பிரதிநிதி கௌரவ கனக சபைப் பிள்ளையவர்கள்.

இப்புலவர் சரித்திரத்தை இனிது நோக்கிப் பெரிது மதித்துப் பெருந்தொகைப் பொருளுபகாரஞ் செய்த பெருமையாளரும் ஒருவருளர். அவரோ ஒரு சாமானிய

மானவரல்லர். உத்தம புருடர்க்குள்ளே உத்தமதரபுருடர். அரும்பொருட்கலையுணர்வும், பெரும்பொருள் வருவாயும், பரம்பொருட் பத்தியும், திரம்பெறு புத்தியும், வரம்பிலவாங் கொடையும், விநய வீரியாதி சகல சுகுணங்களும் பரம்பரையாக நிரம்பப்பெற்றுச் செந்தமிழ்ப் பரிபாலனமுஞ் சைவபரிபாலனமுஞ் செய்துவந்த சேதுபதியரசர் திருமரபினர். அவர்கள்போலக் கலையுணர்வும், பொருள்வருவாயும், பத்தியும், புத்தியும், கொடையும், பிறவும் நிரம்பப்பெற்றுச் செந்தமிழ்ப்பரிபாலனமுஞ் சைவபரிபாலனமுஞ் செய்துவருஞ் சீமான். இராமநாதபுர சமஸ்தானக் கோமான். செந்தமிழபிமானியும், சித்தாந்த சைவப்பிரசங்க சிங்கமும், பெருங்கொடை வள்ளலுமாய் விளங்கிய பாஸ்கர சேதுபதி மஹாராஜாவின் பெருந்தவப் புதல்வர். மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசன முதல்வர். "சந்தந் தெளிக்குங் கலைவாணர் சங்கத் தமிழ்க் குருகிச் — சித்தங் களிக்கும்" திருவாளர். ராஜ ராஜேசுவர சேதுபதியரசர் எனப் புலவர் பாடும் புகழாளர்.

புலவர் பாடும் புகழாளர் என்பது மேலும் மேலும் புலப்படப் புலவர் பலர் பாடிப் பிரகடனஞ் செய்த கவிகளை நோக்கி யாமுஞ் சில கவிகள் செந்தமிழிற் பிரசரித்தாம். அவற்றுள் இரு கவிகள் கூறுந் தலைமையை இன்னும் பலரறியப் பின்னுங் கூறுதும்.

ஆசிரியவிருத்தம்

1. பூவரசு தொழுமரசு ராம நாத
 புரவரசு கொடையரசு புகழ்போ யெங்குந்
 தாவரசு ராசரா சேசு ரப்பேர்த்
 தனியரசு தமிழரசு தக்கோர் சங்கம்

மேவரசு மதுரைநகர்த் தமிழின் சங்க
மேலரசாய் வீற்றிருக்கு மேன்மை தந்த
தேவரசு நான்மாடக் கூடல் வைகுந்
திருவிளையாட் டரசுபதஞ் சென்னி சேர்ப்பாம.

கட்டளைக்கலித்துறை

2. துங்கங் கெழுராச ராசே சுரபதி தொன்மதுரைச்
சங்கம் புரப்பவ னுயினன் கேண்மின் தமிழ்ப்புலவீர்
சங்கம் வளருந் தமிழ்நூல் வளருந் தமிழ்ப்புலவர்
அங்கம் வளரும் தமிழும் வளரு மசைவில்லையே.

தந்தையாராகிய பாஸ்கர சேதுபதிமஹாராஜா அவர்கள் சமுகத்திற் பிரசங்கஞ்செய்தும், பிரபந்தம் பாடியும் புலமையின் வலிமைகாட்டிப் பரிசிலும் வரிசையும் பட்டமும் பெற்ற புலவர்களுக்கோர் அளவுமுண்டா! யாழ்ப்பாணப் புலவர்களுட் சபாபதிநாவலர், சிவசம்புப் புலவர் என்னும் இருவரும் பெருந்தொகைப் பரிசில் பெற்றதை மறந்தவர் யாவர்! பரிசிற் கொடைவீரந் தோன்றப் புலவர்கள் பலர் பாடிய பிரபந்தங்களுங் கண்டாம். தனிநிலைக் கவிகளுங் கண்டாம். சேதுசமஸ்தான வித்துவான் ரா. இராகவையங்காரவர்கள் பாடிய "கார்புக்க தோகற்ப கம்புக்கதோ" என்னுங் கவிதையுங் கண்டாம். பாண்டித்துரைத்தேவரவர்கள் பாடிய கவிகளுங் கண்டாம். வாயினுற் கூறிய கவிகளுங் கேட்டாம்.

வெண்பா

கார்புக்க தோகற்ப கம்புக்க தோவறியேன்
சீர்புக்க பாற்கர சேதுபதீ—பேர்நிற்க
ஈத்து மலர்ந்திவ் விருநீர் வரைப்பெல்லாங்
காத்து வளர்ந்தநின் கை.

முருகாநுபூதி, பிரமகைவல்லியம் முதலிய நூல்கள் இயற்றிய முத்துராமலிங்க சேதுபதி, இரணிய கர்ப்ப மஹா * யாஜி ரவிகுல முத்துவிஜய ரகுநாத சேதுபதி முதலிய முன்னோர்களின் தலைமை, புலமை, தகுதி முதலிய பெருமைகள் கூறுங் கவிகளும் கண்டாம். முத்துராமலிங்க சேதுபதியைப் புலவர் ஒருவர் "தனங்களம்பு ரவிதமிழோர்க் குதவுமுத்து ராமலிங்க தளசிங் கேறே" என்பர். இரகுநாத சேதுபதியை அமிர்தகவிராயர் "மன்னுந் தமிழ்ப்பயிர் வாடாது மாரியிற் பாரின்முத்தும்—பொன்னுஞ் சொரியும் ரகுநாதன்" என்பர். இன்னும் படிக்காசுப்புலவர் "பாதுகாத்துவந்த பார்வேந்தரெல்லாம் போய் மறைந்த பஞ்சகாலத்திற் பாவேந்தருக்குத் தேவேந்திர தாருவொத்தாய்" என்பர்.

கட்டளைக்கலித்துறை

மூவேந்தருமற்றுச் சங்கமும் போய்ப்பதின் மூன்றொடெட்டுக்
கோவேந் தருமற்று மற்றொரு வேந்தன் கொடையு மற்றுப்
பாவேந்தர் காற்றி லிலவம் பஞ் சாகப் பறக்கையிலே
தேவேந்த்ர தாருவொத் தாய்ரகு நாத செயதுங்கனே.

இங்ஙனம் புலவர் பாடும் புகழமைந்த இவர்களையெல்லாம் தாதை, மூதாதை முதலிய முன்னோர்கள் எனக் கொண்ட ராஜ ராஜேசுவர சேதுபதியரசரவர்கட்குப்

---

* யாஜி — யாகஞ் செய்தவன். இரகுநாத சேதுபதியரசர் இராமேசுவரத்திலே பத்திலக்கத்தின் மேலே செலவிட்டு இரணிய கர்ப்பயாகம் ஒன்று செய்து முடித்தவர் என்று செந்தமிழில் ஆறாந் தொகுதியிற் பத்திராதிபர் கூறுவர்.

புலவர் பாடும் புகழ்பட வாழ்தல் அமையாதொழியுமா? "குலவித்தை-கல்லாமற் பாகம்படும்" என்று முன்றுறை யரையனார் கூறிய கூற்றுமுண்டன்றோ! ராஜ ராஜேசுவர சேதுபதியரசரவர்களைப் புலவர்கள் பாடிய மஹா நவ ராத்திரி வாழ்த்துக் கவிகளமைந்த பிரபந்தமுங் கண்டாம். செந்தமிழில் வந்த வாழ்த்துக் கவிகளுங் கண்டாம். கவிகளிலே அரசரவர்கள் பெருமைகளாயமைந்த திராவிட பரிபாலன தனவிதரண விநய வீரியாதி சகலகுண வருணனைகளுங் கண்டாம். இவ் வருணனைகளுட் சில சில நோக்கி யாம் இயற்றிய கவிகளையுங் கூறுகின்றோம். பிரியதரகாரணமா யெழுந்த கவிகளாதலின் அவைகளும் அரசரவைக்களத்தில் அங்கீகரிக்கப்படுவனவாகும்

கட்டளைக்கலிப்பா

1. சீதை காவல னுதியி னுட்டிய
தேவ ராலயம் போற்றிடுங் காவலன்
நீதி காவலன் தொன்னெறி காவலன்
நீடு முன்னவர் செய்தரு மங்களின்
பாது காவலன் பாவலர் காவலன்
பழைய வைதிக சைவர்கள் காவலன்
சேது காவலன் செந்தமிழ்க் காவலன்
சீர்த்தி ராஜரா சேசுர மன்னனே.

வாழ்த்துவிருத்தம்

2. ஓதுதமிழ்ப் புலவர்சரித் திரமா மிந்நூல்
உயர்ச்சிபெற வுபகரித்த செல்வச் சீமான்
தாதுமலி தளவமலர் மாலை மார்பன்
சயவீர ராசரா சேசுரப் பேர்ச்

சேதுபதி நரபாலன் பலநூல் கற்றோன்
    செய்யதமிழ் வளர்க்குமபி மான சீலன்
மாதுபதி ராமேச னருளால் வேண்டும்
    வரங்களெல்லாம் பெற்றினிது வாழி மாதோ.

இன்னும் இந்நூலின் பொருட்டுஞ் சுருக்கி எழுதப் பட்டுப் பிரகடனஞ் செய்ய அமைந்திருக்கும் இதோப தேசம் என்னும் நூலின்பொருட்டுந் திரவிய சகாயஞ் செய்த உபகார புருடர்கள் பலருளர்.

அவர்களெல்லாம் தமிழுணர்ச்சியும், தமிழபிமான மும், தக்க செயல்களிற் பொருளுபகரிக்கும் வன்மையு முடையவர்கள். அவருட் பலர் அங்கில தேசிய மொழி யுணர்ச்சியு முடையவர். உத்தியோக புருடலக்கணமு முடையவர். தனித்தனி விரித்து நம்மாற் புகழப்படுந் தகுதியு முடையவர். அந்த உபகார புருடர்களும் சிந் தித மனோரத சித்திகள் பெறும்பொருட்டுச் சிவபிரான் திருவருள் புரிக. எச்செயலையும் உயிர்க்குயிராய் நின்று முடித்தருளுந் தற்பர மஹாதேவ குணாதீத கருணாமய பரசிவ விசுவமூர்த்தியை மன மொழி மெய்களாலே நினைத்துத் துதித்து வணங்குகின்றோம்.

வேதசாரசிவத்துதி

நமஸ்தே சூலபாணே விபோ விஸ்வநாத
மகாதேவ சம்போ மகேச திரிநேத்ர।
சிவாகாந்தே சாந்தே ஸ்மராரே புராரே
த்வதன்யோ வரேண்யோ நமான்யோ நகண்ய:॥

இ—ள்; சூலபாணியே! எங்கும் நிறைந்தவரே! மஹாதேவரே! மகேசரே! முக்கண்ணரே! உமாதே

விக்கு நாயகரே! சாந்தமுடையவரே! காமாரியே! புராரியே! உமக்கு நமஸ்காரம். உம்மினுஞ் சிரேட்டரில்லை! பூசிக்கத்தக்கவரும் இல்லை. கணிக்கத்தக்கவரும் இல்லை. (நீரே கணித்து வழிபடற்குரிய சிரேட்டர். எமக்கு அருள் புரிக எ—று.

தேவாரம்

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

சுன்னாகம்,
சுளஅ கார்த்திகைமீ.
அ. குமாரசுவாமிப்பிள்ளை

குமாரசுவாமிப் புலவர் சரித்திரம்

இந் நூலாசிரியராகிய குமாரசுவாமிப் புலவர் யாழ்ப்பாணத்து உடுவிற்பதியில் வசித்த சைவவேளாண் குலத்தினராகிய சந்திரசேகரப்பிள்ளை மரபிலே, முத்தகச் செய்யுள் பாடுவதில் வித்தகராகிய வரகவி முத்துக்குமார கவிராயருக்குப் பௌத்திரராய் சிவபத்தி அடியார்பத்திகளிற் சிறந்த அம்பலவாணபிள்ளை என்பவருக்கும் சிதம்பரவம்மையாருக்கும் அருந்தவப் புதல்வராய்ச் சுன்னாகத்தில் 1855-ம் ஆண்டு தை மாதம் 18-ந் தேதி பிறந்தார். தந்தையாராகிய அம்பலவாணபிள்ளை யவர்கள் சைவத் திருமுறைகளையும், கந்தபுராணம், சேதுபுராணம் முதலிய புராணங்களையும் தமது இல்லத்தில் தவறாது வருடந்தோறும் ஓதியும் ஓதுவித்தும் சைவத் தூய வாழ்க்கையைக் கடைப்பிடித்து ஒழுகிவந்தார்கள். மூன்றோராகிய முத்துக்குமாரகவிராயர் ஞானக்கும்மி யேசுமதபரிகாரம் முதலிய நூல்களை இயற்றிப் புகழ் படைத்து, சி. வை. தாமோதரம்பிள்ளை யவர்களுக்கும் வேறு பலர்க்கும் ஆசிரியராய்த் திகழ்ந்தார்.

இவ் வித்துவ பரம்பரையிற் பிறந்தவராகிய புலவர் அவர்கள் முதலில் மல்லாகம் ஆங்கில பாடசாலையிற் கல்விபயின்றனர். சிலகாலத்தின்பின் அப் பாடசாலையை விட்டுப் பண்டிதசிகாமணி முருகேசபண்டிதரிடம் இலக்கண லக்கியங்களும், நாகநாதபண்டிதரிடத்துச் சமஸ்கிருதமும் கற்றுவந்தார். ஆசிரியர்களிடத்துக் கற்றதனோடமையாது தாமாகவே நூல்களைத்தேடிக் கற்றுப் பாண்டித்தியமடைந்து கவி பாடுவதிலும், கட்டுரை எழுதுவதிலும், சொற்பொழி வாற்றுவதிலும் வல்லுநராய்

விளங்கினர். ஆறுமுகநாவலரவர்களும் இவருடைய புலமைத் திறமையை வியந்து பாராட்டியிருக்கின்றனர்.

புலவருடைய கல்வித்திறமையை நன்குணர்ந்த சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் தம்மால் ஏழாலையில் தொடங்கப்பெற்ற சைவ வித்தியாசாலைக்குத் தலைமையாசிரியராக 1878ம்ஆ புலவரவர்களை நியமித்தார். பாடசாலையில் படிப்பித்துவரும்நாட்களில் தாமோதரம்பிள்ளை அவர்களைக் காணும் நோக்கத்துடனும் நாகநாத பண்டிதர் இயற்றிய இதோபதேசம் என்னும் நூலை அச்சிடுவதற்குமாக 1886-ம் ஆண்டு சென்னை சென்றார். சென்னையில் தம்முடைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டு தமது ஊருக்குத் திரும்பி வந்தார். அவ்வாண்டிலேயே அவருடைய தந்தையாராகிய அம்பலவாணபிள்ளையும் தேகவியோகமாயினர்.

புலவரவர்கள் 1892 ம் ஆண்டு பிரபல வைத்தியர் மயில்வாகனம்பிள்ளை அவர்களின் மகள் சின்னாச்சியம்மையாரை விவாகஞ் செய்தனர். அவர்களுக்கு விசாலாட்சியம்மை, அம்பலவாணபிள்ளை, முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை என்னும் மூன்று மக்கள் உளர்.

1894-ம் ஆண்டு அர்த்தோதய புண்ணியகாலத்தில் சேதுதீர்த்தம் ஆட விரும்பி புலவரும் அவர் நண்பர் வைத்தியநாதபிள்ளையும் இந்தியா சென்று சேது, இராமேசுரம், மதுரை, கும்பகோணம், நாகபட்டினம், வேதாரணியம் முதலிய தலங்களுக்குச் சென்று தரிசித்து ஊருக்குத் திரும்பினர்.

ஏழாலைப் பாடசாலையில் ஆசிரியராக விருக்குங் காலத்தில் உதயபானு, விஞ்ஞானவர்த்தனி, இலங்கை

நேசன் முதலிய பத்திரிகைகளில் இலக்கண இலக்கிய ஆராய்ச்சி சம்பந்தமான பல விஷயங்களை எழுதி வெளிப் படுத்தினர். இக்காலத்திற்றானே அவருடைய செய்யுள் நூல்களுட் சிறந்தனவாகிய வதுளைக் கதிரேசன்பதிகம் (1884), வதுளை மாணிக்கவிநாயகர் பதிகம் (1884), மிலேச்சமதவிகற்பக்கும்மி (1888), துணைவைப் பதிகம் (1888), அத்தியடி விநாயகரூஞ்சல் (1897), அமராவதி பூதூர் பாலவிநாயகர் பதிகம் (1889), ஏகவிருத்தபாரதாதி (1896), மேகதூதக்காரிகை (1896), மாவைப் பதிகம் (1900) முதலிய நூல்கள் இயற்றப்பட்டன. இந்நூல்களிலுள்ள கவிகள் ஒழுகிய ஓசையும், விழுமிய பொருளுமுடையனவாய்ப் படிப்பவர்களுக்கு இன்பம் பயக்கத்தக்கனவாய் விளங்குகின்றன. கலைசைச்சிலேடை வெண்பா, அரும்பதவுரை, யாப்பருங்கலப் பொழிப்புரை, திருக்கரசைப்புராணம் பொழிப்புரை, இலக்கணசந்திரிகை, ஆத்திசூடிவெண்பாக் கதைகள், கண்ணகிகதை, சூடாமணிநிகண்டுப் பதப்பொருள் முதலியனவும் இக் காலத்திலேயே இயற்றப்பட்டன.

ஏழாலைச் சைவப்பிரகாச வித்தியாசாலையை விட்ட பின்னரும் அதற்கு முன்பும் நீதிபதி கு. கதிரைவேற் பிள்ளையவர்கள் தொகுத்த தமிழகராதிக்குப் புலவர் இன்றியமையாத உதவிபுரிந்தனர்.

ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபர் த. கைலாசபிள்ளையவர்கள் வேண்டுகோட்கிணங்கி அவ் வித்தியாசாலைத் தலைமையாசிரியர் பதவியை 1902-ம் ஆண்டுஏற்று தமது இறுதிக்காலம்வரையும் நடாத்தினர் புலவருடைய சரித்திரத்தில் இக்காலம் பலவகையிலும் சிறப்புவாய்ந்தது. மதுரையிற் தமிழ்ச்சங்கங் கூட்டிய

பாண்டித்துரைத்தேவர்கள் புலவரவர்களை சங்க வித்துவ அங்கத்தவருள் ஒருவராகச் சேர்த்து, சங்க வேலைகளில் ஈடுபடச் செய்தனர். சங்கத்தினின்று மாசந்தோறும் வெளிவரும் செந்தமிழ் மாதசஞ்சிகைக்குவேண்டிய விஷயங்கள் அனுப்பிவந்தனர். செந்தமிழில் வெளிவந்த விஷயங்கள் யாவும் சங்கப் புலவர்களாலும் மற்றைய புலவர்களாலும் பாராட்டப்பட்டன.

1907-ம் ஆண்டு புலவரது மனைவியார் இறந்தனர். 1909-ம் ஆண்டு புலவரவர்கள் தமது நண்பர் வைத்திய நாதருடனும் வேறு சிலருடனும் இந்தியாசென்று பாண்டித்துரைத்தேவர் திருவாவடுதுறைஆதீனத்துப் பண்டார சந்நிதி முதலியோருடைய உபசாரம் பெற்று பின்னர்ப் பல சிவஸ்தலங்களையும் தரிசித்துக்கொண்டு தமதூர் திரும்பினர்.

இக்காலத்தில் சென்னையில் வித்தியா விநோதரும் அதிகாரபுருடருமாகவிளங்கிய தி. த. கனகசுந்தரம்பிள்ளை அவருடைய நட்பைப் பெற்று இருவரும் ஆராய்ந்து கம்பராமாயணம் பாலகாண்டத்துக்கு ஓர் அரும்பதவுரையும் அகப்பொருளுக்குப் புத்துரையும் இயற்றினார்கள். மேலே கூறிய நூல்களைவிடப் புலவரவர்கள் மாணவர்களுக்கு உபயோகமான பல நூல்களை இயற்றியுள்ளார். அவையாவன: நீதிநெறிவிளக்கப்புத்துரை (1902), தண்டியலங்காரப்புத்துரை (1904), யாப்பருங்கலக்காரிகைப்புத்துரை, வினைப்பகுபத விளக்கம் (1912), சாணக்கிய நீதி வெண்பா (1914), இலக்கியச் சொல்லகராதி (1914), தமிழ்ப்புலவர்சரித்திரம் (1916), சிவத்தோத்திரக் கவித்திரட்டு (1918), இதோபதேசம் (1920), சிசுபாலசரிதம் (1921), இராமோதந்தம் (1922), இரகுவமிச சரிதாமிர்

தம் (1922). வசனநூல்கள் பாடசாலை மாணவர்க்குரிய நடையில் எழுதப்பட்டுள்ளன.

இத்தகைய அருமை பெருமை வாய்ந்த புலவரவர்கள் 1922-ம் ஆண்டு சித்திரைமீ 25-ந் தேதி இவ்வுலகை நீத்துப் பரலோகவாழ் வெய்தினர். புலவரின் பிரிவு தமிழ்ப்புலவர்களுக்கு மிக்கவருத்தத்தைக் கொடுத்தது. புலவர்களுட் பலர் இரங்கற்பாக்கள் இயற்றி அவர் பெருமையை உலகறிய வைத்தனர்.

"புலவரவர்கள் நூலுரைகளை இடைவிடாது தேடிக் கற்றலும், கற்றவாறு ஒழுகுதலும் கைகூடப் பெற்றவர். கல்வி செல்வங் காரணமாக அகங்காரங் கொண்டு பழி பாவங்களைத் தேடுதலும், புகழ் பொருள் காரணமாக ஆடம்பர வேடம்பூண்டு அவமானப்படுதலு மறியாதவர். இவரிடம் நெடுங்காலங் கற்றவர்களும், இடையிடையே ஐயங்களை வினவித் தெளிந்தோரும் பலராவர். இவ்வாறு கற்றோர்க்கும் மற்றோர்க்கும் உற்றிடத் துதவும் பெற்றி நோக்கி இவரைப் புலவர்சிந்தாமணி எனக் கூறுதல் ஒருஞான்றும் புனைந்துரையாகாது".

தமிழ்ப்புலவர் சரித்திரம்

அகத்தியனார்

அகத்தியனார் பொதியமலை வாசர். காசியினின்றும் வந்தவர். சிவபிரானிடத்தும், முருகபிரானிடத்துந் தமிழ் மொழியைக் கற்றவர். தமிழ்மொழிக்கு இலக்கணவரம்பு செய்து தென்னாட்டிற் பரப்பிய செந்தமிழ்க்குரவர். "தமிழெனு மளப்பருஞ் சலதி தந்தவன்" என்றும், "தழற்புரை சுடர்க்கடவு டந்ததமிழ் தந்தான்" என்றும் இராமாயணகாரர் கூறுவர். பலவித கலைகளும் அறிந்தவர். "அருமறை யாகம மருங்கலை நூறெரிந்த அகத்தியன்" என்று அருணந்திசிவாசாரியர் கூறுவர். தலைச் சங்கத்திலும் இடைச்சங்கத்திலும் வீற்றிருந்து தமிழ் மொழி ஆராய்ந்த தலைமைப்புலவர். தொல்காப்பியர், அதங்கோட்டுமுனிவர், பனம்பாரனார், அவிநயனார் முதலிய பன்னிருவருக்குந் தமிழாசிரியர்.

காஞ்சிப்புராணம்

காசியி னின்று போந்து கப்பர்தா மருளப் பெற்று
மாசிலாக் கச்சி மூதூர் மன்னிவீற் றிருந்து பூமேல்
ஆசிலாத் தமிழ்ப ரப்பி யருந்தமிழ்க் குரவு பூண்ட
தேசினன் மலய வெற்பிற் குறுமுனி திருத்தாள் போற்றி.

இவர் தமிழ்முனி எனவும் படுவர். இயல், இசை நாடகம் என்னும் முத்தமிழிலக்கணங்களையும் விரித்து விளக்கித் தமிழ் மொழிக்கோர் இலக்கணஞ் செய்தவர். அதன் பெயர் அகத்தியம். அது, முதல் இடை கடை என்னும் சங்கம் மூன்றிலும் இலக்கணமாயிருந்தது. அகத்தியமன்றி வேறும் பலவகை நூல்கள் செய்தவர் என்றும், வடமொழியிலுஞ் சிலநூல்கள்

செய்தவர் என்றுங் கூறுவர். அகத்தியமொன்றே மகத்துவமுடையது. அகத்தியம் முற்றச் சிதைந்தொழிந்தது என்பர். தொல்காப்பிய இளம்பூரணவுரை, இலக்கணவிளக்கவுரை, நன்னூல் விருத்தியுரை. வேதகிரி முதலியார் எழுதிய இலக்கணக்களஞ்சியம் முதலியவற்றிற் சில சில சூத்திரங்கள் அகத்தியம் என்று பெயருங் காட்டி எழுதப்பட்டிருக்கின்றன. அவை அகத்தியச் சூத்திரங்களல்ல என்பார் பலர். ஆயினுங் கற்பவர் பொருட்டுச் சில சூத்திரங்களை இங்கே எழுதுவாம்.

இலக்கணலக்கியம்

1. பூவினுள் வாசம் பொருந்துதல் போல
இலக்கண விலக்கிய மியைபுடைத் தாகும்.

இலக்கணம்

2. இலக்கண மென்ப திலக்கிய முறையுற
வைத்த தென்று வழங்கப் படுமே.

3. இலக்கிய மின்றி யிலக்கண மின்றே
எள்ளின் றாகி லெண்ணெயு மின்றே
எள்ளினின் றெண்ணெ யெடுப்பது போல
இலக்கியத் தினின்றே யெடுபடு மிலக்கணம்.

இலக்கியம்

4. இலக்கிய மென்ப திலக்கணச் சான்றாய்
வழக்கியவ் விலக்கண மயக்கிய தாமே.

அளபெடை

5. அவையே;
இயற்கை செயற்கை யின்னிசை சொல்லிசை
நெடில்குறி லொற்றுயி ரெழுத்துப்பே றளபெடை.

இயற்கையளபெடை இசை, விளி, பண்டமாற்று முதலியவற்றில் வருவது. செயற்கையளபெடை சீருங்

தனையும் வேண்டுமிடத்துப் புலவனாற் செய்துகொள்ளப் படுவது. இன்னிசையளபெடை இனிய இசைகாரண மாக வருவது. சொல்லிசையளபெடை சொல்லின் இசைகெடாமை காரணமாக நசைஇ என்பது போல வருவது. எழுத்துப்பேறளபெடை காரணமின்றி அள பெடைபோன்று எழுத்துத்தோன்றி நிற்பது, உ-ம். அராஅப்பாம்பு.

சொல்லிலக்கணம்

6. வயிர வூசியு மயன்வினை யிரும்புஞ்
செயிரறு பொன்னைச் செம்மைசெய் யாணியும்
தமக்கமை கருவியுந் தாமா மவைபோல்
உரைத்திற முணர்த்தலு முரையது தொழிலே.

வேற்றுமை

7. எழியன் முறைய தெதிர்முக வேற்றுமை
வேறென விளம்பான் பெயரது விகாரமென்
றோதிய புலவனு முளனொரு வகையால்
இந்திர னெட்டாம் வேற்றுமை யென்றனன்.

மெய்ப்பாடு

8. மெய்ப்பாட் டியல்வகை மேதக விரிப்பின்
மெய்க்கட் பட்டு விளங்கிய தோற்றம்
செவ்விதிற் றெரிந்து செப்பின்மற் றதுவே
சுப்பிர யோகம் விப்பிர யோகம்
சோக மோக மரண மென்னும்
ஐவகைக் கணையு ளாக்கிய காமம்
பைய முறுகிடப் படரு மவற்றுட்
சுப்பிர யோகஞ் சொல்லு நினைப்பும்
விப்பிர யோகம் வெய்துயிர்ப் புறுதல்
சோகம் வெப்புஞ் சோறுண் ணாமையும்
மோகம் மயக்கமு மொழிபல பிதற்றலும்

மாண மணங்கலும் வருந்தலு மென்பர்
அரணஞ் சான்ற வறிவி னோரே.

அகமெய்ப்பாடு

9. அகமெய்ப் பாடே யமையுங் காலை
விளர்ப்பே பசப்பே மெலிவே விதிர்ப்பே
துளக்கந் துயர்த றும்மல் சோர்தல்
வேர்த்தல் வெருவுதல் விம்முதல் விரும்புதல்
ஒப்பி லாமை யுருகுதன் மயங்கல்
மூரி யுயிர்ப்பு மூர்ச்சனை முறுவல்
காரிகை கடத்தல் கழிகண் ணோட்டம்
இருந்துழி யிராமை யிராக மிகழ்தல்
வருந்திக் காட்டுதல் வாய்நனி யுறுதல்
சிந்தனை கூர்தல் சேர்துயி லின்மை
கண்டது மறுத்தல் காட்சி விரும்பல்
உண்டி விரும்பாமை யுரைத்தது மறுத்தல்
கண்ணீர் வழிதல் கனவுநனி காண்டலென
எண்ணூற் றுறையு மென்மனார் புலவர்.

புறமெய்ப்பாடு

10. புறமெய்ப் பாட்டைப் புகலுங் காலை
நற்சிருங் கார நகையே வியப்பே
அச்சம் வீர முட்கோ ளிரக்கம்
இழிவெனத் தோன்றின வெவ்வகை யெட்டும்
ஒவ்வொன் று நான்கா யுறழ்ந்திட வவைதாம்
முப்பா னிரண்டென மொழிந்தனர் புலவர்.

சிருங்காரம்

11. அவற்றுள்;
இளமையும் வனப்பும் வளமையுங் கல்வியுங்
களனுத் திரிதருஞ் சிருங்கா ரம்மே.

நகை

12. மயக்கம் பெயர்ப்பே யிகழ்வே நோக்கம்
நயப்பத் தோன்று நகையது நலனே,

வியப்பு

13. தறுகண்மை புலமை பொருளே பண்பே
பெறுவழித் தோன்றும் பெருந்தகு வியப்பே.

அச்சம்

14. சீற்ற மொடுக்கல் சிந்தை கலங்கல்
மாற்றலர் விலங்கு மற்றவர்ச் சேர்தல்
ஆற்றத் தோன்று மச்சத்தின் விளைவே

வீரம்

15. பகையே செருவே யிகலே முனிவே
மிகுவழித் தோன்றும் வீரத்தின் விளைவே.

உட்கோள்

16. ஐவகைக் குரவர் தேவர் மன்னர்
எய்தா தெய்திய வியல்பவை யுட்கோள்.

இரக்கம்

17. வருத்த மிகழ்வே வலியின்மை பெருமை
இரக்கந் தோன்று மிந்நா லிடத்தே.

இழிவு

18. நாற்றஞ் சுவையே தோற்ற மூறென்
றிந்நால் வகைத்தா மிழிவெனப் படுமே.

கலிப்பாவிலக்கணம்

19. இருவயி னோர்க்கு மொவ்வா வியலினும்
தெரியிழை மகளிரொடு மைந்த ரிடைவரூஉம்
கலப்பே யாயினும் புலப்பே யாயினும்
ஐந்திணை மரபி னறிவரத் தோன்றிப்
பொலிவொடு புணர்ந்த பொருட்டிற முடையது
கலியெனப் படூஉங் காட்சித் தாகும்.

இதுவுமது

20. தரவே யெருத்த மாரகங் கொச்சகம்
அடக்கியல் வகையோ டைந்துறப் புடைத்தே.

அராகம்

21. அராகந் தாமே நான்கா யொரோவொன்
றீதலு முடைய வீரிரண் டடியே.

திரவியலக்கணம்

பிருதிவி

22. மண்ணிடத் திருப்பன தாவர சங்கமமே.

அப்பு

23. புனலிடத் திருப்பன சலசரம் முதலிய.

தேயு

24. அனலிடத் திருப்பன புகைசுடர் முதலிய.

வாயு

25. காலிடத் திருப்பன விருகந்தம் முதலிய.

ஆகாயம்

26. விண்ணிடத் திருப்பன விண்மணி மதிமுதல்.

காலம்

27. காலக்க ணிருப்பன கோடைகுளிர் மாரிமுதல்.

திக்கு

28. திசையிடத் திருப்பன கடன்மலை முதலிய.

உயிர்

29. உயிரிடத் திருப்பன வுயர்ஞானம் முதல்.

மனம்

30. மனத்திடத் திருப்பன வாடல் பாடல்பிற.

2. அதிமதுரகவிராயர் (1500)

இவர் திருமலைராயன்சவையில் வீற்றிருந்த புலவர்களுள்ளே தலைவர். சுவையதிகம் பயக்குங் கவிபாடுந் திறத்தால் அதிமதுரகவி எனப்பட்டவர். காளமேகப்

புலவர் திருமலைராயன் சவையிற் கவிபாடி வந்து வீரங் கூறியபோது தமது வீரத்தையும் ஒரு கவியாற் கூறின வர். காராமணி என்பதற்குப் பிரதியாகக் கார்-மேகம். ஆ - பசு. மணி - இரத்தினம் எனக்கொண்டு காளமேகப் புலவர் வாசஞ்செய்த கடைச்சாலையிலே "மேகமும் பசுவும் இரத்தினமும் விலைக்கு வாங்கி வருக" என ஒருவனை விட்டவர். கடைவியாபாரி காளமேகப்புலவரால் "காராமணிப் பயறு" என்று தெரிந்து காராமணிப்பயறு அனுப்பப் பெற்றவர்.

வெண்பா

மூச்சு விடுமுன்னே முந்நூறு நானூறும்
ஆச்சென்றா லைந்நூறு மாகாதோ - பேச்சென்ன
வெள்ளைக் கவிகாள மேகமே புன்னுடைய
கள்ளக் கவிக்கடையைக் கட்டு.

3. அதிவீரராமபாண்டியர்
(1564—1604)

இவருடைய இராசதானி பாண்டிமண்டலத்திலே திருநெல்வேலியின் தென்கரையிலுள்ள கொற்கைமா நகரி. குலம் பாண்டிய ராசகுலம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு முந்நூறு வருடத்துக்கு முன் என்பர். இவர் சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய காப்பியங் களிலே நற்பயிற்சியுடையவர் என்பது இவரியற்றிய பிரபந்தங்களாலே இனிது விளங்குகின்றது. இவரியற் றிய பிரபந்தங்கள் நைடதம், கூர்மபுராணம், காசிகண் டம் முதலியன. "நைடதம் புலவரவுடதம்" என்பர். நைடதத்திலே வரும் "முல்லையங் கோதை நல்லார்" என்ற கவியையும், இராமாயணத்தில்வரும் "தோயும் வெண்

டயிர்" என்ற கவியையும் நோக்குக. வருணனையால் இரண்டும் ஒன்றே எனபது புலப்படும்.

நைடதம்

முல்லையங் கோதை நல்லார் முகமதி வெயர்வு தோன்ற
வல்விநுண் மருங்கு னேவ வால்வளை வாய்விட் டார்ப்ப
மெல்விரற் காந்தள் சேப்ப வெண்டயிர் கடையு மோசை
கொல்புலி முழக்க மென்ன வயின்றெறுங் குளிறு மாதோ.

இராமாயணம்

தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளவும்
ஆய வெள்வளை வாய்விட் டரற்றவும்
தேயு நுண்ணிடை சென்று வணக்கவும்
ஆயா மங்கைய ரங்கை வருந்துவார்.

இங்கே வந்த "வெண்டயிர் கடையு மோதை-கொல் புலி முழக்க மென்ன வயின்றெறுங் குளிறு மாதோ" என்பதையும், சீவக சிந்தாமணியிலே வரும் "கடைதயிர்க் குரலவேங்கை" என்பதையும் நோக்குக. வேங்கை - புலி. இன்னும் இந் நைடதத்திலே வரும் "கொங்கு விம்மு கோதை" "மயிர் வாய்ச் சிறுகட் பிடி" என்பவைகளையுஞ், சீவகசிந்தாமணியிலே வரும் "கொங்கு விம்மு கோதை" "மயிர் வாய்ச் சிறுகட் பெருஞ் செவி" என்பவைகளையும் நோக்குக. வருணனையால் ஒன்றுதல் நன்கு புலப்படும்.

4. அந்தகக்கவிவீரராகவமுதலியார் (1636)

இவருடைய பிள்ளைத்திருநாமம் வீரராகவமுதலியார். குருடரும், புலவருமாதல்பற்றி அந்தகக் கவிஎன விசேடிக்கப்பட்டார். அந்தகர் - குருடர். கவி - புலவர். இவரூர் தொண்டைமண்டலத்துள்ள பொற்களத்தூர்.

கச்சியப்பர் பூதூர் என்பர். தந்தையார் வடுகநாத முதலி யார். சமயம் சைவம். குலம் வேளாளர் குலம். காலம் ஏறக்குறைய இற்றைக்கு இருநூற்றெண்பது வருடங்க ளுக்கு முன் என்பர். இவர் "ஏடாயிரங் கோடி யெழு தாது தன் மனத் தெழுதிப் படித்த விரகர்." அவதானத் திலுங் கவிபாடுந் திறத்திலுஞ் சிறந்தவர். பாதேயத்தை நாய் கவர்ந்தோடியபோது "சீராடை" என்ற தனிநிலைக் கவி பாடினவர், அப்பொழுதை அரசர் சிலர் மீதும், பிரபுக்கள் சிலர் மீதும் பலவகைக் கவிகள் பாடிப் பல வகைப் பரிசில்களும் பெற்றவர்.

யாழ்ப்பாணம் வந்து பரராசசேகரமன்னன் முன் னிலையிலே வண்ணக்கவி அரங்கேற்றிப் பொன்னின் பந்தம், மத்தயானை முதலிய உத்தமப் பரிசில்களும் பெற் றவர். பரிசி லீந்த பெருமையைப் பாராட்டிக் கவிகளுஞ் சொற்றவர். இப் பெருமையை "ஈழ மண்டல மளவுந் திறைகொண்ட கவிவீர ராகவன் விடுக்கு மோலை" என்று பின்னொரு சீட்டுக் கவியிலுஞ் சுட்டிச் சொன்னவர். பரி சில்களன்றி மன்னன் பாடிய துதிகவிகளும் பெற்றவர் விற்பிடித்து மன்னன் நின்றபோது வெண்பா ஒன்று சொற்றவர். சேயூர்முருகன் பிள்ளைத்தமிழிலே "ஐயதென் கதிர்காமமென்னுமலைமுதலாய" என்று கதிர்காமத்தை யும் புகழ்ந்தவர். இவர் இயற்றிய பிரபந்தங்கள் கழுக் குன்றப்புராணம், கழுக்குன்றமாலை, சந்திரவாணன் கோவை, திருவாரூருலா, சேயூர்முருகன்பிள்ளைத்தமிழ் சேயூர்க்கலம்பகம், கயத்தாற்றரசனுலாமுதலியன.

ஆசிரிய விருத்தம்

பொங்குதமி ழயோத்திவாழ் தசரதனென் போனிடத்தும் பூதூர் வேந்தன், தங்கவடு கன்னிடத்தும் வீரரா கவரிருவர் தோன்றி னூரால், அங்கொருவ னொருகலைமா னெய்திடப்போய்

வசைபெற்றா னவனி பாலன், இங்கொருவன் பலகலைமா னெய்திடப்போய்க் கவியினா லிசைபெற் றானே.

இக்கவி காஞ்சிபுரத்திலே தம்மோடு கற்குங் காலத்திலே கச்சியப்பர் பாடிய கவி என்பர். வீரராகவர் என்பது கவிவீரராகவருக்கும் இராமபிரானுக்கும் பொதுவாய் நின்றது. கலைமான் - ஆண்மான், சரசுவதி. அவனி பாலன் - அரசன்.

கட்டளைக்கலித்துறை

சீராடை யற்ற வயிரவன் வாகனஞ் சேரவந்து
பாராரு நான்முகன் வாகனந் தன்னைமுன் பற்றிக்கவ்வி
நாரா யணனுயர் வாகன மாயிற்று நம்மைமுகம்
பாரான்மை வாகனன் வந்தே வயிற்றினிற் பற்றினனே.

இது பாதேயத்தை நாய் கவர்ந்தோடியபோது பாடியது என்பர். பாதேயம் - வழியுணவு. வயிரவன் வாகனம் - நாய். நான்முகன் வாகனம் - அன்னம்; சோறு. நாராயணன் வாகனமாயிற்று - கருடனாயிற்று; பறந்தது. மைவாகனன் - அக்கினி. மை - ஆடு.

வெண்பா

பொங்குமிடி யின்பந்தம் போயதே யென்கவிதைக்
கெங்கும் விருதுபந்த மேற்றதே - குங்குமந்தோய்
வெற்பந்த மானபுய வீரபர ராசசிங்கம்
பொற்பந்த மின்றளித்த போது.

இது பொற்பந்தங் கொடுத்தபோது பாடியது என்பர். மிடி - வறுமை. பந்தம் - தொடர்ச்சி. விருதுபந்தம் - வெற்றிவிளக்கு. பொற்பந்தம் - பொற்கிழி.

விருத்தம்

க. விரகன் முத்தமிழ் வீர ராகவன்
வரகவி மாலையை மதிக்கும் போதெலாம்
உரகனும் வாணனு மொப்பத் தோன்றினாற்
சிரகா கம்பிதஞ் செய்ய லாகுமே.

இது வண்ணக் கவி சொன்னபோது மன்னன் பாடியது என்பர். விரகன் - நிபுணன். உரகன் - ஆதிசேடன். வாணன் - மாவலி மகன். சிரகம்பிதஞ் செய்ய ஆயிரந்தலையுடைய ஆதிசேடனும், கரகம்பிதஞ் செய்ய ஆயிரங் கரமுடைய வாணாசுரனும் வேண்டும் என்க. கம்பிதம் - அசைத்தல்.

கட்டளைக்கலித்துறை

உ. இன்னங் கலைமகள் கைம்மீதிற் புத்தக மேந்தியந்தப்
பொன்னம் புயப்பள்ளி புகிருப் பாளென்ன புண்ணியமோ
கன்னன் களந்தைக் கவிவீர ராகவன் கச்சியிலே
தன்னெஞ்ச மேடெனக் கற்றா ளொருமுத் தமிழையுமே.

இது முதலியார் வாய்ப்பாடமாக இராமாயணக் கவிகள் சொல்லி உரைப்பிரசங்கஞ் செய்தபோது மன்னன் பாடியது என்பர். அம்புயப்பள்ளி - தாமரைச் சேக்கை.

வெண்பா

வாழு மிலங்கைக்கோ மானில்லை மானில்லை
ஏழு மராமரமோ வீங்கில்லை—ஆழி
அலையடைத்த செங்கை யபிராமா வின்று
சிலையெடுத்த வாறெமக்குச் செப்பு.

இது மன்னன்கையிலே வில்லும் அம்புங் கொடுத்து விட்டு மன்னன் கோலம் எவ்வாறு என்று மந்திரிமார் சிலர் வினவியபோது முதலியார் பாடியது. என்பர்.

கழுக்குன்றமாலை

மாடேறு தாளு மதியேறு சென்னியு மாமறையோன்
ஓடேறு கையு முடையார் தமக்கிட மூருழவர்
சூடேறு சங்கஞ் சொரிமுத்தை முட்டையென் றேகமலக்
காடேறு மன்னஞ் சிறகா லணைக்குங் கழுக்குன்றமே.

சந்திரவாணன்கோவை

மாலே நிகராகுஞ் சந்திர வாணன் வரையிடத்தே
பாலேரி பாயச்செந் தேன்மாரி பெய்யாநற் பாகுகற்கண்
டாலே யெருவிட முப்பழச் சாற்றி னமுதவயன்
மேலே முளைத்த கரும்போவிம் மங்கைக்கு மெய்யெங்குமே.

5. அநதாரியப்பர்

இவரூர் தொண்டைமண்டலத்துள்ள வாயல் என்னுமூர். தொண்டைமண்டல சதககாரரும் "வண் டமிழ்க் கும்ப னநதாரியுந் தொண்டைமண்டலமே" என்பர், சமயம் சைவம். கம்பன் என்னும் வெண்பா வாற் புனைந்துரைக்கப்பட்ட புலமையாளர். கல்லூர் அதிபனுயிருந்த திருவிருந்தவன் விரும்பியவாறே வட மொழிக்கணுள்ள சுந்தரபாண்டியம் என்னும் மதுரை மான்மியத்தைச் செந்தமிழிற் பெயர்த்து விருத்தயாப்பில் யாத்தவர். அதனை அவ்வதிபன் முன்னிலேயிலே அறுகாற் பீடத்திலிருந்து அரங்கேற்றினவர்.

வெண்பா

கம்பனென்றுங் கும்பனென்றுங் காழியொட்டக் கூத்தனென்றும்
கும்பமுனி யென்றும்பேர் சொல்வாரோ—அம்புவியில்
மன்னு வலர்பாவும் வாயலந தாரியப்பன்
அந்நாளி லேயிருந்தக் கால்.

சுந்தரபாண்டியம்

மதுரை நாயகன் சுந்தர பாண்டிய வடநூற்
கதிரு லாமணி யாறுகாற் பீடத்திற் கல்லூர்
அதிப னுந்திரு விருந்தவ னவையினில் வாயற்
பதியில் வாழந தாரிசெந் தமிழினிற் பகர்ந்தான்.

6. அபிராமிபட்டர்
(1720)

இவரூர் சோழமண்டலத்துள்ள திருக்கடவூர். குலம் வேதியர் குலம். சமயம் சைவம். இவர் தேவி வழிபாட்டிற் சிறந்தவர். தஞ்சைச் சரபோசி மகாராசாவுக்கு அமாவாசியைப் பௌர்ணிமை என்று தாங் கூறியதைச் சாதிக்கும்பொருட்டு உமாதேவியைப் பிரார்த்தித்துக் கீழே வெட்டிய குழியிலே நெருப்பெரியவிட்டு மேலே தூக்கிய நூறு வடங்கொண்ட உறியொன்றிலே ஏறியிருந்து "அபிராமி தேவி அருளாதொழியின்; அக்கினியில் வீழ்வேன்" என்று வஞ்சினங் கூறி அபிராமியம்மைமீதில் அந்தாதி ஒன்று பாடத் தொடங்கிப் பாடுகையில் ஒரு கவி முடிவில் ஒரு வடமாக உறியின் வடங்களையும் அறுத்துவந்தவர். "விழிக்கே யருளுண்டு" என்னுங் கவியும் முடியத் தேவியும் வெளிப்பட்டுக் காதுத் தோடுகளுள் ஒன்றைக் கழற்றி ஆகாசத்தில் வீசிப் பௌர்ணிமை காட்டப் பெற்றவர் என்பர். பின்னர்த் தேவியின் கருணையைப் பாராட்டி மற்றைக் கவிகளையும் முடித்தவர். இவ்வந்தாதி அபிராமியந்தாதி எனப்படும். பாராயணஞ் செய்வோர்க்குப் பரபத்தியும், வரசித்தியுங் கொடுக்கும், சந்தவின்பமும் பொருட் சுவையுமுடையது.

அபிராமியந்தாதி

விழிக்கே யருளுண் டபிராம வல்லிக்கு வேதஞ் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே யழுந்துங் கயவர்தம் மோடென்ன கூட்டினியே.

7. அம்பலவாணபண்டிதர்
(1814—1879)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள தெல்லிப்பழை. குலம் வேளாளர் குலம், சமயம் சைவம். காலம் இற்றைக்கு முப்பத்தேழு வருடங்களுக்கு முன். இவர் கோப்பாய் அருளம்பலமுதலியாருக்கு மைந்தர். சேனாதிராயமுதலியாருக்கு மாணவகர். தமிழ்மொழியிற் பல நூல்களுங்கற்றவர். பாரதம், இராமாயணம், இரகுவமிசம் முதலிய பெருங்காப்பியங்களிலும், கோவை, அந்தாதி, உலா முதலிய பலவகைச் சிறுகாப்பியங்களிலும் பெரும்பயிற்சியுடையவர். காவியசாத்திர விநோதத்தாற் பெரிதுங் காலங் கழித்தவர். சேனாதிராய முதலியார் பாடிய நல்லைவெண்பா, நீராவிக்கலிவெண்பா என்பவைகளைப் பரிசோதித்து அச்சிட்டவர். இவருடைய கல்விப்பெருமை, செல்வப்பெருமை, சிவபத்தி, வாக்குவன்மை முதலியவைகளை இவர்மீது சி. வை. தாமோதரம்பிள்ளை பாடிய சரமகவிகள் இனிது விளக்கும். அவற்றுள்ளும் ஒன்று காட்டுதும்.

வெண்பா

தெல்லி நகரந் திருவிழந்த தோதமிழ்மா
தில்லந் தனையின் றிழந்தாளோ—சொல்லரிய
வித்தார வாய்மை விறலம் பலவாணன்
செத்தானென் றூரோ சிவா.

8. அம்பிகாபதி
(1150)

இவர் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பருடைய புத்திரர். கல்விகற்றுக் கவிபாடுந்திறமும்பெற்றவர்.

குலோத்துங்க சோழமகாராசாவின் சமஸ்தானவித்து வானும் இருந்தவர் என்பர். கம்பராமாயணத்துக்குச் "சம்பநாள்" என்ற பாயிரங் கொடுத்தவர். அம்பிகா பதிக்கோவை பாடினவரும் இவர் என்பர். தமிழில் அலங்காரஞ் செய்த தண்டியின் பிதாவும் இவர் என்பர்,

இராமாயணப்பாயிரம்

சம்ப நாடன் னுமைசெவி சாற்றுபூங்
கொம்ப னுடன் கொழுந னிராமப்பேர்
பம்ப நாடழைக் குங்கதை பாச்செய்த
கம்ப நாடன் கழறலை யிற்கொள்வாம்.

சம்பு அ நாள் தன் - சிவன் அக்காலத்திலே தன் னுடைய. பூங்கொம்பு அனுள் - பூங்கொம்புபோன்றவ ளாகிய சீதை. உமை செவிசாற்றிய இராமகதை அத்தியாத்துமராமாயணம்.

அம்பிகாபதிக்கோவை

கனமே கருங்குழல் கங்குலன் றேகண் கருவிளையின்
இனமே குவளையு நெய்தலு மல்ல விவர்க்கிடையென்
மனமே வளரிள வஞ்சியன் றேவஞ்ச மாரன்வைத்த
தனமே தனங்கன கத்தட மேருச் சயிலமன்றே.

9. அம்பிகைபாகர்
(1884—1904)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள இணுவில். குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். காலம் இற்றைக் குப் பன்னிரண்டு வருடங்களுக்கு முன். பாரதம், கந்த புராணம், தணிகைப்புராணம் முதலிய இலக்கியங்களை யும், தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கணங் களையுங் கற்றவர். நாவலரிடஞ் சேனாவரையத்தையும்,

நடராசையரிடம் சிவஞானசித்தியார் முதலிய சித்தாந்த சாத்திரங்களையும் பாடங்கேட்டவர்; இணுவையந்தாதி, தணிகைப்புராணத்தில் நகரப்படலம்வரையு முரை, சூளாமணிவசனம் முதலியன செய்தவர்.

இணுவையந்தாதி

திருத்தங் கிதழி யுடைசதாமர் தில்லைத் திருச்சபையில்
நிருத்தங் கொளீச ரளித்தமுன் னேன்சிர நீண்மருப்பபான்
றருத்தன் கொசித்த வுணற்செற்ற முன்னோ னுறுதுணைகா
மருத்தங் கிணுவையந் தாதியென் வாயில் வருவிக்கவே.

10. அமிர்தகவிராயர்
(1666)

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள பொன்னுங்கால் என்னுமூர். குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு இருநூற்றைம்பது வருடங்கட்கு முன் என்பர். இவர் அமிர்தம் போன்றினிக்கவும் பல பொருள்கள் தொனிக்கவுங் கவிபாடுந் திறமுடையவர். இராமநாதபுரத்திலே அரசராயிருந்த தளவாய் இரகுநாதசேதுபதியுடைய சமஸ்தானப்புலவர்கள் சவையிலே தலைவராய் வீற்றிருந்தவர். ஒருநாள் அரசர் புலவர்கள் பாடிவந்த பாட்டுக்களைக்கேட்டு வியந்து மகிழ்ந்து வீற்றிருக்கும்போது புலவர்களை நோக்கிப் "புலவிர்காள்! நீவிர் அகப்பொருளிற் சொல்லப்பட்ட துறைகளுள் ஒரு துறையே ஒவ்வொரு கவியிலும் வருமாறு பல கவிகள் பாடுவீர்களா?" என்றபோது பத்து, இருபது, ஐம்பது பாடலாம் என்ற புலவர்களெல்லாம் நாணுமாறு நான், நூறுபாடுவேன் என நிச்சயித்துக்கொண்டு "நானூறு பாடுவேன்" என்றனர்.

நானூறு என்பதற்கு நான்கு நூறு எனப் பொருள் பண்ணி மற்றைப் புலவர் சிலவர் "இவர் நானூறு பாடு வேன்" என்கின்றார் என்று வாதித்துச் சலஞ்சாதித்தபோதும் அதற்கு உடன்பட்டு இடையூறு கிளத்தலிலமைந்த நாணிக்கண்புதைத்தல் என்னும் துறையையே அமைத்து நானூறு கவிகள் பாடினவர். இதன் பெயர் ஒருதுறைக் கோவை. கவியெல்லாங் கட்டளைக்கலித்துறை. முன்னீரடிகளிலும் இரகுநாத சேதுபதியரசரின் "அருள்வலி யாண்மை கல்வி" முதலிய சீர்த்திப் பேறுகளைச் சிறப்பித்துக் கூறுவர். பின்னீரடிகளிலும் நாணிக்கண்புதைத்தல் என்னும் அகப்பொருளும் மற்றொரு புறப்பொருளும் சிலேடைநெறியானும் தொனிநெறியானுந் தோன்றுமாறு கூறுவர். புறப்பொருளிலே சாதிவிடயம், சோதிடவிடயம், இலக்கணவிடயம், நகரவிடயம், பாரதகதை இராமாயணகதை, பெரியபுராணகதை முதலிய பல வகைகளையும் படிக்கப் படிக்கச் சுவைபயக்குமாறு வெளிக்கக் காட்டுவர்;

ஒருதுறைக்கோவை

1. மஞ்சாங் கருதலர் போர்ப்படை மேற்சண்ட மாருதம்போல்
விஞ்சாங்க மூல பலரகு நாதன் வியன்சிலம்பிற்
பஞ்சாங்க மோதி மறைகாட்டிச் சொர்க்கமிப் பாற்படுத்தி
அஞ்சாங் குலத்தவர் பார்ப்பாரைச் சேர்ந்த ததிசயமே.

மஞ்சு - முகில். கருதலர் - பகைவர். பஞ்சாங்கம் - ஐந்துறுப்பு. ஓதி - அளகம். மறை என்றது வேதம் பொன்ற இடையை. சொர்க்கம் - தனம். அஞ்சாங் குலத்தவர்-அஞ்சு விரலையுடையவராகிய கையார், சங்கர சாதியர். கையார் என்றது கையை. பார்ப்பார் என்றது கண்களையும் அந்தணரையும்.

2, *தீநத்தை வென்ற கொடைப்புகழ் கேட்குஞ் செவிக்கமுத*
பாநத்தை யொத்த ரகுநாத சேதுபதி வரைவாய்க்
கானத்தை வானத்தை நேர்சொ லிடையொரு கன்னியத்தம்
மீனத்தை நாடிச் செலக்கும்ப ராசி வெளிப்பட்டதே.

தீனம் - வறுமை. கானம் - இசை. அத்தம் - கை. மீனம் என்றது மீன்போன்ற கண்களை. கும்பராசி என்றது குடங்கள்போன்ற ஸ்தனங்களை. இராசி - தொகை.

3. *கார்நிரை யத்தைத் தராத்தி யெடுத்ததன் கைவரையாற்*
பார்நிரை காத்த ரகுநாத சேது பதிவரைவாய்
நேர்நேர் நிரைநேர் நிரைநிரை முன்னுரையு நீக்கிப்பின்னு
நேர்நிரை யொன்றையுங் காட்டிய வாறென்ன நேரிழையே.

இச்செய்யுள் யாப்பிலக்கணவுணர்ச்சியால் அறியற்பாலது. நேர்நேர் என்பது முதலிய நான்கும் அகவற்சீர்க்குரிய அசையிரட்டைகள். நேர்நேர்=தேமா. நிரைநேர்=புளிமா. நிரைநிரை=கருவிளம்; என்றது மாம்பிஞ்சின் பிளவையும் கருவிளம்பூவையும் ஒத்த கண்களை. நேர்நிரை=கூவிளம்: என்றது வில்வங்காய்போன்ற ஸ்தனங்கள் இரண்டையும்.

4. *பாவூர்சங் க்ராம விசைசூதர் பாடப் பவனிவரு*
மாவூர் நகுல னெனும்ரகு நாதன் வரையனையீர்
கோவூர்முன் காட்டிய பின்குன்றத் தூர்வழி கூட்டியப்பால்
நாவூர்நுங் காஞ்சி புரங்காட் டுதெருண்டை நாட்டியல்பே:

சங்கிராமம்-யுத்தம். சூதர்-மங்கலபாடகர். கோவூர் என்றது கண்களை. குன்றத்தூர் என்றது ஸ்தனங்களை.

5. *வேந்தாதி வேந்தர் பரவுஞ் சமுக விசயன்மநு*
மாந்தா திகள்புகழ் வேள்ரகு நாதன் வரைமடவீர்
காந்தாரி யாய்த்துரி யோதன மால்பெறக் காட்டியவற்
காந்தா ரத்தையுமுன்ன மேகாட் டியதிங் கதிசயமே.

மாந்தாதா - சூரியவமிசத்திருந்த ஓர் அரசன். அவற் காந்தாதை - திருதராட்டிரன்; என்றது கண்புலப் படாமையை.

6. குத்கிப லாரி புஜடில்லி புச்சினி கோலகொண்டை
சித்திரக் கன்முதல் வெல்ரகு நாதன் சிலோச்சயவாய்
அத்திரி யைத்தரி சித்தோஞ் சரபங்க ஞச்சிரமஞ்
சித்திபெற் ருலினி நாமேயி ராமனுஞ் சீதையுமே.

அத்திரி என்றது மலைபோன்ற ஸ்தனங்களையும், ஆரணியத்திலே இராமபிரான் கண்ட ஒரு முனிவரையும். சரபங்கன் என்றது அப்புபோன்ற கண்களையும் அவர் கண்ட ஒரு முனிவரையும் என்க.

7. அங்கங் கலிங்க மலையாள மீழ மனைத்துவென்ற
சிங்க விசய சயரகு நாதன் சிலம்பிற்பொன்னே
சங்கிலி யாரையுங் கண்டேன் பரவை தனையுங்கண்டால்
மங்கல சுந்தர னென்றெனை யேதொழு மண்டலமே.

சங்கிலியார் என்றது சங்கிலிபூட்டிய ஸ்தனங்களை. பரவை என்றது கடல்போன்ற கண்களை.

11. அமிர்தசாகரர்
(1000)

இவரை "ஆரியம் என்னும் பாரிரும் பௌவத்தைக் காரிகையாக்கித் தமிழ்ப்படுத்திய அருந்தவத்துப் பெருந்தன்மை அமிர்த சாகரர் என்னும் ஆசிரியர்" என்று குணசாகரர் கூறுவர். இவர் சமயம் ஆருகதம். இவர் செய்தது யாப்பருங்கலக்காரிகை என்னும் யாப்பிலக்கணம். கவிகளெல்லாம் கட்டளைக்கலித்துறை. ஆயினும் இலக்கணங்கூறும் பாகமெல்லாம் சூத்திரம்

போன்று சுருக்கமாயிருக்கும். எஞ்சியபாகம் மகடூஉ முன்னிலையாயிருக்கும். இதன்கண் வெண்பா முதலிய பாக்களின் இலக்கணங்களும் வெண்டுறை முதலிய பாவினங்களின் இலக்கணமும் விரித்துக் கூறப்படும். இந் நூற்பெருமையை யாம் அச்சிட்ட யாப்பருங்கலக்காரிகைப் புத்துரையின் உபக்கிரமணிகையிற் கூறியிருக்கின்றும். வேண்டுவார் ஆண்டுக் காண்க.

யாப்பருங்கலக்காரிகை

கந்த மடிவில் கடிமலர்ப் பிண்டிக்க ணூர்கிழர்கீழ்
எந்த மடிக ளிணையடி யேத்தி யெழுத்தசைசீர்
பந்த மடிதொடை பாவினங் கூறுவன் பல்லவத்தின்
சந்த மடிய வடியான் மருட்டிய தாழ்குழலே.

12. அமிர்தம்பிள்ளை
(1845—1899)

இவர் முத்துவீர முனிவருக்கு மாணவகர், குலம் வேளாளர் குலம். தமிழ் சமஸ்கிருதம் தெலுங்கு கன்னடம் இந்துஸ்தானி என்னும் நான்கு பாஷைகளையும் நன்கு கற்றவர். ஆங்கில அறிவும் சிறிது உடையவர், இவர் சேலம் அரசினர் கல்லூரியிலும் திருச்சி எஸ். பி. சி. கல்லூரியிலும் பலவருடம் தமிழ்ப்பேராசிரியராக இருந்தவர். 1889-ம் ஆண்டு தொடக்கம தமிழ்ச்செல்வன் என்னும் பத்திரிகையைத் தொடங்கி அதற்கு ஆசிரியராக இருந்தவர். அவர் இயற்றிய நூல்கள் பெண்மை நெறி விளக்கம், தமிழ்விடுதூது, யாப்பிலக்கணவினுவிடை முதலியன. தமிழ்விடுதூது தமிழகத்தின் பழமையை நன்கு விளக்குவது.

தமிழ்விடுதூது

காப்பு

பொன்னி வளமார் சிரபுரத்தார் போற்றுசெல்வ
மன்னு மிரத்தின மாம்வள்ளல்போல் — தன்னுதமிழ்
தூதென்னுஞ் செய்புண் முடியவந்தத் தூவெண்பூ
மாதென்னு வீற்றிருப்பாள் வந்து.

13. அரசகேசரி

(1450)

இவரூர் யாழ்ப்பாணத்து நல்லூர். சமயம் சைவம். காலம் இற்றைக்கு நானூற்றறுபது வருடங்களுக்கு முன் என்பர். இவர் பரராசசேகரமகாராசாவின் மருகர். பாண்டிமண்டலத்துள்ள ஆழ்வார் திருநகரியிலிருந்த அஷ்டாவதான இராமாநுசக்கவிராசரிடம் இலக்கியலக்கணங் கற்றவர் என்பது கர்ணபரம்பரை. எட்டுத்தொகை முதலிய சங்கச்சான்ருேர் நூல்களையும், சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய பிற்றைச் சான்ருேர் நூல்களையுங் கற்றவர் என்பது இவரியற்றிய காவியத்திலே வருஞ் சொற்பிரயோகங்களாலும் வருணனைகளாலும் விளங்குகின்றது. இவரியற்றிய காவியம் இரகுவமிசம். இது காளிதாசமகாகவி செய்த இரகுவமிசத்தின் மொழிபெயர்ப்பு.

இதன்கண் திலீபமகாராசன் காமதேனுவை வழிபட்டுப் புத்திரனுக இரகு என்பவனைப் பெற்ற கதையும், இரகுவின்கதையும், இரகுவின் மகன் அயன்கதையும், அயன் மகன் தசரதன்கதையும், தசரதன் மகன் இராமன் கதையும், இராமன் மகன் குசன்கதையும், பிறவுஞ் சொல்லப்படுகின்றன. கவிகளுட்பல அரிதுணர்தற்

பாலன. கார்க்கசிய வாக்கியம் விரவிய கவிகளாயும் பல வுள. வடமொழி நோக்கி அறியப்படுங் கவிகளாயும் பலவுள. அரிதுணர்தற்பாலனவாகிய சில கவிகளுக்கும், பலசொற்றொடர்களுக்கும் உரையெழுதி "இரகுவமிசக் கருப்பொருள்" என ஒன்று பிரகடனஞ் செய்திருக்கின் றாம். நமது மாணவகரும் வித்துவானுமாகிய புன்னை யம்பதிக் கணேசையரும் திக்குவிசயப்படலம் வரையும் உரையெழுதிப் பிரகடனஞ் செய்திருக்கின்றார்.

இரகுவமிசம்

1. இட்ட மெத்திய வெய்யவ ரிடுக்கண்வந் திறத்தான்
முட்ட வத்தலைப் பகைவரா குவரென முன்னோர்
பட்டு ரைத்தன காட்டுமா பானுவாற் பரியுங்
கட்ட கட்டலைக் கொட்டைவான் சரோருகக் களையே.

வெய்யவர் - கொடியவர், சூரியர். களை எழுவாய். காட்டும் பயனிலை. பரிதல் - வருந்துதல். கட்ட - பிடுங் கிய. கள் - தலை. கொட்டை - பொகுட்டு. சரோருகம் - தாமரை.

2. புன்கட் சூதவா வேட்டையி னவாவெறும் பொய்யேற்
றின்கட் பேரவா மாதரா ரவாவிந்த விறைவன்
தன்கட் பட்டவா தழைத்தவா விலையெனிற் றவறில்
என்கட் பட்டவா வெய்திடு மனத்திடை யிவற்கே.

சூதவா - சூதின்மேலாசை. கட்பேரவா - கள்ளின் கட்செல்லும் பேராசை. பட்டவா - உண்டாயநெறி. தழைத்தவா - வளர்ந்தநெறி.

14. அருணகிரிநாதர்
(1500)

இவருடைய உறைவிடம் திருவண்ணாமலை. சமயம் சைவம். காலம் வில்லிபுத்தூரர் காலம் என்பர்.

இவர் கந்தரநுபூதி பெற்ற ஒரு வரகவி. "கந்தரநுபூதி பெற்றுக் கந்தரநுபூதிசொன்ன—எந்தையருணகிரி" என்று தாயுமானவருங் கூறுவர். வண்ணக்கவி பாடும் வகையில் மிக வல்லவர். இவர்க்கும் வில்லிபுத்தூரர்க்கும் வித்தியா விடயத்தில் வாதம் நிகழ்ந்தது என்றும், இவர் பாடுங் கவிகளுக் கெல்லாம் பொருள் கூறுவேம் என்றுடன்பட்ட வில்லிபுத்தூரர் முன்னிலையிலே கந்தரந்தாதி எனப்படும் யமகவந்தாதி பாடினர் என்றும், "திதத்தத்த" என்னும் 54-ங் கவியைத் தகரவருக்கமாகப் பாடி, வில்லிபுத்தூரரைப் பொருளிலே மயங்கச் செய்து வென்றார் என்றுஞ் சிலர் கூறுவர். இவர் இயற்றிய நூல்கள் கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரநுபூதி, திருப்புகழ் முதலியன.

கந்தரந்தாதி

வாரணத் தானை யயனைவிண் ணோரை மலர்க்கரத்து
வாரணத் தானை மகத்துவென் றோன்மைந் தனைத்துவச
வாரணத் தானைத் துணைநயந் தானை வயலருணை
வாரணத் தானைத் திறைகொண்ட யானையை வாழ்த்துவனே.

15. அருணந்திசிவாசாரியர்

(1316)

இவரூர் நடுநாட்டுள்ள திருத்துறையூர். குலம் ஆதிசைவ வேதியர்குலம். காலம் ஏறக்குறைய இற்றைக்கு அறுநூறு வருடங்களுக்கு முன் என்பர். இவர் இலக்கண இலக்கியங்களையன்றிச் சைவாகமங்களையும் நன்கு கற்றவர். சகலாகமபண்டிதர் என்னுங் காரணப் பெயருடையவர். மெய்கண்டதேவருடைய சீடர்களுள்ளே சிறந்தவர். திருப்பெண்ணுகடம் மறைஞான

சம்பந்தசிவாசாரியர் முதலியோர்க்கு ஆசிரியர். சிவஞான சித்தியார், இருபாவிருபஃது என்னுஞ் சித்தாந்தசாத் திரங்கள் இரண்டுஞ் செய்தவர். சிவஞானசித்தியாரில் ஒரு பாதிவிருத்தத்தின் பொருளையும் இவர் பெருமையை யும் பாராட்டிப் "பாதிவிருத்தத்தாலிப்பார்விருத்தமாக வுண்மை—சாதித்தார் பொன்னடியைச் சாருநாளெந் நாளோ" எனத் தாயுமானவர் கூறுவர். "ஆறுறு தத்து வமு மாணவமும் வல்வினையு—நீறுக முத்திநிலை நிற் பவர்க்குப்—பேறுகப்—பார்விரித்த நூலெல்லாம் பார்த் தறியச் சித்தியிலே—ஓர் விருத்தப் பாதிபோதும்" எனச் சிவபோகசாரகாரர் கூறுவர். பாதிவிருத்தம் என்றது "அறியாமை யறிவகற்றி யறிவினுள்ளே யறிவுதனை யருளினு லறியாதே யறிந்து—குறியாதே குறித்தந்தக் கரணங்களோடுங் கூடாதே வாடாதே குழைந் திருப்பை யாகில்" என்னும் ஈரடிகளையும் என்பர். இது சிவஞானபோதத்துக்கு வழிநூல். சுபக்கம், பரபக்கம் என இருவகையுடையது. சுபக்கம் மறைஞானதேசிகர், சிவாக்கிரயோகியர், ஞானப்பிரகாசர், சிவஞானயோகியர், நிரம்பவழகியர், சுப்பிரமணிய தேசிகர் என்னும் அறுவ ருரை யுடையது. பரபக்கம் ஒற்றியூர் ஞானப்பிரகாசர், தத்துவப்பிரகாசர் முதலியோருரை யுடையது. சுபக்கத் திலே கடவுள் ஒருவர் உளர் எனல், கடவுளால் உலகந் தோன்றுதல், பிரமா முதலிய தேவர்களிடம் நின்று உலகை நடாத்துதல், ஆன்மாக்களுக்கு இன்ப துன்பங் களைக் கொடுத்தல், அகச் சமயிகளுக்கும் புறச்சமயி களுக்குந் தத்துவநியமம், ஆணவ இலக்கணம், ஆன்மலக் கணம், அவத்தையிலக்கணம், சிவாநுக்கிரகம், ஆன்மா தன்னையும், தன்னை மறைத்த மலத்தையும் அறிதல், அறி வறியாமைகளின் இலக்கணம், தீக்கையின் விசேடம், ஆன்மசுத்தி, அன்பினிலக்கணம், அடியார்பத்தி, சிவ

லிங்கவழிபாடு, முதலியன தடைவிடைகளோடு சொல்லப்பட்டிருக்கின்றன.

பரபக்கத்திலே உலோகாயதமதம், பௌத்தமதம், ஆருகதமதம். மீமாஞ்சமதம், பிரபாகரன்மதம், சத்தப்பிரமவாதிமதம், மாயாவாதிமதம், சாங்கியமதம், பாஞ்சராத்திரமதம் என்பவைகளும் அவற்றின் மறுப்புரைகளும் விரித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன.

சுபக்கம்

மாநுடப் பிறவி தானும் வகுத்தது மனம்வாக் காயத்
தானிடத் தைந்து மாடு மரன்பணிக் காக வன்றோ
வானிடத் தவரு மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்பர்
ஊனெடுத் துழலு மூமை ரொன்றையு முணரா ரந்தோ.

பரபக்கம்

பார்த்தனு மிரத மேறிப் படைதனைப் பார்த்துச் சார்வைக்
கூர்த்தவம் பாலே யெய்து கொன்றர சாளே னென்னத்
தேர்த்தனி லிருந்து மாயை செய்துமால் கொல்லச் செப்பும்
வார்த்தைநூ லாகக் கொண்டாய் புரங்கொளுன் மதித்திட்டாயே.

16. அருணாசலக்கவிராயர்

(1718—1779)

இவருடைய சென்மஸ்தானம் சோழமண்டலத்துள்ள தரங்கம்பாடியைச் சார்ந்த தில்லையாடி என்பர். பிற்கால வாசஸ்தானம் சீகாழி என்பர். குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு நூற்றைம்பது வருடங்கட்கு முன் என்பர். இவர் தருமபுராதீனத்து வெள்ளியம்பலத்தம்பிரானுடைய மாணவகர். இராமாயணம் முதலிய இலக்கியங்களையும், பஞ்ச

லக்கணங்களையும் பழுதறக் கற்றவர். இராமாயணக் கதையை நாடகமாகப் பாடினவர். சீட்டுக்கவி ஒன்றிலே தம்மைக் "கணிகொண்ட பஞ்சலக் கணமும் ராமாயணக் கடலையு முணர்ந்த புலவன்" என்பர். பின்னொரு சீட்டுக்கவியிலே "இராமா யணக்கடலை நாடகஞ் செய்தவ னிலக்கண முணர்ந்த புலவன்—முத்தமிழ்க் காழியரு ணாசலக் கவிராசன்" என்பர்.

இராமநாடகங் கேட்டற்குத் துணையாகவேண்டும் என்று "சித்திதருகிறவல்லி" என்னுஞ் சீட்டுக்கவி கொண்டு மணலி முத்துக்கிருஷ்ண முதலியாரைக் கேட்டவர். பின்னர் அதனை அவர் முன்னிலையில் அரங்கேற்றித் தக்க பரிசில்கள் பெற்றவர். பெற்ற பரிசில் வகைகளைக் "கனந்தந்தான்" என்னும் பாட்டிலுங் காட்டினவர்.

இராமநாடகமன்றிப் பலபல தனிநிலைச் செய்யுள்களும், சீகாழித்தலபுராணம், சீகாழிக்கோவை, அநுமார் பிள்ளைத்தமிழ் முதலிய தொடர்நிலைச் செய்யுள்களும் பாடினவர். பாக்களெல்லாம் எதுகைநயம், மோனைநயம் முதலிய நயமெல்லாம் நன்கமைந்தவை.

சீட்டுக்கவி

சித்திதரு கிறவல்லி புத்திதரு கிறவல்லி
 தேவர்கள் வணங்கு வல்லி
தில்லைநா யகவல்லி சிவகாம வல்லியிரு
 திருவிழிக் கருணை யாலே
சத்தியவா சகனென்று பூமண் டலாதிபர்கள்
 தாமெச் சுணுந் திகிக்குஞ்
சகலபா ஷாநிபுண மணலிமுத் துக்கிருஷ்ண
 சதுரநீ வாழி கண்டாய்

நத்துமலர் குவளைநான் மதியநீ செஞ்சாலி
நான்கருவி மழை மேகநீ
நளினநான் பரிதிநீ பிள்ளைநா னன்னைநீ
நான்கவிஞன் வழுதி நீகாண்
சுத்தமுள ராமா யணந்தனைக் கொண்டுனது
சமுகமதி பெறவரு கிறேன்
சொற்பொரு ளறிந்தளவு சொல்லுவேன் கேட்கவே
துணையாக வேண்டு நீயே.

பரிசில்வகை

கனந்தந்தான் கனகாபி டேகந் தந்தான்
களங்கமிலாக் கருப்பொருளை யழைத்துத் தந்தான்
மனந்தந்தான் முடிசூட்டு மாலை தந்தான்
வாணிசிங்கா தனத்திருத்தி வரிசை தந்தான்
இனந்தந்தா னிராமகதை யெவர்க்குந் தந்தான்
எனையிராமா யணக்கவிஞ னெனப்பேர் தந்தான்
அனந்தந்தான் மணலிமுத்துக் கிஷ்ண பூபன்
அகந்தந்தா னிருமையினுஞ் சுகந்தந் தானே.

தனிநிலைச்செய்யுள்

ஞானம் பெருமை நயக்கருணை யுண்மையபி
மானம் பொறுமை வணக்கமுயர் — தானமுடன
சற்குணமா சாரந் தருகல்வி நீதிநெறி
துற்குணருக் கில்லென்றே சொல்.

சீகாழித்தலபுராணம்

காசிபிர யாகைகயை திருச்சயிலங் காளத்தி காஞ்சி தில்லை
ஆசின்மயூ ரங்கழுக்குன் றருணையிடை மருதகுட மூக்கை யாறு
வாசமலி பழமலைவெண் காடுகட வூர்வேத வனங்கோ டிக்கா [றே.
ஓசைபெறு கோகரண மிவற்றினுமைக் தெழுத்தைநயினி யுரைத்தனன்

17. அருமருந்துதேசிகர் (1763)

இவரூர் பாண்டிமண்டலத்திலே தென்கரையி லுள்ள திருச்செந்தூர். சமயம் சைவம். இவர் சுப்பிர மணியசுவாமி தொண்டர். சூடாமணிநிகண்டு, உரிச் சொனிகண்டு, கயாகரநிகண்டு, அகராதி நிகண்டு முத லிய நிகண்டுகளிலுள்ள அருஞ்சொற்களைச் சேர்த்து ஒருசொற் பலபொருளாக நிறுத்தி அரும்பொருள்விளக் கம் என்னும் நிகண்டு செய்தவர். அஃது எழுநூறு விருத்தமுடையது; தில்லைமன்றில் அரங்கேற்றியது.

அரும்பொருள்விளக்கநிகண்டு

அகவலே யழைத்த லாடலான்றவா சிரிய முப்பேர்
தகவறி வுடனொழுக்கந் தெளிவுஞ்சற் குணமுஞ் சாற்றும்
பகவதி யுமையே தூர்க்கை தருமதே வதைப்பேர் பன்னும்
முகவுமா ளிகைமு கப்பே மொள்ளுதல் காந்திக்கும் பேர்.

இதன்கண் அகவல், தகவு, பகவதி, முகவு என்னும் நான்கு சொற்களுக்கும் பலபொருள்கள் கூறப்பட்டவா றுணர்க.

18. அவிரோதிநாதர்

இவர் அருகசமயப்புலவர்களுள்ளே ஒருவர். திரு நூற்றந்தாதி எனப்படும் அந்தாதிப்பிரபந்தஞ்செய்தவர். இதன்கண் வருங் கவிகளெல்லாங் கட்டளைக்கலித்துறை. சந்தச்சிறப்பும், சொற்சிறப்பும், பொருட்சிறப்புமுடை யது.

திருநூற்றந்தாதி

புங்கவன் பூரணன் புத்தன் புராதனன் பூண்புனையாச்
சங்கரன் சக்கரன் றூமறை யோனெனத் தாவில்செங்கட்
சிங்கவன் பேரணைத் தீர்த்தனைத் தீவினைத் தெவ்வெனும்பேர்
மங்கவன் றேவெள்ளை வாள்கொண்ட வீரனை வாழ்த்துவதே.

19. அழகியசிற்றம்பலக்கவிராயர்
(1716)

இவரூர் பாண்டிமண்டலத்துச் சிவகங்கையைச் சேர்ந்த மிதிலைப்பட்டி. சமயம் சைவம். காலம் இற்றைக்கு இருநூறு வருடங்களுக்கு முன் என்பர். கட்டளைக்கலித்துறை பாடுதலில் வல்லவர். கட்டளைக்கலித்துறையிலே தளசிங்கமாலை என்னும் பிரபந்தஞ் செய்தவர். இத் தளசிங்கமாலை தளவாய் இரகுநாத சேதுபதியரசர் மேலது; படிக்கப் படிக்க இனிமை பயப்பது. சேதுபதியரசரின் செல்வம், கல்வி, செயல் முதலிய சீர்த்திப் பேறுகளைச் சிறக்கக் கூறுவது. சேதுபதியரசர் பவனி வரும்போது வீதியினின்று புலவர் பலவர் முன்னிலையிற் பாடியது என்பர்.

தளசிங்கமாலை

1. தேனார் மொழிமட மாதர்சந் தானம்பொன் சேருங்கல்வி
மேனா டவமுனைப் போற்செய் தவர்க்குண்டு வீணர்க்குண்டோ
வானா டரும்பணி ராமே சருக்குமுன் மண்டபஞ்செய்
தானா விசய ரகுநாத சேது தளசிங்கமே.

2. ஈனதன்ம மாயினுந் தான்கர்ப்ப கால மிருக்கவும்போன்
மனதி னினைந்த படிசெய்ய யார்க்கும் வராதுகண்டாய்
சனதன மாலணிப் புல்லாணிக் கோபுரங் கட்டுவித்த
தனத விசய ரகுநாத சேது தளசிங்கமே.

3. ஞாயிறு போய்விழத் திங்கள்வந் தெய்திட நண்ணியசெவ்
வாயனல் வீசப் புதனம்பு தூவகல் வியாழன்வர
வேயுறு வெள்ளி வளைசோர நானுன்னை மேவுதற்குத்
தாய்சனி யாயின ளோரகு நாத தளசிங்கமே.

20. ஆண்டாள்

(716)

இவரூர் பாண்டிமண்டலத்துச் சிறீவில்லிபுத்தூர். இவருடைய பிள்ளைத்திருநாமம் கோதை. சமயம் வைஷ்ணவம். தந்தையார்பெயர் பெரியாழ்வார். சிறு வயசில் சகல கலைஞானங்களும் நிரம்பப் பெற்றவர். திருமாலிடத்திலே பேரன்புடையவராய் அவரை விட்டகன்றுற்ற இல்லாநிலையைப் பெற்றவர். மாலையை முதலில் தான் சூடிப்பின்னர் அதைத் திருமாலுக்குக் கொடுத்த காரணத்தால் சூடிக்கொடுத்த நாச்சியார் என்னும் பெயரையும் பெற்றவர்.

இவரியற்றிய நூல்கள் திருப்பாவை முப்பது, நாச்சியார் திருமொழி நூற்று நாற்பத்து மூன்று என்பன. இவை நாலாயிரப் பிரபந்தத்துள் அடங்கியுள்ளன. திருப்பாவை என்னும் நூல் கோகுலத்து ஆயர்குலப் பெண்கள் கண்ணனைத் தங்கள் நாயகனாகப் பெற வேண்டி நோற்ற பாவை நோன்பை அழகுறக் கூறுவது. சிறீரங்க நாதரை அல்லாது வேறுயாரையும் மணப்பதில்லை என்று விரதம் பூண்டு, 'மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்' என்று கூறி மானிடரை வரிக்க மறுத்தவர்.

திருப்பாவை

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாராயணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்.

21. ஆண்டிப்புலவர்

இவரூர் தொண்டைமண்டலத்திலே செஞ்சியஞ் சீமையைச்சேர்ந்த ஊற்றங்கால். தந்தையார் பாவாடை வாத்தியார். ஆசிரியவிருத்தம் பாடுதலில் அதிகம் பிரிய முடையவர். ஆசிரியவிருத்த யாப்பினாலே ஆசிரிய நிகண்டு என ஒரு நிகண்டும், நன்னூற் சூத்திரப் பொரு ளுணருமாறு நன்னூலாசிரிய விருத்தம் என ஒன்றுஞ் செய்தவர். நன்னூலாசிரிய விருத்தம் உரையறி நன்னூல் எனவும்படும். "எழுத்துடன் சொல்லெனு மிலக்கணம் வகுத்துரை யியம்பு மாசிரியத்தினால்— நன்னூ லெனும் பெயர் விளங்கவே செய்தனன்" என்பர்.

ஆசிரியநிகண்டு

மாசைபீ தகங்கனக மாடுபொரு ளுரைசொன்னம்
 மாழைகர்ப் பூரம் பொலம்
வசுவேங்கை பூரியுடல் காங்கெயஞ் சுவணநிழல்
 மணிதயம் வெறுக்கை யீகை
ஆசைதம னியநிதி நிதானந் தனம்பண்டம்
 அத்தநிசி வித்த மாடை
அரர்கம் விருத்திகூ ழிரணியம் பிசியேமம்
 ஆடக மனந்த மீழம்
தேசிகங் காஞ்சனம் பீதகஞ் சந்திரம்
 செங் கொலரி கைத்தருத்தம்
செந்தாது சாமீ கரத்தொடுங் கஞ்சாமி
 திரவியங் கார முடனே
பேசுசாம் பூநதஞ் சாதரூ பம்பூதி
 பீலிகாணங் கல் யாணம்
பெருகுபொனி னும்மொன் றொழியுமப தாம்பொற்
 பெருங்காசு காண மாமே.

நன்னூலாசிரியவிருத்தம்

செம்மையுங் கருமையும் பசுமையும் வெண்மையுந்
திண்மையு நுண்மை யுடனே
சிறுமையும் பெருமையுங் குறுமையு நெடுமையுந்
தீமையுந் தூய்மையு மலால்
வெம்மையுங் குளிர்மையுங் கொடுமையுங் கடுமையும்
மேன்மையுங் கீழ்மையும் பின்
மெய்ம்மையும் வறுமையும் பொய்ம்மையும் வன்மையும்
மென்மையு நன்மை யுஞ்சொல்
ஐம்மையும் பழமையும் புதுமையு மினிமையும்
அணிமையு நிலைமையுஞ் சேர்
ஆண்மையு மும்மையு மொருமையும் பன்மையும்
அறுமையு மிருமையு மிக்க
கைம்மையுங் கூர்மையுங் கேண்மையுஞ் சேண்மையுங்
கடிய வளமையு மிளமையுங்
காணரிய முதுமையும் பண்புப் பகாப்பதங்
காட்டுமின் னனைய மாதே.

இது நன்னூற் பதவியலிலே வரும் "செம்மை சிறுமை" என்னுஞ் சூத்திரத்தில் "இவற்றெதி ரின்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே" என்பதனுரையாகும்.

22. ஆதிவராககவி

இவர் நாடு சோழநாடு. குலம் வேதியர் குலம். சமயம் சைவம். இவர் கதாம்பரி என்னும் நூல் செய்தவர். இந்தக் காதம்பரி பாணகவிஎன்பவரும் அவர் புதல்வருஞ் செய்த வடமொழிக் காதம்பரியின் வழிநூல். இதன்கண் காந்தருவ கன்னிகையாகிய காதம்பரி என்பவளை அவந்திதேசராசனாகிய சந்திராபீடன் என்பவன் மணம் புணர்ந்த காதை விரித்துரைக்கப் பட்டிருக்கின்றது.

பாயிரம்

பாற்கடற் சென்ற பூசை பாலின்மே லாசை வைத்து
மேற்கொள வரினு மெல்லா வெள்ளமுங் கொள்ள வற்றோ
பாற்கட லனைய காதம் பரிக்கடற் பரப்பி லாசை
மேற்கொளு மென்ற னெஞ்சம் வேண்டுவ கொள்ளு மன்றே.

23. ஆநந்தக்கூத்தர்

இவரூர் பாண்டிமண்டலத்திலே பொருநையாற் றங்கரையிலுள்ள வீரவநல்லூர். சமயம் சைவம். பஞ் சலக்கணங்களுநங் கற்றவர். சிவஸ்தல யாத்திரையிற் சென்று திருக்காளத்தியில் வசிக்கும்போது தம்மொடு நண்பு பூண்ட பெரியோர் சிலர் கேள்விப்படி திருக் காளத்திப்புராணஞ் செய்தவர். "காசிதனில்வாசமாயகி லேசன் பாதம்பெற்றவர்." பரிமளகவிராயர் என்னும் நாமமுமுடையவர்.

திருக்காளத்திப்புராணம்

விந்தகிரி யொன்றடக்கி வேதமொரு நான்கடக்குஞ்
சிந்தைதனி லைந்தடகிச் சிறுகரகத் தாறடக்கி
வந்துக்ட லோரேழும் வயிற்றடக்கிப் பொன்முகரி
முந்துதவத் தாற்கொணர்ந்த முனிவனடி முடிபுனைவாம்.

24. ஆளவந்தார்

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள வீரைநகர் என் றும், குலம் மாதவப்பட்டர் என்னும் முனிவர் குலம் என்றுங் கூறுவர். ஞானவாசிட்டம் என்னும் வேதாந்த நூல் செய்தவர். இந்த ஞானவாசிட்டம் வடமொழி ஞானவாசிட்டத்துக்கு வழிநூல்; பிறைசை அருணசல சுவாமி இயற்றிய உரையுடையது.

ஞானவாசிட்டம்

பெண்மை பாதியன் பெற்ற களிற்றினை
அண்மை தூர மறவகத் துன்னுவாம்

திண்மை ஞானச் சிறப்புயர் வாசிட்டம்
உண்மை யாக வொருங்குரை செய்யவே.

25. ஆறுமுகசுவாமி

இவரூர் தொண்டை நாட்டிலுள்ள திருக்கோவலூர். நிலை துறவு. குகை நமச்சிவாயருக்கு மாணவகர். இவர் இயற்றிய நூலின் பெயர் நிஷ்டானுபூதி இதற்கு முத்துக்கிருஷ்ணப்பிரமம் என்பார் ஒரு சிறந்த உரை எழுதியுள்ளார். இது ஐஞ்ஞூறு பாடல்கள்கொண்ட ஒரு மொழிபெயர்ப்பு நூல்.

நிஷ்டாநுபூதி

அன்னமயம் பிராணமய மனோமய விஞ்ஞான
மயத்தினுட னாங்கோச மயமாய்
இன்னன்மய னீங்கியமெய்ஞ் ஞானியுளங் குகையா
மெப்போது நீங்காம லிசைந்து மிகவாழ்வோன்
பன்னரிய விரிவுவாஞ் சமனதிக மிவைகள்பகர்
வரிதாற் பிரமன்முதற் பண்ணவர்தம் முளத்தில்
உன்னரிய வோநமச்சி வாயகுரு ராசனுப
சாணைம துளத்து முச்சியினும் வைப்பாம்.

26. ஆறுமுகநாவலர்
(1822—1879)

இவரூர் யாழ்ப்பாணத்து நல்லூர். குலம் கார்காத்த வேளாளர் குலம். மரபு ஞானப்பிரகாசர் மரபு. தந்தையார் கந்தப்பிள்ளை. பிறந்த வருடம் சாலிவாகன சகவருடம் ஆயிரத்தெழுநூற்று நாற்பத்தைந்துக்குச் சமமான சித்திரபானுவருடம். சமயம் சைவம். ஆச்சிரமம் நைட்டிகப்பிரமசரியம். கற்றுணர்ந்த பாஷைகள் செந்தமிழ், அங்கிலம், சங்கதம் என்பன. கற்றுப் பூரண பாண்டித்தியம் பெற்றது செந்தமிழ். செந்தமிழில்

வித்துவசிரோமணி சேனுதிராய முதலியாருக்கும், சரவணமுத்துப்புலவருக்கும் மாணவகர். நடராசையர், பொன்னம்பலபிள்ளை முதலியோர்க்கு ஆசிரியர். மற்றைய மாணவகர்கள்போலக் கற்றநூலளவிலமையாது மீட்டும் மீட்டும் நூல்களைத் தேடிக் கற்றவர். எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காணும் அறிவும் பெற்றவர்.

இலக்கியங்களிலும் வல்லவர். இலக்கணங்களிலும் வல்லவர். நீதிநூல்களிலும் வல்லவர். நியாயநூல்களிலும் வல்லவர். சைவசித்தாந்த சாத்திரங்களிலும் வல்லவர். சைவாகமங்களிலும் வல்லவர். சைவாகமப் பெருமையைச்சாதித்துப் போதித்தலிலும் வல்லவர். கலைபயில்வோ ருளங்கொளக் கற்பிக்குஞ் செயலிலும் வல்லவர். உலகியல்களைப் பலதலையின்றி உணர்தலிலும் வல்லவர். செந்தமிழ் நூல்களைத் திருத்தியச்சிடுஞ்செயலிலும் வல்லவர். செந்தமிழ்வாக்கியங்களைச் சிறப்புறத் தொடுத்துவரையுஞ் செயலிலும் வல்லவர். சைவப் பிரசங்கத்திலும் வல்லவர். புராணப் பிரசங்கத்திலும் வல்லவர். கசட்டுநெறிகளை மறுத்தெழுதுங் கண்டனங்களிலும் வல்லவர். செய்யுளியற்றுந் திறத்திலும் வல்லவர்.

கற்றதனாலாய பயனாகுங் கடவுள்வழிபாடு எனப்படுஞ் சிவபூசா கைங்கரியத்திலுஞ் சிறந்தவர். சிவதீக்கையே மோக்கம் பயக்கவல்லது என்னுஞ் சிந்தனை சொற்செயல்களிலுஞ் சிறந்தவர். தேவார திருவாசக பாராயணப்பற்றிலுஞ் சிறந்தவர். சிவனடியார்வழிபாட்டிலுஞ் சிறந்தவர். சைவாசாரத்திலுஞ் சிறந்தவர். சதாசாரத்திலுஞ் சிறந்தவர். சிவகாருண்ணியத்திலுஞ் சிறந்தவர். அடைந்தோர்ப் புரக்கும் அருளிலுஞ் சிறந்தவர் நன்றல்ல தன்றே மறந்து விடலிலுஞ் சிறந்தவர். கேட்

டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் வாக்குநலத்திலுஞ் சிறந்தவர். அவையஞ்சி மெய்விதிரா ஆண்மையிலுஞ் சிறந்தவர். சவைகூட்டிப் போதித்துப் பொதுநன்மை புரிதலிலுஞ் சிறந்தவர். அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்துந் தாங்க நிற்கும் நிலையிலுஞ் சிறந்தவர்.

மறைகணிந்தனை சைவநிந்தனை பொருமனமுடையவர். உறுதி நல்லறஞ் செய்பவர் தங்களோடு உறவுமுடையவர். நினைவில்வேறொரு கடவுளை வழிபடா நிலையுமுடையவர். சைவநிந்தைகளையும், சைவநிந்தகர்களையும், புறச்சமயங்களையும், பிழைபட இயற்றும் நூலுரைகளையும், வழுநிலைகாட்டிக் கண்டித்து வெறுத்தொழிக்குஞ் செயலுமுடையவர். அருமையுடைய செயலாற்றும் பெருமையுமுடையவர். மானமும் பண்பும் மறவாநிலையுமுடையவர். புகழ், அதிகாரம், பொருள் வரவு முதலியன கருதி மனிதரைப்பாடுஞ்செயலிற் செல்லா விரதமுமுடையவர். "தானமெவ் வகையுளுந் தக்க வித்தியா—தானமே சிறந்தது சாற்றுங் காலையே" எனச் சூதசங்கிதையாற் புகழப்பட்ட வித்தியாதானப் பெருந்தருமமு முடையவர். அன்னதானம் முதலிய தருமமு முடையவர்.

இவருடைய இலக்கியப்பயிற்சிவன்மையை இவரால் அச்சிடப்பட்ட பரிமேலழகருரை, திருக்கோவையுரை, பாரதம், சேதுபுராணம், கந்தபுராணம் முதலிய இலக்கியங்கள் காட்டும். இலக்கணப் பயிற்சி வன்மையை இலக்கணச்சுருக்கம், நன்னூற் காண்டிகை, சேனாவரையம், பிரயோகவிவேகம், இலக்கணக்கொத்து முதலிய இலக்கணங்கள் காட்டும். நீதிநூல் நியாயநூல்களின் வன்மையையுஞ், சைவசித்தாந்தசாத்திர வன்மையையும்

பெரியபுராணசூசனங் காட்டும். தருக்கசங்கிரகம், சைவ சமயநெறியுரை முதலியனவுங் காட்டும். பரிசோதன வன்மையை அச்சிட்ட நூல்களெல்லாங் காட்டும். செந் தமிழ்வாக்கியத் தொடைவன்மையைத் திருவிளையாடற் புராணவசனம்,பெரியபுராணவசனம் முதலியன காட்டும் கண்டன வன்மையைச் சண்டமாருதம்போற் சென்று தாக்கித் தலைகுனிவிக்குஞ் சுப்பிரபோதம், போலியருட்பா மறுப்பு, மித்தியாவாத நிரசனம் முதலியன காட்டும். செய்யுளியற்றும் வன்மையை அராலிச் சித்திவிநாயகர் விருத்தம் முதலியன காட்டும்.

வித்தியாதானப் பெருந்தருமச்செயலை இவராலே தாபிக்கப்பட்டு நடந்துவரும் வண்ணார்பண்ணைச் சைவப் பிரகாச வித்தியாசாலையும், சிதம்பர சைவப்பிரகாச வித்யாசாலையும், பிறவுங் காட்டும். இத்தருமசிந்தனை யின் பெருமையைச் செந்தமிழ்நூலுணர்ச்சியிலும் வித் யாபிமானத்திலுஞ் சிறந்து இந்த வித்தியாசாலைகளுக்கு முறையே தலைவர்களாய் வந்து பரிபாலிக்கும் த. கைலா சப்பிள்ளை, ச. பொன்னம்பலப்பிள்ளை என்னும் இருவர் செயலுங் காட்டும். இவர் பெருமையையும் புகழையும் யாவரும் அறிவர். அவை தமிழ்நாடெங்குங் கிரிதீபம் போல நின்று நிலவுகின்றன. இன்னும் அவைகளை இவர் சரித்திரம் நோக்கியும் அறிக. இவர் இயற்றிய செய்யுள்களுள்ளே நல்லைக் கைலாசப்பிள்ளையார் மங்கள விருத்தத்தை இங்கே காட்டுதும்.

மங்களவிருத்தம்

சீர்கொண்ட பரமவா னந்தசிற் சுகசொரூப
செகதீச திருமங்களம்
தெய்வசர வணபவசண் முகவற்கு முன்வந்த
திகழீச திருமங்களம்

பேர்கொண்ட சதுர்மறையின் முதலிலகு பிரணவப்
பிரகாச திருமங்களம்
பிறைநுதலொ டயில்விழிகொள் வலவைபெனு மரிவையிற்
பெருநேச திருமங்களம்
ஊர்கொண்ட பரிதிமணி யெனவிலகு முதாமதில்
ஒளிர்தேச திருமங்களம்
ஒருவெண்ணெய் நல்லையமர் மெய்கண்ட தேசிகற்
குபதேச திருமங்களம்
கார்கொண்ட கரடதட கயமுகவ வங்குசக்
கராச திருமங்களம்
கருணேச நல்லையங் கைலாச புரிவாச
கவினேறு கணராசனே.

இவரால் வசனரூபமாக எழுதப்பட்ட சிறிய பத்திரிகைகளும் பல. உதயதாரகை, இலங்கைநேசன் முதலிய பஞ்சிகைகளிற் பகிரங்கஞ்செய்த விஷயங்களும் பல. அவற்றுள்ளே சில கற்பவர்க்குத் திருத்தங் கொடுக்கும் வித்தியாவிடயங்கள் சில பலர்க்கும் பொதுவான திருத்தங்களையும் நன்மைகளையும் பயக்கும் விடயங்கள். சில தம்முடைய விடயங்களுக்குமாறுய் எழுந்தவைகளைக் கண்டிக்கும் விடயங்கள். சில சைவநெறி நிறுவுதற்காரணமான விடயங்கள். சில பரசமய கண்டனங்கள். சில வாத விடயங்கள். ஒரு விடயங் காட்டுதும்.

கரையார்வழக்கு

உமாதேவியாரைச் சிவபெருமான் "பரதவர் மகளாகுக" எனச் சபித்ததன்றிக் கரையார் மகளாகுக எனச் சபித்திலர் எனவும், வலைஞருக்குக் கரையார் என்னும் பெயர் வலைவீசுபடலத்தும், பாரதத்தும் இல்லை எனவும் வித்துவகேசரி கூறினர். வலைஞருடைய பரியாயநாமங்களுட் கரையாரும் ஒன்று என்பது இத்தேசத்தும் பிற

தேசத்துங் கற்றேரும் மற்றேருமாகிய எல்லாரும் அறிவாராகவும் வித்துவகேசரி ஒருவர் அறியாதது ஆச்சரியம்! வலைவீசுபடலத்தும் பாரதத்தும் வழங்காமையால் வலைஞரைக் கரையார் என வழங்குவது கூடாது என்றவர், திருவிளையாடற் புராணத்தும் பாரதத்தும் வழங்காமையால் அந்தணரைப் பிராமணர் எனவும், அரசரைச் சத்திரியர் எனவும், புலையரைப் பறையர் எனவும், முருகக்கடவுளைச் சுப்பிரமணியர் எனவும், விநாயகக்கடவுளை விக்கினேசுவரர் எனவும், சிவனைப் பர்க்கர் எனவும், திருமாலை விட்டுணு எனவும் வழங்குவதுங் கூடாது என்பார்போலும்!

சாதிப் பெயர் தொழில்பற்றியல்லது இடம்பற்றி வாராது என்றூர். வலைஞருக்குக் கடலர், கழியர், திமிலர், பஃறியர் என்பன யாதுபற்றி வந்த பெயர்? கூறுக. கரையார் என்பது கரையிலிருத்தல் காரணமாகப் போந்த பெயராதலால் வலைஞர் என்னும் ஒரு சாதியாரைமாத்திரஞ் சுட்டாது என்றவர் கழியர் என்பது கழியிலிருக்குங் காரணம்பற்றிப் போந்த பெயர் என்பதும், கழி, கரை என்பன ஒருபொருட் சொற்கள் என்பதும், அங்ஙனமாகவே கழியர்போலக் கரையாரும் வலைஞருக்குக் காரணவிடுகுறியாயிற்று என்பதும் அறிந்து கொள்ளமாட்டாதது என்னையோ! கரையார் - வலைஞர் என்று உவின்சிலோ அகராதியிற் சொல்லப்பட்டதும், உலகில் வழங்கப்படுவதும் நோக்கி அறிக.

கிராமம் என்பது நெய்தற்றிணைக்குரிய கரைதுறை அடுத்தது என்றூர். நெல்விளைநிலம் கிராமம் என்பதறியார் வேறு யாதறிவார்? சூடாமணிநிகண்டிலே பேசப்படாமையாற் கரையார் என்றொரு சாதியில்லை என்றூர். சாதி என்பனவெல்லாஞ் சூடாமணி நிகண்டிலே பேசப்பட்டது என்பது தமக்குங்கருத்தன்மை சூடாமணிநிகண்

டிலே பேசப்படாத புலையர் என்றொரு சாதி தாம் பேசிய வாற்றால் இனிது விளக்கினார். சாதிகள் எத்தனை? அவை களுள் எந்தெந்தச் சாதி எந்தெந்த உற்பத்தியும், எந்தெந் தத்தொழிலு முடையது? அவைகளை அறிவிக்கும் நூல் கள் எவை? என் கடிதத்திற் காணப்பட்ட கரையார் என் பது நிகண்டு முதலியவற்றில் இல்லாமையாற் கரையார் என்றொரு சாதி இல்லை என்றவர் என் கடிதத்திற் காணப்பட்ட பறையர் என்பதும் நிகண்டு முதலியவற் றில் இல்லாமையாற் பறையர் என்றொரு சாதி இல்லை என்று கரையாதது என்னையோ? இஃதென் கரையார்? கரைவார்.

உமாதேவியாரைச் சிவபெருமான் வலைச்சியாகுக எனப் பணித்தது தாம் உபதேசித்த வேதப்பொருளை விருப்பின்றிக் கேட்குங் குற்றத்தால் என்பது வலைவீசு படலத்து விளங்கிக்கிடப்பவும், வலைஞர்சாதிக்குச் சிவ பெருமான் கூறிய "விரதமு மறனுமின்றி மீன்பிடித் திழிஞராகும்" என்னும் அடைமொழி தமது கடிதத்திற் றானே முன்னர் வெளிப்பட்டுக்கிடப்பவும் தாம் பின்னர் அவற்றை மறந்து உமாதேவியார் வலைச்சியாகப் பிறந்த தினால் வலைஞர்குலம் உயர்குலம் என்றவர் சிவபெருமான் பறையர்வடிவங்கொண்டதனாற் பறையர் உயர்குலம்; வேடர்வடிவங்கொண்டதனால் வேடர் உயர்குலம்; பன்றி வடிவங்கொண்டதனால் பன்றி உயர்குலம்; விட்டுணு மீன் ஆமை பன்றிவடிவங்கொண்டதனால் மீன் ஆமை பன்றி உயர்குலம்! பன்றி வாய்ப்புகுவதனாற் பவ்வீ உயர்குலம் என்பார் போலும்!

27. இடைக்காடர்

(100—140)

இவரூர் பாண்டிமண்டலத்திலே மதுரைமா நகர்க் குக் கிழக்கே இருக்கும் இடைக்காடு என்று சிலர் கூறு

வர். வேறுசிலர் மலையாளத்துள்ள இடைக்காடு என்பர். குலம் இடையர்குலம். சமயம் சைவம். காலம் கடைச் சங்க காலம். இவர் கபிலர் என்னும் புலவருக்கு நண்பர். சித்தர்களுள்ளும் ஒருவர். வள்ளுவர் கவியைப் புகழ்ந்து "கடுகைத் துளைத்து" என்னுங் கவி பாடினவர். அப் பொழுதை அரசனாகிய குலசேகரபாண்டியன் "இலக் கணமும் இலக்கியமும் வரம்பு கண்டோன்" எனக்கேட்டு அவன்மீது கவிபாடிச் சென்றவர். அரசன் கவியைக் கேளாது வாளாவிருந்த அவமானத்தை மதுரைக் கோயிலுட் புகுந்து சொக்கநாத சுவாமிக்கு முறையீடு செய்தவர்.

அதுகேட்ட சொக்கநாதசுவாமி தேவிசமேதராய் மற்றைப் புலவர்களோடும் மதுரைக் கோயிலினின்றும் புறப்பட்டு வைகைச் செய்கரையின் தென்பாலடைந்து வீற்றிருந்தற்கும், பாண்டியன் வந்து பணிந்து குறை யிரந்து மீண்டழைத்துக் கொண்டுபோய் முன்போலக் கோயிலில் வீற்றுருக்கச் செய்தற்கும் காரணமான பத்தியும் புலமையும் பெற்றவர். பின்னர் முன் பாடிய பாட்டுக் கேட்டுப் பாண்டியனீந்த பரிசில்களும் பெற்ற வர். பல தனிநிலைக் கவிகளும், அறுபதுவருட வெண்பா, ஊசிமுறி என்பவைகளும் பாடினவர்.

ஊசிமுறி

மன்றலங் கோதை மலர்மிலைந் திம்குவம்
சென்று திரியுமிடை மகனே—சென்று
மறியாட்டை யுண்ணுமை வன்கையால் வல்லே
அறியாயோ வண்ணுக்கு மாறு.

28. இரட்டைப்புலவர்

இவரூர் சோழமண்டலத்துள்ள ஆமிலந்துறை என்பர். குலம் செங்குந்தர் குலம். சமயம் சைவம்.

காலம் வரபதியாட்கொண்டார் என்னுஞ் சேரர்பதி காலம். இவர் இருவர். ஒருவர் முடவர். மற்றவர் குருடர். முடவர் குருடர் முதுகிலிருந்து வழிகாட்டுவர். குருடர் முடவரைச் சுமந்துதிரிவர். இருவரும் ஒருவர் போன்று தோன்றுதலால் இரட்டையர் எனப்பட்டார். இளஞ் சூரியர் முதுசூரியர் எனவும்படுவர். தெய்வத் திருவருளு முடையவர். கவிவகை யெல்லாங் கசடறப் பாடுவர். "பண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்" என்னும் பாடற் புகழும் பெற்றவர். வரபதியாட்கொண்டார் என்னும் சேரர்பதியைப் பாடி அவர் மதிப்பும் அடைந்தவர்.

சிவஸ்தல யாத்திரையிற் சென்று அங்கங்கே வீற் றிருக்குங் கடவுளர்மீதும், பிரபுக்கள்மீதுங் கவிகள் பாடினவர். பரிசில்களும் பெற்றவர். முன்னீரடிகளையும் ஒருவர் பாடப் பின்னீரடிகளையும் மற்றவர் பாடி முடிப்பர். பல தனிநிலைக் கவிகளுக்கும், தில்லைக்கலம் பகம், ஏகாம்பரநாதருலா, ஆமாத்தூர்க்கலம்பகம் முத லிய பிரபந்தங்களுக்கும் ஆக்கியோர் என அறிஞர் நோக்க நின்றவர்.

வெண்பா

1. மூடர் முன்னே பாடன் மொழிந்தா லறிவரோ
ஆடெடுத்த தென்புலியூ ரம்பலவா—ஆடகப்பொற்
செந்திருப் போலணங்கைச் சிங்காரித் தென்னபயன்
அந்தகனே நாயகனா னால்.

இங்கே அம்பலவா என்றவரையும் ஒருவர் கூற்று. மற்றையது மற்றவர் கூற்று. இது தங்கள் பாட்டுக் களைக் கேட்டுச் சம்மானஞ் செய்யாத ஒருவரைச் சுட்டியது.

காவலரினும் பாவலரதிகர்

2. காவல ரீகை கருதுங்காற் காவலர்க்குப்
பாவலர் நல்கும் பரிசொவ்வா—பூவினிலை

ஆகாப் பொருளை யபயனளித் தான்புகழாம்
ஏகாப் பொருளளித்தேம் யாம்.

மலைவழி நடத்தல்

3. குன்றுங் குழியுங் குறுகி வழிநடந்து
சென்று திரிவதென்றுந் தீராதோ—ஒன்றுங்
கொடாதானைக் காவென்றுங் கோவெனறுங் கூறின்
இடாதோ நமக்கிவ் விடர்.

கட்டளைக்கலித்துறை

4. புராதன மான கவிப்புல வீரிந்தப் புன்குரங்கு
மராமரம் விட்டிங்கு வந்ததென் ஞேவந்த வாறுசொல்வேன்
தாரதல மன்னுந் தமிழ்மா றனையுந்தன் றம்பியையும்
இராகவ னென்று மிலக்குவ னென்றும்வந் தெய்தியதே.

இங்கே வந்ததென்னே என்றவரையும் ஒருவர் கூற்று. மற்றையது மற்றவர் கூற்று. இது பரிசில் கொடுக்க நின்ற பாண்டியனைத் தடுக்க முயன்ற மந்திரியை நிந்தித்துக் கூறியது.

தில்லைக்கலம்பகம்

அம்பலக் கூத்த னாரூர் மாதவன்
இடைமரு தீச னீங்கோய் மலையினன்
உறையூ ரெந்தை யூறன்மா நகரினன்
எறும்பிமா மலையின னேடகத் துறைவோன்
ஐயா றமர்ந்த வமரர்கள் பெருமான்
ஒற்றியூ ருறைவோ னேமாம் புலியூர்ச்
சிற்றம் பலவன் சீர்பா வுதுமே.

இது வருக்கமோனைவரப் பாடிய நிலைமண்டில வாசிரியப்பா.

ஏகாம்பரநாதருலா

தன்னு மொருசிலந்தி சோணாடுங் காவிரியும்
மன்னி யரசாள வைத்தவார்—பன்னெடுநாள்

தேடி யிருவர் திரியத் தெரியாமல்
நீடு சுடர்வடிவாய் நின்றவரார்—ஆடலென
உங்காரஞ் செய்தே யுலகுண்ட மாயவனைச்
சங்காரஞ் செய்துபின்னுந் தந்தவரார்—பங்கயன்மால்
வீந்த சுடலை விபூதி தரித்திருவர்
ஆர்ந்த தலைமாலை யணிந்தவரார்—மாய்ந்திடவே
நாரா யணனுடலு நான்குமுக னுடலுங்
கூராய சூலமிசைக் கொண்டவரார்—சேர
எரிந்த பிறையெயிற்றோ னீரைந்து வாயும்
பரந்து செழுங்குருதி பாய—நெரிந்தொருவன்
மான்று கிடக்க மலையான் மகளுடனே
ஊன்று விரலொன் றுடையவரார்—தோன்றியடல்

29. இராமச்சந்திரகவிராயர்

(1856)

இவரூர் தொண்டைமண்டலத்திலுள்ள இராசநல்லூர். பின்னர் வாசஞ்செய்த இடம் சென்னைமாநகரமாகும். குலம் ராயகுலம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு அறுபது வருடங்களுக்கு முன் என்பர். இவர் பலபல தனிநிலைக்கவிகளுக்கும், நடுவெழுத்தலங்காரம், சத்தபங்கி, நவபங்கி முதலிய சிலசில சித்திர கவிகளுக்கும், சகுந்தலைவிலாசம், பாரதவிலாசம், தாருக விலாசம் முதலியவைகளுக்கும் ஆக்கியோராய் விளங்கிய புலவர்.

விருத்தம்

ஆலின மழைபொழிய வில்லம் வீழ
அகத்தடியாண் மெய்ந்நோவ வடிமை சாவ
மாவீரம் போகுதென்று விதைகொண் டோட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளச்

சாவோலை கொண்டொருவ னெதிரே செல்லத்
தள்ளவொண்ணு விருந்துவரச் சர்ப்பந் தீண்டக்
கோவேந்த ருழுதுண்ட கடமை கேட்கக்
குருக்களோ தக்கிணைகள் கொடுவென் றாரே.

மணிதரைப்பாடல்

கல்லாத வொருவனைநான் கற்றா யென்றேன்
காடெறியு மவனைநா டாள்வா யென்றேன்
பொல்லாத வொருவனைநா னல்லா யென்றேன்
போர்முகத்தை யறியானைப் புலியே றென்றேன்
மல்லாரும் புயமென்றேன் சூம்பற் றோளை
வழங்காத கையனையான் வள்ள லென்றேன்
இல்லாது சொன்னேனுக் கில்லை யென்றான்
யானுமென்றன் குற்றத்தா லேகின் றேனே.

நடுவெழுத்தலங்காரம்

அத்திரம்வே லாவலய மிராசி யொன்றிற்
கமைந்தபெயர் மூன்றினிடை யக்க ரத்தான்
மெத்தநடுக் குற்றனைவந் தடைந்தே னிந்த
விதனமகற் றிடுமற்றை யெழுத்தோ ராறிற்
பத்துடையா னைத்தடிந்து பெண்ணைச் செய்து
பரிவினுகர் வோனிருதாள் பணிந்து போற்றுஞ்
சித்தசனே தெளியசிங்கன் றவத்திற் றோன்றுஞ்
சீதாரா மப்ரபல தியாக வானே

இச்செய்யுளின் கருத்துக் கடனாலே நடுக்குற்று வந்தேன், இந்த விதனம் அகற்றிடு என்பது. கடன் என்பது அத்திரம், வேலாவலயம், இராசி யொன்று என்பவைகளின் பரியாய நாமங்களாகிய ககம், கடல், கன்னி என்பவற்றிலுள்ள நடுவெழுத்து மூன்றுஞ் சேர்ந்து வந்த பெயர். நடுவெழுத்து நீங்கிய மற்றை ஆறெழுத்துக்களாகிய கம், கல், கனி என்பவைகளை முறையே கம் பத்துடையான் எனவும், கல் பெண்

ஞுச்செய்து எனவும், கனி பரிவினுகர்வோன் எனவுங் கூட்டிப் பொருள் கொள்க. ககம் - அம்பு. கம்பத்துடையான் - தலை பத்துடைய இராவணன். அத்திரம் என்பதற்குப் பகழி என்னும் பரியாயநாமங் கொள்வாருமுளர். பழி பத்துடையான் என இயையாமையின் அது பொருந்ாது.

கட்டளைக்கலித்துறை

இரவல னேயுனக் கில்லாத தென்ன விதயமென்ன
பரவுண வேது சுவையற்ற தென்னசொற் பான்மையென்ன
தரவுரை செய்திட வென்று னதர்கொன் றுஞ் சாற்றிலன்யான்
வரதிரு வேங்கட னாதாவென் றேன்பொன் வழங்கினனே.

இங்கே திருவேங்கடனாதா! என்னும் விளியிலே திரு என்பதை இல்லாதது என்ன? என்பதற்கும், வேம் என்பதை இதயம் என்ன? என்பதற்கும், கடன் என்பதை உணவு ஏது? என்பதற்கும், நா என்பதைச் சுவையற்றது என்ன? என்பதற்கும், தா என்பதைச் சொற்பான்மை என்ன? என்பதற்கும் விடையாக்கிப் பொருள் கொள்க.

30. இராமசுவாமிப்பிள்ளை

(1901)

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள இராமநாதபுரம். பின்னர் வாசஞ்செய்த இடம் மதுரை மேலைமாசிவீதி. குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்குப் பதினைந்து வருடங்களுக்கு முன். இவர் திருவாவடுதுறையாதீனத்துச் சீடர். இலக்கிய இலக்கணங்களுஞ் சைவசித்தாந்த சாத்திரங்களுங் கற்றவர். நாவலர்க்கும் நண்பர். கம்பரந்தாதி, முல்லையந்தாதி, திருவிளையாடற் புராண முதற்காண்டம்

என்பவற்றிற்கு உரைசெய்தவர். மதுரை மான்மியங் கூறும் அட்டமிப்பிரதக்கிணம், பேரூர்ப்புராணம் முதலியவைகளைப் பகிரங்கஞ் செய்தவர்.

அட்டமிப்பிரதக்கிணமான்மியம்

மலர்தலை யுலகி னிலவிய வுயிர்கண்
மருவிய பிறப்பினை யகன்று
பொலிவுறு முத்திக் கரைசெறி யுபாயப்
புணையினை யருளென வினவும்
நலவரு ளுருவக் கயற்கணு யகிக்கு
நமதருட் குறிகுரு பூசை
இலகுறச் செயலென் றிறையரு ளிறைவன்
இணையடி தொழுதுவாழ்ந் திடுவாம்.

31. இராமபாரதி

அறஞ் செய விரும்பு முதலிய ஆத்திசூடிச் சூத்திரங்களை ஈற்றில் வைத்துக்கொண்டு ஒவ்வொரு சூத்திரத்துக்கும் உதாரண மாகப் புராணகதைகளை எடுத்துக்காட்டி நேரிசைவெண்பாவினுல் ஒரு நூல் செய்தவர். அதன் பெயர் ஆத்திசூடிவெண்பா. இந் நூலிலே எறக்குறைய நூறு கதைகள் வரையில் உள. சிலசில கதைகளோடும் இதனை அச்சிட்டிருக்கின்றனர்.

ஆத்திசூடிவெண்பா

கஞ்சனு ராழ்வார் கனன்முக்கா லிக்குளிருந்
தஞ்சாமற் சைவநிலை யாக்கினர்பார்—தஞ்சமென்பார்
புண்ணியமே மெய்த்துணையாம் புன்னைவன பூபதியே
எண்ணி மனந்தடுமா றேல்.

அரதத்தாசாரியர்கதை

இவர் கஞ்சனூரிலேவசித்த வைணவப்பிராமணருள்ளே ஒருவராகிய வாசுதேவர் என்பவருடைய

புதல்வர். கஞ்சனூராழ்வார் எனவும்படுவர். இவர் இளம்பருவந் தொடங்கி வைஷ்ணவசமயத்தை மறுத்துரைத்துச் சைவசமயத்தைப் பாராட்டித் தெய்வம் சிவமே என வாதித்துவந்தவர். வாதித்துவருநாளிலே வைஷ்ணவர்கள் திரண்டு நாராயணபரத்துவம் பேசி வாதஞ்செய்தனர். அப்போது காய்ச்சிய இருப்புமுக்காலியின் மீதிருந்து சதுர்வேததாற்பரியம் முதலியவைகளைச் சொல்லித் தெய்வஞ் சிவமே என நாட்டினவர். தெய்வஞ் சிவமே என நாட்டுதற்குக் கூறிய இருபத்திரண்டு எதுக்களையுடைய சுலோகம் ஐந்தும் சிவஞானமுனிவராலே மொழி பெயர்த்து அகவலாகப் பாடப்பட்டிருக்கின்றது.

32. இராமலிங்கசுவாமி (1823—1874)

இவரூர் தென்னாற் காட்டிலுள்ள மருதூர். சென்னைக் கருகிலுள்ள கருங்குழி என்னும் இடத்தில் பல ஆண்டுகள் வசித்தமையால் இவர் கருங்குழி இராமலிங்கப்பிள்ளை எனப்படுவர். இவருடைய பிற்கால வாசஸ்தானம் வடலூர். இவர் இயற்றிய பாடல்களைத் திரட்டி இவருடைய மாணுக்கர்கள் 'திருவருட்பா' என்னும் பெயரோடு வெளியிட்டனர். ஆறுமுகநாவலர் இவருடைய கொள்கைகளை மறுத்துக் கண்டனங்கள் எழுதினர். இவரது பாக்கள் இனிமையும் கனிவும் நிறைந்து உள்ளத்தை உருக்குந் தன்மையன. இவருடைய பாடலின் திறமையைப் பின்வரும் செய்யுட்கள் காட்டும்.

நான்படும் பாடு சிவனே உலகர் நவிலும்பஞ்சு
தான்படுமோ? சொல்லத் தான்படுமோ எண்ணத் தான்படுமோ?
கான்படு கண்ணியின் மான்படு மாறுகலங்கி நின்றேன்
என்படு கின்றனை என்றிரங் காயென்னி லென்செய்வனே.

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகைகிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்த தண்ணீ ரிடைமலர்ந்த சுகந்தமணமலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்தி லுறும்பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா! பொதுவில்
ஆடுகின்ற அரசே! என்னலங்கல் அணிந்தருளே.

33, இராமாநுசகவிராயர்

(1853)

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள இராமநாதபுரம். பின்னர் வாசஞ்செய்த இடம் சென்னைமாநகரம். காலம் ஏறக்குறைய இற்றைக்கு அறுபத்துமூன்று வருடங்களுக்குமுன் என்பர். இவர் இராமநாதபுரம் சோமசுந்தரம் பிள்ளைக்கு மாணவகர். வேதகிரிமுதலியார் முதலியோர்க்கு ஆசிரியர் என்பர். இராமாநுச காண்டிகை என்னும் நன்னூலுரைக்கும் ஆசிரியர். நன்னூலிலே 'எகரவொகரமெய்புள்ளி" என்றதை "ஏகாரவோகார மெய்புள்ளி" என்று கொண்டவர். "மியாயிக" என்புழி மியா இக என்பதினிடையே யகரம் வந்தது கூறினவர். பார்த்தசாரதிபாமாலை, திருவேங்கடவநுபூதி வரதராசப் பெருமாள் பதிற்றுப்பத்தந்தாதி ஆதிய பிரபந்தங்களுக்கும், சில தனிநிலைக்கும் ஆக்கியோர்.

வெண்பா

அவனிக்குத் தந்தை யநந்தஞா னத்தோன்
நவமிக்க ஞாலமு நல்குற்றோன்—எவனவனே
சங்கரா சாரியன்றன் றூள்வழுத்தி னுயின்வழு
அங்கிரா சார்பின்வழி யான்.

34. இரேவணசித்தர்

(1676)

இவர் வாசஸ்தானம் சிதம்பரம். குலம் வேளாளர்குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு இருநூற்றுநாற்பது வருடங்களுக்கு முன். இவர் பிங்கலம், திவாகரம் முதலிய நிகண்டுகளை ஆராய்ந்து நோக்கி ஒருசொற் பல்பொருள்கள் பலவற்றைத் திரட்டி அகராதிக்கிரமமாக நாட்டி ஒரு நிகண்டு செய்தவர். அதன் பெயர் அகராதிநிகண்டு. அதன் யாப்புச் சூத்திர யாப்பு. அதுவன்றிச் சிவஞானதீபம், பட்டீச்சுரப் புராணம் முதலியவைகளையும் செய்தவர் என்பர்.

அகராதிநிகண்டு

அரனென் பதுவே சங்கர னாகும்
அம்பிகை யென்ப தமையவள் பெயரே
அயனே வேத னாமென நுவல்வர்.

சிவஞானதீபம்

படைக்கலங்கள் கொலைத்தொழில்கள் பலசெய் தாலும்
பாவவிதம் படைக்கலத்தை மேவி டாவாம்
படைக்கலங்கொண் டவன்பா னின்றாற் போலப்
பானருளின் வசமாகிப் பணிசெய் வோர்கள்
துடைத்திடுவர் மலத்தினையெத் தொழில்செய் தாலுந்
துக்கசுகப் பவக்கடலிற் றோயா ரென்றும்
அடைக்கலமா யாண்டசிவன் பாத நீழல்
அடைந்திடுவ ரெப்பதமும் பொருந்தி டாரே.

35. இளங்கோவடிகள்

(113)

இவர் நகர் மலைமண்டலத்துள்ள வஞ்சிமாநகர். குலம் அரசர் குலம். சமயம் ஆருகதம். நிலை துறவறம்.

காலம் கடைச்சங்க காலம். இவர் முத்தமிழ்த் துறையின் முறைபோகிய ஓர் உத்தமப் புலவர். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் விரவி வருதலால் "இயலிசை நாடகத் தொடர்நிலைச் செய்யுள்" எனவும், உரைப்பாட்டும் இசைப்பாட்டும் இடையிடை விரவி வருதலால் "உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்" எனவும் பெயர்பெற்ற சிலப்பதிகாரம் என்னும் இலக்கியஞ் செய்தவர். சிலப்பதிகாரம் பஞ்ச லக்கியங்களுள் ஒன்று.

சிலப்பதிகாரத்திலே கோவலன் கண்ணகி என்னும் இருவர் சரிதங்களோடு புகார், மதுரை, வஞ்சி என்னும் பிரதான நகரிகளின் வளங்களையும், முடியுடை வேந்தர் மூவர் பெருமைகளையும், மாநாட ரொழுக்கங்களையும், அறிநெறி வழக்கங்களையும் அகவல் முதலிய பனுவல்களால் விரிவுபடக் கூறுவர், தொல்காப்பியப் புறத்திணையியலில் வரும் "பிண்டமேய பெருஞ் சோற்று நிலையும்—வென்றோர் விளக்கமுந் தோற்றோர் தேய்வும்—குன்றாச் சிறப்பிற் கொற்றவள்ளையும்" என்பது முதலிய வஞ்சித் துறைகளைக் காட்சிக் காதையிலே "கொடைநிலைவஞ்சியும் கொற்றவஞ்சியும்—வென்றோர் விளங்கிய வியன்பெருவஞ்சியும் — பின்றாச் சிறப்பிற் பெருஞ் சோற்றுவஞ்சியும்" என்பது முதலியவாக வழிமொழிந்து காட்டுவர். சொற்பொருள்களுந் தொடைநடைகளுங் கற்பவர்க்கு இனிமை பயக்குமாறு யாத்து வைப்பர். இதன் அருமை பெருமைக ளெல்லாம் அடியார்க்கு நல்லார் இயற்றிய உரைநோக்கி அறிதற்பாலன.

சிலப்பதிகாரம்

பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்

திருவடியுங் கையுங் கனிவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே.

வரந்தருகாதை

பிறர்மனை யஞ்சுமின் பிழையுயி ரோம்புமின்
அறமனை காமி னல்லவை கடிமின்
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமின்
இளமையுஞ் செல்வமு மியாக்கையு நிலையா.
உளநாள் வரையா தொல்லுவ தொழியாது
செல்லுந் தேளத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென்.

பிழையுயிர் - இறக்கும் உயிர். அல்லவை - பாவம். கடிமின் - நீக்குங்கள். வெள்ளைக்கோட்டி - மூடர்சவை. விரகு - உபாயம். உளநாள் வரையாது - உள்ளநாள்களை வீழ்நாளாகத் தள்ளாது. ஒல்லுவது - இயலுவது. தேளத்துக்கு - இடத்துக்கு.

36. இளம்பூரணர்

இவர் பஞ்சலக்கணப்பயிற்சியிலும், பழைய இலக்கியப்பயிற்சியிலும் பரிபூரணர். தொல்காப்பியப் பொருளுணர்ச்சிக்கு முக்கியகாரணர். அதற்கு முதற்கண் உரைசெய்தவர். அதனால் உரையாசிரியர் என்று சேனாவரையராலும் பிறராலும் வழங்கப்பட்டவர். சேனாவரையர் நச்சினார்க்கினியர் முதலிய பின்னுரைகாரர் யாவருந் தம்முரையைப் பெரிதும் அநுசரிக்கநின்ற புலமையாளர். கிளவியாக்கம் என்பதற்குக் "கிளவிகள் பொருண்மேலாமாறுணர்த்தினமையிற் கிளவியாக்கம் எனும்பெயர்த்து" என்பர். சொல் என்பதற்கு "எழுத்

தொடுபுணர்ந்து பொருளறிவிக்கும் ஓசை" என்பர். மேற்கோளாக அகத்தியம், செயிற்றியம், பன்னிரு படலம், காக்கைபாடினியம் முதலிய பழைய இலக்கணங் களையும், நற்றிணை, குறுந்தொகை, நாலடியார், கலித் தொகை, திருக்குறள் முதலிய பழைய இலக்கியங்களை யும் எடுத்துக்காட்டுவர். இவருரை இளம்பூரணம் எனப்படும்.

செயிற்றியம்

உடனிலை தோன்று மிடமியா தெனினே
முடவர் செல்லுஞ் செலவின் கண்ணும்
மடவோர் சொல்லுஞ் சொல்லின் கண்ணும்
கவற்சி பெரிதுற் றிசைப்போர் கண்ணும்
பிதற்றிக் கூறும் பித்தர் கண்ணும்
குழவி கூறு மழலைக் கண்ணும்
மெலியோன் கூறும் வலியின் கண்ணும்
வலியோன் கூறு மெலியின் கண்ணும்
ஒவ்வார் மதிக்கும் வனப்பின் கண்ணும்
கல்லார் கூறுங் கல்விக் கண்ணும்
பெண்பிரி தன்மை யலியின் கண்ணும்
ஆண்பிரி பெண்மைப் பேடி கண்ணும்
களியின் கண்ணுங் காவாலி கண்ணும்
தெளிவிலா ரொழுகுங் கடவுளர் கண்ணும்
அறியார் கூறுந் தமிழின் கண்ணும்
காரிகை யறியாக் காமுகர் கண்ணும்
கூனர் கண்ணுங் குறளர் கண்ணும்
ஊமர் கண்ணுஞ் செவிடர் கண்ணும்
ஆன்ற மரபி னின்னுழி யெல்லாந்
தோன்று மென்ப துணிந்திசி னோரே.

இது மெய்ப்பாட்டியலிற் கூறப்பட்ட நகை, அழுகை, இளிவரல் முதலிய எண்வகைச் சுவைகளுள் நகை என்னுஞ் சுவைதோன்றுமிடம் இவை எனக் கூறியது.

பன்னிருபடலம்

ஆன்ற சிறப்பி னறம்பொரு ளின்பமெனா
மூன்று வகை நுதலிய தலக மவற்றுள்
அறனு மின்பமு மகலா தாகிப்
புறனெனப் படுவது பொருள்குறித் தன்றே.

37. உதீசித்தேவர்

இவரூர் தொண்டைமண்டலத்திற் பையூர்க் கோட்டத்து ஆரணிநெடுந்துறை ஆற்பாகை. சமயம் ஆருகதம். இவர் பௌத்தமதத்தை மறுத்துரைக்குங் கருத்துடையவர். திருக்கலம்பகம் எனப்படும் பிரபந்தஞ் செய்தவர். இக்கலம்பகத்திலே ஆருகதமதவிடயங்களை யும் ஆங்காங்குக் கூறுவர்.

திருக்கலம்பகம்

விடுவது வெவ்வினை விட்டாற் பெறுவது வீடுவந்து
படுவது பேரின்ப வெள்ளமென் றுலென்றன் பாவிநெஞ்சே
கெடுவது தான்றனக் காவதென் னுதுகெட் டேன்பரமன்
வடுவ திலாநெறிச் செல்லா தொதுங்கு மனையகத்தே.

38. உமாபதிசிவாசாரியர்

(1313)

இவருடைய வாசஸ்தானஞ் சிதம்பரத்தைச்சேர்ந்த கொற்றவன்குடி. இவர் தில்லைமூவாயிரவருள் ஒருவர். சிவபத்தியிற் சிறந்தவர். ஒருநாள் நடேசர்பூசையும் முடித்துக்கொண்டு வெளியில்வந்து சிவிகையேறி விருதுகளோடுஞ் செல்லும் வீதியிலே பிச்சைநோக்கிப் புக்க கடலூர் மறைஞானசம்பந்தர் கண்டு "பட்டகட்டை யிற் பகற் குருடேகுதல் பாரீர்" என்றதுகேட்டுச் சிவிகைவிட்டிறங்கி அவரை அடைந்து வழிபட்டு அதன் பொருள் வினவி அறிந்தவர். பின்னர்ப் பின்னிலைநின்று

பரிபக்குவதசையும்பெற்றுச் சிவஞானபோதம் முதலிய சித்தாந்தசாத்திரங்களேயும் அவர்பாற் கேட்டுத் தெளிந்தவர். மார்கழிமாசக் கொடியேற்றத்திருவிழா ஒன்றிலே ஏருதுநின்ற கொடியை "ஒளிக்குமிருளுக்கும்" என்னுங் கவிபாடி ஏறச்செய்தவர்.

"ஏழுஞ்சிருநூறெடுத்தவாயிரம் — வாழூநற்சகன மருவாநிற்ப—பொற்பொதுமலிந்த வற்புதனுனி—ஆரும் விழவிற் பொற்றேராலயத்திலே" மாயாவாதி, ஐக்கியவாதி முதலிய சமயவாதிகளேத் தர்க்கவாதஞ்செய்து வெற்றிபெற்று வாதவிடயங்களேச் சங்கற்பநிராகரணம் என்னும் நூலாகநின்று நிலவச்செய்தவர். நடேசப்பெருமான் விடுத்த "அடியார்க்கெளியன்" என்னுஞ் சீட்டுக்கவிபெற்றுப் பெற்ருன்சாம்பானுக்கு முத்திகொடுத்தவர். கோயிற்புராணம், திருத்தொண்டர்புராணசாரம், சேக்கிழார்புராணம், சிவப்பிரகாசம், கொடிக்கவி, திருவருட்பயன் முதலிய வேறு பிரபந்தங்களுஞ் செய்தவர். வடமொழியிற் பௌட்கராகமவிருத்தியுஞ் செய்தவர் என்பர்.

கோடிக்கவி

ஒளிக்கு மிருளுக்கு மொன்றே யிடமொன்று மேலிடிலொன்
றெளிக்கு மெனினு மிருளட ராதுள் ளுயிர்க்குயிராய்த்
தெளிக்கு மறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கு முயிரருள் கூடும் படிக்கொடி கட்டினனே.

சீட்டுக்கவி

அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டுப்—படியின்மிசை
பெற்ருன்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை.

கோயிற்புராணம்

தேரோட்டிக் கயங்காட்டுந் திரண்மாக்கட் டயமூட்டிப்
போராட்டிப் புறங்காட்டிப் போக்காட்டிற் புலால்கமழும்
சீராட்டிச் சூர்மாட்டி திகழ்நாட்டிற் புகழ்நாட்டும்
பேரோட்டி சீராட்டும் பிள்ளையார் கழல்போற்றி.

39. உருத்திரங்கண்ணனார்

இவரைக் கடயலூர் உருத்திரங்கண்ணனார் என்பர். இவர் சங்கப்புலவருள் ஒருவர், பத்துப்பாட்டுப் பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை என்னும் இருபாட்டும் இயற்றினவர். பெரும்பாணாற்றுப்படை பரிசில்பெறவிரும்பிய பாணன் ஒருவனைப் பரிசில் பெற்றான் ஒருவன் தொண்டைமானிளந்திரையனிடத்தே ஆற்றுப் படுத்தியதாகப் பாடியது. இளந்திரையன் கொடையையும், அவனாட்டுவளத்தையும் விரித்துக் கூறுவது. பட்டினப்பாலை கரிகாற் சோழனையுங் காவிரிப் பூம்பட்டினத்தையும், காவேரியாறு முதலியவற்றையும் வியந்து கூறுவது. கரிகாற்சோழன் பதினாறுநூறாயிரம் பொன் பரிசிலீந்து பட்டினப்பாலையைக்கொண்டான் என்பர். இதனைக் கலிங்கத்துப்பரணிகாரரும் எடுத்துக் கூறுவர்.

கலிங்கத்துப்பரணி

தத்து நீர்வரால் குருமி வென்றதுந்
தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தொ டாறுநூ றாயி ரம்பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும்.

40. எல்லப்பநாவலர்
(1620)

இவர் திவ்வியகவி சைவஎல்லப்பநாவலர் எனவும் படுவர். இவரூர் சோழமண்டலத்திலே திருவெண்காட்

டருகிலுள்ள இராதாநல்லூர் என்பர். குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். காலம் மணவாளதாசர் காலம் என்பர். இவர் தருமபுரவாதீனத்தைச் சார்ந்து பல கலைகளுங் கற்றவர். சௌந்தரியலகரிக்கு இவ ரியற்றியவுரையினாலே இவர், தொல்காப்பியம், நன்னூல், தண்டியலங்காரம் முதலிய இலக்கணங்களையும், தேவாரம், திருவாசகம், சிவஞானசித்தியார் முதலிய நூல்களையுங் கற்றவர் என்பது புலனாகின்றது. இவர் இயற்றிய பிரபந்தங்கள் அருணைக்கலம்பகம், அருணாசலபுராணம், செவ்வந்திப்புராணம், திருவெண்காட்டுப்புராணம், திருவிரிஞ்சைப்புராணம், தீர்த்தகிரிப்புராணம், திருச்செங்காட்டங்குடிப்புராணம் முதலியன.

அருணைக்கலம்பகம்

சைவத்தின் மேற்சம யம்வே றிலையதிற் சார்சிவமாந் [வாய்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறைச் செம்பொருள்
மைவைத்த சீர்த்திருத் தேவார முந்திரு வாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர்பொற் றாளெம் முயிர்த்துணையே.

அம்மானை

நாரா யணனறியா நாதரரு ணைசருக்கு
வாரார் சிலைகலைமெய் மாதங்க மம்மானை
வாரார் சிலைகலைமெய் மாதங்க மாமாயின்
ஆராயுங் காலெடுப்ப தையமன்றோ வம்மானை
அன்னமறி யாரெடுப்ப தையமோ வம்மானை.

மாதங்கம் என்பது முப்பொருட் சிலேடை. சிலை மாதங்கம் எனக்கூட்டி வில்லுப் பெரிய பொன்மலை என்றும், கலைமாதங்கம் எனக்கூட்டி உடை யானைத் தோல் எனவும், மெய் மாதங்கம் எனக்கூட்டி அங்கம் மாது பாதியான அங்கம் எனவும் பொருள் கொள்க. ஐயம் - பிச்சை, சந்தேகம். அன்னம் - சோறு, அன்னப் பறவை.

அருணாசலபுராணம்

ஒருமானைக் கரத்தினில்வைத் தொருமானைச் சிரத்தினில்வைத் துலகமேழும், தருமானை யிடத்தினில்வைத் தருள்வானைப் பவள நெடுஞ் சயிலம் போல, வருமானை முகத்தானை யளித்தானைப் பெருமானை மகிழ வேறும், பெருமானை யருணகிரிப் பெம்மானை யடிபணிந்து பிறவி தீர்வாம்.

செவ்வந்திப்புராணம்

உழுநரிக் கணங்களுக் குதவு மொண்பொருள்
கழுகினுக் குணவுகட் டியக ளஞ்சியம்
தழலினுக் கிந்தன மான சட்டகம்
எழிலுறப் புனையினு மிருப்ப தல்லவே.

41. ஏரம்பையர்
(1847—1914)

இவரூர் யாழ்ப்பாணத்து மாதகல். குலம் வேதியர்குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு ஒரு வருடத்துக்கு முன். இலக்கண இலக்கியங் கற்றவர். சித்தாந்தசாத்திரமுந் தெரிந்தவர். சோதிடத்திலுஞ் சென்றவர். பிரசங்கஞ் செய்தலிலும் செய்யுள் செய்தலிலும் வல்லவர். வடமொழி நீதிசாரத்தைத் தமிழில் மொழிபெயர்த்துச் செய்யுணடையிற் செய்தவர். சேதுபுராணத்தை வாக்கியநடையில் ஆக்கினவர். பல தனிநிலைக் கவிகளும் பாடினவர்.

நீதிசாரம்

இந்நூ றன்னைக் கற்பா னெவனவன நன்மைதீமை
முந்துசெய் திடுவ செய்யத் தகாதன முறைமை தானும்
நந்தலி லறம்போ திக்கு நன்மையு முள்ள வாறே
சிந்தையி லுணர வல்லா னென்றனர் வடநூற் செல்வர்.

42. ஐயடிகள்காடவர்கோன்

இவரூர் தொண்டைமண்டலத்துள்ள காஞ்சீபுரம். குலம் பல்லவமன்னர்குலம். சமயம் சைவம். இவர் பெரியபுராணத்திற் சொல்லப்பட்ட பெரியார்களுள் ஒருவர். அரசியலைவிட்டுச் சிவஸ்தல யாத்திரையிற் சென்றவர். சென்ற தலங்கள் ஒவ்வொன்றையுந் துதித்து ஒவ்வொரு வெண்பாப் பாடினவர். அந்த வெண்பாக்கள் க்ஷேத்திரத்திருவெண்பா என்று பதினொராந் திருமுறையிற் சேர்க்கப்பட் டிருக்கின்றன.

க்ஷேத்திரத்திருவெண்பா

ஓடுகின்ற நீர்மை யொழிதலுமே யுற்றாருங்
கோடுகின்றார் மூப்புங் குறுகிற்று—நாடுகின்ற
நல்லச்சிற் றம்பலமே நண்ணாமு னன்னெஞ்சே
தில்லைச்சிற் றம்பலமே சேர்.

43. ஐயனாரிதனார்

இவர் மலைமண்டல மன்னர்களாகிய சேரர்குலத்திற் பிறந்தவர். சைவ வழிபாடுடையவர். தொல்காப்பியர் முதலிய பன்னிரு புலவருஞ் செய்த பன்னிரு படலம் என்னும் புறப்பொருளிலக்கணம் நன்கு தெரிந்தவர். புறப்பொருளுக்கு இலக்கணமும் இலக்கியமுமாய்நின்று பயன்படுமாறு புறப்பொருள்வெண்பா மாலை என்னும்நூல் செய்தவர். இந்நூல் பன்னிரு படலத்துக்கு வழிநூல். இதற்கோர் உரையும் உண்டு. இவ்வுரை மாகறலூர்த் தேவநாயகர் செய்தது என்பர்.

வெண்பாமாலை

ஒன்றி லிரண்டாய்ந்து மூன்றடக்கி நான்கினால்
வென்று களங்கொண்ட வேல்வேந்தே—சென்றுலாம்
ஆழ்கடல்சூழ் வையகத்து ளைந்துவென் றாறகற்றி
ஏழ்கடிந் தின்புற் றிரு.

ஒன்று: ஞானம். இரண்டு: காரண காரியங்கள். மூன்று: நட்பு, பகை, உதாசீனம். நான்கு: யானை, தேர், குதிரை, காலாள். ஐந்து; மெய், வாய், கண், மூக்கு, செவி. ஆறு: நட்பு, பகை, செல்லுகை, இருக்கை, பிரிக்கை, கூட்டுகை என்னுங்குணங்கள். ஏழு: வேட்டை, கடுமொழி, தண்டம், சூது, கள்ளுண்டல், பொருளீட்டல், காமம் என்பன. இவ்வெண்பா குறிப்புப் பொருட்கு உதாரணமாக நன்னூல்விருத்தியுரையிலும் வருகின்றது.

44. ஒட்டக்கூத்தர்
(1110)

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள மலரி என்னுமூர் என்றும், குலம் கைக்கோளர்குலம் என்றும், சமயம் சைவம் என்றும் கூறுவர். இவர் வாணிதேவியின் அருளடைந்த ஒரு வரகவி. வாணிதாசர் என்னும் பெயரு முடையவர். கோவையும், உலாவும், அந்தாதியும் பாடுஞ் சிறப்பு நோக்கிக் "கோவையுலா வந்தாதிக் கொட்டக்கூத்தன்" எனப் புகழ்வுற்றவர். பல தனிநிலைச் செய்யுள்களுக்கும், இராமாயணத்தின் உத்தர காண்டம், விக்கிரமசோழனுலா, தக்கயாகப்பரணி, ஈட்டியெழுபது முதலிய பிரபந்தங்களுக்கும் ஆக்கியோர் என அறிஞர் நோக்குற்றவர். குலோத்துங்கசோழன் கோவையும் இவர்நூல் என்பாருமுளர்.

கட்டளைக்கலித்துறை

ஆடுங் கடைமணி நாவசை யாம லகிலமெல்லாம்
நீடுங் குடையிற் றரித்த பிரானென்று நித்தநவம்
பாடுங் கவிப்பெரு மானொட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனென் றேயெனைச் சொல்லுவரே.

ஒட்டக்கூத்தர் துதிகூறக் கருதித் "தரித்தபிரான்" என்பது வரையிற் பாடிவருதலைக் குலோத்துங்க

சோழன் கண்டு ஆசிரியர் தன்னைத் துதித்தல் தகுதி யன்றெனத் தடுத்து எஞ்சிய பாகத்தைத்தானே பாடி அவர்க்கே துதியாக இதனை முடித்தான் என்பர்.

அரியெனுநாமம்

ஆரே யெனுமொன்று சொல்லத் தொடங்கினு மவ்விடத்தன்
பேரே வருமென்ன பேறுபெற் றேன்பெரு நான்மறையின்
வேரே மிதிலையின் மின்னுட னேவெய்ய கானடைந்த
காரே கடல்கொழுந் தச்சிலை வாங்கிய காகுத்தனே.

குலோத்துங்கசோழன்கோவை

கணைக்கோவை பேசொரிந் தன்றிலங் காபுயங் காயரவின்
இணைக்கோவை யீந்த கடாக்களி றேயெழு பார்க்குமொரு
துணைக்கோவைக் கோழிக் குலோத்துங்க சோழனைச் சொல்கின்ற
திணைக்கோவை பாட வடிதொறுங் காக்கநின் சேவடியே. [வைந்

அரவு என்றது அநந்தனை. இணைக்கோ - இரண்டு கண்கள்.

45. ஒப்பிலாமணிப்புலவர்
(1828)

இவரூர் சோழமண்டலத்துள்ள திருவாரூர். இவர் பிற்காலம் வாசஞ்செய்த இடம் புதுப்புத்தூர். சமயம் சைவம். வைத்தியநாததேசிகருக்கு மாணவகர். இவர் வீதிவிடங்கப் பொருமான்வாயில் வித்துவான் என்றும் தமிழ்மொழிப் பண்டாரம் என்றும் அழைக்கப் படுவர். தஞ்சாவூரில் அரசியல் நடாத்திய சரபோசி ம்ன்னன் முன்னிலையில் (1711—1728) தமது நூல் களைங் பாடிப் பெருமை பெற்றவர். சிவரகசியம் என் னும் நூலைச் செய்தவர். இதில் சிவவணக்கம், வில்வ மகிமை, பஞ்சாட்சரம், நான்குபாதங்கள் முதலியன கூறப்படுகின்றன.

சிவரகசியம்

வந்தனை செய்வோர் நெஞ்சில வாசனை மாலயர்குஞ்
சிந்தனை செய்தற் கெட்டாத் தேவனைத் தேவர்கோனை
வந்தனைக் காழிவாழ் சம்பந்தனைக் கடப்பந் தாமக்
கந்தனைத் தந்தோன் றன்னைக் கருத்தினைக் கருத்துள் வைப்பாம்.

46. ஔவையார்

இவர் பெருநாவலருடன் பிறந்தவர் என்பர். பெற்றுருண்டி மறந்தவர். பாணரகத்தில் வளர்ந்தவர். சிவபரத்துவந் தெளிந்தவர். வரகவித்துவம் அமைந்தவர். இலௌகிகம் வைதிகம் இரண்டுந் தெரிந்தவர். மனம், மொழி, மெய் எனும் மூன்றும் சிறந்தவர். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் அறிந்தவர். தமிழ்நாடெங்குந் திரிந்தவர், கோவலூரிலும் புல்வேளூரிலும் பலநாள் இருந்தவர். பலர்மீதுங் கவிபாடிப் பரிசு பெற்றவர். தினைத்துணை நன்றியையும் பனைத் துணையா மனத்தில் வைத்தவர். பரிசு கொடுத்தவர் சிறியராயினும் என்! வறியராயினும் என்! அவரைப் பெரியராக மதித்துப் பாடினவர். பரிசு சிறிதாயினும் என்! அதனையும் பெரிதா மதித்துப் பாடினவர். பரிசு கொடுத்தலிலும் பாட்டுக் கேட்டலிலும் பராமுகஞ் செய் தாரையும், பாடலருமை அறியா மூடரையும் வெறுத்துப் பாடினவர்.

உலகியலை நோக்கிக் "காலையி லொன்றுவர் கடும் பகலி லொன்றுவர்-மாலையி லொன்றுவர் மனிதரெலாம்" எனவும், "மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று-மிதியாமை கோடிபெறும்" எனவும். "நட்புந் தயையுங் கொடையும் பிறவிக் குணம்" எனவும், மனைவி "ஏறு மாறு யிருப்பாளே யாமாயிற்-கூறுமற் சந்நியாசங் கொள்" எனவும், பொய்வழக்காடத் துணைபுரியும்

புரட்டரைச் சுட்டி 'வெல்லாவழக்கை விலைபேசி வெல்லுவிக்கும்-வல்லாளன் சுற்றம்போ னாண்டு" "கைக்கூலி வாங்கிக் காலறுவான் றன்கிளையும்-எச்சமறு மென்றுலறும்" எனவும், கவிகளைத் தாமா உணரும் வலியின்றிப் பிறர் புகழக் கேட்டுத் தாமும் அறிந்தவர் போன்று கேட்பாருக்கு "விரக ரிருவர் புகழ்ந்திடவே வேண்டும்-விரனிறைய மோதிரங்கள் வேண்டும்" எனவும் பாடினவர்.

கோவலூரில் இருந்தபோது பாரி என்னுஞ் சிற்றரசன் செய்துவைத்த நன்றிமறப்பது நன்றன்று என்று நினைத்து அங்கவை சங்கவை என்னும் அவன்புத்திரிகள் இருவரையும் அரிதின் முயன்று தெய்வீகன் என்னும் அரசனுக்கு விவாகஞ் செய்வித்தவர். அவ் விவாகத்துக்கு வேண்டும் பொருள்களெல்லாம் ஆண்டு வரும்படி கவிபாடி வருவித்தவர். பெண்ணையாறு நெய்யும் பாலுமாய்ப் பெருகிவரவும் பாடினவர். புல்வேளூர்ப் பூதன் கொடுத்த புளித்த மோரையும் புகழ்ந்து பாடினவர். வழியில் உணவுகிடையாது வாடியபோது தனக்கென வைத்திருந்த தண்ணீரடுபுற்கையை உண்ணீருண்ணீர் என்றுபசரித்தீந்த ஆட்டிடையனாகிய அசதி என்பவன் நன்றியையும் வியந்து கோவை ஒன்று பாடினவர்.

பாட்டுரைக்கும்போது கேட்டு மகிழ்தலைவிட்டுப் பட்டுநாற் சீலையைப் பார்த்துக்கொண்டு பராக்காயிருந்த சோழராசனை நோக்கிப் பட்டுநாற்சீலை நாலுமாதத்திற் கிழிந்துபோகும் "என்றுங் கிழியாதென் பாட்டு" என்றும் பாடினவர். கவிகளைக் கேட்டறியாத அரசனொருவன் செவிகளைச் சுட்டிப் "பாட்டு முறையும் பயிலாதன விரண்—டோட்டைச் செவியுமுள" என்றும் பாடினவர். ஒரு வீட்டிலே உணவு கொடுத்த மனைவியையும்,

மறுத்த கணவனையு நோக்கிப் பிரமனை வெறுத்தும் பாடினவர். பாடல் விரும்பிய மூடர் சிலரை நோக்கி "நும்மை எங்ஙனம் பாடுவேன். அவிச்சுவையல்லது தமிழ்ச்சுவை தெருளீர்! உடீர் உண்ணீர்! கொடீர்! கொள்ளீர்! என மறுத்தும் பாடினவர்.

நாலடிவெண்பாவாகிய நாலடியாரிலும், இரண்டடி வெண்பாவாகிய வள்ளுவர்குறளிலும் வைத்திருக்குஞ் சொல்லருமை நோக்கிப் "பழகுதமிழ்ச்—சொல்லருமை நாலிரண்டில்" எனவும், பாடும் பயிற்சி நோக்கிச் "செந்தமிழும் நாப்பழக்கம்" எனவும், வெண்பா இயற்றும் அருமை நோக்கிப் "புலவர்க்கு வெண்பாப்புலி" எனவும், வண்ணச்செய்யுள் விரைந்து பாட முடியாமை நோக்கி "ஆசுகவி வல்லவர்க்கு வண்ணம்புலி" எனவும், புலவர் சிலவர் செருக்கினை நோக்கிக் "கற்றதுகைம் மண்ணளவு கல்லாதுலகளவு வெறும் பந்தயங் கூற வேண்டாம் புலவீர்" எனவும் பாடினவர். அவைக் கஞ்சாமல் உரைக்கும் அருமை நோக்கி "வார்த்தை சொலின் நூறுயிரத் தொருவன்" எனவும் பாடினவர்.

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி முதலிய நீதிநூல்களும், பந்தனந்தாதி, ஞானக் குறள் முதலிய வேறு நூல்களுஞ் செய்தவர்.

அறம்பொருளின்பம்வீடு

ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காதலிருவர் கருத் தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

பெண்ணையாறு நெய்பால்பெருகியது

முத்தெறியும் பெண்ணை முதுநீ ரதுதவிர்ந்து
நத்திய நெய்பா றலைப்பெய்த—குத்திச்
சொருமலைதெய் வீகன் றிருக்கோவ லூர்க்கு
வருமளவுங் கொண்டோடி வா.

பாரத பாயிரகாரரும் பெண்ணையாற்று வருணனை யிலே இதனைச் சுட்டி "அவ்வை பாடலுக்கு நறுநெய் பால் பெருகி யருந்தமிழறிவினுற் சிறந்து" என்பர்.

பூதன்கொடுத்த புளித்தமோர்

வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுமொன வேபுளித்த மோரும்—திரமுடனே
புல்வேளூர்ப் பூதன் புகழ்ந்துபரிந் திட்டசோ
றெல்லா வுலகும் பெறும்.

அசதிக்கோவை

1. ஆய்ப்பாடி யாயர்தம் மைவே லசதி யணிவரையிற்
கோப்பா மிவளெழிற் கொங்கைக்குத் தோற்றிபக் கோடிரண்டுஞ்
சீப்பாய்ப் பரணியதாய்ச் சிமிழாய்ச் சின்ன மோதிரமாய்க்
காப்பாய்க் கரவளை யாய்ப்பல்லக் காகிக் கழிந்ததுவே.

2. அலைகொண்ட வேற்கரத் தைவே லசதி யணிவரைமேல்
நிலைகொண்ட மங்கைதன் கொங்கைக்குத் தோற்றிள நீரினங்கள்
குலையுண் டடியுண் டுடன்கையி லெற்றுண்டு குட்டுமுண்டு
விலையுண் டடியுண்டு கண்ணீர் ததும்பவும் வெட்டுண்டதே.

அசதிக்கோவையைப்பற்றிச் சிவஞானமுனிவரும் சோமேசர் வெண்பாவிலே "பன்னுமசதிநன் றிபாராட் டிக் கோவைநூல் — சொன்னுளே யௌவைமுன்பு சோமேசா" என்ருர்.

பிரமனைவெறுத்துப்பாடியது

அற்றதலை போக வறாததலை நான்கினையும்
பற்றித் திருகிப் பறியேனோ—வற்றன்
மாமனையா னுக்கிந்த மானை வகுத்த
பிரமனையான் காணப் பெறின்.

47. கச்சியப்பசிவாசாரியர்

(1736)

இவரூர் தொண்டைமண்டலத்துள்ள காஞ்சிபுரம். குலம் ஆதிசைவவேதியர் குலம். காலம் அந்தகக்கவிவீரராகவமுதலியார் காலம் என்பர். இவர் குமரகோட்டத் தருச்சகர். குமரவேளருள் பெற்றவர். வடமொழி, தென்மொழி என்னும் இருமொழியுங் கற்றவர். வேத வேதாங்கங்களும், வேதாந்தசித்தாந்தங்களும், சைவாமகங்களும், சமயசாத்திரங்களும், இலக்கணலக்கியங்களும் மயக்கற உணர்ந்தவர். நவின்றோர்க்கினிமையும், நன்மொழிபுணர்த்தலும், நவையின்மையும் அமையக் கவிபாடல் வல்ல அருட்புலமையாளர். காந்தபுராணத்துச் சங்கரசங்கிதையிற் சிவரகசியகண்டத்து வரும் சம்பவகாண்டம் முதலிய காண்டங்கள் ஆறையும் மொழிபெயர்த்துப் பெருங்காப்பிய நடைதழுவ விருத்த யாப்பில் யாத்துக் கந்தபுராணம் என நின்று நிலவ வைத்தவர்.

இப்புராணத்திற் பத்துப்பாட்டுச் சிந்தாமணி முதலிய பண்டைத் தமிழ்நூற் சொற்களும், உவமானம் முதலியவைகளும் வருகின்றன. தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களாற் பெறப்படும் அகப்பொருள் புறப்பொருட்டுறைகளும், மடக்குச் சிலேடை முதலிய அலங்காரங்களும் வருகின்றன. வேதாந்த சித்தாந்தப்

பொருள்களும் வருகின்றன. உலோகாயதம், பௌத்தம் முதலிய சமயசாத்திரப் பொருள்களும் வருகின்றன.

ஐயிருவட்டம், ஆடுறுபசி, தட்டை, குளிர், தழலை முதலியன பத்துப்பாட்டுச் சொற்கள். "பாற்றியக்கமு நீழலுமாமெனப்பாட' "நீண்டதனி மூப்பகல நெஞ்ச மருணீங்க—ஈண்டுநும் வரைக்குமரியெய்தி யினிதாட" என்பன "பருந்து மதனிழலும் பாட்டுமெழாலும்" "திருநீர்க்குமரியாட—மூப்பொழியுமென்றான்" என்னும் சிந்தாமணிப்பொருள். "நாற்றமுந் தோற்றமும்" என்பது முதலியன அகப்பொருளிலக்கணப் பொருள்கள். "அடலையி னலத்தைவீட்டி" என்பதுமுதலியன மடக்கு. "அளவின் மிக்குறு பாணிபெற்ற தற்கவையரிதோ" என்பது முதலியன சிலேடை. "மேலுள பொருளுந் தத்தம் விளைவதும்" என்பது முதலியன வேதாந்தப் பொருள். "பல்லுயிர்க் கருளைப் பூத்துப் பவநெறிகாய்த்திட்டு" என்பது முதலியன சித்தாந்தப்பொருள். "நன்னலமாதரை நண்ணுமின்பமே யுன்னருமுத்தி" "ஆண்டொர் பேரின்ப முண்டென்ப ரதனையாரறிந்தார்" என்பன முதலியன உலோகாயதமதப்பொருள். "கந்தமொடுயிர்படுங் கண பங்கம்" "கந்தமற்றிறந்திடன் முத்தி" என்பது முதலியன பௌத்தமதப் பொருள்.

இவையன்றிப் பலவித கதைகளும் வருகின்றன. இதனைக் கிரமமாக அன்போடும் படிப்பவர் கேட்பவர் குமரவேள் பத்தியையும், விரும்பிய வரசித்தியையும். பரமுத்தியையும் பெறுவர் என்பது அறிஞர் அங்கீகாரம்.

கந்தபுராணம்

1. அடலையி னலத்தை வீட்டி யரும்பெற லாக்கஞ் சிந்தி
அடலையி லுணர்வின் றாகு மவுணர்கோன் றனை முற்றும்

அடலையி னெடுவே லண்ண லழலெழ விழித்த லோடும்
அடலையி னுருவா யண்டத் தொல்லுரு வழித்த மன்னே.

இஃது அடிமுதன் மடக்கு. அடலை - வெற்றியை. இன் நலத்தை - இனிய சுகத்தினை. அடலையில் - அடற் கண்ணும். அடல் அயில் - வலிய கூரிய. அடலை - சாம்பர்.

2. கல்லகங் குடைந்த செவ்வேற் கந்தனோர் தருவதாகி
வல்லியர் கிரியை ஞான வல்லியின் கிளையாய்ச் சூழப்
பல்லுயிர்க் கருளைப் பூத்துப் பவநெறி காய்த்திட் டன்பர்
எல்லவர் தமக்கு முத்தி யிருங்கனி யுதவு மென்றும்.

பல்லுயிர்க்கு அருளைப் பூத்து என்றது அறிவுந், தொழிலும், வலியுங், குணமுமின்றி அணுத்துவம் பூண்டு ஆணவமலம் என்னும் இருளிற்கிடந்து தடுமாறி இடருழக்கும் பல்வகையுயிர்க்கும் குருடர்க்குக் கோல் கொடுத்தல்போலத் தனுகரணாதிகளைக் கொடுத்து அவ்விருளினின்றும் வெளிவருமாறு அருள்புரியக் கருதிய இச்சையை. இவ்வருள் காய்தோன்றற்குக் காரணமாகிய பூப்போன்று நிற்றலிற் பூ என உருவகிக்கப்பட்டது. இதனாற் கேவலநிலையிலே உபகரித்தல் கூறினார். கேவலமாவது உளதாந் தன்மையாகிய தனிநிலை. "கேவலந் தன்னுண்மை' என்பது சித்தியார்.

பவநெறி என்றது ஆணவமாகிய அவ்விருளினின்றும் நீக்கி அவ்வுயிர்களுக்குத் தனுகரணாதிகளைக் கொடுத்து மயக்கம் நீக்குதற்கு இயன்ற வழியாகிய பிறவிவழியை. இது பூவினின்றுந் தோன்றிய காய் போலப் பயன்படலானேக்கிக் காயென உருவகிக்கப்பட்டது. இதனாற் சகலநிலையிலே உபசரித்தல் கூறினார். சகலமாவது கலைமுதலியவற்றோடு கூடிய நிலை.

அன்பர் என்றது பாசநீக்கமுஞ் சிவத்துவப்பேறும் அடைந்து சுத்தநிலையாளராகிய அயராவன்பினரை. சுத்தமாவது மலம் நீங்கிய தூயநிலை.

48. கச்சியப்பமுனிவர்
(1736—1799)

இவரூர் தொண்டைமண்டலத்துள்ள தணிகைத் திருப்பதி. குலம் வேளாளர்குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு நூற்றுப்பதினைந்து வருடங்களுக்கு முன் என்பர். இவர் திருவாவடுதுறையாதீன சீடர். சிவஞானமுனிவர்க்குத் தலைமாணவகர். கந்தப்பையர் முதலியோர்க்கு ஆசிரியர். இலக்கணலக்கியங்களும் தருக்கமுஞ் சித்தாந்தசாத்திரமுங் கற்றவர். தணிகைப் புராணம், திருவானைக்காப்புராணம், பேரூர்ப்புராணம், பூவாளூர்ப்புராணம், விநாயகபுராணம், தணிகையாற் றுப்படை, வண்டுவிடுதூது முதலிய பிரபந்தங்கள் செய்தவர்.

தணிகைப்புராணம், சீவகசிந்தாமணி என்னும் ஆருகதநூலைப் பேரிலக்கியமாகக் கொண்டாடுவார் தன்மையை நோக்கிச் சீவகசிந்தாமணிக்கு மேலதாகவும், அரிதுணர்தற்பாலதாகவும் ஆராய்ந்தெண்ணிச்செய்தது என்பர். அரிதுணர்தற்காரணமாகப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்களிற் பிரயோகித்திருக்கும் அருஞ்சொற்களையும், பொருள்களையும், வருணனைவகைகளையும், தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களில் வரும் அரிய விதிகளையும், அகப்பொருள் புறப்பொருட்டுறைகளையும் இடையிடை கோத்து யாத்தது. சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் முதலி

யன கூறும் பதிபசுபாசலக்கணங்களையும், சிவதருமோத்தரங் கூறும் பரமதருமங்களையும், கந்தபுராணங்கூறுங் கதைகளையும் சுருக்கி அடக்கியது.

இரட்டுதல், கலித்தல், இறைகொளல், குடந்தம், வெறுத்தல், குரும்பி முதலியன பத்துப்பாட்டுச் சொற்கள். வருடைமான், கண்பொதிபாளை, வளகு முதலியன கலித்தொகைச் சொற்கள். வருபுனல், வல்லரண், இருநீர், விளையுள் முதலியன திருக்குறட் சொற்கள். இளகுகாழகில், கொம்மைகொட்டல். இலைப்புரை கிளைத்தல் முதலியன சீவகசிந்தாமணிச்சொற்கள். "வளகுமேய்ந்து சேவகங்கொளுமான் மதமொழுக்கும்" என்பது முதலியன கலித்தொகைப் பொருள். "பல்கழு வேந்தலைக்கும் படர்கொலைக்குறும்பு" முதலியன திருக்குறட்பொருள். ஆப்பி, தேத்தடை, குன்றியலுத் தொடர் என்பன முதலியன தொல்காப்பியத்தரிய விதிகளமைந்தன. களவுப் படலக் கட்டளைக்கலித்துறைகள் அகப்பொருட்டுறைகள். "குடைநாட்கொளல் வாளுட்கொளல்" முதலியன புறப்பொருட்டுறைகள். நந்தியுபதேசம் பதிபசுபாசலக்கணம். அகத்தியனருள் பெறுபடலம் சிவதருமோத்தரம். சிபரிபூரணநாமப்படலம் கந்தபுராணகதை. இவ்வாறு வருவனவற்றையும் மற்றையவைகளையும் அங்கங்கு நோக்கிஅறிக. இதனைப் பற்றிச் செந்தமிழ் முதலாந்தொகுதியிலும் எழுதினும். ஆங்குங் காண்க.

தணிகைப்புராணம்

இளகு காழகிற் சந்தனப் பொதும்பரொவ் விடனும்
வளகு மேய்ந்தசே வகங்கொளு மான்மத மொழுக்குங்
குளகு தேரிய வருடைமான் குப்புறு மடுக்கத்
தளகி ளேறுபாட் டிரட்டுமா லளைதொறுங் குரால்கள்.

இளகுதல் - தழைத்தல். காழ் - வைரம். வளகு - ஒருசெடி. சேவகங்கொளுமானை - யானை. சேவகம் - யானை துயிலிடம். ஒழுக்கும் - சொரியும். குளகு - விலங் குண்ணும் இலை. தேருதல் - ஆராய்தல். வருடைமான் - மலையாடு. குப்புறல் - கடத்தல். அடுக்கம் - பக்கமலை. அளகு - பெடை. இரட்டுதல் - மாறியொலிப்பித்தல். குரால் - கூகை

கட்டளைக்கலித்துறை

குன்றிய லுத்தொடர் வல்லின முன்பின் குறுகநிற்பிற்
குன்றுவ துள்ள வளவையி னின்றொடு கோற்றொடியைக்
குன்றிற கீர்ந்தவ னுதியர் நன்கு குறிக்கினுமெங்
குன்றவர் வண்குலங் குன்றுவ புன்சொற் கொழுந்தெழுமே.

குன்றியலுத்தொடர் - குற்றியலுகரத்தொடர். வல்லினம் முன்பின் குறுக நிற்றல் - செக்குக்கணை என்பதிற் போல வல்லொற்று முன்னும் பின்னும் அது குறுக நிற்றல். உள்ள அளவையிற் குன்றுவது - குற்றுகரம் தனக்குள்ள அரைமாத்திரையிற் குறைந்து கான்மாத் திரையாவது. இது தொல்காப்பிய விதி. குன்றிற கீர்ந்தவன் - இந்திரன். புன்சொல் - பழிமொழி.

திருவானைக்காப் புராணம்

பூவினுட் கமலமும் பொருப்புண் மேருவும்
காவினுட் கற்பகக் காவுந் தேவருட்
டேவர்க டேவனுஞ் சிறந்திட் டாலென
நாவலர் புகழுநீர் நாடு மிக்கதே.

திருத்தணிகைப் பதிற்றுப்பத்தந்தாதி

எழுத்தி னவ்வுயி ரென்ன நிறைந்தளாய்
முழுத்த பேரறி வாய்முத லாகிய

வழுத்து சீர்த்தித் தணிகை மணாளனை
யழுத்து முள்ளத் தவர்க்கரு ளில்லையே.

பூவாளூர்ப் புராணம்

உயர்ந்தவரு மல்லவரு மோங்கியதன் னூக்காற்
பயந்தழுவி னொப்பரெனல் பாரையறி வித்தாங்
கியைந்தமக வான்மகளொ டேனல்வளர் மாதும்
புயந்தழுவ நின்றபுனி தற்கடிமை செய்வாம்.

49. கடிகைமுத்துப்புலவர்
(1716)

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள எட்டயபுரம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு இருநூறு வருடங்கட்கு முன் என்பர். இவர் திருக்கு, மடக்குச், சிலேடை முதலியன அமைத்துக் கவிபாடுவதில் வல்லவர். கவியின் மாத்திரமோ! வார்த்தைகளிலுஞ் சிலேடை வழங்குவர். மனைவியின் திவசத்துக்கு அரிசி வாங்கிக்கொண்டு வருதலைக் கண்டார் ஒருவர் யாது புலவீர்! என்றபோது தலைவிதியின்வசம் எனவும், தலைவியின் திவசம் எனவும் பொருள் படுமாறு "தலைவிதிவசம்" என்றவர் என்பர். ஒருகவியிலே சந்து (தூது) போன அன்னம் சும்மா வரிற் சண்டை மூளும் எனவும், சந்தனக்குழம்பு விலையின்றி வரிற் பூசிக்கொள்ளலாம் எனவும் பொருள்படுமாறு "சந்தனஞ் சும்மா வரிற் பூசலாம்" என்றவர்.

பல தனிநிலைக்கவிகளுக்கும், சமுத்திரவிலாசம், காமரசமஞ்சரி, திக்குவிஜயம், திருவிடைமருதூரந்தாதி முதலிய பிரபந்தங்களுக்கும் ஆக்கியோர். சமுத்திரவிலாசம் மடக்குஞ் சிலேடையும் மலிந்தது, கழிக்கரைப் புலம்பல் என்னும் அகப்பொருட்டுறை ஒன்றேயுடை

யது. கழிக்கரைப்புலம்பலாவது தலைவி விருப்பமிகுதியி ளுற் கழிக்கரைக்கணுள்ள பலபொருள்களையும் விழித்துப் புலம்புதல். இவர் கவிகளுள்ளே பல எட்டயபுரத் தலைவராயிருந்த வேங்கடேசுர எட்டப்பபூபதி மேலன.

சமுத்திரவிலாசம்

உள்ள திருக்கை காணீரே யுறங்கா திருக்கை காணீரே
ஓசைக் கடலைப் பொருமலையே யொழியேன்விரகப் பொரு
கள்ள ருதாங் குவளைகளே கழலுங் கரந்தாங்கு வளைகளே[மலையே
கரையிற் படராத் துப்பீரே கலந்ததுடலத்துப் பீரே
அள்ள லளையுங் களிக்கரையே யழைப்பார் மாதர்களிக் கரையே
ஆற வகுப்புக் காற்றேனே யாழிபுடைப்புக் காற்றேனே
வெள்ள மூரும் பானத்தே விரும்பா திருந்தேன் பானத்தே
வெங்க டேசு ரெட்டனையே மேவத் தடுக்கு மெட்டனையே.

திருக்கைகாள் - திருக்கைமீன்களே! உறங்காது இருக்கை. பொரும் அலை - பொருகின்ற திரை. பொருமல் - துயர். கரம்தாங்கு - கையிற்றாங்கிய. துப்பீரே - பவளமே. பீர் - பசலை. களி - சேறு. இக்கரை - மன்மதனுரை. கால் தேன் - காலையுடைய வண்டு. புடைப்புக்கு - அடிக்கு. பால் நத்து - வெள்ளிய சங்கு. பானம் - பருகுவது. எட்டனை - எட்டு அன்னை.

தனிநிலை

திருந்தலரி கலையடக்குங் கிளைவைமரு தப்பசெய சிங்க மென்னைப்
பொருந்தலரி தாயிருந்தாற் பூத்தானஞ் செய்யானோ போர்வேளையா
வருந்தலரி குளையலரி மாவலரி பூவலரி மாதர் கீழ்பால் [செய்வாளே
இருந்தலரி வாராமுன் னிரவிதனின் மதியம்வந்தா லென்

திருந்தலர் - பகைவர். இகல் - போர். அரிது - அரியது. பூத்தான் அஞ்சு - பஞ்சபாணம். இருளை - தோழி. அலர் - பழிமொழி; அலரி. பூவல் - சிவப்பு.

அரி. அலரி - சூரியன். இரவு இதனின். இது பிர கேளிகை. அலரி ஏழு தொனித்தல் அறிக.

நான்கமாவாசை

கலக்கமா வாசைவெட்க மறியாதா வென்னமதி கவலை தன்னை, விலக்கமா வாசைவலக் குழலைமுடி யென்றனையும் வெறுத்தாள் விட்ட, இலக்கமா வாசையென வோதியென்ன துயாகற்று திதனை நீபோய்த், துலக்கமா வாசைமட்டுங் காங்கெ யாசகி யேனென்று சொலச்சொன் னளே.

கலக்கமா - கலக்கந்தானு? ஆசை - விருப்பு, விலக்கு அமா. அமா - அம்மா. வா. சைவலம் - பாசி. இலக்கம் மா - இலக்காகிய வண்டு. ஆசு - குற்றம். ஐயென - விரைந்து.

50. கணபதிப்பிள்ளை

(1845—1895)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள புலோலி. குலம் வேளாளர்குலம். சமயம் சைவம். காலம் இற்றைறக்கு இருபத்தொரு வருடங்களுக்கு முன். இவர் குமாரசுவா மிப்புலவருக்குச் சியேட்டர். சிவசம்புப்புலவரிடம் இலக் கண இலக்கியங் கற்றவர். பின்னர்ச் சென்னைசென்று அங்கிலமும் சங்கதமும் நன்கு கற்றவர். சங்கதத்தி லுள்ள வில்கணீயம், இரகுவமிசம் ஆலாசியமான்மியத் தில் வாதபுரேசர்கதை முதலியவைகளைத் தமிழிற் பெயர்த்து வாக்கியவடிவில் ஆக்கினவர். சங்கதங் கற்குந் தமிழர்பொருட்டுப் பிரதமவாசகபுத்தகமும் பிறவுஞ் செய்தவர். வேதாரணியேசுவரர்மீதோர் ஊஞ்சற்பதி கமும் பாடினவர்.

வில்கணீயம் வில்கணகவிராசன்சரித்திரம் கூறும் நூல். வில்கணகவிராசன், யாமினிபூரணதிலகை என்னும் இராசகுமாரிக்குத் தான் காவியநாடகாலங்கார சாத்திரங் கற்பித்ததையும், அவளைத் தனக்கு மனைவியாக்கிய வரலாற்றையும், சந்திரோதய வருணனையையும், வித்தியாமகத்துவம் முதலிய பிறவற்றையும் இதன்கட் கூறுவன்.

வில்கணீயம்

மந்திரி கேளா யென்றன் மாதவந் தன்னால் வந்த
சந்திர வதனை யாகுந் தையல்சங் கீதந் தன்னில்
தந்திரி வீணை தன்னிற் சமமிலாள் சாகித் யந்தான்
வந்திடும் வகையா தென்ன மகிழ்ந்தெனக் குரைப்பாய்நீயே.

வேதாரணியேசுவரரூஞ்சல்

மணியோங்கு மகோததியின் பால தாய
மறைக்காட்டு மதியொளிரு மௌலி யார்மேல்
அணியோங்கு மூஞ்சலிசை யடியார் தங்கள்
அடிக்கடியேன் ரமியேனு தாத்திற் பாடப்
பணியோங்கு மென்பாயற் பதுமக் கண்ணன்
பழிதொலைத்தாட் கொண்டவருட் பரம னூர்தக்
கணியோங்கு வீரகத்திச் சேத கன்செங்
கமலமலர் திகரடிகள் காப்ப தாமே.

51. கணிமேதாவியர்

இவர் மதுரைச் சங்கப்புலவருள் ஒருவர். திணைமாலை நூற்றைம்பது என்னும் பிரபந்தஞ்செய்தவர். இப்பிரபந்தம் பதினெண்கீழ்க்கணக்குள் ஒன்று; அகப்பொருட்டுறை அமைந்தது. நச்சினார்க்கினியத்திலும், நன்னூல்விருத்தியிலும், அகப்பொருள்விளக்கத்திலும் உதாரணமாய் வந்தது.

வெண்பா

வினைவிளையச் செல்வம் விளைவதுபோ னீடாப்
பனைவிளைவு நாமெண்ணப் பாத்தித்—தினைவிளைய
மையார் தடங்கண் மயிலனையாய் தீத்தீண்டு
கையார் பிரிவித்தல் காண்.

தீத்தீண்டு கையார் - வேங்கையார். இது நன்னூல் விருத்தியிலே குறிப்புக்கு உதாரணமாய் வந்தது.

52. கணேசபண்டிதர்

(1843—1881)

இவரூர் யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணை. குலம் வேதியர்குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்குப் பதினைந்து வருடங்களுக்கு முன். வடமொழி தென்மொழி என்னும் இருமொழியுங் கற்றவர். இலக்கிய லக்கணந் தெரிந்தவர். ஆகமங்களிலுஞ் சென்றவர். பாடுந் திறமும் பயின்றவர். பாண்டிநாட்டிலுள்ள இளையாற்றங்குடியில் இருக்கும்போது அத்தல புராணத்தை அந்நகர வணிகர் கேள்விப்படி தமிழிற் பெயர்த்து விருத்தப் பாவில் யாத்தவர்.

இளசைப்புராணம்

அப்பெரு மான்மி யத்தை யரவணி சடையி னார்தஞ்
செப்பரு முகத்தில் வந்த சீர்செழு குரவன் றானும்
எப்பெரும் புகழும் வாய்ந்த விளசைமா நகரத் தாரும்
தப்பருந் தமிழின் பாவாற் பாடியே தருக வென்றார்.

53. கு. கதிரைவேற்பிள்ளை

(1829—1904)

இவர் யாழ்ப்பாணத்துள்ள உடுப்பிட்டியிலே வேளாளர் குலத்திலே பிரபலம் பெற்று விளங்கிய குமாரசுவாமி முதலியார்க்கு மைந்தர். அத்துவக்காத்

தும், இலங்கைச் சட்டநிரூபணசபைப் பிரதிநிதிகளுள் ஒருவருமாகிய கௌரவ பாலசிங்கத்துக்குத் தந்தையார். கடவுட் பத்தியும், நல்லொழுக்கமும் உடையவர். இற்றைக்குப் பன்னிரு வருடங்கட்கு முன் இருந்தவர்.

அங்கிலம், தமிழ் என்னும் பாஷைக ளிரண்டிலும் பண்டிதர். அங்கிலராசநீதிகளும், மனுநீதிகளும் நன்கறிந்தவர். ஊர்காவற்றுறை நியாயசாலையிலே நீதிபதியா யிருந்தவர். பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால் மெய்போலத் தோன்றும் பொய்ம்மொழிகளையும், மெய்யுடை ஒருவன் சொலமாட்டாமையாற் பொய்போலத் தோன்றும் மெய்ம்மொழிகளையும் நடுநின்று தடுமாற்றமின்றிக் கேட்டுத் தெளிந் துணருந் திறமுந் தெரிந்தவர். தமிழ்ப் பாஷையிலே இலக்கியலக்கணங்களும், வேதாந்த சித்தாந்தங்களும், தருக்கநூலும், நீதிநூல்களும், வேறுநூல்களுங் கற்றவர். கற்றலுங் கற்றவை கேட்டலும் கேட்டதன்கண் நிற்றலுங் கைகூடப் பெற்றவர். நற்குணம், நற்செயல், நன்றியறிவு முதலியவைகளைப் பெரிதும் பேணினவர்.

செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்கல், பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ், அடக்க மமரருளுய்க்கும், நன்றல்லதன்றே மறப்பது நன்று, எண்ணித் துணிக கருமம் என்பன முதலிய பெரியோர் வாக்குகளைப் பேணும் முறையும் அறிந்தவர். அதிகாரம் செல்வம் முதலியவற்றால் அகங்காரங்கொண்டு பழிப்படலும், ஆடம்பர வேடம்பூண்டு வெளிப்படலும், பிறன்பழி கூறலும், சினந்தலைக்கொண்டு மனந்தடுமாறலும், பழிபாவங்கள் தேடலும் அறியாதவர்.

"தேடினர் யாவரேகொ லெழு வகையானுஞ் சீர்த்தி" எனப் பாரத பாயிரகாரர் கூறிய எழுவகையுள்ளே நூல்செய்தல், அதனினமாகிய செய்வித்தல் என்னும் இருவகையானும் சீர்த்தி தேடினவர். தமிழ் கற்போர்க்குப் பயன்படுமாறு பலவருடப் பிரயாசத்தோடும் செயற்கரிய பெருநூல் ஒன்று செய்தவர். அப் பெருநூல் இப்பொழுது கௌரவ பாலசிங்கப் பெருமகன் முயற்சியால் மதுரைச் சங்கப் புலவராலும், சங்கத் தலைவராலும் பரிசோதித்துத் தகரம் வரையும் பகிரங்கஞ் செய்த தமிழ்ச்சொல் லகராதி.

இவ்வகராதியிலே இலக்கணமும் இலக்கியமுமாக ஏறக்குறைய நானூறு தமிழ்நூல்கள் நோக்கியும், வடமொழி ஆபிதானிகம் நோக்கியும் ஆராய்ந்து சொற்களும் பொருள்களுஞ் சுத்திபெறச் சேர்த்தவர். நம்மையும், உடுப்பிட்டி ஆறுமுகப்பிள்ளையையும், சரவணமுத்துப் புலவரையும், பிறரையும் சிலசில பாகங்களுக்கு இலேககர்களுந் துணைவர்களுமாகக் கொண்டவர். தர்க்க பரிபாஷையைப் பரிசோதித்து அச்சிட்டவர். வித்தியா தர்ப்பணம் முதலிய பஞ்சிகைகளிலே வித்தியாவிடயங்கள் பல வரைந்தவர். இலக்கணசந்திரிகை, இரகுவமிசக் கருப்பொருன் என்னும் இரு நூல்களுஞ் செய்வித்தவர். அச்சிடத் திரவிய சகாயமுஞ் செய்தவர்.

அகராதிக்காப்பு

திருவா ருலகஞ் சிருட்டித் தளிக்கும்
அருவார் பொருட்டென் னகம்.

54. கந்தசாமிப்புலவர்

(1786)

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள திருப்பூவணம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு நூற்றுமுப்பது

வருடங்களுக்கு முன் என்பர், திருக்கும் மடக்கும் பாடுதலிற் சிறந்தவர். ஆப்பனூர்ப்புராணம், பூவணப்புராணம், பூவணவுலா முதலியன செய்தவர்.

ஆப்பனூர்ப்புராணம்

பெருமுலைப்பா லகன்பிரமன் கண்டறியாப் பெருந்தகைமேற்
பொருமுலைப்பான் மெழுகினுளம் புரைந்துருகத் தமிழ்பாடும்
மருமுலைப்பா லரும்பனைய மணிமுறுவன் மலைமகளார்
திருமுலைப்பான் மணங்கமழ்வாய்ச் செல்வனையாம் பரவுவாம்.

முலைப்பாலகன் - விட்டுணு. முலை இடைக்குறை. உலைப்பால் மெழுகின். முலை பால் அரும்பு - முல்லையின் வெண்மையான அரும்பு.

பூவணப்புராணம்

சேய்க ணின்றவைக் கீவது முத்தமே
சிற்றில் கோலிச் சிதைப்பது முத்தமே
பாய்பு னற்றிரை சேர்வது பண்ணையே
பாட லெங்கும் பயில்வது பண்ணையே
வாய்தி றந்து வழங்குவ வள்ளையே
மான ஞர்கடம் வார்காதும் வள்ளையே
ஓய்ம ருங்கு லுடுப்பது சேலையே
உற்ற கண்களைப் பாயது சேலையே.

சேய்கள் - பிள்ளைகள். அவை - தாய். பண்ணை - வயல், சவை. வள்ளை - உலக்கைப்பாட்டு, வள்ளைக் கொடி. சேல் - ஒருமீன்.

பூவணவுலா

சேலையுலாங் கொண்ட திருப்பூ வணர்மேல்வெண்
பாலையுலாம் பூவையுலாப் பாடவே—கோவைச்
சிரத்தந்தத் தந்திவண்ணன் செம்மலென வந்த
கரத்தந்தத் தந்திவண்ணன் காப்பு.

சேவை - எருதை. வெண்பாவை - சரசுவதி. சிரத்து அந்தத்து - தலையோட்டினமழகையுடைய. செம்மல் - மகன். தந்தம் - கொம்பு. தந்தி - யானை.

தெரிவைப்பருவம்

1. பூவண வாணனஞ்சொற் பொன்னனையாட் கன்றளித்த
மாவணக் காதை வகுத்தெழுதி—ஓவியத்திற்

2. காட்டு கெனநிறைபொன் கைக்கொடுப்ப வோர்படத்தில்
தீட்டி யவளவள்முன் சென்றிருந்து—தோட்டலர்மென்

3. போதரசு கையாற்செய் பொன்னனையாய் பொன்னனையாள்
மாதரசு வாழ்பொன் மனையிதுபார்—கோதை

4. புலரியிற் போந்து புனல்வைகை கைமேற்
பலனுய்க்க மூழ்கும் படிபார்—நலனுய்க்கும்

5. கண்மணி பூண்டுமனங் காமுறுவெண் ணீறணிந்து
பெண்மணியன் னுளிருக்கும் பெற்றிபார்—உண்மைத்

6. தபத்தியானப் பெண்ணரசு தாழ்விலெழுத் தஞ்சுஞ்
செபத்தியானஞ் செய்யுஞ் செயல்பார்—சுபத்தியானஞ்

7. செய்து சிவனைத் திருவர்ச் சனைமுடித்துக்
கைகுவித்து மாதிருக்குங் காட்சிபார்—பெய்வளையார்

8. ஆயத் தொடும்பூவை யங்கணனைச் சேவிக்கக்
கோயில் புகுந்துநின்ற கொள்கைபார்—ஏயத்

9. திருத்தஞ்சி லோதி திருமுன்பு சுத்த
நிருத்தஞ்செய் கோல நிலைபார்—நிருத்தம்

10. புரிந்தங்கு நின்றரிதிற் போந்து மனைக்குட்
பரிந்தங் கிருக்கும் படிபார்—அருந்த

11 முருந்து நகைமனைக்குண் மொய்த்தீண்டிச் செல்லும்
திருந்து திருத்தொண்டர் திரள்பார்—வருந்தங்கள்

12. நாய னடியாரை நண்ணி யெதிரிறைஞ்சித்
தூய வமுதருத்துந் தோற்றம்பார்—மேயசிவன்

13. தன்னுருவம் பொன்னுருவ மாகச் சமைக்கவிளங்
கன்னி சமைத்த கருவுருப்பார்—அன்னந்
14. தொடுத்த கருத்தறிந்து சுந்தரப்பே ரண்ணல்
எடுத்தசித்த வேடத் தெழில்பார்—வடித்தவயில்
15. ஒத்தவிழி மாளிகைமுன் னுற்றொருபால் யோகபட்டச்
சித்தரிரு மாந்திருக்குஞ் செய்கைபார்—அத்தகைமை
16. கண்டெதிர் சென்றுமலர்க் கால்பணிந்தன் பென்னுமயல்
கொண்டெதிர் நிற்குமவள் கொள்கைபார்—வண்டுளரும்
17. நெய்ய குழல்வருந்து நின்கருத்தே தென்றிரங்க
ஐயர் முறுவ லரும்புதல்பார்—தையலரி
18. காணுத் திருவுருவங் காணுங் கருத்தாவப்
பூணூர்க் குரைக்கும் புதுமைபார்—நீணகச்
19. சித்த ருரைப்படியத் தேமொழியில் விற்கரும்பொன்
அத்தனையும் முன்புவைத்த வார்வம்பார்—வைத்ததன்மேல்
20. நீற்றைச் சிதறியயர் நேரிழைநீ யித்தையெரி
எற்றப் பசும்பொன்னு மென்பதுபார்—கோற்றொடியும்
21. கட்டு சடைச்சித்தர் கருதுமுறை யேயெரிபெய்
தட்டகரும் பொன்செம்பொ னானதுபார்—வட்டமுலைக்
22 கொம்பனாள் பூவணத்தெங் கோமானை யாணிநேர்
செம்பொனாற் கண்ட திருவுருப்பார்—விம்பவாய்
23 வள்ளிமுத்தங் கொள்ளு மகப்பெற்றோன் மேனியைக்கண்
டள்ளிமுத்தங் கொள்ளுமவ ளன்புபார்—வெள்ளிவெற்பர்
24. அன்புக் கிளகியவ ளங்கை நகரேகை
தன்பொற் கபோலந் தரித்ததுபார்—வன்பிற்
25. பிடித்த விரதப் பெரும்பேறு பாவைக்
கடுத்த விசேட மதுபார்—முடித்தகுழல்.

இது தெரிவைப் பருவத்தாட்குச் சித்திரகாரன் ஒருவன் பொன்னனையாள் என்னும் உருத்திரகணிகையுடைய வடிவம், வீடு முதலியவைகளைச் சித்திரப் பாடத்திலே தீட்டி ஒவ்வொன்றையுந் தனித்தனி

சுட்டிக்காட்டி இது இது எனக் கூறும் பாகம். இவள் சிவனடியார்க்குச் செய்யும் விருந்தோம்பலை வியந்து சிவஞானமுனிவரும் "பொன்னனையா ளன்பருக்கே போனகமீந் துன்னருளாற்—சொன்னமிகப் பெற்றாள் சோமேசா-பன்னில்—வருவிருந்து வைகலுமோம்புவான் வாழ்க்கை—பருவந்து பாழ்படுதலின்று" என்றார்.

55. நா. கதிரைவேற்பிள்ளை

(1944—1907)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள புலோலி. குலம் வேளாளர்குலம். சமயம் சைவம். இவர் இளமைப் பருவத்தில் யாழ்ப்பாணத்தைவிட்டுச் சென்னை சென்று ஆங்கு தமிழ், சமஸ்கிருதம் என்னும் இருமொழிகளை யும் கற்றுப் பாண்டித்தியம் அடைந்தவர். அக்காலத்தில் சென்னையில் அதிகாரபுருடராக விளங்கிய திரு. த. கனக சுந்தரம்பிள்ளையவர்களிடம் தொல்காப்பியமும் வேறு சில நூல்களும் கற்றவர். பிரசங்கஞ் செய்வதில் அதி சமர்த்தர். மாயாவாதிகளைக் கண்டிப்பதில் இவருக் குள்ள ஆர்வம்நோக்கி மாயாவாததும்சகோளரி என்று அழைக்கப்பட்டவர். திரு. வி. உலகநாத முதலியார், வி. கலியாணசுந்தரமுதலியார் என்போர் இவருக்கு மாணவகர். இவர் சிலகாலம் ஆரணிசமஸ்தான வித்துவா னாகவும் விளங்கினவர்.

இவர் இயற்றிய நூல்கள் கூர்மபுராணவுரை, சைவசந்திரிகை, பழநித்தலபுராணவுரை, சைவசித்தாந் தச் சுருக்கம், யாழ்ப்பாணத் தமி ழகராதி முதலியன.

இராமலிங்க சுவாமிகளின் அருட்பாவை மருட்பா வென்று கண்டனஞ்செய்தவர். அதுபற்றி எழுந்த வழக்கிலும் வெற்றிபெற்றவர். இவர்பாடிய கவிகளுள் ஒன்று இங்கே காட்டுதும்.

சுப்பிரமணிய பராக்கிரமம்

இடந்தானு முணரானை யின்முருகை யெல்லாம்
கடந்தானை அருளார்தன் கடாலனை வேல்கைக்
கிடந்தானை யெப்பொருளுங் கிடப்பானைச் சூர்க்கா
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நம்பானை யேத்தாத நாவென்ன நாவே!

56. கந்தப்பிள்ளை
(1766—1842)

இவரூர் யாழ்ப்பாணத்து நல்லூர். இவர் ஆறுமுகநாவலருக்குத் தந்தையார். குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். சண்முகச்சட்டம்பியாருக்கும் கூழங்கைத் தம்பிரானுக்கும் மாணவகர். இவர் தமிழ், ஆங்கிலம், போத்துக்கீசு, உலாந்தா என்னும் பாஷைகளிலும் வல்லவர். அரசாங்கத்தில் ஆராய்ச்சி உத்தியோகம் வகித்தவர்.

இவர் நாடக நூல்கள் இயற்றுவதில் அதிசமர்த்தர். இவரியற்றிய நாடகங்கள் சந்திரகாசநாடகம், இராமவிலாசம், நல்லைநகர்க்குறவஞ்சி, ஏரோதுநாடகம், கண்டிநாடகம், நிக்கிலாஸ்நாடகம், இரத்தினவல்லி நாடகம் என்பன.

இராமவிலாசம்

தருவளர் வனஞ்சூ ழயோத்தியம் பதியில்
தசரத னருள்பெறு ராமன்
தருகவு சிகர்க்காய்த் தம்பிலட் சுமணன்
தன்னொடுந் தனிவனம் புகுந்து
செருவளர் படைகள் செலுத்துதா டகையைச்
சிதைத்துயா கமுநிறை வேற்றித்
திகழக லிகைதன் சிலையுரு அகற்றிச்
சீதையைக் கண்டுவின் முரித்து

மருவளர் மிதிலை மணம்புரிந் தேதம்
வளநகர்க் கேகுமவ் வழியில்
வரும்பர சிராமன் வலியொடும் வில்லு
வாங்கியே சென்று வாழ்ந்திருந்த
திருவளர் கதையை விலாசம தாகச்
செப்பினேன் பிழையிருந் தாலும்
செந்தமிழ்ப் புலவீ ரவைபொறுத் தருள்வீர்
தேவசா ரித்திர மெனவே.

57. கந்தப்பையர்

(1700)

இவரூர் தொண்டைமண்டலத்துள்ள தணிகை யம்பதி. குலம் சங்கமகுலம். சமயம் வீரசைவம். காலம் கச்சியப்பமுனிவர் காலம். இவர் கச்சியப்பமுனிவருக்கு மாணவகர், விசாகப்பெருமாளையர், சரவணப்பெரு மாளையர் என்னும் இருவருக்குந் தந்தையார். நூலு ரைகள் செய்யும் கல்வித்திறமுடையவர். தணிகையுலா, தணிகைக்கலம்பகம், தணிகைப்பிள்ளைத்தமிழ், தணிகை யந்தாதி முதலிய பலவித நூல்கள் செய்தவர். பழமலை யந்தாதியுரை முதலிய உரைகளுஞ் செய்தவர்.

தணிகையுலா

1. ஆரென்று ளித்தேரி லன்னமே செட்டியிவன்
பேரென்று ளப்போதப் பேதையுந்தான்—சீரொன்று
2. செட்டியா மாமாயிற் றின்னவவ லோடுகன்னற்
கட்டிவாங் கிக்கொடென்று கண்பிசைந்தாள்—பட்டிவள்ளி
3. கைவளைய லேற்றியிரு காவில் வளைந்தேத்தி
மைவளையு நெஞ்ச மயலேற்றி—வெய்ய
4. இருட்டு விடியாமு னினத்தவர்கள் காணுமற்
றிருட்டுவியா பாரஞ்செய் செட்டி—வெருட்டியொரு

5. வேடுவனு யோர்புலவன் வெண்பாவைக் கைக்கொண்டு
கோடு திரியுங் குறச்செட்டி—பாடியசுற்
6. கீரனைப்பூ தத்தாற் கிரிக்குகையுட் கற்சிறைசெய்
தோரரிய பாவை யுகந்தணைந்து—கீரனுக்கு
7. வீட்டுவழி காட்டியிடும் வேளாண்மை யாஞ்செட்டி
ஆட்டிலுகந்தேறு மன்னதா னச்செட்டி—ஈட்டுபுகழ்த்
8. தேவேந் திரன்மகள்பாற் சிந்தை குடிகொண்டு
நாவேந் தருக்கின்ப நல்குசெட்டி—பூவேந்திக்
9. கண்டு பணிபவர்கள் காசுபறிக் குஞ்செட்டி
பண்டறுவ ரூட்டுதன பாலசெட்டி—தொண்டர்
10. மதுரையிற்சொக் கப்பசெட்டி மைந்தனிளஞ் செட்டி
குதிரை மயிலாங் குமரசெட்டி—சதுருடனே
11 சிவபர வைக்கியஞ் செய்திடுநந் தப்பசெட்டி
மூவர் வணங்குமுரு கப்பசெட்டி—பாவனைக்கும்
12. அப்பாலுக் கப்பாலு மாறுமுகச் செட்டியிவன்.

இது தேரிலேறி வீதியிலே பவனிவரும் முருக பிரானைப் பேதைப்பருவப் பெண்ணொருத்தி யாவர் என்று வினவியபோது செட்டி செட்டி என்று வருணனையோடு கூறிய பாகம்.

58. கபிலர்

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள வாதவூர். வாதவூரைப் பழைய திருவிளையாடல் பாடினவர் "நீதி யார் மதாகநீழ ணெட்டிலையிருப்பை யென்றோர்—காதல் கூர் கவிதை பாடுங் கபிலனார் பிறந்த மூதூர்" என்றுங் கூறுவர். குலம் வேதியர்குலம். சமயம் சைவம். காலம் கடைச்சங்ககாலம் கல்வியின் பெருமைநோக்கி "நல் லிசைக் கபிலன்" எனவும், "வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்" எனவும் புலவராற் புகழப்பட்டவர்.

பாரி, நள்ளி, பேகன் முதலிய வள்ளல்களைப் பாடிப் பரிசில் பெற்றவர். பதினெண்கீழ்க்கணக்குள் இன்னு நாற்பது என்னும் நீதிநூலும், பத்துப்பாட்டுட் குறிஞ் சிப்பாட்டும், எட்டுத்தொகையுள் அகநானூறு, புற நானூறு, ஐங்குறுநூறு, நற்றிணைநானூறு முதலிய தொகைநிலைச் செய்யுள்களிற் சிலசில செய்யுள்களுஞ், சில தனிநிலைச் செய்யுள்களுஞ் செய்தவர். இடைக் காடர், பரணர் முதலிய புலவர்களுக்கு நண்பர்.

புறநானூறு

பாரி பாரி யென்று பலவேத்தி
ஒருவர்ப் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகு புரப்பதுவே.

இன்னாநாற்பது

பொருளிலான் வேளாண்மை காமுறுத லின்னா
நெடுமாட நீணகர்க் கைத்தின்மை யின்னா
வருமனை பார்த்திருந் தூணின்னா வின்னா
கெடுமிடங் கைவிடுவார் நட்பு.

தனிநிலைச்செய்யுள்

நெட்டிலை யிருப்பை வட்ட வொண்பூ
வாடா தாயிற் பீடுடைப் பிடியின்
கோடேய்க் கும்மே வாடிலோ பைந்தலைப்
பரதர் மனைதொறு முணங்கும்
செந்தலை யிறவின் சீரேய்க் கும்மே.

59. கம்பர்

(1120—1200)

இவரூர் சோழநாட்டுள்ள திருவழுந்தூர். தந்தை யார் ஆதித்தர். குலம் உவச்சர்குலம். சமயம் வைண

வம். காலம் "எண்ணிய சகாத்த மெண்ணூற்றேழின் மேல்" என்பர். இவர் சடையப்ப முதலியாராற் கல்விகற்றும் உண்டி பெற்றும் வளர்ந்தவர். அந்நன்றியை மரணதசையிலும் மறவாதவர். கலைமகள் வரத்தாற் கவித்துவங் கூடினவர். பலகவிகளும் பாடினவர். கவிக்குரிய மொழிநயங்களும், தொடைநயங்களும், தெளிவு முதலிய குணநயங்களும், ஏந்திசை முதலிய இசைநயங்களும் இனிதுணர்ந்தவர். கல்விப் பெருமையுங் கவித்தலைமையும் நோக்கிக் "கல்வியிற் பெரியர்" என்றும் "கவிச் சக்கரவர்த்தி" என்றுஞ் சொல்லும் புகழுரையும் அடைந்தவர்.

அகளங்க சோழராசனுடைய அவைக்களப் புலவராயும் இருந்தவர். அகளங்க சோழராசனுஞ் சடையப்பமுதலியாரும் விரும்பிய வண்ணம் இராமாயணம் என்னும் பெருங்காப்பியமும் பாடினவர். பாடிய இராமாயணத்திலே பாடுவிக்கும் பெருமையும் பரிசிலீயும் வண்மையு முடையவர்கள் என்பது புலப்பட அவர்களையுங் காட்டுவர். சோழராசனைப் "புவிபுகழ் சென்னி பேரமலன்றேள்புகழ்—கவிகடம்மனை யெனக் கனகராசியும்" எனவும், "சென்னிநாட் டெரியல்வீரன்றி யாகமாவினோதன்" எனவும், முதலியாரை "மண்ணவர் வறுமைநோய்க்கு மருந்தன்ன சடையன்" எனவும், "மழையென் றுசங்கைகொண்ட கொடைமீளி" எனவும், "சந்தணிபுயத்து வள்ளல் சடையனே" எனவுங் கூறுவர்.

விட்டுணுவுஞ் சிவனும் வேறு வேறல்லர். இருவரும் ஒருவரே என்பது புலப்பட "யாவரும் வணங்குமூலத் தொருவரா மிருவர் தம்மை" எனவும், "அரனதிக னுலகளந்த வரியதிக னென்றுரைக்கு மறிவி

லார்க்குப் பரகதிசென் றடைவரிய பரிசேபோல்" எனவும், "பரஞ்சுடர்ப் பண்ணவன் பண்டு விண்டொடர் புரஞ்சுட" எனவுங் கூறுவர்.

சிலசில கவிகளிலே உலகியனெறி முதலியவைகளையுங் காட்டுவர். நல்லோர் கூறும் நீதிகளைப் புல்லர் கேளாமை நோக்கி "கல்லாப் புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்று" என்பர். தீங்கொன்றுஞ் செய்யாதவர்க்குப் பகைவரின்மை நோக்கித்"தீயன செய்யாரராயின்யாவரேசெறுநரம்மா" என்பர். செல்வம் பெற்றபின் செருக்குறுவார் செயல் நோக்கிப் "பெறலருந் திருப்பெற்றபின் சிந்தனை பிறிதாம்" என்பர். வாக்குநல முடையார்க்கு யாவரும் அடங்குதல் நோக்கி, "வாசகம் வல்லார்முன் னின்றியாவர் வாய் திறக்க வல்லார்" என்பர். ஒரு குற்றமு மில்லாதவர் உலகி லில்லாமை நோக்கி "அற்றூர் நவை யென்றலுக் காருளர்" என்பர். நல்லிசைப் புலமையுள்ளார் கவிகளின் தெளிவையுந் தண்ணளவையும் நோக்கிச் "சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவி" என்பர். நல்லிசைப் புலமையில்லார் கவிகளின் பொருண் மயக்கம் நோக்கிப் "புன்கவியெனத் தெளிவின்றி" என்பர்.

கவிகளிலே அமைதற்பாலனவாகிய சொல், பொருள், அணி முதலியன வெல்லாம் அழகுற அமைப்பர். பெரும்பாலுங் கவிகளைக் கவிவிருத்தம், தரவுகொச்சகம், கலிநிலைத்துறை முதலியனவாக எடுத்துக்கொண்டு, சொற்களையும் சிறியனவாக அவைகளி லமைத்துப் பரந்த பொருள்களை யெல்லாம் சொல்லிச் செல்லுவர். வேண்டுழிப் பொருணோக்கிப் புதுச் சொற்களையும் ஆக்குவர். இராமனை அழகன்

என்பர். அகளங்கனை அமலன் என்பர். வடசொற்களைத் தமிழ்ச்சொற்கள் என்னுமாறு தற்பவமாக்குவர். இலக்குமணனை இலக்குவன் என்பர். அகலிகையை ஆலிகை என்பர். சொற்றொடர்களையுஞ் சிறுசிறு வாக்கியமாக முடித்துச் செல்லுவர். சுருக்கம் நோக்கிக் குறிப்புச் சொல்லும் குறிப்புப் பொருளும் பரக்கக் கூறுவர். நுட்பவணி கருதி "மாரனை நோக்கினுண் மாதை நோக்கினுள்" என்பர். விரோதாபாசவணி கருதி "பச்சைமா-வேழு மேறப்போயாறு மேறினார்" என்பர். "இராவணன் கோபநிற்க விந்திரகோப மென்னோ" என்பர். மடக்கணி கருதி "மாயமானாயினான்" என்பர். "கொடுப்பதழுக் கறுப்பான் சுற்றம்" என்னுந் திருக்குறள் கருதி "கொடுப்பது விலக்கு கொடியோர் தமது சுற்றம்—உடுப்பதுவு முண்பதுவு மின்றி யழியுங் காண்" என்பர்.

இவ்விராமாயணக் கவிகள் சிலவற்றின் பொருள்களையும், பிறவற்றையுஞ் செந்தமிழ்ப் பத்திரிகையிலே 'சுருங்கச் சொல்லல், ஸ்ரீராமவருணனை, பரதநீதிசாரம்' என்னும் விடயங்களிலே அமைத்துக் கூறினோம். வேண்டுவார் ஆண்டுங் காண்க. ஒரு சுலோகத்தில் வடநூலார் கூறிய இராமாயணத்தையும் ஏகவிருத்த ராமாயணம் என மொழிபெயர்த்திருக்கின்றோம்.

இன்னும் இவர் சோழராசனைப் பிரிந்து சோழ தேசத்தையும் விட்டு வேற்று நாடுகளுக்கும் போக்கு வரவு செய்தவர். ஆங்காங்குப் பலரையும் பாடினவர். நன்குமதிப்புந் தேடினவர். கொங்கநாட்டின் சிறுமையை நோக்கி அதனைக் கனவிலுங் காணலாகாது என்று கவியும் ஒன்று பாடினவர். வேளாளர் செயலில் மிகவும் பற்றுடையவர். வேளாளர் பெருமையையும் வண்மை

யையும் ஏரெழுபது, திருக்கைவழக்கம் என்னும் இரு சிறுகாப்பியங்களாலும் விளக்கினவர். சடகோபரந்தாதி முதலிய வேறு சிறு காப்பியங்களுஞ் செய்தவர்.

கம்பர் என்பதற்குத் திருவேகம்பமுடையார் என்றும், இவர்க்கு இடுகுறி என்றும், கம்பநா டுடையவர் என்றும், கல்வி வருமுன் தூண்போன்று நின்றவர் என்றும், கம்பங்கொல்லை காவலர் என்றும், கம்பு ஒன்று கைத்தலத்தில் வைத்திருந்தவர் என்றும் பல வாறு பலருங் கூறுவர்.

இராமாயணம்

அஞ்சு வணத்தி னுடை யடுத்தா ளரவெல்லாம்
அஞ்சு வணத்தின் வேக மிகுத்தா ளருளில்லாள்
அஞ்சு வணத்தி னுத்தரி யத்தா ளலையாரும்
அஞ்சு வணத்தின் முத்தொளி ராரத் தணிகொண்டாள்.

அஞ்சு வணம் - ஐந்து நிறம். அஞ்சு உவணம் - அஞ்சுதற்குக் காரணமாகிய கருடன். அம் சுவணம் - அழகிய பொன். அம் சுவள் நத்தின் நீரிற் றோன்றிய நல்ல சங்கினது.

சோழனைவெறுத்தது

மன்னவனு நீயேயோ மண்ணுலகு மிவ்வளவோ
உன்னையோ யான்புகழ்ந் தோதுவ—தென்னை
விருந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ சோழா
குரங்கேற்றுக் கொள்ளாத கொப்பு.

கொங்கநாடு

நீரெல்லாஞ் சேற்று நாற்றம் நிலமெலாங் கல்லும் முள்ளும்
ஊரெலாம் பட்டி தொட்டி யுண்பதோ கம்பஞ் சோறு
பேரெலாம் பொம்மன் திம்மன் பெண்களோ நாயும் பேயுங்
காருலாங் கொங்க நாட்டைக் கனவிலு நினைக்கொ ணாதே.

ஆன்பாலுந் தேனு மரம்பைபமுதன் முக்கனியம்
தேம்பாய வுண்டு தெவிட்டு மனம்—தீம்பாய்
மறக்குமோ வெண்ணெய் வருசடையா கம்பன்
இறக்கும்போ தேனு மினி.

ஏரெழுபது

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாருந்
தொழுதுண்டு பின்செல்வா ரென்றேயித் தொல்லுலகில்
எழுதுண்ட மறையன்றே விவருடனே பயிலுமிது
பழுதுண்டோ கடல்சூழ்ந்த பாரிடத்திற் பிறந்தோர்க்கே,

ஏகவிருத்தராமாயணம்

தாதையார் சொலராமன் காடு போதல்
சார்ந்துளபொன் மானெனுமா ரீசன் சாதல்
சீதையார் பிரிவெருவை மரணம் பானு
சேயொடுநட் புக்கோடல் வாலி வீடல்
ஓதநீர்க் கடற்பரப்பை யநுமன் றாண்டல்
உயரிலங்கை நகரெரியால் வேகக் காண்டல்
பாதகரா மரக்கரெலா மிறக்கத் தாக்கல்
பாக்கியரா மாயணசீர்க் காதை யீதே.

60. கருணைப்பிரகாசர் (1720)

இவர் சிவப்பிரகாசசுவாமியுடைய சகோதரர். பஞ்சலக்கணமும் படித்தவர். சீகாளத்திப்புராணத் திலே சீகாளத்திச்சருக்கம் வரையும் பாடினவர். இட்ட லிங்கவகவல் என்னும் பனுவலும் பாடினவர். சீகா ளத்திப் புராணத்திலே சிறப்புப் பெயர்களைப் பொரு ளைக்கித் திரிசொல்லாலுங் கூறுவர். சிவப்பிரகாசர் என்னும் பெயரை "இறைமுத னுமத்தோ டியை தரும் விளக்கப்பேரோன்" என்பர். சுகம் என்னுங்

கிளியின் பெயரை நோக்கிச் சுகமுனிவரைக் "கிளிப் பெயரினன்" என்பர். பம்பை என்பது ஒரு வாச்சி யத்துக்கும் பெயராதலை நோக்கிப் பம்பையாற்றினை "இயலிய மொன்றனுமத் தியாறு" என்பர். இயம் - வாச்சியம். ஈகை என்னும் பொன்னின் பெயரை நோக்கிப் பொன்முகரி யாற்றினை "ஈகையங் கலுழி" என்பர்.

சீகாளத்திப்புராணம்

தடவரை முனிவ னீன்ற தமிழ்க்கொழுங் குழவிதன்னைப்
படர்வெயி லுமிழுஞ் சங்கப் பலகையாந் தொட்டி லேற்றி
நடைவர வளர்த்து ஞால நனந்தலை மறுகில் விட்ட
மடனறு புலமை யோரை மனத்தியா னினைத்து மன்றே.

61. கருவூர்த்தேவர்

(1016)

இவரூர் சோழமண்டலத்துள்ள கருவூர். குலம் வேதியர் குலம். சமயம் சைவம். காலம் ஏறக்குறைய இற்றைக்குத் தொள்ளாயிரம் வருடங்களுக்கு முன் என்பர், இவர் திருவிசைப்பாப் பாடினவர்களுள் ஒருவர். சிவஸ்தல யாத்திரிகர். சென்ற சிவஸ்தலங்களைத் துதித் துத் திருவிசைப்பாக்கள் பாடினவர். யோகப்பயிற்சியிற் சிறந்தவர்;

திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பா னித்தெருவே
ஐயாநீ யுலாப்போந்த வன்றுமுத லின்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ வருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரமே.

62. கல்லாடர்

இவரூர் கல்லாடம் என்னுந் திருப்பதி என்று சிலர் சொல்லுவர். சமயம் சைவம். இவ ரறிவையுந்

துறவையும் பாராட்டி அபியுக்தரொருவர் "காய்ந்த புலனடக்கியுயர் பெருஞானம் பழுத்தருள்கல் லாட ஞரே" என்பார். சில தனிநிலைக் கவிகளும், கல்லாடம் என்னும் இலக்கியமும், தொல்காப்பியவுரைகளுள் ஒன்றுஞ் செய்தவர். கல்லாடத்திலே அகப்பொருட்டுறைகளோடு வருணனைகளுள் இறையனாரகப் பொருட்கதை, நரி பரியாக்கியகதை முதலிய திருவிளையாடற் கதைகளும் வேறு கதைகளுஞ் சேர்த்துக் கூறுவர். வள்ளுவர்நூல் ஒருமதமுந் தழுவாத பொதுநூல் என்பதையுங் கூறுவர். அதற்குப் பாயிரமாக முதற்கவி பாடினார் இறையனார் என்பதுங் கூறுவர்.

கல்லாடம்

சமயக் கணக்கர் மதிவழி கூறா
தலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான்.

பண்டைச் சான்றோர் சிலர் இக்கல்லாடத்தை "மாமதுரையீசர் மனமுவந்து கேட்டு முடிதாம் அசைத்தார் நூறுதரம்" என்பர். வேறு சிலர் "கல்லாடங் கற்றவனிடஞ் சொல்லாடாதே" என்பர். "மல்லாடாதே" என்றுங் கூறுவர். வேறு சிலர் இக்கல்லாடம் பொன்னம்பலவாணர்க்குத் திருக்கோவை எனப்படும் இலக்கியம் இருத்தல்போல வெள்ளியம்பலவாணர்க்கும் வேறோரிலக்கியம் வேண்டும் என்று செய்தது என்பர். அன்றி இக்கல்லாடருங் கடைச் சங்கத்திருந்த கல்லாடரும் ஒருவரலர் என்பாரும் உளர்

63. கனகசபைப்புலவர்

(1829—1873)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள அளவெட்டி. குலம் வேளாளர் குலம். சமயம் கிறிஸ்துசமயம். காலம் இற்

றைக்கு நாற்பத்துமூன்று வருடங்களுக்கு முன். இலக்கண இலக்கியங்கள் நன்கு கற்றவர். விரைந்து கவி பாடும் புலமையும் பெற்றவர். பல தனிநிலைக் கவிகளும் அழகர்சாமிமடல், திருவாக்குப்புராணம் முதலிய பிரபந்தங்களுஞ் செய்தவர்.

திருவாக்குப்புராணம்

ஆதி யந்தமற் றற்புத மூர்த்தியாய்
நீதி யன்பொடு நித்திய மேழுதல்
ஓதி நின்ற வுயர்குண ஞதியம்
போதில் வானமும் பூமியு நல்கினுன்.

64. காரிரத்தினக்கவிராயர்
(1616)

இவரூர் ஆழ்வார்திருநகரியை அடுத்த பேரையூர். சமயம் வைணவம். காலம் இற்றைக்கு முந்நூறு வருடங்களுக்கு முன்னர் என்பர். இவர் தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும், பரிபாடல் முதலிய இலக்கியங்களையும் கற்றவர். பலவுரைகள் செய்தவர். இவருரைகள் மாறனலங்காரவுரை, பரிமேலழகர் நுண்பொருண்மாலை முதலியன. சிலநூல்களுஞ் செய்தனர் என்பர்.

மாறனலங்காரவுரையிலே தொல்காப்பியம் நன்னூல் முதலிய இலக்கணங்களையுஞ், சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்களையுங் காட்டுவர். சிலசில சொற்களுக்கு நவீனமான பொருள்களுங் கூறுவர். வெளிறுபட்டிழிதல் என்னுங் குற்றத்திற்குக் குறிப்புமொழி சிறிதுமின்றி வெளிப்படக் கூறல் என்பர்.

நுண்பொருண்மாலையிலே பரிமேலழகர் கூறிய ஏகதேச வுருவகம், செய்யுள் விகாரத்தாற் றொகுதல் முதலியவற்றின் பொருள்களை எடுத்து விளக்குவர். "ஏகதேச வுருவகமாவது முற்றுருவகமாய் வராது ஒரு

வழி உவமை குறைந்து பொருணிற்பதும், ஒருவழிப் பொருள் குறைந்து உவமை நிற்பதும், ஒரு மருங் குவமையும் பொருளுங் குறைந்து நிற்பதும், ஒருவழிக் குறைத்தற் கேற்ற வினைபெற்று நிற்பதும் என்க" என்பர்.

"செய்யுள் விகாரமாவது இன்னொலியும், பதத்து ளடிப்பாடும், செய்யுட் டொடையும் நோக்கிவரும். "ஐந்தவித்தா னாற்றல்" என்புழி ஆற்றற்கு இன்னொலி காரணமாகக் குக் கெட்டு நின்றது" என்பர். இவை கட்குச் சான்றாகப் பரிபாடல், திருக்கோவை முதலிய நூற்பிரமாணமுங் காட்டுவர். இவரைத் திருமேனி யிரத்தினக் கவிராயர் எனவுங் கூறுவர்.

65. காரைக்காலம்மையார்

இவரூர் சோழமண்டலத்துள்ள காரைக்கால். குலம் வைசியர் குலம். சமயம் சைவம். பிள்ளைத் திருநாமம் புனிதவதியார். இவர் பெரியபுராணங் கூறும் அடியாருள் ஒருவர். பதினோராந் திருமுறை யிற் சேர்ந்த அற்புதத்திருவந்தாதி, இரட்டைமணிமாலை முதலிய நூல்கள் செய்தவர்.

அற்புதத்திருவந்தாதி

ஈசனவ னல்லா தில்லை யெனநினைந்து
கூசி மனத்தகத்துக் கொண்டிருந்து—பேசி
மறவாது வாழ்வாரை மண்ணுலகத் தென்றும்
பிறவாமை காக்கும் பிரான்.

66. காளமேகப்புலவர்

(1516)

இவருடைய இயற்பெயர் வரதர் என்பது. இவ ரூர் சோழமண்டலத்துள்ள கும்பகோணம். குலம் வேதி

யர்குலம். சமயம் சைவம். காலம் ஏறக்குறைய இற்றைக்கு நானூறு வருடங்களுக்கு முன்னர் என்பர். திருவானைக்காவில் அகிலாண்டவல்லி திருவருளாற் கவிபாடும் வரம்பெற்றவர். ஆசுகவி பாடுதலில் அதி சாமர்த்திய முடையவர். "ஆசுகவி மாரி யகில வுலக மெல்லாம்—வீசுகவிகாள மேகமே" எனவும் பாடப் பட்டவர். எழுத்துக் கொடுத்தாலென்ன! சொல்லுக் கொடுத்தாலென்ன! கருத்துக் கொடுத்தா லென்ன! கொடுத்த சமுத்திகளை யெல்லாம் குறைவற அமைத்துத் துடுமெனப் பாடி முடிப்பர். பல தனிநிலைக் கவிகளும், திருவானைக்காவுலா, சித்திரமடல், பரப்பிரம விளக்கம் என்னும் பிரபந்தங்களுஞ் செய்தவர். சிவஸ்தல யாத்திரையிற் சென்று சிவதரிசனஞ் செய்து கவிகளும் பாடினவர். பழிக்கவி போலத் தோன்றுந் துதிக்கவிகளும் பாடினவர். சிலவிடங்களில் வசைக் கவிகளும் பாடினவர். "வசைபாடக் காளமேகம்" என்ற பாட்டு முண்டு.

திருவாலங்குடியிற் சென்றபோது ஆலங்குடியான் என்னுஞ் சுவாமி நாமம் ஆலமுண்ணுன் எனவும் பொருள்படல் நோக்கி விரோதாபாசவணி தோன்ற "ஆலங்குடியானை யாலால முண்டானை யாலங்குடியானென் றூர்சொன்னூர்" என்றும் பாடினவர். அண்ணுமலையிற் சுவாமி முன்னிலையிலே கிடந்த இடப வாகனத்தை நோக்கி "நடக்க வறியாது" என்றும் பாடினவர். வேதம்போம் வாயான் விகடராமன் என்பவனுடைய குதிரை இளைப்படைந்து தள்ளாடித் தள்ளாடி மெள்ள மெள்ள நடத்தலை நோக்கி "மாதம் போங் காதவழி" என்று நகையாடினவர். தேவடியாள் ஒருத்தி பாடுவேன் என்று சொல்லிக் கழுதை போலக் கத்துதலை நோக்கிக் காணுமற் போன தன் கழுதை

என்று வண்ணான் எண்ணினான் என்பது புலப்படக் "கழுதை கெட்ட வண்ணான் கண்டேன் கண்டே னென்று—பழுதை யெடுத் தோடிவந்தான் பார்த்து" என்றும் நகையாடினவர்.

திருமலைராயன் பட்டணத்துக்குஞ் சென்றவர். அவனுடைய அவைக்களப் புலவரையெல்லாங் கவிபாடி வென்றவர். நீவிர் யாவர்? என்றபோது "தூதைந்து நாழிகை', என்று கவி ஒன்று தொடங்கிக் கவிபாடும் வீரமெல்லாங் கட்டுரைத்துக் "கவிகாள மேகம் யானே" எனப் பெயருங் காட்டித் தருக்கொடு முடித்து நின்றவர். சிலேடை முதலிய சமுத்திகளையெல்லாஞ் சொல்லச் சொல்லத் தாமதமின்றிப் பாடிமுடித்தவர். புலவர்க்குத் தலைவர் எனவும், குரங்குக்குத் தலைவர் எனவும் இரு பொருள்படநின்ற கவிராசர் என்பது தக்கதோர் பட்டம் என்று தரித்துநின்ற புலவர் சிலவரை நோக்கிப் புலவிர்காள்! நீவிர் குரங்குகளே என்பது புலப்பட "வாலெங்கே நீண்ட வயிறெங்கே" என்று கவிபாடி நகையாடினவர். திருமலைராயனும் புலவருந் தமக்குச் செய்த அவமானம்நோக்கி மனம்புழுங்கி அவ்வூரைக் "கோள ரிருக்கு மூர் கோள் கரவு கற்றவூர்" என்று பாடி "விண்மாரி யற்று வெளுத்து மிகக் கறுத்து—மண் மாரி பெய்கவிந்தவான்" என்று முடித்தவர். திருவானைக்காவுலாவிலே மடக்கணி முதலிய அணியெல்லாஞ் சிறக்கப் பாடினவர். பரப்பிரமவிளக்கத்திலே நாராயணபரத்துவத்தை மறுத்துச் சிவபரத்துவத்தை எடுத்துகாட்டி நிறுத்தினவர்.

அண்ணாமலையிடபம்

1. நடக்கவறி யாதகா ளைவு முடக்கிக்
கிடக்கவறி யும்புன்னீர் கேளா—விடக்கை
அரைப்பணியார் சோணகிரி யத்தனா ரோட்டில்
இரப்புணியா ரேறு மெருது.

2. தூதைந்து நாழிகையி லாறுநா ழிகைதனிற்
சொற்சந்த மாலை சொல்லத்
துகளிலா வந்தாதி யேழுநா ழிகைதனிற்
றொகைபட விரித்து ரைக்கப்
பாதஞ்செய் மடல்கோவை பத்துநா ழிகைதனிற்
பரணியொரு நாண் முழுவதுப்
பாரகா வியமெலா மோரிரு தினத்திலே
பகரக் கொடிக் கட்டினேன்
சீதஞ் செயுந்தோங்கன் மார்பிரு ணியலிசை
தெரிந்ததிரு மலைராயன் முன்
சீறியே வாதுகவி பாடுதற் கெதிர்வருந்
திடமிக்க புலவர் தம்மைக்
காதும் பிடித்துக் கவித்துக் கதுப்பிற்
காத்திட் டடித்து முதுகிற்
கலணைவைத் தேமுழுக் கடிவாள மிட்டேறு
கவிகாள மேகம் யானே.

கவிராசர்

3. வாலெங்கே நீண்ட வயிறெங்கே யீரிரண்டு
காலெங்கே யுட்குழிந்த கண்ணெங்கே—சாலப்
புவிராசர் போற்றும் புலவிர்கா ணீவிர்
கவிராச ரென்றிருந்தக் கால்.

திருவானைக்காவுலா

1. கங்கையிறுன் கங்கையிறுன் காசியிலான் காசியிலான்
பைங்கடல்சூழ் பாரிடத்தான் பாரிடத்தான்—செங்கமல
2. அத்த னகத்திருக்கா ளத்தியான் கங்குறைத்த
அத்த னகத்திருக்கா ளத்தியான்—எத்திசையும்.

கம் - தலை, இல் - வீடு. பாரிடம் - பூமி, பூதம்.
அகம் - மனம். திருக்கு - முரண். நகம் - மலை.

பரப்பிரமவிளக்கம்

3. பங்கயக்கண் மாலைப் பரத்துவனென் றேவியாசன்
கங்கைக் கரையுரைத்த கைந்நாவன்—றங்கவற்குத்
தம்பிக்க மால்வந்து சங்கரனே யெவ்வுயிர்க்கும்
எம்பிரா னென்று ளிசைந்து,

67. கிருஷ்ணபிள்ளை

(1827—1900)

இவர் பாண்டிமண்டலத்துள்ள பாளையங் கோட்டை. குலம் வேளாளர் குலம். சமயம் கிறீஸ்த சமயம். இவர் திருநெல்வேலியிலுள்ள சி. எம். கல்லூரியில் தலைமைத் தமிழ்ப்பண்டிதராயிருந்தவர். இவர் இயற்றிய நூல் இரக்ஷணிய யாத்திரிகம். இது நாலாயிரம் பாக்களை உடையது. இந்நூலின்கண் வடமொழிக் கலப்பு அதிகம் உள்ளது.

இரக்ஷணியயாத்திரிகம்

காதக கப்படு கள்வரோர் மூவரும்
பாதலத் ததிபன் படைச் சேவகர்
நீதி மார்க்கத்து நின்று வழிப்பறி
ஏதஞ் செய்யு மிடும்ப ரெக்காலுமே.

68. குகைநமச்சிவாயர்

(1715)

இவர் வசித்த ஊர் திருவண்ணுமலை. நிலை துறவு. பிற்காலம் வசித்த ஊர் சிதம்பரம். குகையில் சீவித்த காரணத்தால் குகை நமச்சிவாயர் எனப்பட்டவர். இவர் இயற்றிய நூல் அருணகிரியந்தாதி. இது சிவன்மேல் உயர்ந்த கருத்துக்கள் அமையப் பாடப்பட்ட சிறந்த ஞானநூல்.

அருணகிரியந்தாதி

காய நெகிழாமுன் கண்க ளிருளாமுன்
வாயி லுளபல்லு வழுவாமுன்—தாயம்பார்த்
தோடியமன் வாராமுன் னுள்ளமே சோணகிரி
நாடிநம வென்றே நட.

69· குணவீரபண்டிதர்
(1016)

இவரூர் தொண்டைமண்டலத்துள்ள களத்தூர். சமயம் ஆருகதம். காலம் இற்றைக்கு எண்ணூறு வருடங்களுக்கு முன் என்பர். நேமிநாதம், வெண்பாப் பாட்டியல் என்னும் இரண்டிலக்கணமுஞ் செய்தவர். நேமிநாதம் எழுத்திலக்கணத்தையுஞ், சொல்லிலக்கணத்தையும் விரித்துச் சொல்வது. இது சின்னூல் எனவும் படும். வெண்பாப்பாட்டியல், பிரபந்தத்தின் முதலில் வைத்தற்குரிய மங்கலச்சொல் முதலியவைகளையும், பிரபந்தவகைகளையும், பிறவற்றையுஞ் சொல்வது.

வெண்பாப்பாட்டியல்

நல்லசவை

புகழுந் தருமநெறி நின்றோர்பொய் காமம்
இகழுஞ் சினஞ்செற்ற மில்லோர்—நிகழ்கலைகள்
எல்லா முணர்ந்தோ ரிருந்த விடமன்றோ
நல்லா யவைக்கு நலம்.

தீயசவை

அவையின் றிறமறியா ராய்ந்தமர்ந்து சொல்லார்
நவையின்றித் தாமுரையார் நாணார்—சுவையுணரார்
ஆய கலைதெரியா ரஞ்சா ரவரன்றே
தீய வவையோர் செருக்கு.

70. குமரகுருபரசுவாமிகள் (1616)

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள சிறீவைகுண்டம். குலம் வேளாளர்குலம். சமயம் சைவம். காலம் ஏறக்குறைய முந்நூறு வருடங்களுக்கு முன் என்பர். நிலை துறவு. இவர் ஐந்து வயசுவரையும் ஊமையாய் வைகி அதன்பின் செந்திமாநகர் சென்று கந்த வேள்வரத்தாற் பேசுந்திறமும், வடமொழி தென் மொழிக் கலையுணர்ச்சியும் "கடன்மடைதிறந்தாலென் னக் கவிபுகல்வாக்கும்" பெற்றவர். பெற்றவுடனே கந்தர்கலிவெண்பா என்னும் பிரபந்தஞ் செய்தவர். சிவஸ்தல யாத்திரையிற் சிந்தைகொண்டு காசிமாநகர் பரியந்தஞ் சென்றவர். சில தலங்களிற் பலதினம் வசித் தவர். பல பிரபந்தங்களுஞ் செய்தவர்.

மதுரைமாநகரிலே மீனுட்சியம்மைபிள்ளைத்தமிழ் என்னும் பிரபந்தத்தைத் திருமலைநாயக்கர் என்னும் அரசர் முன்னிலையில் அரங்கேற்றித் தக்க பரிசிலும், மிக்க வரிசையும் பெற்றவர். ஒருநாள் அரசர் புகாக் காலை வழுவிப் பசியோடிருந்தபோது "வகுத்தான் வகுத்தவகை யல்லாற் கோடி தொகுத்தாற்குந் துய்த்த லரிது" என்ற குறள்வெண்பாவை எடுத்துக் கூறினவர். இவ்வெண்பாவையுங் கேட்டு வள்ளுவர்நூலின் அருமை பெருமைகளையுங் கேட்டறிந்த அரசர் வள்ளுவர்நூலின் நீதிகளைச் சுருக்கிக்காட்டி வேருெரு சிறுநூல் செய்து தருக எனக் கேட்டவாறே அதனைச் சுருக்கி வெண்பா வில் யாத்து நீதிநெறிவிளக்கம் என நிலவவைத்தவர், அங்கே மீனுட்சியம்மைகுறம், இரட்டைமணிமாலை, மதுரைக்கலம்பகம் என்னும் பிரபந்தங்களுஞ் செய்தவர்.

திரிசிரபுரம் முதலிய சில தலங்களிலே பாஞ்சராத் திரி, மாயாவாதி முதலிய சில சமயவாதிகளை வாதம் புரிந்து வென்றவர். சிதம்பரத்திற் சைவர் சிலர் யாப் பிலக்கணத்துக்கு உதாரணமாகச் சைவநூல் ஒன்று

வேண்டும் என்றபோது பாக்களும் பாவினங்களுமாகச் சிதம்பரச் செய்யுட்கோவை என்னும் பிரபந்தமுஞ் செய்தவர். தருமபுரவாதீனத்து மாசிலாமணிதேசிகரைக் குருவாகக்கொண்டு அவர்மீது பண்டாரமும்மணிக் கோவை என்னும் பிரபந்தமும் பாடினவர். சகலகலா வல்லிமாலை என்னுஞ் சரசுவதிதுதிபாடிச் சரசுவதி வரத்தால் அப்பொழுதைக் காசியரசன் பாஷையையுங் கற்றுக் காசியரசனோடு கலந்துபேசிச் சில அற்புதச் செயலுங்காட்டி அவனிடம் வேண்டும் நிலம்முதலியன பெற்றுத் திருமலைநாயக்கர்கொடுத்த திரவியங்கொண்டு தருமமடாலயம் ஒன்று காசிமாநகரிலே தாபித்தவர்.

சிதம்பரமும்மணிக்கோவை, திருவாரூர்நான்மணிமாலை, முத்துக்குமாரசுவாமிபிள்ளைத்தமிழ், காசிக்கலம்பகம் முதலிய வேறு பிரபந்தங்களுஞ் செய்தவர்.

நீதிநெறிவிளக்கம்

பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாதே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்
தியார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.

பெருஞ்சுட்டு - நன்குமதிப்பு. தூற்றல் - பலருமறியச் சொல்லல். சிறுமை - இழிவு. புறங்காத்தல் - புறத்தே பரவாமற் பேணல்.

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

பைந்தண் கமல வட்டவணைப்
பாவை யனையார் பூவிரியும்
பசுமென் குழற்கூட் டகிற்புகையின்
படல மூட முடைநறவின்
கந்தம் பொதிந்த செந்துவர்வாய்க்
கடைசி மகளிர் செந்நெலைப்பைங்
கன்ன லெனவுங் கன்னலைப்பூங்
கமுக மெனவுங் கடைக்கூடாத்

தந்தங் கருத்துக் கமைந்தபடி
சாற்றிச் சாற்றி முழுமாயச்
சலதி மூழ்கித் தடுமாறுஞ்
சமயத் தவர்போற் றலைமயங்கு
மந்தண் பழனக் கந்தபுரிக்
கரசே வருக வருகவே
அருளா னந்தக் கடற்பிறந்த
வமுதே வருக வருகவே.

71. குமாரகுலசிங்கமுதலியார்

(1826—1889)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள தெல்லிப்பழை. குலம் வேளாளர்குலம். சமயம் கிறிஸ்துசமயம். காலம் இற்றைக்கு முப்பத்திரண்டு வருடங்களுக்கு முன். இவர் வலிகாமம் வடக்கு மணியகாரர் குமாரகுலசிங்கத்துக்குத் தந்தையார். அங்கிலம், தமிழ் என்னும் இருபாஷை களும் நன்கு கற்றவர். நியாயசாலைகளிலே துவிபாஷா வாதி முதலிய அதிகாரபுருடராயிருந்து வாக்குவன்மை யால் நன்குமதிக்கப்பட்டவர். அங்கிலம், தமிழ் என்னும் இருபாஷைகளையுந் தம்முள்ளே மொழிபெயர்த்தலிலும், சவைகளிலே அலங்காரம்பெறப் பேசுதலிலும் வல்லவர். தமிழிலே பல தனிநிலைக்கவிகளும், பதிவிரதைவிலாசம் முதலிய நூல்களும் பாடினவர்.

பதிவிரதைவிலாசம்

பொற்பில மாதரணி பூஷணமாங் கற்புநெறி
விற்பனமே தென்று விளங்கவைக்கும்—அற்புதங்கள்
விஞ்சு பதிவிரதை மெச்சுவிலா சம்பாடக்
கஞ்சமனக் கர்த்தனடி காப்பு.

72. குமாரசுவாமிமுதலியார்

(1791—1874)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள உடுப்பிட்டி. குலம் வேளாளர்குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு நாற்பது வருடங்களுக்குமுன். இவர் நீதிபதி கதிரைவேற்பிள்ளைக்குத் தந்தையார். இலக்கிய லக்கணங்கள் நன்கு கற்றவர். பல தனிநிலைக்கவிகளும், அருளம்பலக் கோவை, இந்திரகுமாரநாடகம், திருவிற்சுப்பிரமணியர் பதிகம், மூளாய் சித்திவிநாயகர் ஊஞ்சல், நல்லைக்கலித் துறை முதலிய சில பிரபந்தங்களுஞ் செய்தவர்.

அருளம்பலக்கோவை

திங்கா ளுடலகந் தேய்வுற மாய்வுறச் சித்தரைப்போற்
றங்காம லந்தா மார்க்கந் தவம்புரிந் தாலுந்தமிழ்
மங்கா துறைவை வருமரு ளம்பல மன்னன்வரைக்
கொங்கார் குழலி முகம்போன் மெனநினைக் கூறரிதே.

73. குலசேகரப்பெருமாள்

(800)

இவர் சேர நாட்டை ஆண்டஅரசர்களிலொருவர். சமயம் வைஷ்ணவம். இவர் அரசியலைத்துறந்து விஷ்ணு பக்தி மேலீட்டினால் விஷ்ணு ஆலயங்கள் உள்ள தலங்கள் எங்கும் யாத்திரை செய்து வைஷ்ணவதர் மத்தைப் பரப்பியவர். இவர் இயற்றியநூல் பெருமாள் திருமொழி. இவர் தமிழில் மாத்திரமன்றி வடமொழியிலும் வல்லுநர், வடமொழியில் இவர் முகுந்தமாலை என்னும் நூலை இயற்றியுள்ளார்.

திருமொழி

செடியாய வல்வினைகள் தீர்க்குந் திருமாலே
நெடியானே வேங்கடவா! நின்கோயி லின்வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே.

74. கூடலூர்கிழார்

இவரூர் மதுரைமாநகர்போலும். குலம் வேளாளர் குலம் என்பர். காலம் கடைச்சங்ககாலம். இவர் பதினெண்கீழ்க்கணக்குள் ஒன்றெனப்படும் முதுமொழிக் காஞ்சி என்னும் நீதிநூல் செய்தவர். புறநானூற்றிலே ஒரு கவிக்கும், குறுந்தொகையிலே சில கவிகளுக்கும் ஆக்கியோனெனப்பெற்றவர். எட்டுத்தொகையுள்ளே ஐங்குறுநூறு தொகுத்தவரும் இவர் என்பர்.

முதுமொழிக்காஞ்சி.

1. இளையவது காத்தலிற் கொடுமை யில்லை.
2. உரையில னாதலிற் சாக்கா டில்லை
3. நரையிற் பெரியதோர் நல்குர வில்லை.
4. இசையிற் பெரியதோ ரெச்ச மில்லை.
5. இரத்தலி னூஉங் கிளிவர வில்லை.
6. இரப்போர்க் கீதலி னெய்து சிறப்பில்லை.

குறுந்தொகை.

தண்கடற் படுதிரை பெயர்த்தலின் வெண்பறை
நாரை நிரைபெயர்ந் தயிரை யாரும்
ஊரோ நன்றுமன் மாநகை
ஒருதனி வைகிற் புலம்பா கின்றே.

75. கூழங்கைத்தம்பிரான்
(1795)

இவரூர் தொண்டைமண்டலத்துள்ள காஞ்சிபுரம். குலம் வேளாளர்குலம். சமயம் சைவம். காலம் ஏறக்குறைய இற்றைக்கு நூற்று முப்பது வருடங்களுக்கு முன் என்பர். இவர் இலக்கிய லக்கணங்களிலுஞ் சித்தாந்த சாத்திரங்களிலும் வல்லவர். யாழ்ப்பாணம் வந்து பெருஞ்செல்வரும், பெருங்கொடையாளருமாகிய வைத்தியலிங்கச்செட்டியாருக்கு நண்பராய் வண்ணார்

பண்ணையில் வசித்தவர் இருபாலை நெல்லைநாதமுதலியார் முதலியோர்க்கு இலக்கண லக்கியங் கற்பித்தவர். சில தனிநிலைச் செய்யுள்களும் சித்திவிநாயகர் திருவிரட்டை மணிமாலை முதலியசில தொடர்நிலைச் செய்யுள்களும் பாடினவர். கைத்தலம் கூழை அடைந்தமை பற்றிக் கூழங்கைத்தம்பிரான் எனப்பட்டார். கூழை - குறள். பின் வருந் தனிநிலைக் கவியையும் இவர்கவி என்பர்.

ஆசிரியவிருத்தம்

நதியரவ மதியிதழி புரிசடை யவிழ்ந்துநட
நண்ணுமா காச லிங்கம்
நால்வருக் குக்கலா னிழலினல் லுபதேசம்
நவிலுற்ற மவுன லிங்கம்
நிதிபதித னன்புடைத் தோழனு யீசான
நிலைநின்ற வேட லிங்கம்
நிவாதமுறை யிருவர்க் கழற்கம்ப வடிவாகி
நின்றெழுஞ் சோதி லிங்கம்
துதிதுதிக் கையானை யன்பொடும் போற்றிடுஞ்
சயம்பான வப்பு லிங்கம்
துய்யவுணர் வோரிதய கமலா லயத்திலெழு
சுடர்போற் கொழுந்து லிங்கம்
மதிதவழு மதிலோடு கோபுரந் திகழ்வுறும்
வண்ணையெல் லையி னிறுத்தும்
மாதங்க புரிதையல் பாகமிசை மீதமரும்
வைத்தீச மா லிங்கமே.

திருவிரட்டைமணிமாலை

முரட்டை யடக்குமணி முச்சாட்டிற் கோத்தாங்
கிரட்டை மணிமாலை யென்னாற்—சாட்டேற்றக்
குக்குட வன்பனைமாக் கூழ்களிப னூட்டுநல்லைக்
கைக்குட வன்பனைமாக் காப்பு.

சரடு - நூற்கயிறு. குக்குடவன்பன் - முருகபிரான். மா கூழ் களி பனுட்டு * * * * கைக்குடவன் பனைமா - கையாகிய வளைந்த வலிய பனையையுடைய யானை.

76. சங்கரநமச்சிவாயர்

(1716)

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள திருநெல்வேலி குலம் வேளாளர்குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு இருநூறு வருடங்களுக்கு முன் என்பர். இவர் சுவாமிநாததேசிகர்க்கு மாணவகர். அகத்தியம், தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும், எட்டுத்தொகை முதலிய சங்க இலக்கியங்களையும் நன்கு கற்றவர். நன்னூற்கு விருத்தியுரை ஒன்று செய்தவர். உரையின் முகத்திலே சுவாமிநாததேசிகர்க்கு,

"திருவா வடுதுறைத் தேசிக னாகிய
கருணையங் கடலையென் கண்ணைவிட் டகலாச்
சுவாமி நாத குரவனை யநுதினம்
மனமொழி மெய்களிற் றொழுதவ னருளால்"

என்று வணக்கங் கூறுவர். உரையிலே அகத்தியம், தொல்காப்பியம் முதலிய இலக்கணப் பிரமாணமும், சிந்தாமணி, கலித்தொகை, திருக்கோவை முதலிய இலக்கியப் பிரமாணமுங் காட்டுவர்.

77. சங்கரபண்டிதர்

(1821—1891)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள நீர்வேலி. குலம் வேளாளர்குலம். சமயம் சைவம் காலம் இற்றைக்கு நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன். இவர் சிவகுருநாதர்க்கு மைந்தர். சிவப்பிரகாசபண்டிதர்க்குத் தந்தையார். வேதாரணியத்துச் சுவாமிநாததேசிகர்க்குங் கந்த

ரோடை அப்பாப்பிள்ளைக்கும் மாணவகர். கீரிமலைச் சபாபதிக் குருக்கள், முருகேசபண்டிதர் முதலியோருக்கு ஆசிரியர். வடமொழி தென்மொழிகளிலுள்ள இலக்கிய லக்கணங்களையும், ஆகம சித்தாந்த தருக்கநூல்களையும், தருமசாத்திரங்களையும் நன்கு கற்றவர். ஆசிரியர் மாட்டுக் கற்ற அளவில் அமையாது மீட்டும் மீட்டும் பலநூல்கள் தேடிக் கற்றவர்.

நூல்களைத் தேடிக் கற்றலிலும், வடநூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தலிலும், தமிழில் நூல்கள் செய்தலிலும், மாணவகர்க்குச் சங்கதமுந் தமிழும் கற்பித்தலிலும், பரமதங்களைக் கண்டித்துச் சைவமதத்தை நாட்டிச் சைவப்பிரசங்கஞ் செய்தலிலும், பெரும்பான்மையுந் தமது காலங் கழித்தவர். இவருடைய சைவப்பிரசங்கத்தை முருகேசபண்டிதருங் கட்டளைக்கலித்துறை ஒன்றிற் சுட்டிக் கூறினர்.

கட்டளைக்கலித்துறை

சைவத்தை நாட்டிப் பரமத மோட்டத் தயங்குமொரு
தெய்வத்தைப் போல்வரு சங்கரபண்டித தேசிகர்தாம்
மெய்வைத்த கண்டிகை வெண்ணீற்றி னேடு விளங்கிடச்செய்
சைவப் பிரசங்க தெள்ளமு தென்றினிச் சார்குவமே.

இவர் இயற்றிய நூல்கள், சைவப்பிரகாசனம், சிவதூஷணகண்டனம், கிறிஸ்துமதகண்டனம், அநுட்டானவிதி, சத்தசங்கிரகம் முதலியன. உரைகள் சிவபூசையந்தாதியுரை, அகநிர்ணயத் தமிழுரை முதலியன. சைவப்பிரகாசனத்திலே பிரத்தியக்ஷம், அநுமானம், ஆகமம் என்னும் தர்க்கப்பிரமாணங்களை முதற்கண் விரித்துக் கூறி அவற்றிற்கு இயையுமாறு சுருதியிலக்கணம், சமயலக்கணம் முதலியவை எடுத்துக்கூறி அதன் பின் சைவசமயநிரூபணமும், பதிமுதலிய முப்பொருளிலக்கணமும், முத்திசாதனமும் விரித்துக் கூறினவர்.

இவர் செய்யுளியற்றும் வன்மையுடையவர் என்பதை இவர் ஆறுமுகநாவலரியற்றிய பெரியபுராண வசனத்துக்குக் கொடுத்த சிறப்புப் பாயிரச் செய்யுள் காட்டும்

சிறப்புப்பாயிரம்

உலக மனைத்தினு முவப்பிலா நோக்கி
இலகுபே ரொளியா யேகனுய்ச் சிவனுய்
அனாதி முத்தனா யதிபா மார்த்தனுய்த்
தனாது சத்தியாந் தனிவடி வினனுய்த்
திருவளர் தில்லைச் சிற்றம் பலத்தினுட்
... ...
முறைதிக ழாறு முகநா வலனே.

78. சண்முகம்பிள்ளை

(1869—1914)

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள சோழவந்தான். குலம் பாண்டிவேளாளர்குலம். சமயம் சைவம். இவர் சோழவந்தான் கந்தசாமிசுவாமிகளிடம் இலக்கணலக்கியங்கள் கற்றவர். இவர் இளம்வயசில் பாக்கள் இயற்றுந் திறமைவாய்ந்தவர். சேதுபதி உயர்தரப் பாடசாலையிற் சிலகாலமும், மதுரைத் தமிழ்ச்சங்க கலாசாலையிற் சிலகாலமும் தமிழாசிரியராக வேலைபார்த்தவர். இவர் ஏகபாத நூற்றந்தாதி பஞ்சதந்திரவெண்பா, இன்னிசைவெண்பா இருநூறு, மாலைமாற்றுமாலை முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

ஏகபாதநூற்றந்தாதி முருகக்கடவுள்மீது பாடப்பட்டது. இன்னிசைவெண்பா இருநூறு நீதிவிஷயங்களை எடுத்துக் கூறும்நூல். மாலைமாற்றுமாலை என்பது அறுமுகக் கடவுள்மீது மடக்கலங்காரத்தின் பாற்பட்ட 'மாலைமாற்று'ச் சித்திரக் கவிகளால் ஆக்கப்பெற்றது. மாலைமாற்றுவது இறுதியிலே நின்று படிக்கும்போதும்

முதலினின்று படிக்கும்போது முடிந்தவாறு முடியும்படி எழுத்துக்களடக்கிப் பாடப்படுவது.

மாலைமாற்றுமாலை 1901-ம் ஆண்டு மதுரைத் தமிழ்ச்சங்க அக்கிராசனாதிபதி திரு. பொ. பாண்டித் துரைத்தேவர் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது. இந்நூலின் அருமை பெருமைகளை மகாமகோபாத்தியாயர் திரு. உ. வே. சாமிநாதையரவர்களது பாராட்டுரையினால் நன்கு அறியலாம்.

பாராட்டுரை

"ஒருமாலை மாற்றுச் செய்யுள் செய்வதற்கே படித்தவர்கள் மிகவும் கவலையடைதற்குரிய இக்காலத்தில் ஷெ செய்யுள் பலவற்றால் பிரபந்தமொன்று இயற்றியிருப்பதும் அச்செய்யுட்களை பொருளணியிலமைந்த செய்யுட்களாலே இயற்றியிருக்கும் கல்வி வன்மையும் நிரம்ப வியக்கற்பாலன".

மாலைமாற்றுமாலை

வேத மோதறி வாகழு வாதவா
நாத சேகா வேகவ தீதநீ
நீத தீவக வோரக சேதநா
வாத வாழுக வாறித மோதவே.

79. சதாசிவப்பிள்ளை

(1820—1896)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள மானிப்பாய். குலம் வேளாளர்குலம். சமயம் கிறிஸ்துசமயம். காலம் ஏறக்குறைய இற்றைக்குப் பதினைந்து வருடங்களுக்கு முன். இவர் அங்கிலம், தமிழ் என்னும் இருமொழிகளும் நன்கு கற்றவர். இலக்கியலக்கணங்கள் தெரிந்தவர். உதயதாரகைப் பஞ்சிகைக்குத் தலைவராயிருந்தவர். பாவலர் சரித்திர தீபகம், வெல்லையந்தாதி, நன்னெறிமாலை, திருச்

சதகம், நன்னெறிக்கதாசங்கிரகம் முதலிய நூல்கள் செய்தவர்.

வெல்லையந்தாதி

காத்தவ னேயிந்தக் காசினி தன்னைநற் காதலொடு
பூத்தவ னேயருள் பூப்பவ னேவெல்லைப் பொற்புரியிற்
சாத்திரி மார்வந்து சாட்டாங்க தண்டஞ்செய் தற்பரனே
போத்துறை வாருளம் போகா வடியனைப் போற்றுவையே.

80. சபாபதிநாவலர்
(1843—1903)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள கோப்பாய். குலம் வேளாளர்குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்குப் பதின்மூன்று வருடங்களுக்கு முன். இவர் இலக்கணலக்கியங்களும், தருக்கசித்தாந்த சாத்திரங்களும் நன்கு கற்றவர். கவிபாடுந் திறமுமுடையவர். திருவாவடுதுறையாதீன வித்துவானுமாயிருந்தவர். சிதம்பரசபாநாதபுராணம், யேசுமதசங்கற்பநிராகரணம், பாரதராமாயணதாற்பரிய சங்கிரகங்கள், சிவகர்ணாமிர்தமொழிபெயர்ப்பு, திராவிடப்பிரகாசிகை, திருச்சிற்றம்பலயமகவந்தாதி, திருவிடைமருதூர் பதிற்றுப்பத்தந்தாதி, மாவையந்தாதி முதலிய பல நூல்கள் செய்தவர்.

சிதம்பரசபாநாதபுராணம்

தவமாருந் திருத்துறையூர் சார்ந்தருளிப் பொய்யினைமெய்த்
தவமாகக் கொண்டுழன்முப் புறத்தினருஞ் சாய்ந்திரியச்
சிவஞான போதநூ றமிழுலகந் தெளிந்துய்யச்
சிவஞான சித்தியரு டேசிகனைப் பணிகுவாம்.

பாரததாற்பரியசங்கிரகம்

ஆரி யத்துய ரப்பதிக் கிதன்முன மறைந்த
பாரதத் தின்றாற் பரியசங் கிரகத்தைப் பாடிச்
சீரி யற்றமி ழாலுரை செயவருள் செய்ய
வீர மும்மதக் குஞ்சரப் பிரானடி விழைவாம்.

81. சம்பந்தசரணாலயசுவாமிகள்

(1710)

இவர் தருமபுரவாதீனத்தைச் சார்ந்தவர். வெள்ளியம்பலவாண சுவாமிகளின் மாணவகர். இவர் கர்த்தர் எனப்பெயரிய மைசூராசர் தம்முடைய வடிவை நோக்கி "அண்டங்காக்கையா?" என்றபோது அதற்கு உலகைக் காத்தல் எனப் பொருள் கூறி அண்டங்காக்கை எனக்கன்று. உமக்கே என்று சொல்லி அரசரை மகிழ்வித்தவர். அரசர் விரும்பியவாறே கந்தபுராணத்தைச் சுருக்கிப் பாடித் திருச்செந்தூரிற்போய் அரசரையும் வைத்து அரங்கேற்றினவர். அரசர் கொடுத்த பரிசிலாகிய நவரத்தினங்களையெல்லாம் "இது குருவுக்குப் பிரீதியாகுக" என்று அப்பால் வைத்தவர். பின்னுங் கொடுக்க "இது சிவனுக்குப் பிரீதியாகுக" என்று பின்னும் அப்பால் வைத்தவர். அதன்பின்னுங் கொடுக்க "இது பத்தர்களுக்குப் பிரீதியாகுக" என்று அதன் பின்னும் அப்பால் வைத்தவர்.

ஒருநாள் அரசர் இவரை நோக்கி உங்கள் குருத்தானத்தில் வசிக்கும் அடியவர்குழாங்கள் தினந்தொறுஞ் செய்யுந் தொழில்கள்யாவை? என்றபோது "ஆய்வார்" என்ற கட்டளைக்கலித்துறையால் அவர்க்கு விடைகள் சொன்னவர்.

கந்தபுராணச்சுருக்கம்

வீர வேற்கை விமலன் மகிழ்ந்திடப்
பாரி னோர்கள் பரிந்து புகழ்ந்திடச்
சீரு லாவிய செந்தி னகரிடை
ஏரி னோடரங் கேற்றிய திந்தநூல்.

கட்டளைக்கலித்துறை

ஆய்வார் பதிபசு பாசங் களினுண்மை யாய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல் லாங்கல்வி கேள்வியல்லல்

ஒப்வார் சிவானந்த வாரியுள் ளேயொன் றிரண்டுமறத்
தோய்வார் கமலையுண் ஞானப்ர காசனற் றொண்டர்களே.

82. சயங்கொண்டார்
(1116)

இவரூர் சோழமண்டலத்துள்ள தீபங்குடி என்பர். குலம் செங்குந்தர்குலம். சமயம் சைவம். காலம் ஏறக்குறைய இற்றைக்கு எண்ணூறுவருடங்களுக்கு முன் என்பர். இவர் கலிங்கத்துப்பரணி என்னும் பிரபந்தஞ் செய்தவர். பரணி பாடுஞ் சிறப்புநோக்கி "பரணிக்கோர் சயங்கொண்டான்" என்று பாராட்டிப் பாடப்பட்டவர். இப்பரணி குலோத்துங்க சோழ ராசன் மேலது. பரணி நூல்களுள் முதலில் தோன்றியது இதுவே. இதில் பலவகை அணிகளும், பலவகைப் புதிய கற்பனைகளும் விரவிவரும்.

கலிங்கத்துப்பரணி

நேயக் கலவி மயக்கத்தே—கிசழ்ந்த மொழியைக் கிளியுரைப்ப
வாயைப் புதைக்கு மடநல்லீர்—மணிப்பொற் கபாடந் திறமினோ.

83. சரவணப்பெருமாட்கவிராயர்
(1796)

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள முதுகுளத்தூர் என்பர். குலம் வேளாளர்குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு நூற்றிருபது வருடங்களுக்கு முன் என்பர். இவர் இராமநாதபுரம் சோமசுந்தரம்பிள்ளைக்கு மாணவகர். முத்துராமலிங்கசேதுபதியரசர் சமஸ்தான

வித்துவானுயிருந்தவர். ஆசிரியவிருத்தம் பாடுவதில் வல்லவர். இவர் பாடிய ஆசிரியவிருத்தங்கள் பல. சில நடராசமூர்த்தி தோத்திரம். சில, சிலர்மீது பாடிய சீட்டுக்கவிகள். அவைகளிலே முழக்கும் வழக்குஞ் செறிந்த மொழிகளும், வழியெதுகைமுதலிய தொடைகளும் பெரிதும் வருகின்றன. சீட்டுக்கவிகளிலே பெரும்பாலுஞ் சேதுபதியரசரையுஞ் சோமசுந்தரகுருவையுஞ் சுட்டிக் கூறுவர். அப்பாகங்களுள் ஒன்று காட்டுதும்.

சீட்டுக்கவி

மகபதி நராதிபதி நீதிபதி சேதுபதி வாசற்ப்ர சண்ட வாக்கி
வடிதமிழ்ச் சோமசுந் தரகுருசு வாமியடி மைக்குமடி மைக்குமடிமை.

யாழ்ப்பாணத்திலே பெருங்கொடையாளராயிருந்த வைத்தியலிங்கச் செட்டியாருக்கும் ஒரு சீட்டுக்கவி பாடினவர். அக்கவியிலே யானை, குதிரை முதலிய வரிசைகள் தரும்படி அவரைக் கேட்டவர். அதனைக் குறிக்கும் பாகம் பின்வருவது.

சீட்டுக்கவி

இந்த்ரதரு யாழ்ப்பாண மேவிய வயித்யலிங்
கேந்த்ரனெதிர் கொண்டு காண்க
வயமான கையிலே மூக்குள்ள தொன்று (யானை) திரு
மாயன் பிறப்பி லொன்று (குதிரை)
வாற்புறமோர் கொம்புந் தலைப்புறமோர் கொம்புமுள
வாகனந் தன்னி லொன்று (தண்டிகை)
வலியார் புரங்களைச் சுடுகின்ற பொருளொன்று (பொன்)
வாரமது தன்னி லொன்று (வெள்ளி)
வரமுடன் வெளுத்தசந் திரனென்று (பட்டு) நீயின்ன
வரிசை தந்தருள புரிவையே.

நடராசமூர்த்திதோத்திரம்

வந்தவ ரியாவர்காண் கவிராச ரெந்தவூர்
வடகாசி யெங்கு வந்தீர்
மகராச னென்றுனது கீர்த்தியைக் கேட்டுன்மேன்
மதுரகவி பாடி வந்தோம்
சந்ததமும் வித்துவா னல்லர்நீ ரென்னுடைய
தாதைமூ தாதை வழியில்
தமிழ்கேட்ட தியாவர்காண் தலைமுறையி லில்லாத
தாழ்விதைச் செய்து வந்தீர்
இந்தமொழி மற்றுமொரு தரநீ ருரைக்கிலோ
இரணகள மாகு மப்பால்
எகுமென் றோதிடும் புல்லர்தம் பாற்செலா
தெனையாள விது தருணமே
சிந்திக்கு மன்பருக் கருண்மழை சொரிந்ததிக
செல்வங் கொடுக்கு முதலே
தேசிகம் பூத்தவுமை நேசபொன் னம்பலவ
தேசிக சிரோ ரத்நமே.

இக்கவியிலே வந்தவர் யாவர்? எந்தவூர்? எங்கு வந்தீர்? என்பன கவிராசரைப் பிரபு வினவிய வினாக்கள். இம்மூன்று வினாக்களுக்கும் முறையே அடுத்து வரும் கவிராசர், வடகாசி, "மகராசனென்றுனது கீர்த்தியைக்கேட் டுன்மேன் மதுரகவி பாடிவந்தோம்" என்பன மூன்றும் அவ்வினாக்களுக்குக் கவிராசர் சொல்லிய விடைகள். அப்பால் அவர் கோபமொழியும் பிறவும்.

84. சரவணப்பெருமாளையர்
(1750)

இவர் தொண்டைமண்டலத்துள்ள திருத்தணி. இவர் கந்தப்பையர் புத்திரர். சமயம் வீரசைவம். இவர் கச்சியப்பர் மாணவகர். இவர் ஆத்திசூடி,

கொன்றைவேந்தன், நறுந்தொகை, பிரபுலிங்கலீலை, திருவள்ளுவமாலை முதலிய நூல்களுக்கும் நைடதத்தின் ஒரு பகுதிக்கும் உரை எழுதினவர். இவருடைய பதிப்புநூல்கள் திருவாசகம், திருவிளையாடல், நாலடியார் முதலியன. இவர்இயற்றியநூல்கள் அணியியல் விளக்கம், இயற்றமிழ்ச்சுருக்கம், பாலபோத இலக்கண வினவிடை களத்தூர்ப்புராணம் முதலியன.

85. சரவணமுத்துப்பிள்ளை

(1848—1916)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள ஊரெழு. பிற்கால வாசஸ்தானம் நல்லூர். குலம் வேளாளர்குலம். சமயம் சைவம். காலம் சிலமாசங்களுக்கு முன். இவர் முருகேச பண்டிதர்க்கு மாணவகர். இலக்கிய இலக்கணங்களுஞ் சித்தாந்த சாத்திரங்களுங் கற்றவர். வாக்கியத்தொடையில் வல்லவர். உதயபானு முதலிய பஞ்சிகைகளுக்குத் தலைவரா யிருந்தவர். பஞ்சிகைகளிற் பலவிடயங்கள் வரைந்தவர். இலங்கையிலும், பாண்டிய சோழமண்டலங்களிலும் சித்தாந்தப் பிரசங்கங்கள் செய்து வித்துவான்களால் மதிக்கப்பெற்றவர். கவிபாடுந் திறமுமுடையவர். பாற்கரசேதுபதி மகாராசாமேற் பிரபந்தம் பாடிப் பரிசில் பெற்றவர். பல தனிநிலைக் கவிகளும் பாடினவர்.

கட்டளைக்கலித்துறை

1. தேனோ கனியோ வெனவே சுவைக்குஞ் செழுந்தமிழில்
தானே தனக்கிணை யாகி யுதித்துயர் சற்குருவாய்
வானோர் புகழ்நல்லை வந்தரு ளாவலன் வண்புகழை
நானோ சொலவல்லன் சேட னுங் கூறிட நாணுவனே.

2. கற்ரூர் புகழ்சைவ சித்தாந்தப் பாலின் கடல்கடந்து
மற்ருர் நினைக்கருஞ் சைவப்ர காசன மாவமிழ்தை
நற்ரு ரணிச்சைவ நற்புல வோர்க்கு நயந்தளித்தான்
வற்ரு வறிவுடைச் சங்கர பண்டித மாதவனே.

86. சரவணமுத்துப்புலவர் (1849)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள நல்லூர். குலம் வேளாளர்குலம். சமயம் சைவம். காலம் ஏறக்குறைய இற்றைக்கு அறுபத்தைந்து வருடங்களுக்கு முன். இவர் சேனுதிராயமுதலியாருக்கு மாணவகர். இலக்கியலக்கணங்களும், வேதாந்த சித்தாந்தங்களும் வேறு நூல்களும் நன்கு கற்றவர். வேதாந்தசுயஞ்சோதி, ஆத்தும போதப்பிரகாசிகை என்னும் நூல்களையும் இயற்றினவர் என்பர். உதயதாரகையிலே இலக்கியலக்கணவிடயங்களில் வேதகிரிமுதலியாரோடும் வேறு புலவர்களோடும் வாதசாதனவுரைகளும் வரைந்தவர். வேறுவிடயங்களும் வரைந்தவர். அவற்றுள்ளுஞ் சிலகாட்டுதும்.

தருமலிங்கசுவாமி

முகாமைக்காரர்களே!

அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய் அருளொளி இருக்கையால் அதனுண்மையைப் போதிக்க விரும்புகிறவர்கள் அக்காலத்தில் நிகழ்ந்த சிற்சில அற்புதங்களைமாத்திரம் அத்தாட்சிப்படுத்திச் சாதிப்பது போல இக்காலத்திலும் வேதாரணியம் தருமலிங்கசுவாமிகளில் அவ்வருளொளி மகிமை விளங்குவதிஞல் அதிற் சந்தேக விபரீதங் கொள்ளாமற் சித்தசுத்தியுள்ளவர்களும், சத்திய சமாதானிகளுமாய் இருக்கிற நீங்கள்

சகலசனங்களும் அறிந்து உய்யும்பொருட்டு உதயதாரகைப் பத்திரத்திற் பின் வரும் புன்கவியைப் பதிப்பித்து விடும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆசிரியவிருத்தம்

சத்திபெற லாம்புத்தி முத்திபெற லாம்பவுத்ர
சுகபுத்தி ராதி பெறலாந்
தொலையாத குன்மகய ரோகமுத னேய்களொரு
சொல்லிலே சுத்தி பெறலாம்
பத்திபெற லாங்குருடு கூன்செவிடு சப்பாணி
பரிசுத்த மாகை பெறலாம்
பயமேறு பூதப் பிரேதப் பசாசுகள்
பறந்தோட வெற்றி பெறலாம்
சித்திபெற லாஞ்சுத்த வித்தைபெற லாஞ்செயச்
சிற்சுரூப மகிமை பெறலாம்
சிவயோக மாதிபல வகையோக சாதனச்
சிவபோக திர்ப்தி பெறலாம்
சத்திபெற லாஞ்சைவ தர்மலிங் கச்சாமி
சந்நிதி யடைந்து பணிமின்
சற்சங்க சகலசன சமயபரி பாலர்காள்
சத்தி யஞ்சத் தியமிதே.

சகத்துநிண்ணயத்துணிபுரை

கருத்தாவைப்போலச் சிருட்டியும் அநாதி என வாதிப்பது காண்டல், கருதல் முதலிய பிரமாணங்களுக்கு விரோதம். நிமித்தகாரணமாகிய கருத்தாச் சூக்குமயோசன சாத்த விகற்ப அந்தருத்திரேகத்தைப் பண்ணி இச்சாஞானங்களைக்கொண்டு "மண்ணினிற் கடாதி யெல்லாம் வருவது குலாலனாலே—எண்ணிய வுருவமெல்லா மியற்றுவனீசன்" என்பதுபோலச் சகத்தைச் சிருட்டிக்க வேண்டுகையாற் கருத்தாவைப்போலச் சிருட்டி அநாதியன்று. ஆதி என்பதற்குத் திருட்டாந்

தம் சிவஞானசித்தியார். "இலங்கிய தோற்ற நிற்ற லீறிவை யிசைத லாலே—நலங்கிளர் தோற்ற நாசந் தனக்கிலாநாதன் வேண்டும்" என்றும், "உலகமெல்லாந் தருபவ னொருவன் வேண்டும்" என்றும், திருமந்திரம் "ஒருவனுமே யுலகேழும் படைத்தான்" என்றும் வருவனவற்றிற் காண்க

87. சாந்தலிங்கக்கவிராசர்

இவரூர் சோழமண்டலத்துள்ள தண்டலைச்சேரி. சமயம் சைவம். இவர் வேதாகமங்களும் புராணங்களும் கூறும் நீதிகளைநோக்கி, உலகில் வழங்கும் பழமொழிகளையும் அவற்றோடு பொருத்திப் பழமொழி விளக்கம் என ஒரு நூல் செய்தவர். பழமொழிவிளக்கத்திலே அந்த நீதிகளன்றி உலகியலுங் கூறுவர். படிப்பின்றிக் குருக்கள் என்று இருப்பவரைநோக்கி "அருண்மிகுத்த வாகம நூல் படித்தறியார் கேள்வி ஒன்றும் அறியார் பின்னும்—இருவினையின் பயனறியார் குருக்களென்றே உபதேசம் எவர்க்குஞ் செய்வார்" என்பர். பொய் சொல்லும் புல்லரை நோக்கிப் "பொய்சொல்லும் வாயினர்க்குப் போசனமுங் கிடையாது" என்பர். அகங்காரிகளை நோக்கிக் "கெறுவமுட னகந்தையுளா ரிறுமாந்து தலைகீழா வீழ்வார்" என்பர்.

கபடவேடதாரிகளை நோக்கிக் "காதிலே குண்டலங்கள் கையிலே செபமாலை கழுத்தில் மார்பில்-மீதிலே தாழ்வடங்கள் மனதிலே கரவடமாம் வேடம் பூண்போன்" உருத்திராக்கப் பூனை என்பர். கடும் வட்டி வாங்குங் கயவரை நோக்கி "ஒன்று பத்து விலை கூறி அநியாய வட்டி வாங்கிக்—கண்டவர்தங் கடுந்தேட்டுக் கண்ணையறக் கெடுக்கும்" என்பர். பாடும்வகை பயிலாது பாடுவாரை நோக்கித் "தழதழத்துப் பாடுவதில்

மவுனமா யிருப்பதுவே தக்கதாகும்" என்பர். ஒரு தீங்கு நினைத்துப் பல நன்றி மறப்பவரை நோக்கி 'நித்த மெழுநூறு நன்றி செய்தாலும் ஒரு தீது நேரே செய்தால்—அத்தனையுந் தீதென்றே அழித்திடுவர் கய வர்" என்பர்,

விருத்தம்

செழுங்கள்ளி னிறைசோலைத் தண்டலையார் திருப்பணிக்குட்
டிருடிக் கொண்டே
எழுங்கள்ளர் நல்லகள்ளர் பொல்லாத கள்ளரவர்
எவரோ வென்னிற்
கொழுங்கள்ள முடனேகும் பிடுகள்ளர் திருநீறு
குழைக்குங் கள்ளர்
அழுங்கள்ளர் தொழுங்கள்ள ராசாரக் கள்ளரிவர்
ஐவர் தாமே.

88. சாந்தலிங்கசுவாமி
(1700)

இவரூர் நடுநாட்டிலுள்ள திருத்துறையூர். குலம் சங்கமகுலம். சமயம் சைவம். மேலைச்சிதம்பரம் எனப் படும் பேரூரிலே மடாலயம் ஒன்று தாபித்து வசித்தவர். வைராக்கியசதகம், வைராக்கியதீபம், அவிரோதவுந்தி யார், கொலைமறுத்தல் என்னும் நூல்கள் செய்தவர்.

வைராக்கியசதகம்

நவிலி லிம்மனை மக்களுக் கொருதுணை
நாமலா தில்லை யென்றே
கவலை யுற்றரன் றுண்மறந் தனையுனைக்
காலனார் கொடு போயிற்
குவல யத்தடைந் திவணைநா டொறும்புரந்
திடுவையோ குறிக்குங் காற்
சவலை நெஞ்சமே சிவனலா துயிர்க்குயிர்
தானு மோர்துணை யாமோ.

வைராக்கியதீபம்

திறந்தருந் தெய்வப் புலமைவள் ளுவனூர்
நீத்தவர் பெருமை நூன்முகப்பாற்
சிறந்திட வமைத்தாங் கதுகொடில் வாழ்க்கைச்
சிறுமைநூற் றினாது தெரியார்க்
கறந்தவா தியற்றி னவனினுங் கோடி
யதிகமா மெனமன மருது
துறந்துளோ ரீனயும்பட் டணத்தெம தடிக்
டொகுத்தகட் டுரைதிசழ்த் திடுமே.

அவிரோதவுந்தியார்

எல்லா முடையான் குருவாகி யீங்கெம
தல்ல லறுத்தானெனன் றுந்தீபற
அவன்று டொழுவாமென் றுந்தீபற.

கோலை மறுத்தல்

பூசுரருக் கிழிவிலையா கத்துயிர்கொன்
றருந்தலின்விண் புகுதா நிற்பர்
கோசமெடுத் துரைநவிற்று சிரியர்சிறார்க்
கிதமதுபின் கொடுப்பான் முன்ன
ராசமிகு துயர்விளைத்து மிதமதுவாப்
பொருள் பெறவினரிய வேத
வோசைமிகு மமருலகை யவர்வதைத்த
சீவனும்பெற் றுய்த லாலே.

89. சாந்துப்புலவர்

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள திருப்புனவாயிலை அடுத்த சிறுகம்பையூர் என்பர். குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். இவர் மயூரகிரிக்கோவை

என்னும் பிரபந்தஞ் செய்தவர். இக்கோவை சொற் சிறப்பும் பொருட்சிறப்பும் நன்கு வாய்ந்தது.

மயூரகிரிக்கோவை

பாடாத தும்பி யணியாத மாதங்கம் பட்சியொன்றிற்
கோடாத நாகஞ் சுடாத கரிகொடி யோர்சிறைக்குத்
தேடா விலங்கு குகன்மயில் வெற்பிற் றெரித்தகொம்பு
வாடாத மாவென் பதுகாய மேவி வரிற்சொல்லுமே.

இது வேழம் வினுதல். இங்கே வரும் பலபொரு ளொருசொற்களாகிய தும்பி, மாதங்கம், நாகம், கரி, விலங்கு, மா என்பன பிறவற்றிற் சொல்லாமல் யானை யையே குறிக்கும்படி பாடாத என்பது முதலிய வினை களால் எதிர்மறுத்துரைக்கப்பட்டன. இது வினையெ திர்மறுத்துப் பொருள்புலப்படுத்தணி.

90. சிதம்பர சுவாமிகள்
(1648)

இவரூர் பாண்டி நாட்டிலுள்ள மதுரை. சமயம் சைவம். காலம் குமாரதேவர் காலம். குமார தேவர் உதவியினுல் சாந்தலிங்கசுவாமியை அடைந்து அவருடைய அருளைப்பெற்றவர். குமாரதேவர் கட் டளைப்படி திருப்போரூர் ஆலயத்திருப்பணியைச் செய் தவர். இவர் இயற்றிய நூல் போரூர்ச் சன்னிதிமுறை யாகும். இது மணிவாசகப் பெருமானது திருவாசகம் போன்று கன்னெஞ்சத்தையும் உருகச் செய்யுந்தன்மை யது.

பாட்டு

இல்லறத்தான் அல்லேன் இயற்கைத் துறவியல்லேன்
நல்லறத்து ஞானிஅல்லேன் நாயினேன்—சொல்லறத்தின்

ஒன்றேனும் இல்லேன் உயர்ந்ததிருப் போரூரா
என்றேநான் ஈடேறு வேன்?

பிள்ளைத்தமிழ்

கருத்தே புகுந்து கதிகாட்டும்
கண்ணே வருக மெஞ்ஞானக்
கரும்பே வருக கருணைபொழி
காரே வருக ஆனந்தப்
பெருக்கேவருக யாங்கள் பெறும்
பேறே வருக மறைசொல்கிளிப்
பிள்ளாய் வருக பிறங்குதெய்வப்
பெம்மான் வருக குறமடந்தை
தருக்கே வருக மிடியகற்றுந்
தருவே வருக மன்படைக்கோர்
தஞ்சே வருக எமையளிக்குந்
தாயே வருக பவப்பிணிக்கு
மருந்தே வருக சமரபுரி
வாழ்வே வருக வருகவே
மறையின் சிரமெய்ப் பொருளான
வள்ளல் வருக வருகவே.

91. சிதம்பரப்பிள்ளை (1889)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள சங்குவேலி. குலம் வேளாளர்குலம். சமயம் கிறிஸ்துசமயம். காலம் இற்றைக்கு இருபத்தேழு வருடங்களுக்கு முன். இவர் முத்துக்குமாரப்பிள்ளைக்கு மைந்தர். இந்துகல்லூரிப் பிரதமாசிரியர் செல்வத்துரைப்பிள்ளைக்குத் தந்தையார். அங்கிலபாடையிலே தர்க்கம், கணிதம் முதலிய பலவகைத் துறைகளிலுஞ் சென்று பாண்டித்தியம் பெற்றவர். பாடசாலைகளிலே உபாத்தியாயரா யிருந்து பல

ரையுங் கற்பித்தவர். தமிழ்ப்பாஷையிலும் இலக்கியம், இலக்கணம் முதலியன கற்றுப் பாண்டித்தியம் பெற்றவர். அரம்போலுங் கூரிய விவேகசீலர். இருமொழிகளிலும் அரிதுணர் சொற்கள் பல அறிந்தவர். அங்கில மொழிகளைத் தமிழிற் பெயர்க்குங்கால் அவற்றிற்குப் பொருளாலே நன்கியையுந் தமிழ்ச் சொற்களையும் வடசொற்களையுந் தெரிந்தெடுத்துச் சேர்த்து வாக்கியந் தொடுக்கும் வன்மையிற் சிறந்தவர். அங்கிலமொழிகளுக்குச் சமமான பொருளுடைய தமிழ்மொழிகளை ஆராய்ந்தெடுத்துக் கற்பவர் நன்குணருமாறு அங்கிலமுந் தமிழுமாக அகராதியும் ஒன்று செய்தவர். உவின்சிலோ அகராதிக்குந் துணைநின்றவர்.

இலங்கைநேசன் முதலிய பஞ்சிகைகளிலும் பல விடயங்கள் வரைந்தவர். பாடசாலைக்கணிதம் என்னும் விடயத்திலே ஒன்பது என்னுஞ் சொல் சங்கியான முறைக்கு மாறாய் நிற்றலால் ஒன்பது என்பதற்குச் சமமான பொருளுடைய தொண்டு என்பதை ஒன்பது நின்ற இடத்திலே வைத்தும், பின்னும் ஒன்பது என்பது வரும் பத்தொன்பது, இருபத்தொன்பது முதலியவைகளைப் பதின்மூன்று, இருபதின்மூன்று முதலியனவாகக்கொண்டும், தொண்ணூறு என்பது நிற்குமிடத்திலே எழுபது, எண்பது என்பனபோலப் பத்து என்பதன் விகாரமாகிய பது என்பது பின்னே தோன்றத் தொன்பது என்பதை வைத்தும், தொள்ளாயிரம் என்பது நிற்கும் இடத்திலே எழுநூறு எண்ணூறுபோல நூறு என்பது பின்னே தோன்றத் தொண்ணூறு என்பதை வைத்தும் முடித்தலே பொருத்தம் எனவும் எழுதினவர்.

படிப்பவர்பொருட்டுப் பாரதம், இராமாயணம் முதலிய இலக்கியங்களிலிருந்து சில கவிகளைத் திரட்டி

இலக்கியசங்கிரகம் என ஒரு நூலும், இலக்கணவிதிகள் சிலவற்றைச் சேர்த்துத் தமிழ்வியாகரணம் என ஒரு நூலும், அங்கிலதர்க்கவிதிகள் சிலவற்றைத் தமிழிற் பெயர்த்துப் பாட்டும் உரையுமாக நியாயலக்கணம் என ஒரு நூலும் இயற்றி அச்சிட்டவர். நியாயலக்கண நூலினிறுதியிலே சித்தியார் கூறும் அளவைகளையுஞ் சேர்த்து விளக்கினவர். இவையன்றிப் பல தனிநிலைக் கவிகளுஞ் செய்தவர்.

நியாயலக்கணம்

உலகம் புகழு நியாய லக்கணம் யத்தியதன்
கலைவித்தை யென்ப நியாய நடையினுக் காதரமாய்
உலவு மிலக்கண மேதெளியுங்கலை வித்தை யென்ப
தலமின்று புந்தி யனுமிக்க வேவிதி யாய்ந்திடுமே.

92. சிந்நயச்செட்டியார்

(1904)

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள தேவிகோட்டை. குலம் வைசியர்குலம். சமயம் சைவம். காலம் ஏறக் குறைய இற்றைக்குப் பன்னிரு வருடங்களுக்கு முன் என்பர். வன்றொண்டச்செட்டியாருக்கு மாணவகர். இலக்கிய லக்கணமுஞ் சித்தாந்த சாத்திரமும் இனிது கற்றவர். கவிபாடுந் திறமும் பெற்றவர். தேவைத்திரி பந்தாதி, அருணைச்சிலேடைவெண்பாமாலை, மதுரை மீனாட்சியம்மைபாடல் முதலிய பிரபந்தங்கள் செய்தவர்.

அருணைச்சிலேடைவெண்பாமாலை

கொம்பனையார் நம்புகற்பிற் கோயிலின்றி வீற்றிடத்தில்
அம்ப லமலா வருணையே—உம்பருய்ய
உண்பாக் கமைந்த னுசித நஞ்சுமுண்ட மைந்தன்
வெண்பாக்க மைந்தன் விருப்பு.

அம்பல் - பழிமொழி. அமலல் - நெருங்கல். அம்பலம் - சபை. உண்பாக்கு - உண்ண. அமைந்து, அநுசிதம். மைந்து - வலி. வெண்பாக்கம் - ஒரு சிவஸ்தலம்.

93. சிவசம்புப்புலவர்

(1852—1910)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள உடுப்பிட்டி. சமயம் சைவம். காலம் ஏறக்குறைய இற்றைக்கு ஆறு வருடங்களுக்கு முன். சம்பந்தப்புலவர்க்குஞ் சரவண முத்துப்புலவருக்கும் மாணவகர். பாரதம், இராமாயணம் முதலிய இலக்கியங்களையும், தொல்காப்பியம் நன்னூல் முதலிய இலக்கணங்களையும், வேறு நூல்களையுங் கற்றவர். அவைகளைப் பல மாணவகர்க்குங் கற்பித்தவர். சொல்லும் பொருளும் தொடைவகைகளும் சிறப்புற வைத்துக் கவியமைக்கும் புலமையிற் சிறந்தவர். பல தனிநிலைக்கவிகளும், பல பிரபந்தங்களும் பாடினவர். யமகவந்தாதி, திரிபந்தாதிகளும் பாடினவர்.

தமிழ்ப்பாஷாபிமானியுஞ் சைவப்பிரசங்கசிங்கமும் பிரபல தியாகவானுமாய்ப் பெரும்புகழ்பெற்றுவிளங்கிய பாற்கரசேதுபதி மஹாராசாவின்மீது கல்லாடசாரக் கலித்துறையும், வேறு கவிகளும் பாடிப்போய் அவர் முன்னிலையில் அரங்கேற்றித் தக்க பரிசிலும் பெற்றவர்.

கந்தவனநாதர்பதிகம், வல்லிபுரநாதர்பதிகம், செந்தில்யமகவந்தாதி, திருவேரகயமகவந்தாதி, எட்டிகுடிப் பிரபந்தம், புலோலி நான்மணிமாலை முதலிய வேறு பிரபந்தங்களுஞ் செய்தவர். யாப்பருங் கலக்காரிகையுரை முதலிய உரைகளுஞ் செய்தவர்.

கல்லாடசாரக்கலித்துறை

அண்ணார்ந்த வம்ம மருப்பிடை சேயஞ்செவ் வாம்பலிதழ்
கண்ணார் தக்முக மப்போ தலர்ந்த கடிக்கமலம்
விண்ணார் தனித முகிலோதி சம்பக மேனிசுவைப்
பண்ணார் தகைமொழி பாற்கரன் மால்வரைப் பைந்தொடிக்கே.

நாவலர்மீதுபாடியது

ஆரூர னில்லை புகலியர் கோனில்லை யப்பனில்லை
சீருரு மாணிக்க வாசக னில்லை திசையளந்த
பேருரு மாறு முகநா வலனில்லை பின்னிங்கியார்
நீருரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கு நீர்மையரே.

திருவேரகயமகவந்தாதி

மணியாக வந்தண வனமுடி மாயன் மருகசுப்ர
மணியாக வந்த மருத்தட வேரக வாசவெங்கண்
மணியாக வந்த குகனே பனிமலை மன்னன் தந்த
மணியாக வந்தரி மைந்தா தந்தாள்பத வாரிசமே.

94. சிவஞானமுனிவர்
(1785)

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள விக்கிரமசிங்கபுரம். குலம் அகத்தியர் வரத்தாலே தலைமுறை ஏழுவரை புலமைநிறைந்த பாண்டிவேளாளர்குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு நூற்று நாற்பது வருடங்களுக்கு முன் என்பர். தந்தையார் அம்பலக்கூத்தர். தாயார் மயிலம்மையார். இவர் பாடசாலையிற் படிக்கும் போதே பாடும் வரமும் அமைந்தவர். சிவலிங்கசங்கம பத்தியிற் சிறந்தவர். திருவாவடுதுறையிற் சென்று ஞானதேசிகராயிருந்த பின் வேலப்பதேசிகரைக் கண்டு பணிந்து சிவதீக்கை முதலியன பெற்று அங்கே வசித்த

வர். வடமொழி தென்மொழி என்னும் இருமொழி களிலும் பூரணபாண்டித்தியம் பெற்றவர். இலக்கிய லக்கண நூல்களும், சைவ சித்தாந்த நூல்களும், மற்றைச் சமய நூல்களும், தருக்கம் முதலிய மற்றை நூல் களும், உரை நூல்களும் நுணுக்கம் பெறக் கற்றவர். அவைகளைக் கச்சியப்பமுனிவர் முதலிய பன்னிருமாண வகர்களுக்கும், பிறர்க்குங் கற்பித்தவர்.

இவர் நோக்காத சங்கச்சான்றோர் நூல்களும் வேறுசான்றோர் நூல்களுமில்லை. திருமுறை நூல்களும் இல்லை. சித்தாந்த நூல்களும் இல்லை. கருவிநூல் களும் இல்லை. சமயநூல்களும் இல்லை உரைகளும் இல்லை. இவருரைகளிலே இந்தச் சான்றோர் நூல்களும் பிறவும் பிரமாணமாக ஆங்காங்கு வருகின்றன.

இவர், ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் என்னும் கவிகள் பாடுந்திறமும், யமகவந்தாதி முதலிய சிறுகாப் பியஞ் செய்யுந் திறமும், பலவகை திரிபந்தா திவருணனை களும் அமையும் பெருங் காப்பியஞ் செய்யுந் திறமும், மொழிபெயர்ப்புச் செய்யுந் திறமும்,சுருக்கியும்,விரித்தும் உரைவகை செய்யுந் திறமும், மறுப்புரை செய்யுந் திறமு மாகிய பலவகைத்திறமும் பெரிதமைந்த அருட்புலமை யாளர். இவர் புலமையின் பெருமையும், இவர் நூலுரைகளின் அருமையும், இவர் நூலுரைகளாலே தமிழ்நாடு பெறும் தன்மையும் "ஆயிரங்கவைநாவர வஞ்சொல—ஆயிரங்கா வாணன் பொறிக்கினுமடங்கு வன" வல்ல என்போம்.

இவர் இயற்றிய நூல்கள்: காஞ்சிப்புராண முதற் காண்டம், கம்பரந்தாதி, முல்லையந்தாதி, முதுமொழி வெண்பா, அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், செங்கழுநீர்

விநாயகர்பிள்ளைத்தமிழ், சிவதத்துவவிவேகம், தர்க்க சங்கிரகவுரை, சித்தாந்தப்பிரகாசிகை முதலியன. இவற் றுட் காஞ்சிப்புராணம், சிவதத்துவவிவேகம் முதலியன சிலமொழிபெயர்ப்பு. உரைகள்: சிவஞானசித்தியாருரை, சிவஞானபோதச்சிற்றுரை, சிவஞானபோதமாபாடியம், தொல்காப்பிய முதற்சூத்திரவிருத்தி முதலியன. மறுப் புரைகள்; இலக்கணவிளக்கச்சூருவளி, சிவசமவாதவுரை மறுப்பு முதலியன.

காஞ்சிப்புராணத்திலே கோமூத்திரி, கூடசதுர்த்தம் முதலிய சித்திரகவிகளும், யமகங்களுந், திரிபுகளும், பெருங்காப்பிய வருணனைகளும் விசேடமாய் விரவக் கூறுவர். முதுமொழிவெண்பாவிலே அதிகாரத்துக்கு ஒன்றாகத் திருக்குறள் வெண்பாக்களைப் பின்னீரடிக ளாக நிறுத்தி, அவற்றிற்கு இயையும் உதாரணங்களா கப் புராணகதைகளை முன்னீரடிகளிலும் பொருத்தி நேரிசைவெண்பாவிலே நீதிகளை முடிப்பர். மாபாடியத் திலே அரிய இலக்கணவிதிகளையும், அவற்றிற்குச் சான் ருய்வரும் பழைய நூற் பிரமாணங்களையும், துணி பொருட்குச் சான்ருய் வரும் ஆகமப் பிரமாணங்களையும் மறுதலை கூறும் மத மறுப்புக்களையும், பிறவற்றையும் விரித்துக் கூறுவர்.

தனிநிலையாகவுஞ் சில கவிகள் செய்தவர். திருப் பாதிரிப்புலியூர்ச் சிவாலயத்திலே சில வித்துவான்களும் பிரபுக்களுங் கூடிச் சவையிலே "கரையேற விட்டமுதல் லாவுன்னை யன்றியுமோர் கதியுண் டாமோ" என்னும் இவ்வடியை இறுதியடியாக வைத்துக் கவிஒன்று பாடின வர்க்கு இப்பொற்கிழி என்றதை யாத்திரையாய் வந்த இவரறிந்து மற்றை மூன்றடிகளையும் பாடிக் கவியைட

முடித்துப் பொற்கிழியில் இருந்த நூறு பொன்னையும் ஏழைப் பிராமணன் ஒருவன் எடுக்கச்செய்தவர். தாயார் புரிந்த விருந்தோம்பலின் பெருமையைச் சுட்டி "அருந் ததி யென்னம்மை" என்றோர் அழகிய செய்யுளும் பாடின வர். அரிதுணர்தற்பாலதாகிய "அங்கோழி முட்டை" என்னுந் தனிநிலைக்கவிக்கு வரையப்பட்டிருக்கும் விரி வுரையையும் இவருரை என்பர். இவர் சரிதவிரிவை அச் சிட்ட இவர் பிரபந்தத்திரட்டு முதலியவைகளிற் காண்க.

காஞ்சிப்புராணம்

1. விகட சக்கர வாரணந் தொடர்வரும் வித்தக முகில்வீற
விகட சக்கர விந்தமன் னவன்றனக் கருளுமெய்த் தலைவாகு
விகட சக்கர வாகமென் முலையுமை சான்முளை யென்னுச்சே
விகட சக்கர ரெந்திர மெனச்சுழல் வெம்பவக் கடனெஞ்சே.

விகடசக்கர - விகடசக்கர விநாயகரே! ஆரணம் - வேதம். வித்தக - வித்தகரே! முகில் வீறு அவி கட - முகிலின் பெருமையை அழிக்கின்ற மதமுடையவரே! சக்கு - கண். அன்னவன் - ஒத்தவன். குவி கடம் சக்கர வாகம் என் - குவிந்த குடமுஞ் சக்கரவாகமும் என் கின்ற. சான்முளை - மகன். என்னு - என்று. நெஞ்சே! சேவி பவக்கடல் கட. சக்கரர் - குயவர்.

கம்பரந்தாதி

2. வந்தனை யாவதுஞ் செய்தறி யாமன மேமறலி
வந்தனை யாவது யார்நா கென்னுமுன் வாய்த்திடுத
வந்தனை யாவது செய்தார்க் கருண்மயி லூரருட்ப
வந்தனை யாவது லாகம்ப னேயென்று வாழ்த்துவையே.

வந்தனை - வழிபாடு. யாவதும் - சிறிதும். மறலி - இயமன். வந்தனையா - வந்தாயா? அது, பார், நரகு.

தவம்தனை - தவத்தை. மயில் ஊர் அருட்பவம் தன்ஐயா - முருகபிரானுக்குப் பிதாவே! அதுலா - ஒப்பிலியே.

முதுமொழிவெண்பா

3 போசன் கவிஞருக்குப் போதப் பரிந்தளித்துத்
தூசிலாக் கீர்த்தி கொண்டான் சோமேசா—ஆசையுடன்
ஈத விசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு

தனிநிலைக்கவி

4. வரையேற விட்டமுதஞ் சேந்தனிட வருந்தினைவல் லினமென்றுலும், உரையேற விட்டமுத லாகுமோ வெனைச்சித்தென்றுரைக்கி லென்னும், நரையேற விட்டமுத னளவனுக் கொண்டு நறும் புலிசை மேவுங், கரையேற விட்டமுதல் வாவுன்னை யன்றியமொர் கதியுண் டாமோ.

வரையேல் - தள்ளாதே. தவிடு அமுதம் சேந்தன் இட அருந்தினை - தவிட்டொடு கூடிய அன்னத்தையுஞ் சேந்தனார் தர உண்டருளினீர். விட்டம் உரையேற முதலாகுமோ - பிரிந்து தொழிலமைந்த விட்டமரமானது முதலாகிய மரமாகுமோ? எனை சித்து என்று உரைக்கில் என்னும் - அறிவிக்க அறியும் தன்மை நோக்கி மலசம்பந்தமுள்ள ஆன்மாவாகிய என்னைச் சித்து என்று சொல்லின்; அதனுற் பயன் யாது? அறிவியாது இயல்பாய் அறியும் பேரறிவுடைய உமது தன்மையை அடைவேனு? உம்மை நோக்க நான் அசித்து அல்லேனு? (விட்டமரம் முதன் மரத்தினின்று வேறுதல்போல நானும் வேறன்றோ!)

நரையேறு - வெள்ளையிடபம். அவிட்டமுதனுளவன் - விட்டுணு. அவிட்டமுதனுள் - திருவோணம்.

புலிசை - புலியூர். கரையேற விட்டமுதல்வன் - திருப் பாதிரிப்புலியூரிலிருக்கும் சுவாமி. அவர் நாவரசரைக் கடலினின்றுங் கரையேறவிட்டவர்.

விருந்தோம்பல்

5. அருந்ததிபெ ணம்மை யடியவாகட் கென்றந்
திருந்த வமுதளிக்குஞ் செல்வி—பொருந்தவே
ஆனந்தக் கூத்த ரகமகிழத் தொண்டுசெயும்
மானந் தவாத மயில்.

அங்கோழி முட்டை யுறப்புவி யாண்டல ராலவிந்த
வெங்கோழி முட்டைமுன் சோா வுருப்பவெல் வெய்யபஞ்சே
ருங்கோழி முட்டை வரும்பாலை போல வுருக்குமந்தோ
செங்கோழி முட்டைக் கருப்போ லெழுந்த செழுந்திங்களே.

(இ - ள்.) அழகிய உறையூரானது முட்டினை யுறும்படி உலகத்தை ஆண்டு செவ்வந்திப்பூக்காரண மாக மண்மாரியால் அவிந்த வெவ்விய அரசனுருட்டுந் திகிரியும், அவனைக் கொல்ல வந்த மேகமும், அவன் கையிற் படைக்கலமும்போலும் வெப்பமும் கொழுத்த யானையும் முள்ளும் பரம்பாநின்ற பாலைநிலத்தைப்போல உருத்தலைச் செய்யாநிற்கும்; செவ்விய கோழியினது முட்டையாகிய கருவைப்போலெழுந்து ஒளிர்கின்ற வளவிய திங்கள் ஒன்றே என்பது பொருள்.

அம் - அழகு. கோழி - உறையூர். முட்டை - முட்டுப்பாட்டினை. வெங்கோ - வெவ்விய அரசன். வெங்கோ என்பதற்குப் பின்வரும் ழி, மு, டை என்னும் எழுத்துக்கள் பின்னர் நிற்ப அவற்றின் முன்னே முறையே பொருந்தும் ஆ, உரு, ப என்பவற்றாலாய சொற்களாவன: ஆழி, உருமு, படை என்பன. பம் என்பதைச் சேர்ந்த கோழியாவது கோழிபம் என்பது.

முள் - முள்ளு. தைவரல் - தடவல். செங்கோழி - செவ்விய கோழி. இது சுருக்கம். விரிவும் வருமாயின் மிகவும் விரியும்.

அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ

தாலப்பருவம்

மலங்க டங்குமரு ளூராய் தாலோ தாலேலோ
மலங்க டங்குமரு ளூராய் தாலோ தாலேலோ
கலங்க லந்தவரை யேயாய் தாலோ தாலேலோ
கலங்க லந்தவரை யேயாய் தாலோ தாலேலோ
புலங் கடந்தபர நாடாய் தாலோ தாலேலோ
புலங் கடந்தபர நாடாய் தாலோ தாலேலோ
இலங்கு ளந்தைவரு தாளாய் தாலோ தாலேலோ
இலங்கு ளந்தைவரு தாளாய் தாலோ தாலேலோ.

செந்தமிழ்ப்பத்திரிகையிலே மொழிபெயர்ப்பு என்னும் பொதுமொழியோடு யாம் எழுதிய விடயத்துள்ளே இவருடைய மொழிபெயர்ப்பின் நெறி கூறும் பாகத்தையும் ஈண்டுக் காட்டுதும்.

மொழிபெயர்ப்பு

வடமொழியிலிருந்து தென்மொழியிற் பெயர்த்து வசனநடையாக இயற்றப்பட்ட நூல்களுள்ளே சிவஞானமுனிவருடைய தர்க்க சங்கிரகமும், அதனுரையும் மொழிபெயர்ப்பு என்னும் யாப்பினாலே நூல்செய்வோர்க்கெல்லாம் தக்க பிரமாணமாய் வழிகாட்டி நிற்கின்றன. மூலத்திலே நின்றாங்கு மொழிபெயர்த்தற் கியையாத வாக்கியங்களெல்லாஞ் செந்தமிழ்க்குரிய நெறியமையுமாறு கொண்டு கூட்டிச் சொற்பொருளும் வழுவாமற் பெயர்த்தமைக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்ச்சொற்கள் தெரியாமல் வடசொற்கள்கொண்டு பலநாளாக வழங்கி

வந்த எத்தனையோ பொருள்களுக்குத் தக்க தமிழ்ச் சொற்கள் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் ளுஞ் சில காட்டுதும்.

1. வியுற்பத்தி—சொற்பொருள்.
2 பிரவிருத்தி—முயலுந்தொழில்.
3. வாக்கியம்—தொடர்மொழி.
4. அந்நுவயம்—கொண்டுகூட்டு.
5. ஆச்சிரமம்—பற்றுக்கோடு.
6. பிரதிஞ்ஞை—மேற்கோள்.
7. தாற்பரியம்—சொல்லவிரும்பியது.
8. அருத்தவாதம்—புனைந்துரை.
9. விடயம்—பொருள்.
10. அநுமானம்—வழியளவை.

95. சிவப்பிரகாசசுவாமி (1716)

இவரூர் காஞ்சிபுரம். வாசஸ்தானம் துறைமங் கலம். குலம் சங்கமகுலம். சமயம் வீரசைவம். காலம் ஏறக்குறைய இற்றைக்கு இருநூறு வருடங்களுக்கு முன் என்பர். இவர் வேலையர், கருணைப்பிரகாசர் என் னும் இருவர்க்குஞ் சியேட்டர். வடமொழி தென்மொழி களிலுள்ள பலவகை நூல்களுங் கற்றவர். கலைமகள் அருளாற் கவிபாடுந் திறம் பெற்றவர். கனிட்டர் களோடுந் தென்னாடு சென்று திருநெல்வேலியிற் சிந்துபூந்துறையி லிருந்த வெள்ளியம்பலத்தம்பிரான் வாயிலாகப் பஞ்சலக்கணமும் பயின்றவர். கு என்பது ஆதி அந்தங்களிலும் ஊருடையான் என்பது நடுவிலும் வரும்படி வெண்பா ஒன்று பாடுகஎன்று தம்பிரான் பணித்தபோது அப்படி வருமாறமைத்து வெண்பா ஒன்று பாடிமுடித்தவர்.

வெண்பா

குடக்கோடு வானெயிறு கொண்டார்க்குக் கேழன்
முடக்கோடு முன்னமணி வார்க்கு — வடக்கோடு
தேருடையான் றெவ்வுக்குத் தில்லைதோன் மேற்கொள்ளல்
ஊருடையா னென்னு முலகு.

குடக்கோடுவான் - சூரியன். எயிறு - பல். கேழல் - பன்றி. கோடு - கொம்பு. வடக்கோடுதேருடையான் - மன்மதன். வடக்கோடு தேர் - தென்றற்றேர். தெவ் - பகை. தில்லை ஊர் எனவும், தோல் உடை எனவும், மேற்கொள்ளல் ஆன் எனவுங் கூட்டி முடிக்க. மேற்கொள்ளல் - ஏறுதல். ஆன் - இடபம்.

இலக்கணங்கள் பயின்றபின் தம்பிரான் விரும்பியவாறே திருச்செந்தூர் சென்று தம்பிரானுக்குப் பகைவராய் இருந்த புலவரைக் கண்டு "நாம் இருவேமும் நிரோட்டயமகம் பாடுவாம். பாடினவர்க்குப் பாடமாட்டாதவர் அடிமை" என்னும் நிபந்தனைக்கு உடம்படுத்திக்கொண்டு பாடத்தொடங்கிச் செந்தூர்க் கந்தவேண் மீது நிரோட்டயமகமாக முப்பது பாடி முடித்தவர். முடித்தபின் ஒன்றும் பாட இயலாமல் நின்றவராகிய அந்தப் புலவரை அடிமையாக்கித் தம்பிரானிடஞ் சேர்த்தவர்.

சிவஸ்தல யாத்திரையிற் சென்றபோது சில தலங்களின்மீது பிரபந்தங்களுஞ் செய்தவர். சிலசில தனிநிலைக்கவிகளுஞ் செய்தவர். வெங்கைக்கோவை, பழமலையந்தாதி, வேதாந்தசூடாமணி, திருச் செந்தினிரோட்டயமகவந்தாதி, நன்னெறி, கூவப்புராணம், நால்வர் நான்மணிமாலை, கைத்தலமாலை, வெங்கைக்கலம்பகம், சோணசைலமாலை, தர்க்கபாஷை மொழிபெயர்ப்பு, பிரபு

லிங்கலீலே, சித்தாந்தசிகாமணி, சிவநாமமகிமை, வெங்கையுலா, சதமணிமாலே, நிரஞ்சனமாலே முதலிய பல நூல்கள் செய்தவர். சீகாளத்திப்புராணத்திலே நக்கீரச்சருக்கம், கண்ணப்பச்சருக்கம் எனவருஞ் சருக்கங்கள் இரண்டும் பாடினவர். வீரமாமுனிவரோடு வாதஞ்செய்து ஏசுமதநிராகரணம் என்னும் நூலும் பாடினவர் என்பர்.

வெங்கைக்கோவை

1. பொய்மே வருபுனங் காவலர் யாங்கள் புனநடுவே
வம்மே வறுமது காப்பவ னீவளே சூழ்வதெம்மூர்
நம்மே லருள்வைத் தளிப்பார் திருவெங்கை நாட்டிலுன்னூர்
கும்மேல் வரும்வளே செய்காட் டுவதொண் குலோத்துங்கனே.

இது குலமுறைகிளத்தல் என்னுந் துறைத்து. புனநடுவே வம்மேவுறுமது - புவனம். வ - வகரம். கும்மேல் வரும் வளே - குவளே. கு - குகரம்.

பழமலேயந்தாதி

2. தெய்வசி காமணி யேமணி கூடலிற் சென்ற விற்ற
மெய்வசி காமணி கண்டா பழமலே வித்தகமீன்
நெய்வசி காமணி மாவெனுங் கண்ணியை நெஞ்சகத்து
வைவசி காமணி னேவா தெனேயின்ப வாழ்வளித்தே.

சிகாமணி - முடிமணி. கூடல் - மதுரை. வசிகா- வணிகனே. நெய் வசி கா மணி மா எனும் - நெய்பூசிய வாளும், காவிலுள்ள அழகிய மாம்பிஞ்சின் பிளவும் என்னும். வை - வைத்துக்கொள். வசி - இரு: கா - பேணுதி. மணில் - பூமியில்.

நான்மணிமாலே

3. இடுகாட்டுண் மாத ரெலும்பிற் புரண்மால்
சுடுகாட்டி னுடுவாற் சுட்டி - னெடுகாட்டுஞ்

சம்பந்தா வென்புநின்பாற் றந்தாக்கிக் கொண்டிலனென்
கும்பந்தா னென்னுமுலைக் கொப்பு.

கைத்தலமாலை

4. *முன்ன மாலய னிந்திர னமரர்கண் முனிவர்*
பன்னு மாமறை தேடுதற் கரியநம் பரமன்
மின்னு லாவிய சடாடவிக் கடவுள் வீற்றிருப்ப
என்ன மாதவஞ் செய்ததோ வென து கைத்தலமே.

ஏசுமதநிராகரணம்

5 *அறிகிலை நரர்க்காய் வேண்டி யளித்தனன் மிருக மாதி*
இறையவ னென்று யோரீ யீன்றிட மலமீ தாருஞ்
சிறுபுழு விரையு றுதேன் செய்குவை யதனை நோக்க
அறிவரு தணிய தேகி யனந்தநீ யவையென் செய்வாய்.

திருச்செந்தில்

நிரோட்டக யமக வந்தாதி

தினகா னந்த நனியிலங் காநின்ற செய்யாநற்செந்
தினகா னந்த கிதியா யினனடற் சீரயிலேந்
தினகா னந்த கலைச்செற்ற தாளர் திகழ்கனகா
தினகா னந்த நடனர் தனயனென் சிந்தையனே.

நன்னெறி

என்று முகம னியம்பா தவர்கண்ணுஞ்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர் — துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழவோ
நாவிற் குதவு நயந்து.

96. சிவப்பிரகாசபண்டிதர்
(1864—1916)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள நீர்வேலி. குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு

ஒரு வருடத்துக்கு முன். இவர் சங்கர பண்டிதருக்கு மைந்தர். தந்தையாரிடத்திலே வட மொழியிலுள்ள இரகுவமிசம், மாகம் முதலிய காவியங்களையும், முக்த போதம் ஆசுபோதம் முதலிய வியாகரணங்களையும், தென் மொழியிலுள்ள தொல்காப்பியம் நன்னூல் முதலிய இலக்கணங்களையும், வேறு நூல்களையுங் கற்றுக் கொண்டவர். பாலாமிர்தம், பாலபாடம் முதலிய நூல்களும், திருச்செந்தூர்ப்புராணவுரை, சிவானந்தலகரித் தமிழுரை முதலிய உரைகளும், வேறு சில மொழி பெயர்ப்புகளுஞ் செய்தவர். கவிபாடுந் திறமுமுடையவர்.

பாலாமிர்தம்

இச்செயலா லீதுவரு மென்றுரா யாமலே
எச்செயலு மேலோ ரியற்றார்தாம்—இச்சையொடு
வல்லை யியற்றுவரேல் வந்திடுமே பாருத
அல்லலவர்க் கென்றே யறி.

97. சிவாக்கிரயோகிகள்

இவருடைய இருக்கை சோழமண்டலத்துள்ள சூரனூர்கோயில். சமயம் சைவம். ஆச்சிரமம் அதிவர்ணாச்சிரமம். இவர் சிவானுபூதிமான். சைவ பரிபாலகர். சிவஞான சித்தியாருக்கு ஒரு விருத்தியுரையும் சைவபரிபாடை முதலிய பல நூல்களும் செய்தவர். சிவஞான சித்தியாருரையினுலே காமிகம், வாதுளம் முதலிய மூலாகமங்களையும், மிருகேந்திரம், சிவதருமோத்தரம் முதலிய உபாகமங்களையும், நியாயம் முதலிய தரிசன சாத்திரங்களையும், பலவகைப் புராணங்களையும், தென்மொழியிலே தேவாரம், ஞானமிர்தம் முதலியவைகளையும் நன்குணர்ந்த பண்டிதர் என்பது பெறப்படுகின்றது. இவ்

வுரை வடமொழியுந் தென்மொழியுங் கலந்த நடையுடை யது. ஆகமச்சுலோகப் பிரமாணங்கள் பலவுடையது.

சைவபரிபாடையிலே பிரத்தியக்கம், அநுமானம் முதலிய பிரமாணங்களை விரித்து விளக்கி அவைவாயி லாகச் சிவபரத்துவமும் ஆன்மநிரூபணம் முதலியனவுந் தாபித்தவர்.

98 சிவாநந்தையர்
(1873—1916)

இவரூர் யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பழையைச் சார்ந்த பன்னாலை. இவர் தந்தையார் சபாபதி ஐயர். குலம் வேதியர் குலம். சமயம் சைவம். இவர் சுன்னுகம் குமாரசுவாமிப் புலவரிடம் பிள்ளைமைக் காலந்தொட்டுத் தமிழ் சமஸ்கிருதம் என்னும் இருமொழிகளையும் நன்கு கற்றவர். கேட்போர் நாணித் தலைகுனியும்படி சாதுரிய மாக விடையிறுக்கும் அதிதீவிர புத்தியுடையவர். சிதம் பரம் பச்சையப்பன் கல்லூரியில் சிலகாலம் ஆசிரியராக விருந்தவர். மகாவித்துவான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளைக்குப் பின் கற்பனாலங்காரம் அமையச் செய்யுளியற்றும் வன்மை பெரிதுமுடையவர். இவர் இயற்றிய நூல்கள் புலியூர்ப் புராணம், புலியூரந்தாதி முதலியன.

புலியூர்ப்புராணம்

ஆம்பல் பற்பல ஒருகையிற் பற்றின ரழிப்பார்
தேம்பப் புண்டரீ கம்பல வொருகையிற் சிதைப்பார்
சாம்பு மெல்லியர் மகளிரொன் றனைப்பது சழக்கோ
நாம்பு கன்றது பொய்யுரை டடுங்கொலோ நவிற்றீர்.

99. சிற்றம்பலநாடிகள்
(1531)

இவரூர் சோழநாட்டிலுள்ள சீர்காழி. குலம் வேளாளர்குலம். சமயம் சைவம். காலம் நானூற்றிருபது வருடங்களுக்கு முன். இவர் உமாபதி சிவாசாரியருக்கு மாணவகர். வடமொழி தென்மொழி என்னும் இரு மொழிகளிலும் வல்லுனர். சாத்திரக்கொத்து, திருச் செந்தூரகவல் என்னும் இருநூலுக்கும் ஆசிரியர். சாத் திரக்கொத்து என்பது சைவசித்தாந்த சாரமாய் விளங் கும் அருணூற்கோவை. இது சிவஞானபோதம் முதலிய நூல்களிற் காணப்படும் நுட்பமான கருத்துக்களை விளக்கமாக எடுத்துச் சொல்லும். திருச்செந்தூரகவல் சைவசித்தாந்தத்தின் ஆழமான கருத்துக்களை எல்லாம் அடக்கிக் கூறும் சிறந்த நூல்.

சுப்பிரமணியரகவல்

காப்பு

நந்தா ரலைவாயி னண்ணியல கேத்தவொளிர்
செந்தூர்த் திருவகவல் செப்புவே—னிந்துருஞ்
செஞ்சடையான் யானைச் சிரமுடையா னன்பிலக
ணெஞ்சடையான் பாத நினைந்து.

அகவல்

ஓமெனுந் தாரக வொண்பொருள் சிவனுக்
காமென மொழிந்தே யருட்குரு வானோன்
பொர்புறு பொதிய வெற்புறு முனிக்கு
நற்பொருள் விளக்கு ஞான தேசிகன்
பொய்வழிச் சமணப் புலையிருணீக்கிச்
சைவம் வளர்க்குஞ் சம்பந்தமூர்த்தி
... ...

100. சின்னத்தம்பிப்புலவர்
(1716—1780)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள நல்லூர். குலம் வேளாளர் குலம். சமயம் சைவம் காலம் இற்றைக்கு இருநூறு வருடங்களுக்கு முன் என்பர். இவர் வில்லவ ராயமுதலியாருக்கு மைந்தர். கலைமகளருளாற் கவிபாடுந் திறம் பெற்றவர் என்பர் வில்லவராய முதலியாருடைய வீடு யாது? என்று வினவி வந்த புலவர் ஒருவர்க்கு விடையாக அவர் வாசலிடைக் கொன்றைமரம் நிற்றலை அடையாளமாகச் சுட்டிக்கூறி அதனையும் வருணித்து வெண்பா ஒன்று பாடினவர்.

வெண்பா

பொன்பூச் சொரியும் பொலிந்தசெழுந் தாதிறைக்கும்
நன்பூ தலத்தோர்க்கு நன்னிழலாம்—மின்பிரபை
வீசுபுகழ் நல்லூரான் வில்லவரா யன்கனக
வாசலிடைக் கொன்றை மரம்.

இவர் இயற்றிய நூல்கள் மறைசையந்தாதி, கல் வளையந்தாதி, கரவைவேலன்கோவை, பருளைப்பள்ளு முதலியன. மறைசையந்தாதி வேதாரணியேசுரர் மேலது. கல்வளையந்தாதி சண்டிரிப்பாயிலே கல்வளையி லிருக்கும் விநாயகர் மேலது. கரவைவேலன்கோவை யாழ்ப்பாணத்திலே கரவெட்டியிலே செல்வராயிருந்த வேலாயுதப்பிள்ளை என்னும் பிரபு மேலது. பருளைப் பள்ளு யாழ்ப்பாணத்தில் பறளாய் என்னுமிடத்தி லுள்ள விநாயகர்மேலது இப் பிரபந்தங்களினால் இவர் பாரதம், இராமாயணம் முதலிய இலக்கியங்களையும், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் இலக்கணங்களையும் இனிதுணர்ந்தவர் என்பது புலப்படு

கின்றது கரவைவேலன்கோ வையிலே ஐம்பது கவி வரை செந்தமிழிற் பிரகடனஞ் செய்திருக் கின்ோம்.

மறைசையந்தாதி

மனக்காக்கை மூவர் தமிழ்க்குயில் வாணியை வைத்தகுழை
உனக்காக்கை வஞ்ச வினையேன் புக் கூவி லுரைத்ததமிழ்
சினக்காக்கை வாயி லுறங்குறற் சொல்லொக்குஞ் சேண்முகிற்சந்
தனக்காக்கை நீட்டு மறைக்காட்டில் வாழ்சிவ சம்பமனே.

மனக்காக்கை-மளக்காவல். குழை-காது. ஆக்கை-உடம்பு. காக்கை-காகம். சந்தனக்கா-சந்தனச்சோலை.

கல்வளையந்தாதி

பாலை வனத்தத்தைக் கியாரளிப் பாரென்று பன்னினளெம்
பாலை வனத்தடங் கார்கண்டு வெட்கும் படிவந்தமின்
பாலை வனத்தகன் றுள்கல் வளைப்பர மானந்தன்றன்
பாலை வனத்தள வும்மஞ்பி லாரிற் பதைபதைத்தே.

வனம் - அழகு. தத்தை - கிளி. ஐம்பாலை - கூந்தலை. வனம் - சோலை. ஐவனம் - மலைநெல்லு.

கரவைவேலன்கோவை

1. மாசால மோமணி வாய்நோகு மோநும் மாபியலின்
ஆசார மோவிர தத்தடை வோதிரை யானை . சுற்றுந்
தேசா திபர்மெச்சும வேலன் கரவைச் சிலம்பனையீர்
பேசா திருக்கும் வகையின்ன வாறென்று பேசிடுமே.

இது பேசாதிருக்கும் வகைவினுதல் என்னுந் துறைத்து. ஆசாரம் - ஒழுக்கம். சிலம்பு - மலை.

2. சுந்தர மாரன் கரவையின் வேலன் சுரும்பனையாய்
அந்தர நீள்முகில் கூன்மதி யார மணிந்தசங்கம்

மந்தர நேரிடை வார்குழல் வாணுதல் வாய்ந்தமணிக்
கந்தர மாமுலை யாமென தாவியின் கண்மணிக்கே.

இஃது இறைவிதன்மை இறையோனியம்பல். சுருப்பு - மலை. கந்தரம் - கழுத்து. நிரனிறை.

3. பூவென்ற மாவிலங் கேசனை நாளைக்குப் போர்புரிய
வாவென்ற வீரன் கரவையில் வேல மகிபதிமேற்
பாவென்ற வாணிப் பவளச்செவ் வாய்மடப் பாவையிவள்
ஏவென்ற காதள வோடிய பார்வை யிமைக்கின்றதே.

பூ - பூமி. இலங்கேசன் - இராவணன். மகிபதி - அரசன். வாணி - சொல். மடம் - இளமை. ஏ - அம்பு பார்வை, கண்.

பருளைப்பள்ளு

பண்ணிற் றேயப் பொருண்முடிப புககட்டி
பாடும் பாவலர்க் கீந்திட வென்றே
எண்ணிப் பொன்முடிப் புட்கட்டி வைத்திடும்
ஈழ மண்டல நாடெங்கள் நாடே.

101. சீத்தலைச்சாத்தனார்

இவரூர் சீத்தலை என்னுமூர் எனவும், குலம் வணிகர்குலம் எனவும், சமயம், பௌத்தம் எனவும் சிலர் கூறுவர். வேறு சிலர் சங்கத்திலே அரங்கேற்றப்படுங் கவிகளிலே வரும் சொல்வழு, பொருள்வழு முதலிய வழுக்களைக் கேட்கும்போதெல்லாஞ் சுற்றும் மனந்தாங்காது தந்தலையிலே காயமுண்டாகிச் சீ பிடிக்குமாறு குட்டிக்கொள்வர் எனவும், அதனாற் சீத்தலை என்னும் விசேடணம் பெற்றார் எனவும், திருவள்ளுவர்குறளிலே ஒருவழுவுங் கேட்கப்படாமையால் தலையில் குட்டிக்

கொள்ளல் இல்லாமைபற்றி மருத்துவன் தாமோதரனுர் பாயிரத்திலே "தலைக்குத்துச் சாத்தற்குத் தீர்வு" எனக் கூறினர் எனவுங் கூறுவர்.

இவர் கடைச்சங்கப்புலவருள் ஒருவர். தானிய வாணிகஞ் செய்தமை காரணமாகக் கூலவாணிகன் சாத்தனுர் எனவுங் கூறப்படுவர். கண்ணகிகதையை எடுத்துக்கூறி இளங்கோவடிகளைச் சிலப்பதிகாரம் என்னும் இலக்கியம் பாடும்படி செய்தவர். அதன் கதைத் தொடராகிய மணிமேகலை என்பவள் துறவுபூண்ட கதையை மணிமேகலை என்னும் பெயரொடும் இலக்கியமாகச் செய்தவர். அகம், புறம், நற்றிணை முதலிய தொகை நிலைகளிலுஞ் சிலசில கவி பாடினவர். மணிமேகலை நுண்மையைச் சிவப்பிரகாசசுவாமியும் வியப்பர்.

மணிமேகலை

இளங்கோ வேந்த னருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
வண்டமி ழகத்தின் மணிமே கலைதிறம்
ஆறைம் பாட்டி னுளறியவைத் தனனே.

வெங்கைக்கோவை

மந்தா கினியணி வேணிப் பிரான்வெங்கை மன்னவநீ
கொந்தார் குழன்மணி மேகலை நூனுட்பங் கொள்வதெங்ஙன்
சிந்தா மணியுந் திருக்கோ வையுமெழு திகொளினும்
நந்தா வுவாவை யெழுதலெவ் வாறு நவின்றருளே.

102. சுந்தரம்பிள்ளை
(1855—1897)

இவரூர் திருவாங்கூரிலுள்ள ஆலப்புழை. குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். இவர் ஆங்கிலம்,

தமிழ் என்னும் இருபாஷைகளிலும் விற்பன்னர். இவர் திருநெல்வேலியிலும், திருவாங்கூரிலும் பேராசிரியராக விருந்தவர். இவர் இயற்றிய நூல்கள் மனோன்மணீயம், நூற்றொகை விளக்கம் முதலியன. மனோன்மணீயம் என்பது ஆங்கில நாடகமுறையைத் தழுவிச் செய்யுள் நூலாக இயற்றப்பட்டது.

மனோன்மணீயம்

எல்லா மவனரு ளல்ல தில்லை
என்னனு பவமிது, மன்னிய விவ்வருள்
தன்னிடை மூழ்கித் தானெனன் மறந்து
நெருப்பிடை யிழுதென நெக்குநெக் குருகி
இருப்பவர் பிறர்க்கா யிராப்பக லுழைப்பர்,
ஒருபயன் கருதார், அருள்கரு துவதென்?
அகிலமும் தாங்கு மருளிலோ ரங்கமாச்
சகலமுஞ் செய்வர், அஃதவர் சமாதி
எங்கெலாந் துக்கம் காணினு மங்கெலாம்
அங்கங் கரையநின் றாற்றி "ஐயோ!
எம்மையுங் காத்த இன்னருள் இவரையுஞ்
செம்மையிற் காக்க," எனமொழி குளறி
அழுதவேண் டுவதே அன்றி
விழுமிய முத்தியும் வேண்டார் தமக்கே.

103. சுந்தரமூர்த்திநாயனர் (675)

இவரூர் நடுநாட்டிலுள்ள திருநாவலூர். குலம் வேதியர்குலம். சமயம் சைவம். இவருஞ் சமயகுரவருள் ஒருவர். சிவபிரானுடைய திருவருளாலே அவரைத் துதித்துப் பதிகங்கள் பல பாடினவர். அவையெல்லாந் தேவாரம் எனப்படும். பாடல்களாற் பல அற்புதங்களுஞ் செய்தவர். அவ்வற்புதங்களைத் தனிநிலைக்கவி ஒன்று கூறுகின்றது. அதனையுங் காட்டுதும்.

கட்டளைக்கலிப்பா

வெங்க ராவுண்ட பிள்ளையை நல்குமே
வெள்ளை யானையின் மீதேறிச் செல்லுமே
மங்கை பாகனைத் தூது நடத்துமே
மருவி யாறு வழிவிட நிற்குமே
செங்க லானது தங்கம தாக்குமே
திகழு மாற்றிட்டுச் செம்பொ னெடுக்குமே
துங்க வான்பரி சேரற்கு நல்குமே
தூய்ய நாவலூர்ச் சுந்தரர் பாடலே.

தேவாரம்

வாழ்வாவது மாயமிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்தபறிதான்
தாழாதறஞ் செய்மின் றடங் கண்ணான் மலரோனும்
கீழ்மேலுற நின்றான்றிருக் கேதார மனீரே.

104. சுப்பிரமணிய தீக்ஷிதர்.

(1696)

இவரூர் பாண்டி மண்டலத்துள்ள திருக்குருகூர். குலம் வேதியர் குலம். சமயம் சைவம். காலம் இருநூற்றிருபது வருடங்களுக்குமுன் என்பர். வடமொழி தென்மொழிகளிலுள்ள இலக்கியங்களையும் இலக்கணங்களையும் உரைகளையுங் கலக்கமறக் கற்று, இருமொழிக்கும் இலக்கணவொற்றுமை காட்டிப் பிரயோக விவேகம் என இலக்கண நூல் ஒன்று செய்தவர். பிரயோகம் — வழங்கு நெறி. விவேகம் - ஆராய்ந்துணர்தல்.

பிரயோக விவேகத்திலே சித்தாந்த கௌமுதி, சப்த கௌமுதி முதலிய வியாகரணங்களிலும், மாபாடியம், கையடம் முதலிய உரைகளிலுஞ் சொல்லப்பட்ட இலக்

கணங்களுள்ளே சிலவற்றை எடுத்துக் கூறுவர். அவற்றொடு தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களிலுஞ் சேனாவரையம் முதலிய உரைகளிலுஞ் சிலவற்றை ஒற்றுமையாக்கிச் சிந்தாமணி, சிலப்பதிகாரம், திருக்குறள். நாலடியார் முதலிய இலக்கியப் பிரயோகங்களுங் காட்டுவர். அரியனவாய வேறு விதிகளுங் கூறுவர். சிலருரைகளுக்கு மாறுங் கூறுவர்.

பரிமேலழகர் கூறிய சாதியொருமை, விகுதி பிரித்துக் கூட்டல் முதலிய பிரயோகங்களுக்கும் விதி கூறுவர். உயர்திணையிற் சாதியொருமைக்கு வடமொழி நைடத மொழிபெயர்ப்புங் காட்டுவர்.

நைடதமொழிபெயர்ப்பு

கவியொடும் புதனொடுங் கலந்து நாடொறும்
புவிபுகழ் நிடதர்கோன் புரவி யேழுடைக்
குவிதலைத் தேர்கடாய்க் குணுது நின்றெழும்
அவிகதிர் வானவ னழகு மேயினன்.

கவி, புதன் என்பன சிலேடை. கவி - புலவன், வெள்ளி. புதன் - அறிஞன், புதனெனும் கிரகம். கவி, புதன் என்பன ஒருமையாயினும் முறையே கவிஞர் என்றும், அறிஞர் என்றும் பொருள்கொள்ள வேண்டுதலிற் சாதியொருமையாயின.

105. சுப்பிரமணியமுனிவர்
(1785)

இவரூர் தொண்டைமண்டலத்துள்ள தொட்டிக்கலைசை. சமயம் சைவம். காலம் சிவஞான முனிவர் காலம். இவர் சிவஞான முனிவர்க்கு மாணவகர். இலக்கியலக்கணங்களுஞ் சித்தாந்த சாத்திரங்களும் நன்கு கற்

றவர்; சிலேடை, மடக்குத்திருக்கு முதலிய சொல்லணி களையெல்லாம் அமைத்துச் சுவை பெறுமாறு கவி பாடு தலிற் சிறந்தவர். இவரியற்றிய நூல்கள் துறைசைக் கோவை, கலைசைச் சிலேடை, சுப்பிரமணியர் விருத் தம், கேசவப் பெருமா ளிரட்டைமணி மாலை, கலைசைக் கோவை, தணிகை விருத்தம் முதலியன.

துறைசைக்கோவை

மன்னிரு வாணி துறைசையெங் கோமுத்தி வள்ளல்வெற்பிற்
பின்னிருங் கூந்தனின் மெச்சாய லின்வளம் பெற்றிடவே
முன்னிரு நான்குகண் ணனைச் சிறையிட்டு முற்றுங்கண்ட
பன்னிரு தோளனை யின்னமுந் தோகை பரிக்கின்றதே.

கலைசைச்சிலேடை

நாவலர்தம் புத்திரரு நண்ணும் பிரமாமுங்
காவியங்க ளாயுங் கலைசையே — தாவெள்ளைக்
கோட்டுக் குழையார் கொழுங்கயற்கண் மெல்லியலாங்
கோட்டுக் குழையார் குடி.

பிரமரம் வண்டு. காவியங்கள் என்னுஞ் சிலேடைக் குய் புத்திரர்கள் காவியங்களை எனவும், பிரமரம் காவிப் பூவிலுள்ள அழகிய தேனை எனவும் பொருள் கொள்க. கோட்டுக்குழை - சங்கக் குண்டலம். கோட்டுக்கு - கொம் புக்கு. உழை - பக்கம்.

கேசவப்பெருமா ளிரட்டைமணி மாலை

மாலைவிட் டோம்வன மாலையைப் பெற்றபின் வன்பிறவி
வேலைவிட் டோமுன்றன் வேலையைச் செய்தபின் வெய்யகிழிக்
காலைவிட் டோமுன்றன் காலைத் தொழுதபின் காதிலிட்ட
ஓலைவிட் டோடுங்கண் ணார்வாழ்தொட் டிக்கலை யுத்தமனே.

106. சுவாமிநாத தேசிகர்
(1696)

இவரூர் பாண்டி மண்டலத்துள்ள திருநெல்வேலி. குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். காலம் ஏறக் குறைய இற்றைக்கு இருநூற்றிருபது வருடங்களுக்கு முன் என்பர். இவர் திருவாவடுதுறையாதீனஞ் சேர்ந்து தீக்கையுங் கல்வியும் பெற்றவர். நல்லறிவும் நல்லொழுக் கமுமுடையவர். மயிலேறும் பெருமாட் பிள்ளையிடம் இளம்பூரணம், சேனுவரையம், நச்சினார்க்கினியம் என் னும் உரைகளோடு தொல்காப்பியத்தையும். மற்றை யிலக்கணங்களையும், கலித்தொகை முதலிய சங்கவிலக்கி யங்களையும், திருக்குறள் பரிமேலழகருரை திருக்கோவை யுரைகளையும், சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய மற்றையிலக்கியங்களையும் ஐயந்திரிபறக் கற்றவர். செப் பறைப் பதியில் வாழ்ந்த சிவத்துவிசராகிய கனகசபாபதி வேதியரிடம் வடமொழி வியாகரணங்களையுங் கற்றவர். பின்னர்ச் சித்தாந்த சாத்திரங்களையுங் கற்றவர். சங்கர நமச்சிவாயருக்கு வித்தியாகுரு.

இலக்கணக்கொத்து, செந்திற் கலம்பகம், தசகாரி யம் முதலிய நூல்கள் செய்தவர். இலக்கணக் கொத்திற் கூறும் இலக்கண விதிகளெல்லாம் நன்னூல் சின்னூல் முதலிய இலக்கணங்களிற் பெறப்படாதன. தொல்காப் பியத்தையும் வடமொழியிலக்கணங்களையுந் தழுவி வந் தன. திருக்குறள் திருக்கோவை முதலியவற்றில் அரும் பிரயோகங்கணையெல்லாம் மயக்கற விளக்குவன. வேற் றுமை வகைகளையும் வினைச்சொல்வகைகளையும் விசேட மாக விரித்துக் காட்டுவன சில. மொழி வருவித்து முடிக் கும் நெறி முதலியவைகளைப் பலவகையாற் கூறுவன சில.

சேந்திற்கலம்பகம்

பாடாத நாவும் பணியாத சென்னியும் பாவித்தன்பாய்
நாடாத வுள்ளமு நான்படைத் தானை கேழுஞ்சென்று
கூடா தயர்கதி கூடுவ னேகுன் றெறிந்தவைவேற்
சேடார் மதிற்செந்தி லாயென்கொ லோநின் றிருவருளே.

பணிப்பகை மயிலுஞ் சேவற் பதாகையும் பன்னிரண்டு
மணிக்குழை களுமோ ரா றுவதனமும் வாகைவேலும்
கணிப்பசங் கடப்பந் தாருந் தண்டையந் தாளுநாளுங்
கணிப்பருஞ் செந்தி லாயென் கருத்தைவிட் டகன்றிடாவே.

107. சூரியநாராயணசாஸ்திரி

(1871—1903)

இவரூர் பாண்டிநாட்டிலுள்ள மதுரை. குலம் வேதியர் குலம். சமயம் சைவம். இவர் சபாபதிமுதலியாரின் மாணவகர். ஆங்கிலமும் தமிழும் நன்கு கற்றவர். இவர் சென்னைக் கிறிஸ்தவ கலாசாலையில் தமிழ்ப் பேராசிரியராக விருந்தவர். தமிழ்மொழி வளர்ச்சியில் இணையிலா ஆர்வம் உடையவர். வசன நூல்களியற்றுவதிலும் வல்லுனர். ஞானபோதினி என்னும் பத்திரிகைக்கு ஆசிரியராகவிருந்து அதைச் சிறப்புற நடாத்தினவர். இவர் ரூபாவதி மானவிசயம், கலாவதி, நாடகவியல், மதிவாணன், தமிழ்வரலாறு முதலிய நூல்களுக்கு ஆசிரியர்.

ரூபாவதி, மானவிசயம், கலாவதி என்னும் மூன்றும் மேனாட்டு நாடக நூல்முறையைப் பின்பற்றி எழுதப்பட்ட நாடகநூல்கள். நாடகவியல் வடமொழியிலும் ஆங்கிலத்திலும் உள்ள நாடகலக்கணங்களைத் தொகுத்துக் கூறுவது. மதிவாணன் என்பது உயரிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்ட ஓர் வசனநூல். தமிழ்மொழி வரலாறு என்பது ஆங்கிலமொழி ஆராய்ச்சி நூல்முறை

யைப் பின்பற்றித் தமிழில் இயற்றப்பட்ட சிறந்த நூலாகும்.

இவருடைய செய்யுள் இயற்றும் வன்மையை பின்வரும் செய்யுள் காட்டும்.

ஐயோ தமிழ்மொழியே ஐயோ தமிழ்நாடே
ஐயோ மதுரை யருநகரே எம்முடைய
ஐயன் சபாபதியை அன்னே இழந்தமையாற்
றுய்ய மதியிழந்த தாலவுடம் பாயினிரே.

இது தமது ஆசிரியர் சபாபதி முதலியார் இறந்த போது பாடியது.

108. செகராசசேகரமன்னவர் (1410)

இவர் நகரம் யாழ்ப்பாணத்துள்ள நல்லூர். சமயம் சைவம். காலம் ஏறக்குறைய முந்நூறு வருடங்களுக்கு முன் என்பர். இவர், கனகசூரியச்சிங்கையாரியமன்னவர்க்கு மைந்தர். பரராசசேகர மன்னவர்க்குப் பின்னவர். பாண்டிமண்டலஞ் சென்று பலவகைக் கலைகளையும் படித்தவர் என்பர். காவியசாத்திர விநோதர். பாண்டி நாடு முதலிய தமிழ்நாடுகளிலிருந்து பலவகை நூல்களையும் வருவித்துத் தொகுத்துப் பாடசாலைகளும் ஆங்காங்கு வைத்துப் பரவச் செய்தவர். புலவர்களைக் கூட்டித் தமிழ்ச்சங்கமும் ஒன்று தாபித்து நடாத்தினவர். புலவர்களைக்கொண்டு பலவகை நூல்களுஞ் செய்வித்தவர். தாமாகவுஞ் சிலநூல்கள் செய்தவர். ஐந்தருவும் நவநிதியும் குலமணியும் பொன்முகிலும் ஆவும் ஒன்றாய் வந்தனைய கொடைவள்ளல். செய்வித்த நூல்கள் செகராசசேகரமாலை, தக்கிணகைலாசபுராணம் முதலியன. இவையிரண்டும் முறையே சோமையராலும் பண்டிதராசராலும் இயற்றப்பட்டன.

தக்கிணகைலாசபுராணம்

உதய தாமரை யொண்கதி ரென்னவென்
இதய தாமரை மீதி லிலங்குவ
மதக டாமழை வாரண மாமுக
முதல்வ ஞேங்கா மூர்த்தி பதாம்புயம்.

109. சேக்கிழார்நாயஞர்
(1133)

இவரூர் தொண்டைமண்டலத்துள்ளகுன்றத்தூர். குலம் வேளாளர்குலம். மரபு சேக்கிழார்மரபு. சமயம் சைவம். காலம் * அநபாய சோழராசாவின் காலம். பிள்ளைத்திருநாமம் அருண்மொழித்தேவர் என்பது சேக்கிழார்மரபினை விளக்கிய காரணத்தாற் சேக்கிழார் எனப் பட்டவர். கல்வியறிவொழுக்கங்களிலுஞ் சிவபத்தி யிலுஞ் சிறந்தவர்.

சிதம்பரத்திலே ஆனித்திருவிழா ஒன்றிலே சுவாமி தரிசனத்தின்பொருட்டுச் சேர சோழ பாண்டியர் மூவரும் வந்தனர். தொண்டைநாட்டரசரும் வந்தனர். நால்வரும் ஓரிடத்திற் கூடினர். நால்வருங் கூடியிருக்குஞ் சவை யிலே புலவரும் ஒருவர் வந்தனர். அப் புலவர் ஔவை யார் பாடிய "வேழமுடைத்து மலைநாடு" என்னும் வெண் பாவை யாவருங் கேட்கும்படி எடுத்துச் சொன்ஞர்.

வெண்பா

வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்துப்—பூழியர்கோன்
தென்ஞடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை
நன்ஞடு சான்ருே ருடைத்து.

---

* அநபாயனை முதலாங் குலோத்துங்கன் எனவுங் கூறுவர்.

இதனைக் கேட்ட அரசர் மூவரும் எங்கள் நாட்டிற் சான்ருேர் இல்லையா? "தொண்டைநன்ருடு சான்ருேருடைத்து" எனச் சொல்லியவாறென்னே? என்று சற்றே நாணமுற்றுத் தொண்டைநாட்டரசரை நோக்கி உமது நாட்டிற் சான்ருேருளர் என்பதைக் கண்கூடாகக் காட்டக்கூடுமா? என்று கேட்டனர். அதற்குத் தொண்டைநாட்டரசர் சான்ருேரிருத்தலைத் தக்க வழி கொண்டு நீவிர் அறிதலே தகுதியாகும் என்றனர்.

பின்னர் நூலளவே யாகும் நுண்ணறிவை நோக்கியே ஓருவரைச் சான்ருேர் எனத் துணிதல் உத்தமமாகும் என யாவரும் ஒருப்பட்டுப் பூமியிற் பெரிது யாது? கடலிற் பெரிது யாது? மலையிற் பெரிது யாது? என மூன்று வினுக்களை எழுதி இவ்வினுக்கள் மூன்றுக்கும் எவர் விடை சொல்வாரோ அவரே சான்ருேராவர்; ஐயமில்லை என உறுதி கூறி அவ்வினுக்களையும் அங்கங்கே அனுப்பினர். பலரும் பெற்றனர்,

யாவரும் விடை எழுதாராக இந்தச் சேக்கிழார் நாயனுரே அந்த வினுக்கள் மூன்றுக்கும் மூன்று திருக்குறள்களை விடையாக எழுதிச் சான்ருேரிவர் என அவர்களால் அறியப்பட்டவர். அக்குறள் வெண்பாக்களையுங் காட்டுதும்.

பூமியிற் பெரிது யாது?

1. காலத்தி ஞற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

கடலிற் பெரிது யாது?

2. பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

மலையிற் பெரிது யாது?

3. நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம்
மலையினு மாணப் பெரிது.

விடை எழுதிய திறத்தைப் பாராட்டி இவர் கையி லேற்றித் திருக்கைவழக்கம் என்னும் நூலிலே கம்பரும் "மண்ணிற் கடலின் மலையிற் பெரியதென—எண்ணி யெழுதிக் கொடுத்த வேற்றக்கை" என்பர். இதனைச் சுட்டித் தொண்டைமண்டலசதகத்திலே படிக்காசுப் புலவருங் கூறுவர்.

தொண்டைமண்டலசதகம்

அஞ்சொன் முதுதமிழ் நால்வேந்தர் வைகு மவையிலவ்வை
செஞ்சொற் புனைகின்ற வேளாளர் வைகுஞ் சிறப்புடைத்தால்
விஞ்சிய வேழ முடைத்தெனும் பாடல் விளம்பிப்பினும்
வஞ்சி வெளிய வெனும்பா மொழிதொண்டை மண்டலமே.

சைவசமயிகள் சிலரும் அநபாய சோழராசனுஞ் சீவகசிந்தாமணி என்னும் ஆருகதகாவியத்தை மேல தாகக் கருதிப் படித்து மகிழ்தலை நோக்கி அதனைப் படித் தல் அதிபாதகம் என்று தடுத்துத் திருத்தொண்டர் கதையை எடுத்துக் கூற அதனைக் கேட்ட அரசன் மகிழ்ந்து "இக்கதையைப் பெருங்காப்பியமாகச் செய்து தாரும்" என்றபடி சிதம்பரஞ் சென்று சபாநாயகர் திரு வருளாற் கிடைத்த "உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்" என்னும் அடியை முதலாகவைத்து அக்கதையைப் பெருங்காப்பியமாகப் பாடினவர். அது திருத்தொண்டர் புராணம் எனவும், பெரியபுராணம் எனவும் சொல்லப் படும். பெரியர்!-புராணம் பெரியபுராணம். பெரியர் - தொண்டர். புராணம் - பழங்கதை.

பெரியபுராணம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

110. சேரமான்பெருமாணுயனுர் (437)

இவருடைய இராசதானி மலைமண்டலத்துள்ள மகோதை எனப்படுங் கொடுங்கோளூர். குலம் சேரமன்னர்குலம். சமயம் சைவம். இவர் திருத்தொண்டர்களுள் ஒருவர். பாணபத்திரர் பொருட்டுச் சிவபிரான் பாடிய "மதிமலிபுரிசை மாடக்கூடல்" என்னுஞ் சீட்டுக்கவி பெற்றவர். திருக்கைலாசஞானவுலா, பொன்வண்ணத் தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திருவந்தாதி முதலிய பிரபந்தங்கள் செய்தவர்.

பொன்வண்ணத்தந்தாதி

பொய்யார் நரகம் புகினுந் துறக்கினும் போந்துபுக்கெய்
குய்யா வுடம்பினோ டூர்வ நடப்ப பறப்பவென்றா
நையா விளியினு நானில மாளினு நான்மறைசேர்
மையார் மிடற்றா னடிமற வாவரம் வேண்டுவனே.

111. சேறைக்கவிராசபிள்ளை

இவரூர் சோழமண்டலத்துள்ள சேறை என்றும், குலம் கருணிகர்குலம் என்றுங் கூறுவர். சமயம் சைவம். இவர் இலக்கிய லக்கணங்கள் நன்கு கற்றவர். ஆசுகவிராயரெனும் பேரும் பெற்றவர். காளத்திநாதருலா, அண்ணமலையார்வண்ணம், சேயூர்முருகனுலா, வாட்போக்கிநாதருலா முதலிய பிரபந்தங்கள் செய்தவர். இப்பிரபந்தங்கள் சிலவற்றிலே சிலேடை, மடக்கு, திருக்கு முதலிய அணிகளும் அமைத்தவர். சேயூர்முருகன் பிள்ளைத்தமிழிலே "கவிராசனிப்பிரான் மிசைசெய்த திருவுலாக் கவிவெள்ளை கற்றுருகலாம்" எனச்சொல்லும் புகழும்படைத்தவர். அண்ணமலையார்வண்ணத்தில் ஒருகலையிலே சில சிவதலநாமங்களைச் சிறிதும் அடைமொழியின்றித் தொடுத்துப் பாடினவர்.

காளத்திநாதருலா

காருலா வுஞ்சோலைக் காளத்தி யாள்வார்க்குச்
சீருலா விண்ணப்பஞ் செய்யவே—பாரில்
விளங்கருளஞ் சந்தியான் வேழமுக மானன்
களங்கருளஞ் சந்தியான் காப்பு.

அஞ்சந்தியான் என்பது தலவிநாயகர் நாமம்: களங்கர் உளம் - குற்றமுடையார் மனம். சந்தியான் - இணங்காதவன்.

கலிவெண்பா

1. *வைகைக் கெதிரே வருமேடன் சைவத்தார்க்*
குய்கை மறையோ ருவனிடவன்—செய்கை

2. *இதமிதுநந் தொண்டர்க் கெனத்தூது சென்றோன்*
கதிரொளிவீ சுங்கற் கடகன்—உதயகலைச்

3. *சிங்கப் புலியன் சிலர்க்கன் னியனானோன்*
சொங்கொண்ட சங்கத் துலாத்தினன்—நங்கை

4. *விரிச்சிகத்தா ராதிப்பான் வீணைத் தநுசன்*
காத்திலிசை பாய்மகரக் காதான் — புரத்தகையின்

5. *விற்காத கும்பன் விதிககுமீ னங்கொடுத்தோன்*
எற்சாம கீத விராசியான்.

இது காளத்திநாதருலாவிலே பன்னிரண்டு இராசிகளுந் தொனிக்கப் பாடிய பாகம். மேடன், இடவன், மிதுநம் முதலியன நோக்குக. வரும் ஏடன் - வரும் ஏடுடையவன். உவனிடவன் - உபநிடத முடையவன். இதம் - நன்மை. சொம் - பொருள். சங்கத்து உலாத்தினன்; விரிச்சு - விரித்து. இகத்து - இங்கே. வீணைத் தநுசன் - இராவணன். சாதகும்பம் - பொன்: விதிக்கும் - பிரமாவுக்கும். ஈனம் - கேடு. இராசி - கூட்டம்.

அண்ணாமலையார்வண்ணம்

திருக்கோயில் திருவதிகை திருச்செய்ஞல் திருமருகல்
திருத்தோணி திருவரதை — வஞ்சி பனையூர்
திருச்சேறை தருமபுர மறைக்காடு திருமயிலை
நாக்கோயில் தினைநகரம் — அன்பில் கடவூர்
திருக்காவை பொதியமலை கழிப்பாலை கயிலைமலை
தெளிச்சேரி யிடைமருது — தஞ்சை வழுவூர்
சுழியல் புனவாயில் கூடலுறைவார்.

இவ்வளவும் ஒரு கலை, இங்கே அடைமொழியின்றிச் சில தல நாமங்களை அடக்கியவாறறிக.

112. சேனாதிராசமுதலியார்
(1750—1840)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள இருபாலை. குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு எழுபத்தைந்து வருடங்களுக்கு முன். தந்தையார் நெல்லைநாதமுதலியார். இவர் கூழங்கைத் தம்பிரானுக்கும் மாதகற் சிற்றம்பலப்புலவர்க்கும் தந்தையார்க்கும் மாணவகர். ஆறுமுகநாவலர் சரவணமுத்துப்புலவர் அம்பலவாண பண்டிதர் முதலியோருக்கு ஆசிரியர். இலக்கிய லக்கண வுணர்ச்சியிலுங் கவிபாடும் பயிற்சியிலுஞ் சிறந்தவர். அக்காலத்திலே இலக்கணக் கல்வி யாழ்ப்பாணத்திற் பரம்பச் செய்தவர். அவதானத்திலும் நினைவிலும் மிக்கவர். அதிகாரம், செல்வம் முதலியவற்றிலுந் தக்கவர்.

வண்ணை வைத்தியலிங்கச்செட்டியார் முன்னிலையிலே வடநாட்டுப்புலவரொருவர் அரங்கேற்றிய கவியை ஒருமுறை கேட்டு நினைத்துக்கொண்டு இது பழம்பாட்டு என்று படித்துக்காட்டி அசதியாடி அவரகந்தை போக்கியபின் உள்ளது கூறித் தக்க பரிசிலுங் கொடுப்பித்தவர்

என்பர். இச்செயலைச் சிலர் இவர் தந்தையார் மேலேற்றுவர். நல்லைவெண்பா, நல்லைக்குறவஞ்சி, நல்லையந்தாதி, நீராவிக்கலிவெண்பா, ஊஞ்சற்பதிகங்கள் முதலிய பல பிரபந்தங்கள் செய்தவர். தமிழகராதி தொகுத்தோருள்ந் தலைவர். நல்லைவெண்பாவிலே அரிதுணரற்பாலனவாகிய திரிசொற்களும் அமைத்துத் திருக்கும் மடக்குஞ் சிலேடையும் பரக்கக் கூறுவர். வானவருலகைச் "சந்திரவைப்பு" என்பர். வானவில்லைச் "சிதமுனி" என்பர். பிரணவத்தை "மகரவரை மாத்திரை சேர் — நீட்டுமொகரம்" என்பர். காவியை - "காப்பின் விகாரம்" என்பர்.

நல்லைவெண்பா

பொன்னங் கலையார் விலோதனத்தான் மாதிரம்போய்த்
துன்னியசீ ராலுமைநேர் தூநல்லை—முன்னயனைத்
தாரகங்க டாவினன் றுவரக்கட் பீலியைச்சூர்
போரகங்க டாவினன் பூ.

முன்னீரடியும் உமைக்கும் நல்லைக்குஞ் சிலேடை. பொன் - இலக்குமி. கலையார் - சரசுவதியார். பொன்னங்கலை - பொற்சீலை. விலோதனம் - கண், கொடி. மாதிரம் - மலை, திக்கு. தாரகம் - பிரணவம். கடாவல் - வினவுதல், செலுத்தல். தாவரம் - உடம்பு. பீலி - மயில்.

நல்லைக்குறவஞ்சி

திருவாரு நல்லைநகர்ச் செவ்வேற் பெருமானுர்
இருவாலைச் குயத்தியரோ டின்பமுற்று ரம்மானை
இருவாலைக் குயத்தியரோ டின்பமுற்று ராமாயின்
தருவாரோ சட்டிகுடஞ் சாறுவைக்க வம்மானை
தருவார்காண் சட்டிகுடஞ் சாறுவைக்க வம்மானை.

குயத்தியர் - ஸ்தனமுடையவர். சட்டி - ஒரு திதி. குடம் - கும்பமாதம். சாறு - விழா. இங்கே இருபாலையி

லிருக்குங் குயத்தியருஞ் சட்டிகுடமுஞ் சாறுந் தொனித்தல் காண்க.

ஊஞ்சல்

கனகநவ ரத்நமணி மவுலி மின்னக்
கவின்கொ ணெற்றிச் சுட்டியிளங் கதிர்கள்காலப்
பனகமணிக் குண்டலங்கள் பசலை வெல்லப்
பணித்தரளத் தொடைநிலவின் பரப்பை வெள்ள
அனகவிடைக் கிரங்கியமே கலைக ளார்ப்ப
அடியவரை யஞ்சலெனச் சிலம்பு மார்ப்பத்
தினகரமண் டலமளவு மதில்சூழ் கோவைத்
தேவிதிருக் கண்ணகையே யாடீ ரூஞ்சல்

வெண்பா

நாநா திராவிடமு நன்னிலக்க ணுறுநச்செய்
சேனா திராசனையோ செத்ததென்னீர்—வானுதி
பொன்னிலத்து முண்மை புகனூ லுரைப்பதற்காய்
இந்நிலத்தை விட்டெடுத்த தே.

இது முதலியார் இறந்தனர் என்றபோது உடுப்பிட்டிக் குமாரசுவாமி முதலியார் பாடியது என்பர்.

இக்கவிகளுட் சில இவர் வழித்தோன்றலும் அரசினர் ஆசிரிய கல்லூரித் தமிழ்ப் பண்டிதருமாகிய ச. கந்தையபிள்ளை தந்தன.

113. சேனுவரையர்

இவர் தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்குச் சிறந்த விருத்தியுரை ஒன்று செய்தவர். இவருரை சேனுவரையம் எனப்படும். இவ்வுரையோ அரிதுணரற்பாலது. வாக்கிய நடையுங் கார்க்கசியம். வடமொழியிலக்கண வுரைநடையையுந் தர்க்கநூ லுரைநடையையுந் தழுவிச் செல்வது. ஐயந் தோன்றுமிடமெல்லாம் ஆசங்கித்து விடை கூறுமுகத்தால் ஐயம் நீக்குவர். சிலவிடங்

களில் வடநூல் முடிபுங் கூறுவர். சிலவிடங்களில் உரையாசிரியருரைக்கு மறுப்புங் கூறுவர். இவர் உரையைச் சிவஞான முனிவர் பாராட்டிச் சூத்திர விருத்தியிலே "வடநூற் கடலை நிலைகண்டறிந்த சேனாவரையர் எழுத்ததிகாரத்திற்கு உரைசெய்தாராயின் இன்னோரன்ன பொருளனைத்துந் தோன்ற ஆசிரியர் கருத்துணர்ந்து உரைப்பர்" என்பர். பிரயோக விவேகநூலார் "வாக்கியதீயம், அரிபீடிகை, ஏலாராசியம் முதலாயின வழங்குங் காலத்து அவ்வுரை நோக்கிச் சேனாவரையர் முதலாயினோர் தொல்காப்பியத்திற்கு உரையெழுதினோர் என்க" என்பர்.

114. சோமசுந்தர நாயக்கர் (1846—1901)

இவரூர் சென்னையைச் சார்ந்த சூளை. சமயம் சைவம். இவர் வடமொழி தென்மொழி என்னும் இரு மொழிகளையும் நன்கு கற்றவர். சுவாமி வேதாசலம் இவருக்கு மாணவகர். இவர் சைவசமயப் பற்றுப் பெரிதுமுடையவர். வைதிக சைவசித்தாந்த சண்டமாருதம் என்னும் பட்டம் பெற்றவர். சைவத்தை நாட்டி வைணவத்தைக் கண்டித்தவர். இவர் ஆசாரியப் பிரபாவம், சித்தாந்த சேகரம், சிவாகமப் பஃறொடை வெண்பா திருத்தணிகைப் பதிகம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

திருத்தணிகைப்பதிகம்

பொய்ப்போத விருளிரியப் புக்கெனுடல்
பொருளாவி பொருந்த வாங்கி
மெய்ப்போதங் காட்டிமுடி மேனீட்டி
அடிநாளு மேவச் சூட்டி
எய்ப்பேது மறவோட்டி இன்பநிலை
கூட்டியரு ளெந்தா யுன்னைக்
கைப்போதக் கொண்டுதிருத் தணிகையடைந்
தேனின்று காணு மாறே.

115. ஞானப்பிரகாசசுவாமி

(1616)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள திருநெல்வேலி. குலம் வேளாளர்குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு முந்நூறு வருடங்களுக்கு முன் என்பர். இவர் அப்பொழுதையரசர் வரியால் வரும் பசுக்கொலைக்குப் பயந்து யாழ்ப்பாணம் விட்டுச் சிதம்பரஞ் சென்று வசித்தவர். சிதம்பரத்திலிருந்து கௌடதேசஞ் சென்று தர்க்கம், வியாகரணம், மீமாஞ்சை முதலிய சாத்திரங்கள் கற்றுக்கொண்டு பின்னர்த் திருவண்ணுமலையாதீநம் வந்து சந்நியாசம் பெற்றுக் காமிகம் வாதுளம் முதலிய ஆகமங்களுநங் கற்றவர். சிதம்பரத்திலே ஞானப்பிரகாசம் என்னுந் திருக்குளமுந் தோண்டினவர். ஆறுமுக நாவலர் மரபின் முன்னுளோருள் ஒருவர்.

வடமொழியிலே பிரமாணதீபிகை, பிராசாததீபிகை, சித்தாந்தசிகாமணி முதலிய நூல்களும், பவுட்கராகமவிருத்தி, சிவஞானபோதவிருத்தி முதலிய உரைகளும், தென்மொழியிலே சித்தியாருக்கு உரையுஞ் செய்தவர். சித்தியாருரையிலே காமிகம், வாதுளம், மதங்கம் முதலிய ஆகமங்களையும், தொல்காப்பியம், ஞானுமிர்தம், கோயிற்புராணம் முதலிய தமிழ்நூல்களையும் பிரமாணமாகக் காட்டுவர் வடசொற்றொடர்களையும், ஆகமவாக்கியங்களையும் பெரிதும் புணர்ப்பர். அரிதுணரற்பாலது.

சித்தியுரைவணக்கம்

சிவமுற நமக்கு முந்தித் தந்திவத் திரளைச் சிந்தித்
தவமையில் சிவளைப் பில்லா வுமைகுரு குலங்கண் மற்றென்
இவர்களை வணங்கி யின்பச் சிவஞான சித்திக் கேற்ப
நவமுறு முறை யுரைப்பா முன்னுரை நலங்கொ ளார்க்கே.

116. தத்துவராயர்

(1100)

இவரூர் சோழநாட்டிலுள்ள வீரை. குலம் பிராமண குலம். கோத்திரம் மாதவாசாரியர் கோத்திரம். சொரூபானந்தர் என்பவர் இவருடைய நண்பரும் ஆசிரியருமாவர். இவரியற்றிய நூல்கள் சிவப்பிரகாச வெண்பா, தத்துவாமிர்தம், திருத்தாலாட்டு, பிள்ளைத்திருநாமம், வெண்பாவந்தாதி, கலித்துறையந்தாதி, தசாங்கம், சசிவர்ணபோதம், நெஞ்சுவிடு தூது முதலிபன. இவரியற்றிய நூல்களுள் அரிய வேதாந்த சித்தாந்தக்கருத்துக்கள் அடங்கிக் கிடக்கின்றன.

தத்துவாமிர்தம்

நித்த சுத்த புத்த நிட்க ளத்த தெத்தை யத்தையே
பததி யுற்ற சித்த மத்தின் மெய்ப்ப தெத்தை யத்தையே
முத்த பெத்த முற்று மற்ற முத்த மெத்தை யத்தையே
மெத்த தத்து னற்ப தத்தை யுச்சி வைத்த னத்தமே.

117. தலைமலைகண்டதேவர்

இவரூர் பாண்டிமண்டலத்திலே நயினார்கோவிலை அடுத்துள்ள காடடார்ந்தகுடி என்றும், குலம் மறவர் குலம் என்றும், இவர் புட்படுத்தல், ஆறலைத்தல் முதலிய சாதித்தொழில்களைப் பாவத்தொழில்கள் என்று கைவிட்டுப் பரமனையே பாடித் திரவியம் பெற்றுச் சீவனஞ்செய்தவர் என்றுங் கூறுவர். இவர் பல தனிநிலைக் கவிகளும், பாண்டிமண்டலத்துள்ள புடைமருதூரில் வீற்றிருக்குஞ் சிவபிரான்மீது ஓர் யமகவந்தாதியும் பாடினவர்.

மருதூர்யமகவந்தாதி

ஒருகொம் பிருபத மும்மத நால்வா யொரைந்துகரம்
பெருகுஞ் செவிசிறு குங்கண் புகர்முகம் பெற்றதந்தி
முருகன் றமைய னுமைமைமர்த லைந்து முகன்மகன்மான்
மருகன் றுணைநம் மருதூரந் தாதி வருவிக்கவே.

118. தாமோதரம்பிள்ளை (1832—1901)

இவர் யாழ்ப்பாணத்திற் சிறுப்பிட்டி வைரவ நாதர் குமாரர். குலம் வேளாளர்குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு முன். இவர் அங்கிலமொழி கற்று வித்தியாபண்டிதர் என்னும் பட்டமும் பெற்றுச் சென்னைமாநகரிலே அதிகாரபுருடராய் நெடுநாள் வசித்தவர். தமிழ்மொழியிலுந் தக்க பாண்டித்தியம் பெற்றவர். பாரதம் இராமாயணம் முதலிய இலக்கியங்களிலும், யாப்பருங்கலக்காரிகை நன்னூல் தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களிலும், திருக்குறள் நாலடியார் முதலிய நீதிநூல்களிலும், சைவ நூல்களிலும் பெரும்பயிற்சியுடையவர். தமிழ்மொழிக்கு வித்தியாகுருவாகச் சுன்னாகம் முத்துக்குமாரகவிராசரைக்கொண்டவர். அச்சிட்ட நூல்களின் பதிப்புரை தோறும் கவிகளால் அவர்க்கு வணக்கங் கூறுவர்.

வீரசோழியப்பதிப்புரை

1. எழுத்தொடு விழுத்தமிழ் பழுத்தசெந் நாவினன்
முழுத்தகை யேற்கவை யழுத்தியோன் சுன்னா
கத்துயர் மரபினோன் முத்துக்கு மார
வித்தக னடிதலை வைத்துவாழ்த் துவனே.

பலவகைக் கவிகளையும் பாடுந்திறத்திற் சிறந்தவர். சிறப்புக்கவியுந் துதிகவியுஞ் சீட்டுக்கவியும் பிறகவியுமாகத் தனிநிலைக்கவிகள் பல பாடினவர். உரையும் பாட்டுமாகச் சைவமகத்துவம், கட்டளைக் கலித்துறை என்னும் நூல்களும் வேறு சில நூல்களுஞ் செய்தவர். சைவமகத்துவத்திலே பரசமயவாதிகள் கூறும் வினாக்களுக்கு விடைகளும் பரசமயகண்டனமுங் கூறுவர். கட்டளைக்கலித்துறையிலே வரற்பாலனவாகிய உத்தமமோனை முதலியனவும், உத்தமச்சீர் முதலியனவும், பிறவுங் கட்டளைக்கலித்துறையில் வித்தகம்பெற விரித்துக் கூறுவர். சிவசம்புப்புலவர் கவிகளையும், வேதநாயகம்பிள்ளை கவிகளையுந் தமது கவிகளால் வியந்து கூறுவர். அவர் கவிகளாலும் அங்ஙனம் வியந்து கூறப்படுவர்.

புலவர்கவியைப்புகழ்தல்

2. ஆரூர னில்லையென் காரிகை யாலிவ் வவனிதொழப்
பேரூரு மாறு முகநா வலர்பெரு மான்பெருமை
சீரூரு மாறு தெரித்தாய் சிவசம்பு தேசிகநிற்
காரூரி னேரின்றன் றேநின்சொல் வன்மை யறிந்தனனே.

சிவசம்புப்புலவர்கவி

கற்றாரைக் கற்றவர் காமுறு வாரெனக் கண்டமொழிக்
குற்றா யிலக்கிய மாகவென் பாவை யுவந்துகவி [டேன்
சொற்றாய தென்றலைக் கண்ணது னன்பு தொடர்ந்துகொண்
மற்றா ரெனக்கிணை தாமோ தரம்பிள்ளை மன்னவனே.

வேதநாயகம்பிள்ளைகவி

நீடிய சீர்பெறு தாமோ தரமன்ன !நீள்புவியில்
வாடிய கூழ்கண் மழைமுகங் கண்டென மாண்புறநீ
பாடிய செய்யுளைப் பார்த்தின்ப வாரி படிந்தனன்யான்
கோடி புலவர்கள் கூடினு நின்புகழ் கூறரிதே.

வேறுஞ் சில புலவர் கவிகளால் வியந்து கூறப் பட்டவர். இவர் கவிகளிற் சைவமகத்துவ விருத்தங் களுள் ஒன்றும், சுப்பிரமணிய தேசிகர் மீது பாடிய கட்டளைங்கலித்துறைகளுள் ஒன்றும், அம்பலவாண பண்டிதர் மீது பாடிய கட்டளைக்கலித்துறைகளுள் ஒன்றும், புத்திரசோகத்திற் பாடிய கட்டளைக்கலித் துறைகளுள் ஒன்றும் இங்கே காட்டப்படும்.

சைவமகத்துவம்

3. பூவின்மெய்ம்மத மிதுவிது பொய்யெனப்
புகலுவ தரிதேயோ
நாவினுன் மனத்தா னவின்றுணர்வரு
ஞானசாகரமா மெய்த்
தேவவாசகம் யுத்தியிற் கதீதமாந்
திறம்புமோ மனுவாலே
மேவு மெவ்வெவ வேதமூந்திறம்புநல்
விஞ்ஞையா லளப்பின்னே.

சுப்பிரமணியதேசிகர்

4. விண்ணுடு கைலை வழித்தே சிகர்வெவ் வினைக்கு நெற்றிக்
கண்ணுன சுப்ர மணிய சுவாமிகள் கான்மலரை
நண்ணுத் தலையி னசைதீரத் தாங்கநற் கோகழிவாய்
மண்ணுய்ப் பிறந்தில னேயைய கோவிந்த வையகத்தே.

அம்பலவாணபண்டிதர்

5. வாக்கிற் சரச்வதி வாய்மைக் கரிச்சந்திர மன்னனெடுந்
தூக்கு நடுவு நிலைமையிற் சானவி தூய்மையிற் பொன்
ஆக்கந் தனிலள காபதி மார னழகிலிந்தான்
தேக்கும்வை போகத்தி லம்பல வாணனைச் செப்பிடினே.

புத்திரசோகம்

6\. விந்தை மிகுந்த வியன்சோம சுந்தர மென்கொழுந்தைச்
சந்திர சூரியர் வந்துதி யாமுன் சகோதரர் தாய்
தந்தைய ரின்றித் தனிநின்ற வேளையிற் ருவினையோ
சிந்தனை நிந்தனை காணாந்த காவிது நீணிலத்தே.

இவர் தமிழ்மொழி வளர்ச்சியிலும் தமிழ்ப்பாடசாலைகளிலும் பேரபிமானமுடையவர். சென்ற தாது வருடம் ஏழாலையிலே தமிழ்ப் பாடசாலை ஒன்று தாபித்து முருகேசபண்டிதரையும் அடுத்து நம்மையும் பாடஞ் சொல்ல வைத்துப் பல வருடம் நடாத்திப் பல மாணவகர்கள் தமிழுணரச் செய்தவர். பாடசாலையின் ஆரம்பம் தாதுவருடம். அது முருகேசபண்டிதர் வெண்பாவாற் புலப்படும்.

வெண்பா

தாது வருடந் தனிலா வணிபத்தார்
தேதி புகர்வாரந் தீபநாள்—ஓதுபுகழ்த்
தமோத ரோர்திரனர் தர்மவித்தி யாசாலை
நாமாரம் பஞ்செய்த நாள்.

கல்விகற்போர் பலர்க்குத் தாமாக வேதனங்கொடுத்துக் கற்பித்தவர். நட்டார்க்குங் கற்றூர்க்கும் இனியவர். இவைகளை இவர் கனிட்டர் வித்வான் சின்னப்பாப்பிள்ளை பாட்டுங் காட்டும்.

கட்டளைக்கலித்துறை

கற்றூர்க் கினிமைபஞ் சைவர்க்கு மாண்புங் கருது செல்வம்
அற்றூர்க் குதவியுங் கல்வி கற்போருக் கரும் பொருளும்
உற்றூர்க்குங் கீர்த்தியு நட்டார்க் குறுதி யுடனறிவும்
பற்றூருக் கச்சமுந் தாமோதரன் பின் பறந்தனவே.

பழந்தமிழ்நூற் பரிபாலனத்திலும் பேரபிமானமுடையவர். வீரசோழியம், இறையனுரகப்பொருள்,

இலக்கணவிளக்கம், தணிகைப் புராணம், தொல்காப்பிய நச்சினார்க்கினியம், சூளாமணி முதலிய நூல்களைப் பழைய ஏட்டினின்றும் எடுத்துத் திருத்தி அச்சிட்டுத் தமிழ்நாட்டிற் பரவச்செய்தவர். இவருடைய பாடுந் திறத்தையும் பழந்தமிழ்நூற் பரிபாலனத்தையும் பாராட்டி நாமுஞ் சில கவிகள் கூறினும். அவைகளுள்ளும் இரு கவிகளை இங்கே காட்டுதும்.

கட்டளைக்கலித்துறை

1. பாடுங் கவியிற் பழந்தமிழ் நூற்பரி பாலனத்திற்
கூடும் வலியி லறிவிற் பொறையிற் குணநிறைவிற்
றேடும் புகழி லதிகார மேன்மையிற் சீரியர்பார்
நீடும் புவியினிற் றாமோதரற்கு நிகர்சொலவே.

2. ஏட்டி லிருந்த வருந்தமிழ் நூல்க ளெனைப்பலவுந்
தீட்டி வழுக்களைந் தச்சினி லாக்குபு செந்தமிழ்சேர்
நாட்டி லளித்துயர் தாமோ தரேந்திர னண்ணுபுகழ்
பாட்டி லடங்குந் தகைத்தோ புலவர்கள் பாடுதற்கே.

கீரிமலையிற் கோயில்கொண்டு வீற்றிருக்கும் நகுலேச மூர்த்தியிலும், கீரிமலைச் சாகரசங்கமதீர்த்தத்திலும், கீரிமலை வாசத்திலும் பெருநேசமுடையவர். நகுலேச மூர்த்திமேல் ஊஞ்சலும் ஒன்று நம்மைக்கொண்டு பாடுவித்து விழாவும் ஒன்று நடந்துவர வேண்டும் பொருட்கு மூலதனம் நியமித்தவர்.

நகுலேசரூஞ்சல்

இச்சகத்திற் றினைநினைவோ ரிடரைநீக்கும்
ஏகதந்த விநாயகமுக் கண்ண ளேடு
பச்சைமயில் வாகனனும் பாங்கர் மேவப்
பண்ணவராம் விண்ணவர்பல் லாண்டு சொல்ல
அச்சுதனுஞ் செங்கமலத் தயனும் வாழ்த்த
அப்பொன்மய வம்பலத்தி னருளே பூண்டு
கச்சரவக் கச்சசைத்து நடனமாடும்
நகுலகிரி நாயகரே யாடீ ரூஞ்சல்.

119. தாயுமானசுவாமி
(1608—1664)

இவரூர் வேதாரணியம் என்பர். குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். காலம் ஏறக்குறைய இற்றைக்கு இருநூறு வருடங்களுக்கு முன். திரிசிராமலேயிலே தாயுமான ஈசுரர் திருவருளால் அவதரித்தமைபற்றித் தாயுமானவர் எனப்பட்டார். இவர் தாயுமான ஈசுரரைத் தரிசிக்கவந்த மவுனகுருவுக்குச் சீடர். மவுனகுருவிடத்திலே சித்தியார் முதலிய சித்தாந்தோபதேசம் பெற்றவர். தமது பாடலிலும் மவுனகுருவைச் "சிவஞானசித்திநெறி மவுனோபதேச குருவே" என்பர். வடமொழி தென்மொழி என்னும் இருமொழிகளிலும் வல்லவர். "வடமொழியிலே

வல்லா ஞெருத்தன் வரவுந்தரா விடத்திலே
வந்ததா விவக ரிப்பேன்
வல்லதமி ழறிஞர்வரி னங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிது புகல்வேன்"

என்பர். ஆசிரியவிருத்தம் பாடுந் திறத்தில் அதிகஞ் சிறந்தவர். இவர் பாடல் தாயுமானசுவாமிபாடல் எனப் படும். இவரைச் சிலர் ஏகான்மவாதி என்பர். 'ஏகான்மவாதியாயின்; சந்தானகுரவர்க்குஞ் சமயகுரவர்க்குந் துதிகூறமாட்டார். மெய்கண்டதேவரைச் சுட்டிப் "பொய்கண்டார் காணுத புனிதமெனு மத்துவித—மெய் கண்ட நாதனருண் மேவுநா ளெந்நாளோ" எனக் கூறவும்மாட்டார். அருணந்திசிவாசாரியரைச் சுட்டிப் "பாதிவிருத்தத்தாலிப் பார்விருத்தமாகவுண்மை-சாதித்தார் பொன்னடியைச் சாருநாளெந்நாளோ" எனக் கூறவும் மாட்டார். "வெம்பந்தந் தீர்த்துலகாள் வேந்தன்

றிருஞான—சம்பந்தனை யருளாற் சாருநா ளெந்நாளோ" எனக் கூறவுமாட்டார். "சைவசமயமேசமயஞ் சமயா தீதப் பழம்பொருளைக்—கைவந்திடவே மன்றுள்வெளி காட்டும்" எனக் கூறவும்மாட்டார். "சித்தாந்த முத்தி முதலே" எனக் கூறவுமாட்டார்.

ஆசிரியவிருத்தம்

ஆசைக்கோ ரளவில்லை யகிலமெல் லாங்கட்டி
யாளினுங் கடன் மீதிலே
ஆணைசெல வேநினைவ ரளகேச னிகராக
அம்பொன்மிக வைத்த பேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநா ளிருந்த பேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சபுண் ணுவ ரெல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பதும்
உறங்குவது மாக முடியும்
உள்ளதே போதநா னெனக் குளறியே
ஒன்றைவிட் டொன்று பற்றிப்
பாசக் கடர்குளே வீழாமன் மனதற்ற
பரிசுத்த நிலையை யருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூ ரண னந்தமே.

பராபரக் கண்ணி

ஆராவமுதே அரசே ஆனந்த வெள்ளப்
போராறே மோனப் பெருக்கே பராபரமே.

எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணியிரங் கவுநின்
தெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே.

120. திரிகூடராசப்பகவிராயர்

(1746)

இவரூர் பாண்டிமண்டலத்திற் குற்றாலத்துக்குச் சமீபமாயுள்ள மேலகரம். குலம் வேளாளர்குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு நூற்றெழுபது வருடங்களுக்கு முன் என்பர். இவர் பலவகை நூல்களையுங் கற்றவர். சொல்லின் நயமும் பொருளின் நயமும் அணியின் நயமும் அமையக் கவிபாடுந் திறந்தனிற் சிறந்தவர். குற்றாலப்புராணம், குற்றாலக்குறவஞ்சி, குற்றாலச் சிலேடை, குற்றாலமாலை, குற்றாலயமகவந்தாதி முதலிய பற்பல பிரபந்தங்கள் விற்பனமேவச் செய்தவர்.

குற்றாலப்புராணம்

அன்னவா ரிசமும் யாறு மம்பொனா டரங்கங் காட்டும்
பொன்னணி மறுகும் வாணர் புலமையுஞ் சங்க மேவும்
மன்னுசீர் விழவு மாதர் வதனமுந் திங்களார்க்கும்
மின்னனார் தனமுஞ் சோலை வேலியு நரந்த நாறும்.

இது சிலேடை. வாரிசம் - தாமரை. அம்பொன் ஆடு அரங்கம் - அழகிய இலக்குமி நடிக்குஞ் சபை. அம்பொன் ஆள் தரங்கம் - நீரையும் பொன்னையும் ஆளுந் திரை. சங்கம் - சபை, சங்கநிதி. திங்கள் - மாசம், சந்திரன், நரந்தம் - கத்தூரி, நாரத்தை.

குற்றாலக்குறவஞ்சி

பன்னிருகை வேல்வாங்கப் பதினொருவர்
படைதாங்கப் பத்துத் திக்கும்
நன்னவவீ ரரும்புகழ மலைகளெட்டுங்
கடலேழு நாடி யாடிப்

பொன்னின்முடி யாறேந்தி யஞ்சுதலை
யெனக்கொழித்துப் புயநான் முன்றாய்த்
தன்னிருதா டருமொருவன் குற்றாலக்
குறவஞ்சித் தமிழ்தந் தானே.

கண்ணி

மீறு மிலஞ்சிக் குறத்தியைக் கொண்டசெவ்
வேட்குற வன்முதல் வேட்டைக்குப் போனநாள்
ஆறு நாட்கூடி யொருகொக் குப்பட்ட
தகப்பட்ட கொக்கை யவித்தொரு சட்டியிற்
சாறு வைத்தபின் வேதப் பிராமணர்
தாமுங்கொண்டார் சைவர் தாமுங்கொண்டார் தவப்
பேறு முனிவரு மேற்றுக்கொண் டாரிதைப்
பிக்குச்சொல் லாமலே கொக்குப் படுக்கவே

இலஞ்சி - புனம். கொக்கு - சூரனுசிய மாமரம். சட்டி - ஆருந்திதி, சாறு - திருவிழா.

121. திருக்குருகூர்ப்பெருமாட்கவிராசர்

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள திருக்குருகூர். குலம் வசியர்குலம். சமயம் வைஷ்ணவம். இவர் இலக்கிய லக்கணமும் பிறவும் மயக்கறக் கற்றவர். கவிபாடுந் திறந்தனிலுஞ் சிறந்தவர். மாறனலங்காரம்' மாறனகப் பொருள், மாறன்கிளவிமணிமாலை, குருகாமான்மியம், நம்பெருமாள் மும்மணிக்கோவை முதலிய பிரபந்தங்கள் செய்தவர். மாறனலங்காரத்திலே விசேடமான அணிகள் பல கூறினவர். அதன்கண் வரும் உலேகம், அசங்கதி முதலிய சில அலங்காரங்களும், இரதபந்தம், கடகபந்தம் முதலிய சில சித்திரகவிகளும் தண்டியலங்காரம் முதலிய தமிழலங்காரங்களாற் பெறப்படமாட்டா.

மாறனலங்காரம்

பூமாது மன்னும் புகழ்க்குருகூர் வாழ்புலவர்
கோமா னியற்பெயராற் கூறுமணிப் — பாமாலைக்
காரணனுஞ் செஞ்சொ லலங்காரன் சோலைமலைக்
காரணனு நாரணனே காப்பு.

மாறன்கிளவிமணிமாலை

விழியுங் களப முலையும்புன் மூரலும் வேயுமுந்திச்
சுழியு முரோம வொழுங்குங்கண் டேய்வண்டு சூழ்ந்துசெந்தேன்
வழியுந் திருமகிழ் மாலைப் பிரான்வெற்பில் வல்லிசெவ்வாய்
மொழியுந் துணைநெஞ்ச மேசெவிக் கேயென்று மூழ்குவதே.

122. திருஞானசம்பந்த சுவாமிகள்
(600 — 650)

இவரூர் சோழமண்டலத்துள்ள சீகாழி. குலம் ஆதிசைவ வேதியர் குலம். இவர் சமய குரவருள் ஒருவர். திருவருட்புலமையாளர். மூன்றாம் வயசிற் பாடத்தொடங்கினவர். பல பதிகங்கள் பாடினவர். பதிகங்களெல்லாம் தேவாரம் எனப்பெற்ற சிவஸ்துதிகள். ஏகபாதம், கோமுத்திரி, எழுகூற்றிருக்கை, மாலைமாற்று முதலிய சித்திரகவிப்பதிகங்களும் பாடினவர். வழிமொழி, மொழிமாற்று, மடக்கு முதலிய அலங்காரப் பதிகங்களும் பாடினவர். ஈரடிமேல் வைப்பு, யாழ்முறி முதலிய சந்தவிகற்பப்பதிகங்களும் பாடினவர்.

தொண்டர் வரிசையிற் சொல்லற்குரியராயினும் புலமையின் பெருமையும் வலிமையும் நோக்கிப் புலவர் வரிசையிலுங் கொண்டாம். சோமேசர் வெண்பாவிலும் புலவர் எனக்கொள்ளப்பட்டார். ஏகபாதம் முத

லியவைகளைத் தேவாரத்திலே நோக்குக. இவர் பாடலின் அற்புதங்களைச் சுட்டிக்கூறுங் கட்டளைக்கலிப் பாவும் ஒன்றுண்டு. அதனையுங் காட்டுதும்.

கட்டளைக்கலிப்பா

புனலி லேலெடதிர் போகெனப் போகுமே
புத்த ஞூர்தலை தத்தெனத் தத்துமே
கனலி லேடிடப் பச்சென் றிருக்குமே
கதவ மாமறைக் காட்டி லடைக்குமே
பனையி லாண்பனை பெண்பனை யாக்குமே
பழைய வென்புபொற் பாவைய தாக்குமே
சினவ ராவிடந் தீரெனத் தீருமே
செய்ய சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே.

தேவாரம்

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

(ஏகபாதம்)

பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்

(திரு மாலை மாற்று)

யாமாமாநீ யாமாமா யாழீகாமா காணாகா
காணாகாமா காழீயா மாமாயாநீ மாமாயா

123. திருஞானசம்பந்த உபாத்தியாயர்

(1906)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள சுழிபுரம். வாசஞ் செய்த இடம் திருநெல்வேலி. குலம் செல்வநாயகச் செட்டியார்குலம். சமயம் சைவம். காலம் ஏறக்குறைய இற்றைக்குப் பத்து வருடங்கட்கு முன். ஆறுமுகநாவலர்க்கு மாணவகர். கந்தபுராணம், பெரியபுராணம், பாரதம் முதலிய இலக்கியங்களை நன்கு கற்றவர். பலர்க்குங் கற்பித்தவர். பிரசங்கஞ் செய்யுந் திறமுங் கவிபாடுந் திறமுமுடையவர். மாணிக்கப்பிள்ளையார் திருவருட்பா, கதிர்காமவேலர்திருவருட்பா முதலிய பிரபந்தங்களுஞ், சில தனிநிலைக்கவிகளுஞ் செய்தவர். பிரபந்தப் பிரதி சில இவர் புதல்வராகிய தமிழ்ப் பண்டிதர் சோமசுந்தரம்பிள்ளையாற் பெற்றனம்.

கதிர்காமவேலர் திருவருட்பா

பூவார் மலர்மிசைப் போதனு மாயனும் போற்றியினும்
நாவாற் றுதித்தற் கரிதாங் கதிரை நகருறையும்
மாவாரும் வள்ளிதெய் வானை மணாளற்கு மன்னுமருட்
பாவார் துதித்துணை மாணிக்க வைங்கரன் பாதங்களே.

124. திருஞானசம்பந்தப்பிள்ளை

(1849 — 1901)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள நல்லூர். குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். காலம் ஏறக்குறைய இற்றைக்குப் பதினைந்து வருடங்களுக்குமுன். இவர், நாவலர்க்கும் பொன்னம்பலபிள்ளைக்கும் மாணவகர். இலக்கிய லக்கணமும், தருக்கநூலுஞ் சித்தாந்த சாத்திரமுங் கற்றவர். தர்க்கசாத்திரவாராய்ச்சியிலும், தர்க்க

வாதஞ் செய்தலிலும் மிக்க வேட்கையுடையவர். அது பற்றித் தர்க்க குடாரதாலுதாரி எனவும்படுவர். கும்பகோணத்திலுஞ் சிதம்பரத்திலும் பலநாள் வசித்தவர். பலர்க்கும் பாடஞ் சொன்னவர். நமக்கும் நண்பர். தர்க்காமிர்த மொழிபெயர்ப்பு, அரிகரதாரதம்மியம், வேதாகமவாததீபிகை, நாராயணபரத்துவநிரசனம் முதலிய நூல்கள் செய்தவர்.

அரிகரதாரதம்மியம்

ஒருவனே ரிடத்திலிந்த விசுவத்தில் வசிக்கையி லுவகை யற்றான்
கருதுமற்றையவன் விசுவேசுரனெனவேயவனியினிற்கழறப்பெறான்
இருவர்தமி லெவனதிக னெனவூகித் தன்மையிசைத் திடுக மாசு
மருவுதலி லறிவுடையீர் யாமவனை யடைந்துவழி படுவா மன்றே.

125. திருத்தக்கதேவர்
(900)

இவர் குலம் சோழர்குலம். தீக்ஷாகுலம் அருங்கலான்வயம் என்பர். சமயம் ஆருகதம். காலம் கடைச் சங்கத்தை அடுத்த காலம் என்பர். நிலை துறவு. இவர், அகத்தியம் தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும், சங்கச்சான்றோரிலக்கியங்களையும், ஆருகத சாத்திரங்களையும் ஆராய்ந்து கற்றவர். தக்க புலவர் என்று சான்றோரால் மதிக்கப்பட்டவர். குருவாக்கிய பரிபாலனமுஞ் சகவாசமும் பெரிதுமுடையவர்.

எதிரே வந்த நரியை நோக்கி இந் நரியைத் தலைமைப்பொருளாக வைத்துச் சிறிய காப்பியம் ஒன்று செய்க என்று தமது குரவர் கூறியபோது இதோபதேசத்தில் வரும் வியாதமிருகசூகரசர்ப்பசிருகாலர்கள் கதையை முதலில் எடுத்துக்கூறி இக்கதையை உவமை

யாக வைத்தும், வேறு கதைகளை உவமையாக வைத்தும் இளமையுஞ் செல்வமும் யாக்கையும் நில்லா எனவும், கொலையுங் களவும், கோபமும் உலோபமும், பொய்யும் புலையுந் தவிர்க எனவும், தானமுந் தருமமும் செய்க எனவும் நன்னெறிகளைச் சொல்லி நரி விருத்தம் என்னுஞ் சிறு காப்பியஞ் செய்தவர்.

"தத்தைகுண மாலையொடு தாவில்புகழ்ப்பதுமை — ஒத்தபுகழ்க்கேமசரி" முதலிய பாவையர் எண்மரைச் சீவகன் என்பவன் விவாகஞ் செய்த கதையையும், அவர்கள் துறவையும் நுதலிய பொருளாக வைத்து மலை, கடல், நாடு வளநகர், பருவம் முதலியவற்றின் வருணனைகளுஞ் சேர்த்துச் சீவகசிந்தாமணி என்னும் பெருங் காப்பியமுஞ் செய்தவர்.

இச் சீவகசிந்தாமணி பின்னர்த் தோன்றிய பாரதம், நைடதம், இராமாயணம் முதலிய இதிகாசங்கட்கும், கந்தபுராணம், தணிகைப்புராணம், கூர்மபுராணம் முதலிய சில புராணங்கட்கும், வேறு சில நூல்களுக்கும் ஆசிரியவசனமாகச் சொற்களையும் சொற்றொடரையும் வருணனைகளையும் இடையிடை எடுத்துத் தொடுக்கு மாறு கொடுத்துநின்ற ஆதிகாவியம். நச்சினார்க்கினியருரையுடையது.

நரிவிருத்தம்

கோற லோம்புமின் கொன்றபி னூன்றடி
மேற லோம்புமின் மெய்ப்பொரு ளல்லன
தேற லோம்புமின் றீயவை யாவையுங்
கூற லோம்புமி னற்குண மல்லன.

கோறல் - கொல்லல். தடி - இறைச்சி. மேறல் - உண்ணல், மெல் + தல் = மேறல்; மெல்லல், தேறல் - நம்புதல். ஓம்புதல் - நீக்குதல்.

சீவகசிந்தாமணி

கரும்பே தேனே யமிர்தே காமர் மணியாழே
அரும்பார் மலர்மே லணங்கேமழலை யன்னம்மே
சுரும்பார் சோலை மயிலே குயிலே சுடர்வீசும்
பெரும்பூண் மன்னன் பாவாய் பூவாய் பிணைமானே.

126. திருநாவுக்கரசசுவாமிகள்
(570 — 655)

இவரூர் நடுநாட்டிலுள்ள திருவாமூர். குலம் வேளாளர்குலம். சமயம் சைவம். இவருஞ் சமயகுரவருள் ஒருவர், திருவருட்புலமையாளர். பல பதிகங்கள் பாடினவர். பதிகங்களெல்லாந் தேவாரம் எனப்படுஞ் சிவஸ்துதிகள். சில பதிகங்களிலே சிவதருமங்களையும் உலகநிலையாமையையும், உய்யும்வழி முதலியவைகளையும் விசேடமாக விரித்து விளங்கக் கூறுவர்.

தேவாரம்

சிவதருமம்

கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யானுளன் நாமுளோம்
எற்றுக் கோநம னான்முனி வுண்பதே.

உலகநிலையாமை

நடலை வாழ்வுகொண் டென்செய்திர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலி னஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னார்க்கிடந் தூர்முனி பண்டமே.

உய்யும்வழி

இன்று ளார்நாளை இல்லை யெனும்பொருள்
ஒன்று மோரா தழிதரு மூமர்காள்
அன்று வானவர்க் காக விடமுண்ட
கண்ட ஞர்காட்டுப் பள்ளிகண் டுய்ம்மினே.

தாண்டகம்

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடனற் சோதிமிக்க
உருவேயென் னுறவேயென் னூனே யூனின்
உள்ளமே யுள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையு மமா ரேறே.

தாண்டகம் பாடுந் திறத்திற் சாதுரியர். "தாண்டகசதுரர்" என்று சேக்கிழாருங் கூறுவர். இவர் பாடலின் அற்புதங்களைச் சுட்டிக்காட்டுங் கட்டளைக்கலிப் பாவும் ஒன்றுண்டு. அதனையுங் காட்டுதும்.

கட்டளைக்கலிப்பா

தலைகொ ணஞ்சமு தாக விளையுமே
தழல்கொ ணீறு தடாகம தாகுமே
கொலைசெ யானை குனிந்து பணியுமே
கோள ராவின் கொடுவிடந் தீருமே
கலைகொள் வேத வனப்பதி தன்னிலே
கதவு தானுங் கடுகத் திறக்குமே
அலைகொள் வாரியிற் கல்லு மிதக்குமே
அப்பர் செப்பு மருந்தமிழ்ப் பாடலே.

127. திருப்பாணாழ்வார்

இவரூர் சோழநாட்டிலுள்ள உறையூர். குலம் பாணர்குலம். சமயம் வைஷ்ணவம். காலம் திருமங்கை மன்னன் காலம். இவர் திருவரங்கநாதர் மீதுள்ள பேரன்பினால் அவர்மீது நாடோறும் இனிமையான பாடல்களைப் பாடுவதைத் தொழிலாகக் கொண்டவர். திருமாலின் அருளும் விடையும் பெற்றுக் கோயிலுக்குட் சென்று வணங்கும்பேறு பெற்றவர். இவர்பாடிய பாக்களில் விஷ்ணுவின் தலைதொடக்கம் பாதம்வரையிலுள்ள எல்லா அவயவங்களையும் வருணித்திருக்கின்றனர் இவருடைய வாழ்க்கையைப் பின்வரும் திருமலை நம்பியின் பாட்டு நன்கு விளக்கும்.

காட்டவே கண்டபாதம் கமலநல் லாடையுந்தி
தேட்டரும் உதரபந்தம் திருமார்பு கண்டஞ்செவ்வாய்
வாட்டமில் கண்கள் மேனிமுனியேறித் தனிபுகுந்து
பாட்டினால் கண்டுவாழும் பாணர்தாள் பரவினோமே.

128. திருமங்கையாழ்வார்
(750)

இவரூர் சோழமண்டலத்துள்ள திருக்குறையலூர். குலம் வேளாளர்குலம். சமயம் வைஷ்ணவம். இவர் விட்டுணுபத்தியின் மிக்கவர். நாற்கவியும் பாடும் வலிமைபற்றி நாற்கவிப்பெருமாள் எனவும்படுவர். கலியர், பரகாலர் முதலிய நாமங்களையும் பெறுவர். பாரதகாரரும் "கலியனெங்கள் மங்கையாதி" என்பர். சீகாழியிற் சென்றபோது ஞானசம்பந்தமூர்த்தியோடு வாதஞ் செய்தவர் என்றுஞ் சொல்வர். பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம்,

திருவெழுகூற்றிருக்கை, பெரியதிருமடல், சிறியதிருமடல் என அறு பிரபந்தங்கள் செய்தவர். இவர் கவிகளை "நன்னூற்றுறைகளஞ்சுக்கிலக்கியமாரணசாரம்" என்று கூரத்தாழ்வார் கூறுவர்.

பெரியதிருமொழி

நந்தா நரகத் தழுந்தா வகைநாளும்
எந்தாய் தொண்டரா னவர்க்கின் னருள்செய்வாய்
சந்தோ காதலை வனேதா மரைக்கண்ணு
அந்தோ வடியேற் கருளா யுன்னருளே.

129. திருமழிசையாழ்வார்
(650)

இவரூர் திருமழிசை என்றும், சுதர்சனத்தின் அவதாரம் என்றும், பல சமயங்களிலும் பிரவேசித்துப் பல சமய நூல்களையுங் கற்றவர் என்றும், விட்டுணுசமயத்தையே மெய்ச்சமயமாக நிச்சயித்து நடந்த விட்டுணு பத்தர் என்றுங் கூறுவர். இவர் காஞ்சிமா நகரில் வசிக்கையிலே கணிகண்ணன் என்னுந் தமது சீடனைத் தன் மேற் கவிபாட உடம்பட்டிலன் என்று "இவ்வூரை விட்டு வெளியேபோ" என அவ்வூராசன் முனிந்து கூறியபோது "நானும் பெருமாளை அழைத்துக்கொண்டு நின்னுடன் வருவேன்" எனக் கூறிக் கோயிலுட் பிரவேசித்துப் பெருமாளை நோக்கிக் "கணிகண்ணன் போகின்றான்" என வெண்பா ஒன்று பாடிப்பெருமாளையும் பின்வருமாறுசெய்து சென்றவர்.

வெண்பா

கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டாந்—துணிவுடைய

செந்நாப் புலவனும் போகின்றே னீயுமுன் றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்.

இக்கதையை வைத்துக் குமர குருபரசுவாமிகள் "பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலே" என்பர். அருணகிரிநாதர் "வண்டமிழ் பயில்வோர் பின்றிரிகின்றவன்" என்பர். பின்னர் அரசன் குறையிரக்க அதனை மாற்றிப் பாடிப் பெருமாளுடனும், அவனுடனும் மீண்டு சென்றவர்.

வைணவம் மெய்ச்சமயம் என்றுபாடியது

நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனுந்
தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான்—யான்முகமாய்
அந்தாதி மேலிட் டறிவித்தே னாழ்பொருளைச்
சிந்தாமற் கொண்மினீர் தேர்ந்து.

130. திருமுனைப்பாடியார்.

இவர் சமயம் ஆருகதம். அறநெறிகளை எடுத்துக் காட்டி அறநெறிச்சாரம் என ஒரு நூல் செய்தவர். சூதாடலால் "ஓதலுமோதி யுணர்தலுஞ் சான்றோரால்—மேதை எனப்படும் மேன்மையும்" போகும் என்பர். பிறர்க்குத் துயர்செய்தலை நோக்கிப் "பிறர்க்கின்னா செய் தலிற் பேதைமை இல்லை" என்பர். கல்வியாற் செருக் குறுவாரை நோக்கிப் "பலகற்றோ மென்று தற்புகழ வேண்டாம்" என்பர்.

அறநெறிச்சாரம்

காய்த லுவத்த லகற்றி யொருபொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகு முவப்பதன்கண்
குற்றமுந் தோன்றா கெடும்.

131. திருமூலநாயனார்
(400)

இவர் திருக்கயிலாசமலையிலே நந்தியந்தேவர்க்கு மாணவகரா யிருந்த ஒரு சிவயோகி. அகத்தியமுனிவரோடு சிலநாள் வசிக்க விரும்பிப் பொதியமலை நோக்கி வரும் வழியிலே எதிர்ந்த திருவாவடுதுறையில் வசித்துப் பக்கத்திற் சென்றபோது தம்மை மேய்க்குந் தலைவனாகிய மூலன் என்பவனுடைய உடம்பைத் தழுவிக் கதறும் பசுக்களின் துயரை ஒழிக்கக் கருதித் தமதுடலைக் காவல் செய்து அவனுடலிற் பிரவேசித்து மூலன் எனச் சொல்லப்பட்டுப் பசுக்களையும் மேய்த்தவர்.

திருவாவடுதுறைச் சிவாலயத்தினிற்கும் அரசமரத்தின் கீழே யோகத்திலிருந்தவர். அங்கே மூவாயிரம் வருடம் இருந்து வருடம் ஒரு கவியாக மூவாயிரந் திருமந்திரம் பாடி முடித்தவர்.

திருமந்திரம்

கல்லாத மூடரைக் காணவு மாகாது
கல்லாத மூடர்சொற் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராங்
கல்லாத மூடர் கருத்தறி யாரே.

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந் திருந்தாரே.

132. திருவள்ளுவர்

இவர் யாளிதத்தர் என்னும் முனிவருக்கும் முன்னர்ச் சண்டாளியாய்ப் பிராமணனொருவனால் வளர்க்கப்

பட்டுப் பின்னர்ப் பிராமணியாய் நின்ற பெண்ணொருத்திக்கும் புத்திரர் என்று ஞானமிர்தத்தில் வாகீசமுனிவர் கூறுவர். வேறு சிலர் பகவன் என்னும் பார்ப்பானுக்கும் ஆதி என்னும் புலைமகட்கும் புத்திரர் என்றும், மயிலாப்பூரிலே வள்ளுவர் வீட்டில் வளர்ந்தவர் என்றும், பிரமாவின் அவதாரபுருடர் என்றுங் கூறுவர். வேறு சிலர் பகவான் என்றது யாளிதத்தரை என்றும் ஆதி என்றது அந்தச் சண்டாள மாதினை என்றுங் கூறுவர். இவர் பெருநாவலர், முதற்பாவலர் முதலிய பெயர்களும் பெறுவர். காலம் கடைச்சங்ககாலம்.

சில தனிநிலைக்கவிகளும் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையுந் திறம்பட விளக்கித் திருக்குறள் எனப்படும் இலக்கியமுஞ் செய்தவர். இத்திருக்குறள் உத்தரவேதம், தெய்வநூல் முதலிய பெயர்களும் பெறும். இத்திருக்குறளை மதுரைச்சங்கத்தில் ஏற்றச் செல்லும் மார்க்கத்திலே ஔவையார் கண்டு அறம், பொருள், இன்பம் கூற இவ்வளவு விரிவு வேண்டுமா? என்று சொல்லி அவைகளை "ஈதலறம்" என்னும் ஒரு வெண்பாவிற் கூறினர் என்றும், இவர் சங்கப்புலவர்கள் வினவிய வினாக்களுக்குக் கவிகளால் விடை கூறினர் என்றும் நக்கீரர் இவரை நோக்கி உமது நூலிலே எல்லாப் பொருள்களும் உள என்றீரே! இக்கல்லும் உளதா? என்றபோது "வாழ்நாள் வழியடைக்குங் கல்" என்ற அடியைச் சொல்லினர் என்றும் இவ்வாறே பல கதைகள் கூறுவர்.

இத்திருக்குறட்பொருட்களையுஞ் சொற்களையுந் தத்தம் நூலுரைகளிற் கொள்ளாத சான்றோர் யாவர்! சமயவாதிகள் யாவர்! சிந்தாமணிகாரர், சிலப்பதிகாரர் முத

லிய நூலாசிரியருங் கொள்ளுவர். இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியருங் கொள்ளுவர். கம்பநாடர் ஏரெழுபதிலே "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாரும்—தொழுதுண்டு பின்செல்வா ரென்றேயித் தொல்லுலகில்—எழுதுண்டமறையன்றோ" என்பர். திருக்கைவழக்கத்தில் "உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே—கொடுக்க விசைந்த குளிர்க்கை" என்பர்.

தனிநிலைக்கவி

ஐயரென் றுரைத்தீர் நாயேற் கடுக்குமோ வருளிலேனைப்
பொய்யொடு களவுமற்றுப் புலன்களை யொடுக்கிக்கொண்டு
உய்யவே புலன்களைந்து முயர்பர வெளியுளாக்கி
வெய்யவன் மதியம் போல விரவுவா ரையராவார்,

திருக்குறள்

அகர முதல வெழுத்தெல் லாமாதி
பகவன் முதற்றே யுலகு.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக.

133. திருவாதவூரர்

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள திருவாதவூர். குலம் வேதியர்குலம். சமயம் சைவம். காலம் அரிமர்த்தனபாண்டியன்காலம். தந்தையார் சம்புபாதாசிரிதர். தாயார் சிவஞானவதியார். அவதாரம் நந்தியந்தேவரவதாரம். இவர் வேதவேதாங்கங்களையும், தருக்கம், மீமாஞ்சை, தருமசாத்திரம், புராணம் முதலியவைகளையும், பிறவற்றையும் இளமையிற் கற்றுத் தெளிந்தவர். அருட்புலமையாளர். சிவபிரானே குருவாய் வந்து சிவ

ஞானபோதம் உபதேசிக்கப் பெற்றவர். "அன்பிலாத பண்பினரெனினுந் தன்னைப் பாடினர்க் கிரங்குமென்றே" சிவபிரான்மீது "தேனெனப் பாலெனச் சில்லமிர் தூற் றெனத்" துதிவடிவாகப் பல கவி பாடினவர். பௌத் தரை வாதில் வென்று சைவராய்வரச்செய்தவர். அவர் வினவிய வினாக்களுக்கெல்லாம் ஊமைப்பெண்ணைப் பேசவைத்து விடைகளுஞ் சொல்லுவித்தவர். அவ்வினா விடைகளைச் சாழலாம் விளையாடலாகவைத்துக் கவி களும் பாடினவர். கவிகளெல்லாந் திருவாசகம் எனப் படும்.

திருவாசகமோ படிப்பவர் கேட்பவர்க்கெல்லாம் பத்தியையும் முத்தியையும் பயக்கும். மனத்தையும் உருக்கும். "திருவாசகமிங் கொருகாலோதிற்—கருங்கன் மனமுங் கரைந்துருகும்" எனச் சிவப்பிரகாசசுவாமி கூறுவர். திருவாசகமன்றிச் சிவபிரான்மீது திருக்கோவை எனப்படும் அகப்பொருட்கோவையும் பாடினவர் இக் கோவையை வேதியர் வேதம் என்பர். யோகியர் ஆகமம் என்பர். காமுகர் இன்பநூல் என்பர். தார்க்கிகர் தர்க்க நூல் என்பர். தமிழ்ப்புலவர் இலக்கணம் என்பர். இத னைப் பாடக்கேட்டவரும், இவைகளிரண்டையும் ஏட்டிற் றீட்டிய இலேககரும் வேதியராய் முன்னின்ற ஆதியங் கடவுளேயாவர்.

திருவாசகம்

தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தானே பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி வீடுவர்காண் சாழலோ.

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
உலப்பிலா வானந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

134. திருவேங்கடநாதர் (1696)

இவரூர் நடுநாட்டுள்ள திருவாமாத்தூர். குலம் வேதியர் குலம். சமயம் வைஷ்ணவம். காலம் வைத்திய நாததேசிகர் காலம். இவர் புலவரன்றிப் புலவர் பாடும் புகழுடைத் தலைவருமாவர். பணவிடுதூது என்னும் பிரபந்தம் பெற்றவர் என்றும், மந்திரித் தலைவராய்த் திருநெல்வேலியில் அரசியல் நடாத்தினவர் என்றுங் கூறுவர். இலக்கணவிளக்கம் என்னும் இலக்கணமுஞ் செய்வித்தவர். இலக்கண விளக்கப் பாயிரம் இவரை "வேதியர் திலகன் விரவலர் கோளரி—மாதையர் ரதிபன் வரகுணமேரு — கல்விக் கெல்லை கருணைக் காகரம் — பெருமாண் மெய்த்தவப் பேறெனத் தோன்றிய—திருமா லுலகஞ் செவ்விதிற் புரக்கும்—மேதகு புகழ்த்திரு வேங்கட நாதன்" என்று கூறும். இவர் செய்தநூல் பிரபோதசந்திரோதயம் எனச் சொலும் மெய்ஞ்ஞான விளக்கம்.

மெய்ஞ்ஞானவிளக்கம்

பேராசை யாலினர் பின்சென் றுழன்றும்
தீராத மிடியாளர் சிலர்பாரி லுண்டே

நேராக வரில்வாழ்வு நினையாமல் வருமால்
வாராத தார்தாம் வருந்தினும் வாராதே.

135. தேவராசபிள்ளை (1837)

இவரூர் தொண்டைமண்டலத்துள்ள வல்லூர். குலம் கருணீகர்குலம். இவர் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளைக்கு மாணவகர். இவர் சூதசங்கிதை, குசேலோபாக்கியானம், தணிகாசலமாலை, பஞ்சாக்கர தேசிகர்பதிகம், சேடமலை மாலை முதலிய நூல்களை இயற்றியவர். குசேலோபாக்கியானம் என்பது ஆந்திரகவி கட்டுப்பிரபுகாமர் எழுதிய குசேலோபாக்கியானத்தைப் பெரும்பாலும் தழுவி எழுதப்பட்டது.

குசேலோபாக்கியானம்

தரித்திரம் மிக்க வனப்பினை ஒடுக்கிச்
சரீரத்தை உலர்தர வாட்டும்
தரித்திரம் அளவாச் சோம்பலை எழுப்பும்
சாற்றரும் உலோபத்தை மிகுக்கும்
தரித்திரம் தலைவன் தலைவியர்க் கிடையே
தடுப்பருங் கலாம்பல விளைக்கும்
தரித்திரம் அவமா னம்பொய்பே ராசை
தரும் இதிற் கொடியதொன் றிலையே.

136. தொண்டரடிப்பொடியாழ்வார்

இவரூர் சோழமண்டலத்துள்ள திருமண்டங்குடி. குலம் வேதியர்குலம். சமயம் வைஷ்ணவம். வாசம் திருவரங்கம். இவர் பாகவதர் பாததூளிபோன்று அடிமை பூண்ட காரணத்தாலே தொண்டரடிப்பொடி எனப்பட்டார். இவர் இயற்றிய பிரபந்தங்கள் திருமாலை, திருப்பள்ளியெழுச்சி என்பன.

திருமாலை

புலையற மாகி நின்ற புத்தொடு சமண மெல்லாங்
கலையறக் கற்ற மாந்தர் காண்பரோ கேட்ப ரோதான்
தலையறுப் புண்டுஞ் சாகேன் சத்தியங் காண்மி னையா
சிலையினு லிலங்கை செற்ற தேவனே தேவ னுவான்.

பச்சைமா மலைபோல் மேனிப் பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா வமரரேறே யாயர்தங் கொழுந்தே யென்னும்
இச்சுவை தவிர யான்போ யிந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டே னரங்கமா நகருளானே.

137. தொல்கரப்பியத்தேவர்

இவர் திருப்பாதிரிப்புலியூர்க் கோயிற்றலைவர் கேள்விப்படி திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகம் என்னும் பிரபந்தஞ் செய்தவர் என்பர். இக்கலம்பகப் பெருமையை இரட்டைப்புலவர்களும் "தொல்காப்பியத் தேவர் சொன்ன தமிழ்ப் பாடலன்றி—நல்காத் திருச் செவிக்கு நாமுரைப்ப தேறுமோ" என்பதனுல் எடுத்துக் கூறுவர். இக்கலம்பகம் சொற்சிறப்பும் பொருட்சிறப்பு முடையது.

கலம்பகம்

சேதாம்பல் பூக்குந் திருப்பா திரிப்புலியூர்
வேதாந்த நாதர் வியன்கயிலை—மாதர்
மொழியா மமுத முகமா முளரி
விழியாங் கொலைபயிலும் வேல்.

138. தொல்காப்பியர்.

இவர் இடைச்சங்கப் புலவருள் ஒருவர். குலம் வேதியர்குலம், பழைய காப்பியக் குடியிற் பிறந்தது

பற்றித் தொல்காப்பியர் எனப்பட்டார் என்பர். அகத்தியமுனிவர்க்கு முதன்மாணவகர். அகத்தியத்தின் வழித்தாக இலக்கணம் ஒன்று செய்தவர். அது தொல்காப்பியம் எனப்படும். பன்னிருபடலத்துள்ளும் ஒரு படலஞ் செய்தவர். தொல்காப்பியம் ஒன்றே அன்று தொடங்கி இன்றுவரையும் நின்று நிலவுவதோர் பண்டையிலக்கணம் இலக்கணங்கட்கெல்லாம் முதற்கண் நிற்பதும், இலக்கண பண்டிதர்கள் விரும்பிக் கற்பதும் இதுவே என்க. இது இளம்பூரணர் முதலிய ஐவருரையுடையது.

தொல்காப்பியம்

(நிலப்பகுப்பு இவையெனல்)

மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே.

139. நக்கீரர்

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள மதுரைமாநகர். குலம் வேதியர் குலம் என்பர். சமயம் சைவம். தந்தையார் கணக்காயனார். இவர் கடைச்சங்கப் புலவர்களுள்ளே தலைவர். இவரை "இலக்கியப்புலவர் சிங்கம்" என்று சிவப்பிரகாசசுவாமி கூறுவர். இவர் பத்துப்பாட்டிலே திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை என்னும் பிரபந்தங்களையும், பதினொராந்திருமுறையிலே கைலைபாதி காளத்திபாதியந்தாதி முதலிய பிரபந்தங்களையும், நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு முதலிய பிரபந்

தங்களிற் சில சில கவிகளையும், வேறு சில தனிநிலைக் கவிகளையும் பாடினவர். யாப்பருங் கலவுரையில் வரும் நாலடிநாற்பதையும் இவர் கவி என்பர். இறையனூர் களவியற்கு உரையுஞ் செய்தவர். பட்டிமண்டபம் புகுந்து வடமொழியே சிறப்புடையது என்ற கொண்டான் என்னுங் குயவன் இறக்கப் பாடினவர். உயிர்க்கவும் பாடினவர். தமது கவிகளிலே அப்பொழுதை யரசருட் பலரைப் பாடினவர். நற்றிணைச் செய்யுள் ஒன்றில் அருமன் என்னும் பிரபுவையும் பாடினவர். வேறும் பலரைப் பாடினவர். சொக்கநாதக் கடவுளொடு வாதும் புரிந்தவர். வாதசம்பவத்தைச் சிறிது கூறுதும்.

வங்கியசூடாமணி என்னுஞ் சம்பகபாண்டியன் பரந்து வீசிய பெருந்தேவி கூந்தலின் வாசம் இயற்கையோ செயற்கையோ என நாடி இயற்கையே எனக் கருதி இக்கருத்தமையக் கவிபாடி வருவார்க்கே இக்கிழியுரியதாகும் என்று பொற்கிழி ஒன்று சங்கமண்டபமுகப்பிலே தூக்கினன். அக்கிழியும் ஆயிரம்பொன் அடங்கியது. அதன்மேல் அவாக்கொண்ட பாவலர் யாவரும் பாடிவந்தனர். அவர் கவி ஒன்றும் இயையாது தருமி என்னும் பனவன் கொணர்ந்த "கொங்குதேர்வாழ்க்கை யஞ்சிறைத்தும்பி" என்னும் அகவற்கவி ஒன்றே அரசன் கருத்தொடும் இயைவதாயிற்று. அக்கவி பாடினவர் சொக்கநாதக்கடவுள்.

குறுந்தொகை

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறி யெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே.

பொற்கிழிக்குத் தருமியே உரிமையாதலே நக்கீரர் நோக்கித் தருமியைத் தடுத்துப் "பாட்டிற் பிழை காட்டு வேன். பதப்பொருளறியாப் பார்ப்பான் நீ, பாட்டி யற்றிய புலவரைக் கூட்டிவா, போ" எனக் கூறத் தரு மியும் மனம் வருந்திப் போய்க் கடவுட்கு முறையிட் டான். கடவுளும் புலவர்கோலம்பூண்டு புலவர் சவை நடுவில் வந்து பிழை சொன்னவர் யாவர்? என்றார். நக்கீரர் சொன்னவன் நானே எனத் தருக்கொடு சொன்னார். அத்தருக்கினை அடக்கு மாறு கடவுள் ஒரு கவிபாடக் கீரரும் ஒன்று பாடினர்

கடவுள் பாடியது

**அங்கங் குலுங்க வரிவாளி னெய்தடவிப்
பங்கம் படவிரண்டு கால்பரப்பிச்—சங்கைக்
கீர்கீ ரெனவறுக்குங் கீரனோ வென்கவியை
ஆராயு முள்ளத் தவன்.**

கீரர்பாடியது

**சங்கறுப்ப தெங்கள்குலந் தம்பிரார்க் கேதுகுலம்
பங்கமறச் சொன்னாற் பழுதாமோ—சங்கை
அரிந்துண்டு வாழ்வேமா னாரைப் போல
இரந்துண்டு வாழ்வ திலை.**

கடவுள் பிழை யாது? என்றார். கீரர் இயற்கை வாசம் என்று பாடியதே பிழை என்றார். கடவுள் தேவமகளிர் கூந்தலும் நமது தேவி கூந்தலும் எப்படி? என்றார். கீரர் அவையுஞ் செயற்கைவாசம் என்றார். கடவுள் நெற்றிக்கண்ணையுங் கற்றைச் சடையையுங் காட்டினர். அவற்றாலுங் கீரரடங்கிலர். கடவுள் கோபம் பூண்டு கீரரை நோக்கி நம்மையும் பகைத்தனை; நமது தேவிகூந்தலையும் நகைத்தனை. குட்டநோயுறுக எனச்

சாபமிட்டனர். பின்னர்ப் பிழைபொறுத்தருள்வாய் எனக் கீரர் வேண்டலுக் கிரங்கிச் "சென்று நீள்கயிலை காணிற்றீருமிந்நோய்" எனச் சாபத்தீர்வுங் கூறினர்.

கீரருங் கயிலைநோக்கிச் சென்றனர். செல்லும் வழியிலோர் ஆலமர நீழலுங் குளக்கரையும் அகப்படக் கண்டு சிவபூசை செய்யத் தொடங்கினர். ஆலிலை ஒன்று கீழே வீழ்ந்து நிலத்திற் பாதியுங் குளத்திற் பாதியும் பொருந்தி நீரிலும் நனைந்தது. நிலத்தில் வீழ்ந்தபாதி பறவையாயிற்று. குளத்தில் வீழ்ந்தபாதி மீனுயிற்று. கீரரும் நோக்கினர். பூசையுந்தவறிற்று. தவறுகண்ட பூதமும் பிடித்தது. கொல்லக்கருதிக் குகை யொன்றிற் கொடுபோய் வைத்தது. அதனை வெல்லக் கருதிய கீரர் முருகக் கடவுளை முன்னி ஆற்றுப்படை சொல்ல முருகக் கடவுளுந் தோன்றி அதனுயிர் அழித்தனர். கீரரும் பிழைத்தனர்.

140. நச்சினுர்க்கினியர்

(1416)

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள மதுரைமாநகர். குலம் வேதியர் குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு ஐந்நூறு வருடங்களுக்கு முன்னரென்பர். இவர் தொல்காப்பியத்துக்கும், கலித்தொகைக்கும், பத்துப்பாட்டுக்கும், சீவகசிந்தாமணிக்கும் பேருரை செய்த உரையாசிரியர். இவர் தம்முரைகளிலே இலக்கணமும் இலக்கியமுமாகப் பலநூற் பிரமாணமுங் காட்டுவர். கபர்த்திகாரிகை முதலிய வடமொழிப் பிரமாணமுங் காட்டுவர். இவருரை யில்லையாயின்; இந்நூற் பொருள்களை அறிபவர் யாவர்? இவர் வேறு நூல்களுக்கும் உரை செய்தனர் என்பர். இவருரையின் அருமை பெருமைகள் சொல்லில் அடங்குவனவல்ல.

141. நடராசையர்
(1844—1905)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள இணுவில். குலம் வேதியர் குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்குப் பதினொரு வருடங்களுக்குமுன். இவர் இலக்கணம், இலக்கியம், சித்தாந்தம் முதலியவைகளை ஆறுமுகநாவல ரிடங் கற்றவர். சித்தாந்த சாத்திரங்களிலே தக்க பாண் டித்தியம் பெற்றவர். சிதம்பரம் மதுரை முதலிய சிவஸ் தலங்களில் பலநாள் வசித்தவர். அங்கும் இங்கும் பலர்க் குச் சித்தாந்தசாத்திரங்கள் படிப்பித்தவர். சோதிடம், மந்திரம், வைத்தியம், யோகம், வடமொழி முதலியவை களுந் தெரிந்தவர். கவிபாடுந் திறமு முடையவர். தற் புகழ்ச்சி, தருக்குத் தலையெடுப்பு முதலிய தீக்குணங்க ளில்லாதவர்.

விருத்தம்

சொல்லி னுவிற் றரிசறுஞ் சோத்திரத்
தொல்லு மேற்சிவ ஞான முதித்திடும்
செல்லு மெய்யரு ணந்திசெய் சித்திக்கு
நல்ல ஞானப் பிரகாச னவிற்றுரை.

142. நம்பியாண்டார்நம்பி

இவரூர் சோழமண்டலத்துள்ள திருநாரையூர். குலம் வேதியர்குலம். சமயம் சைவம். வேதம், வேதாங் கம் முதலிய எல்லாக் கலைகளையும் பொல்லாப்பிள்ளை யாரிடங் கற்றவர். தேவாரம், திருவாசகம் முதலியவை களைப் பதினொரு திருமுறையாக வகுத்தவர். பொல் லாப்பிள்ளையார் சொல்லியவாறு திருத்தொண்டர் தொகையை முதலாக வைத்துத் திருத்தொண்டர் திரு வந்தாதி செய்தவர். திருத்தொண்டர் திருவந்தாதி யன்

றித் திருவிரட்டை மணிமாலை முதலிய பிரபந்தங்களுஞ் செய்தவர்.

திருத்தொண்டர்திருவந்தாதி

பெற்ற முயர்த்தோன் விரையாக் கலிபிழைத் சோர்தமது
சுற்ற மறுக்குந் திருநாட் டியத்தான் குடிக்கோன்
குற்ற மறுக்குங் கோட்புலி நாவற் குரிசிலருள்
பெற்ற வருட்கட லென்றுல கேத்தும் பெருந்தகையே

143. நம்மாழ்வார்

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள திருக்குருகூர். குலம் வேளாளர்குலம். சமயம் வைஷ்ணவம். இவர் குருகைப்பிரான், மாறர், சடகோபர் முதலிய பெயர்களையும் பெறுவர், குருகைப்பிரான் - குருகூரார்க்குத் தலைவர். "கொத்தவிழ்த்த சோலைமன்னு குருகையாதி" என்று பாரதகாரருங் கூறுவர். மாறர் - உலகியற்கு மாறுனவர். மாறனலங்காரம் என்புழி மாறன் என்றதும் இவரையேயாம். சடகோபர் - சடவாயுவை முனிந்தவர். கம்பநாடரை நம்பெருமாள் நோக்கி "நஞ்சடகோபனைப் பாடினையோ" எனக் கம்பநாடர் பாடிய சடகோபரந்தாதியும் பெற்றவர். திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி முதலிய பிரபந்தங்கள் செய்தவர். நாலாயிரப் பிரபந்தத்தில் இவருடைய பாடல்கள் மூன்றில் ஒரு பகுதியாக அமைந்துள்ளன. மும்மூர்த்திகளையும் வழிபடும் வழக்குடையர். தேவார திருவாசகச் சொற்றொடர்கள் இவருடைய பாடல்களில் இடையிடையே வருகின்றன.

திருவிருத்தம்

வீசுஞ் சிறகாற் பறத்திர்விண் ணுடுநுங் கட்கெளிது
பேசும் படியன்ன பேசியும் போவது நெய்தொடுவுண்
டேசும் படியன்ன செய்யுமெம் மீசர்விண் ணோர்பிரானார்
மாசின் மலரடிக் கீழெம்மைச் சேர்விக்கும் வண்டுகளே.

144. நமச்சிவாயக்கவிராசர்
(1716)

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள செங்கோட்டை. விக்கிரமசிங்கபுரத்திலும் வசித்தவர். குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு நூற்றைம்பது வருடங்களுக்குமுன் என்பர். இவர் உலகுடையம்மைமேல் அந்தாதி முதலியவைகளுஞ் சிங்கைச் சிலேடைவெண்பாமுதலியவைகளுஞ் செய்தவர். சிங்கை என்பது விக்கிரமசிங்கபுரம்.

சிங்கைச்சிலேடைவெண்பா

மாலைக் குழன்மடவார் வார்விழியு மாளிகையுஞ்
சேலைக் கொடிதிகழுஞ் சிங்கையே—ஆலைக்
கரும்பனைக்கா யங்கெடுத்தார் காலாந்தத் தாடவ்
விரும்பனைக்கா யங்கெடுத்தார் வீடு.

சேலைக்கொடி திகழும் என்பது சிலேடை. விழி சேலை கொடிது இகழும் என்க. சேலை - சேலென்னும் மீனை. மாளிகை சேலைக்கொடி திகழும் என்க. சேலை - சீலை. கருட்பன் - மன்மதன். காயம் - உடல். விரும்பு அனைக்காய் அங்கு.

145. நரிவெரூஉத்தலையார்

இவர் கடைச்சங்கப் புலவருள் ஒருவர். சேரமான்கோப்பெருஞ்சேரலிரும் பொறையைக்கண்டு தம் முடம்பின் வேறுபாடு நீங்கி அவனை வியந்து கவிபாடினவர். அக்கவியும் அவர்பாடிய மற்றொரு கவியும் புறநானூற்றில் வருகின்றன. குறுந்தொகையிலும் இருகவி பாடினவர். திருக்குறட்கும் பாயிரம் பாடினவர்.

புறநானூறு

பல்சான் றீரே பல்சான் றீரே
கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்

பயனின் மூப்பிற் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ
நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமி னதுதான்
எல்லாரு முவப்ப தன்றியும்
நல்லாற் றுப்படூஉ நெறியு மாரதுவே.

குறுந்தொகை

அதுகொ றோழி காம நோயே
வதிகுறங் குறங்கு மின்னிறப் புன்னை
உடைதிரைத் திவலை யரும்புந் தீநீர்
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல்லிதழ் உண்கண் பாடொல் லாவே.

146. நல்லதம்பிப்பிள்ளை (1906)

இவரூர் மலைமண்டலத்துள்ள தத்தை மங்கலம். குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். காலம் ஏறக்குறைய இற்றைக்குப் பத்து வருடங்களுக்குமுன். இவர் மாணிக்கவாசக சுவாமிகளாதீன வித்துவான். இலக்கிய லக்கணங்களுந் தருக்கமுந் தெரிந்தவர். வடமொழியிலுஞ் சென்றவர். வடமொழி தென்மொழி என்னும் இருமொழியிலக்கணங்களுக்கும் இயைபுகாட்டிப் பாலப்பிரபோதம் என்னும் இலக்கணஞ் செய்தவர். சைவசித்தாந்த ரகசியம் முதலிய நூல்களுஞ் செய்தவர். நமது நிகண்டுச் சொற்பொருளுரைக்குப் பாயிரமுந் தந்தவர்.

பாயிரம்

தென்மொழியில் வடமொழியிற் செறிநிகண்டு மிலக்கணமுந்
திண்மை நுண்மை
மன்னுபல விலக்கியமுந் தருக்கமுத லியநூலும்
வாய்ந்த சைவ

நன்னெறிசேர்ந் தௌநூலு மோர்ந்துணர்ந்தோ னட்பினர்பா
னன்மை யாளன்
பின்னமிலா துறைமனத்தர் குமாரசுவாமி மிப்புலமைப்
பெருமை மிக்கோன்.

147. நல்லாப்பிள்ளை
(1736)

இவரூர் தொண்டைமண்டலத்துள்ள நாத்தியம் பேட்டை. குலம் கருணீகர் குலம். இவர் தமிழ் சம்ஸ் கிருதம் தெலுங்கு என்னும் மூன்று மொழிகளையும் நன்கு கற்றவர். இவர் இயற்றிய நூல்கள் தெய்வயானை புராணம், பாரதம் என்பன. இவரியற்றிய பாரதம், வில்லிபுத்தூரர் பாரதத்திலும் பார்க்க விரிவுடையதாய் வடமொழிப் பாரதத்தைப் பின்பற்றி இயற்றப்பெற் றது. தெய்வயானை புராணம் மூவாயிரம் பாக்களை யுடையது.

பாரதம்

ஈன்ற தாய்தனை யெதிர்ந்த நற்சிறுவோன வந்த
சான்ற வித்தட வெள்ளத்தாற் றருக்கியே தவங்க
ளான்ற நாட்டவ ரார்த்தருந் துழனியோ டடைந்தார்
தோன்று மற்றவர் தொழிற்செய லினிச்சில சொல்வாம்

148. நாகநாதப்பிள்ளை
(1824—1884)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள சுன்னுகம். குலம் வேளாளர் குலம். காலம் இற்றைக்கு முப்பத்திரண்டு வருடங்களுக்குமுன். இவர் அம்பலவாணர்க்கு மைந்தர். அம்பலவாணர், சீநிவாசர் என்னும் இருவர்க்குந் தந்தை யார். பிரசித்திபெற்ற வைத்தியராகிய வல்லிபுர நாதர்க்கு மாதுலர். அங்கிலம், தமிழ், சங்கதம், சிங்களம்

என்னும் நான்கு பாஷைகளும் நன்கு கற்றவர். முல்லைத் தீவு நியாயசாலையிலுங் கற்பிட்டி நியாயசாலையிலும் துவிபாஷாவாதி எனப்படும் அதிகார புருடராய் இருந்தவர்.

அங்கில மொழிபெயர்ப்போடிருந்த மானவ தருமசாத்திரம், பகவத்கீதை, மேகதூதம் முதலிய சங்கத நூல்களைத் தமிழிற் பெயர்த்துச் சங்கர பண்டிதர் படித்துக் கொள்ளக் கொடுத்தவர். இதோபதேசம், சிசுபாலவதம் முதலிய சில காவியங்களையுஞ் சில வியாகரணங்களையுந் தமிழில் விளக்கி எமக்கும் படிக்கத் தந்தவர். சில நூல்களுக்குப் பாடமுஞ் சொன்னவர். சாந்தோக்கியம் முதலிய சில உபநிடதங்களையும் சாங்கியத்தையும் மொழிபெயர்த்தவர். இதோபதேசத்தை அச்சிடும்படி எமக்குத் தந்தவர். இலங்காபிமானி முதலிய பத்திரிகைகளிலும் பலவிடயங்கள் எழுதினவர். கவிபாடுஞ் செயலுமுடையவர்.

வெண்பா

நீதி நெறிவிளக்க நேர்முறை யாராய்ந்து
போதவுரை செய்யப் புலவோர்க்கு—மேதினியில்
ஆமோ வயிரவ நாதரரு ளாசிரியன்
தாமோ தரற்கன்றித் தான்.

149. நாராயணசாமிஐயர் (1862—1914)

இவரூர் சோழ நாட்டிலுள்ள பின்னத்தூர். குலம் பிராமண குலம். கோத்திரம் கௌண்டின்னிய கோத்திரம். இவருடைய இயற்பெயர் இலக்ஷ்மி நாராயண அவதானிகள். இவர் தந்தையார் அப்பாசாமி ஐயர். தாயார் சீதாலக்ஷ்மி அம்மாள். இவர் தமிழ் சம்ஸ்கிருதம்

என்னும் இரு மொழிகளையும் நன்கு கற்றவர். மன்னார் குடி இராமசுவாமிப்பிள்ளை யவர்களிடத்திலும், நல்லூர் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை யவர்களிடத்தி லும் சிலசில நூல்கள் கற்றவர். இவர் கும்பகோணம் உயர்தரக் கலாசாலையில் தமிழ்ப் பண்டிதராயிருந்தவர். இவர் இயற்றிய நூல்கள் பிரகசன நாடகம், இடும் பாவன புராணம், இறையனூராற்றுப்படை, சிவ புரா ணம், சிவகீதை, நீலகண்டேச்சரக் கோவை, நரி விருத் தம், தென் தில்லைக் கலம்பகம், இராமாயண அகவல், நற் றிணை உரை, களப்பாழ் புராணம் முதலியன.

150. நாராயணபாரதி

இவரூர் தொண்டைமண்டலத்துள்ள வெண்மணி என்பர். குலம் வேதியர் குலம். சமயம் வைஷ்ணவம். நீதிநெறிகள் பலவற்றை எடுத்துக்காட்டித் திருவேங்கட சதகம் என்னும் பிரபந்தஞ் செய்தவர். இது மணவாள நாராயண சதகம் எனவும்படும். சதகம் - நூறு செய்யு ளாலாயது.

காப்பு

செந்திருவாழ் மார்பன் றிருவேங் கடசதகம்
பைந்தமிழா னீதிநெறி பாடவே—வந்தருளுங்
கார்முகமஞ் சங்கத்தான் கைத்தா மரையணிந்த
கார்முகமஞ் சங்கத்தான் காப்பு

கார் - முகில். முகம் அஞ்சு அங்கத்தான். கார் முகம் - வில்லு. அம் - அழகு. சங்கம் - சங்கு.

151. நாற்கவிராசநம்பி

(1250)

இவர் பெயர் நம்பி. ஆசு மதுரம் முதலிய நாற்கவி யும் பாடும் வன்மையால் நாற்கவிராச நம்பி எனப்பட்

டார். நம்பி நயினார் எனவும்படுவர். இவரூர் பாண்டி மண்டலத்திலே பொருநையாற்றங் கரையிலுள்ள புளிங்குடி. சமயம் ஆருகதம். இவர் தொல்காப்பியத்தின் வழியாய் அகப்பொருள் விளக்கம் என்னும் பொருளிலக்கணஞ் செய்தவர். இதனை உரையினாற் புதுக்கி நாமும் தி. த. கனகசுந்தரம் பிள்ளையும் அச்சிட்டிருக்கின்றோம்.

அகப்பொருள்

சூத்திரம்

மலர்தலை யுலகத்துப் புலவோ ராய்ந்த
அருந்தமி ழகப்பொருள் கைக்கிளை யைந்திணை
பெருந்திணை யெனவெழு பெற்றித் தாகும
அதுவே
புணர்ந்துறை யுலகிய லெனுந்திற மிரண்டினும்
தொல்லியல் வழாமற் சொல்லப் படுமே

152. நிரம்பவழகியதேசிகர் (1516)

இவரூர் சோழமண்டலத்துள்ள வேதாரணியம். குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு நானூறு வருடங்கட்குமுன் என்பர். இவர் மதுரைமா நகரிலே வசித்தவர். தென்மொழி வடமொழி இரண்டுந் தெரிந்தவர். இலக்கணம், தருக்கம், நிகண்டு முதலிய கருவி நூல்களையும், இலக்கியங்களையும், சைவ சித்தாந்த நூல்களையும் நன்கு உணர்ந்தவர். சேது மான்மியத்தைத் தமிழிற் பெயர்த்துச் சேது புராணம் என விருத்தப் பாவில் உரைத்தவர். சித்தியார் சுபக்கத்துக்குந் திருவருட் பயனுக்கும் உரை செய்தவர்.

சேது புராணத்திலே வழக்கில் வாராத நிகண்டுச் சொற்களையெல்லாம் அடிக்கடி பிரயோகிப்பர். இலக்

கண விடயங்களையும் பிரயோகிப்பர். திருக்கு, மடக்குச் சிலேடைகளையும் அமைப்பர். சேதுவை அணை என்பர். சக்கர தீர்த்தத்தைப் பரிதியலந்தை என்பர். சடா தீர்த்தத்தைப் பின்னலிலஞ்சி என்பர். ஒரு வேதியன் தேவனுயினுன் என்பதை "நிலைமொழி தன்னை நீத்தான் பூசுரனென்று தொக்க புணர்மொழி யிரண்டு தம்மில்" என்பர். இலக்குமி தீர்த்தம் செல்வராக்கும் என்பதை "வெறுங்கையா ரென்னுஞ் சொல்லின் மென்மையை வன்மை செய்யும்" என்பர். வல்லெழுத்தாக்க வெறுக்கையார் என வரும். வெறுக்கை - செல்வம்: இலக்குமியை "மகரவாகார நங்கை" என்பர்.

சேதுபுராணம்

இல்லமென் கிளவி யர்நாட் டிருப்பவ ரிசைக்குங்காலை
வெல்லருங் கேள்வி மேலோர் விதித்திடு மிலக்கணத்துட்
சொல்விடும் பெயரே யேனைத் தொழிற்குறிப் பிரண்டினுள்ளும்
நல்லதோர் பெயரொ யன்றி நவின்றிட நாடிடாரே.

இல்லம் என்பது பெயராகி வீடு எனவும், தொழிற்குறிப்பாகிவறியேம் எனவும் பொருள்படும். தொழிற்குறிப்பு - வினைக்குறிப்பு. அந்நாட்டவர் யாவருஞ் செல்வரா யிருத்தலால் இல்லம் என்னுஞ் சொல்லை வறியேம் என்னும் பொருளில் வழங்கார் என்றார் என்க. இச் சேதுபுராணத்தின் பெருமையையுங் கவிகளின் அருமையையும் பற்றிச் செந்தமிழிற் சில கூறினும். வேண்டுவார் ஆண்டுங் காண்க.

153. நெற்குன்றவாணர்

இவரூர் தொண்டைமண்டலத்துள்ள காஞ்சிபுரம். குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். இவர் பொறுமை, தயை முதலிய நற்குண முடையவர். ஒரு

வழக்குக் காரணமாக அவ்வூ ரரசராலே துரத்தப்பட்டுச் சோழமண்டலம் வந்து சிதம்பரம் முதலிய தலங்களைத் தெரிசித்துக்கொண்டு திருப்புகலூரிற் சிவஸ்தலம் புகுந்து விநாயகர் சந்நிதியில் ஒருகவி கூறினர். அதனைப் பின்னின்ருர் ஒருவர் கேட்டு அந்தாதிக்காப்பு என்ன அதற்கும் உடப்பட்டுத் திருப்புகலூரந்தாதி எனத் திருக்கந்தாதி ஒன்று பாடினவர் என்பர்.

திருப்புகலூரந்தாதி

பூக்க மலத்து விழிவளர் வானென்றும் போற்றியவூர்
மாக்க மலத்து மகிழ்கின்ற வூர்மது வாணிறைந்து
தேக்க மலத்து வழியே பரக்குந் திருப்புகலூர்
நோக்க மலத்துயர் சோதிநெஞ் சேநமை நோக்குதற்கே.

கமலம் - நீர். மா - இலக்குமி. தேக்கு அம் அலத்து வழியே - ததும்பிய நீர் கலப்பையின் வழியே. நோக்கு - பார். அமலத்து உயர் சோதி. இதனைத் தொண்டைமண்டல சதககாரரும் "பூக்கமல மென்ருய்ந் தெடுத்த-களப்பாள னெற்குன்ற வாணனந்தாதிக் கலித் துறையே" எனச் சுட்டிக் கூறுவர்.

154. பகழிக்கூத்தர்

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள சந்நாசிக் கிராமம் என்றும், குலம் வேதியர்குலம் என்றும், சமயம் சைவம் என்றுஞ் சிலர் கூறுவர். வேறு சிலர் ஊருங் குலமும் வேறு கூறுவர். நிற்க, இவர் இயற்றிய நூல் திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்.

பிள்ளைத்தமிழ்

கங்குல் பொருந்திய குவளைக்குழியிற் கழியிற் பழனத்திற்
கரையிற் கரைபொரு திரையில்வளைத்த கவைக்கால் வரியலவன்
பொங்கு குறுந்துளி வாடையினொந்து பொருதே வெயில்காயும்
புளினத் திடரிற் கவரிற்றுவரிற் புன்னை நறுந்தாதிற்

கொங்கு விரிந்த மடற்பொதிதாழைக் குறுமுட் கரியபசுங்
கோலச் சிறியகுடக் காயிற்புயல் தொழுதிய செய்குன்றிற்
சங்கு முழங்கிய செந்திற்பதியாய் தாலோ தாலேலோ
சமய விரோதிக டிமிரதிவாகர தாலோ தாலேலோ.

155. பட்டினத்துப்பிள்ளையார்
(900)

இவர் காவிரிப்பூம் பட்டினத்திற் பிறந்தமை பற்றிப் பட்டினத்துப்பிள்ளையார் எனப்பட்டார். திருவெண்காடர் என்பது இவரியற் பெயர். குலம் வைசியர்குலம். சமயம் சைவம். நிலை துறவு. இவர் பத்திரகிரியார், சேந்தனர் முதலியோர்க்கு ஞானகுரு. சிதம்பரம், மதுரை முதலிய சிவஸ்தலங்களுக்கு யாத்திரை செய்தவர். ஆங்காங்குத் துதிகளும், நன்மதிகளும் பிறவுமாகப் பல தனிநிலைக் கவிகள் பாடினவர். அவையெல்லாம் "பட்டினத்துப்பிள்ளையார் பாடல்" எனப்படும். கோயினான்மணிமாலை, கழுமலமும்மணிக்கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவேகம்பமாலை முதலிய பிரபந்தங்களுஞ் செய்தவர். பல கவிகளிலே இவ்வுலகப் பொய்ம்மையையும், அவ்வுலக மெய்ம்மையையுஞ் செவ்வை பெறத் தெரித்தவர். கதைகள் பல.

கோயில் நான்மணிமாலை

1. *பூமேல் அயனறியா மோலிப் புறத்ததே*
நாமே புகழ்ந்தளவை நாட்டுவோம்—பாமேவும்
ஏத்துகந்தான் தில்லை இடத்துகந்தான் அம்பலத்தே
கூத்துகந்தான் கொற்றக் குடை.

திருக்கழுமல மும்மணிக்கோவை

2. *பொருளாசை பெண்ணாசை பூவாசை யென்னும்*
மருளாசை யாமாசை மாற்றித்—தெருள்ஞான

வேந்தராய் வாழலா மெய்யன்பால் நன்னெஞ்சே
பூந்தராய் நாதரைநீ போற்று.

திருவேகம்பமாலை

3. பொருளுடையோரைச்செயலிலும்வீரரைப்போர்க்களத்தும்
தெருளுடையோரை முகத்தினும் தேர்ந்து தெளிவதுபோல்
அருளுடையோரைத் தவத்திற் குணத்தி லருளிலன்பில்
இருளறு சொல்லினுங் காணத் தகுங்கச்சி யேகம்பனே.

போது

4. கொல்லாமற் கொன்றதைத் தின்னுமற் குத்திரங் கோள்களவு
கல்லாமற் கைதவ ரோடிணங் காமற் கனவிலும் பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளாமற் றோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே.

156. படிக்காசுப்புலவர்
(1675)

படிக்காசு என்பது சிதம்பரத்திலே சிவகாமியம்மையார் பஞ்சாக்கரப்படியில் வைத்தபடிக் காசுபெறுதலாற் பெற்ற பெயர் என்பர். இவரூர் தொண்டைமண்டலத்துள்ள களத்தூர். குலம் செங்குந்தர் குலம் என்பர். சமயம் சைவம். காலம் நூளவாய் இரகுநாத சேதுபதிகாலம். இலக்கண விளக்கஞ்செய்த வைத்தியநாத தேசிகர்க்கு மாணவகர். அந்தச் சேதுபதியின் சமஸ்தான வித்துவானும் இருந்தவர். சந்தக் கவி பாடுதலிற் சமர்த்தர். "பகர்சந்தம் படிக்காசலாலொருவர் பகரொணாதே" என்னும் புகழுரையும் பெற்றவர். சபாநாயகர் மீதும், செந்தூர்க் கந்தவேள்மீதும், கொடையாளர்களாகிய காளத்திபூபதி, காயற்பட்டணச் சீதக்காதி முதலியோர்மீதும் பல தனிநிலைக்கவிகள் பாடினவர். தொண்டைமண்டலசதகம், வேளூர்க்கலம்பகம் முதலிய பிரபந்தங்களும் பாடினவர்.

சிவகாமியம்மையார்

வேல்கொடுத் தாய்திருச் செந்தூரர்க் கம்மியின் மீதுவைக்கக்
கால்கொடுத் தாய்நின் மணவாள னுக்குக் கவுணியர்க்குப்
பால்கொடுத் தாய்மத வேளுக்கு மூவர் பயப்படச்செங்
கோல்கொடுத் தாயனை யேயெனக் கேதுங் கொடுத்திலையே.

இரகுநாதசேதுபதி

மூவேந் தருமற்றுச் சங்கமும் போய்ப்பதின் மூன்றொடெட்டுக்
கோவேந் தருமற்று மற்றொரு வேந்தன் கொடையுமற்றுப்
பாவேந்தர் காற்றி லிலவம்பஞ் சாகப் பறக்கையிலே
தேவேந்த்ர தாருவொத் தாய்ரகு நாத செயதுங்கனே.

காளத்திபூபதி

பெற்றா ளொருபிள்ளை யென்மனை யாட்டியப் பிள்ளைக்குப்பால்
பற்றாது கஞ்சி குடிக்குந் தரமல்லப் பாலிரக்கச்
சிற்றாளு மில்லையிவ் வெல்லா வருத்தமுந் தீரவொரு
கற்றா தரவல்லை யோவல்லை மாநகர்க் காளத்தியே.

சீதக்காதி

காய்ந்து சிவந்தது சூரிய காந்தி கலவியிலே
தோய்ந்து சிவந்தது மின்னார் நெடுங்கண்க டொல்பலநூல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர் நெஞ்ச மநுதினமும்
ஈந்து சிவந்தது வேள்சீதக் காதி யிருகரமே.

தமிழினிரப்பு

அடகெடுவாய் பலதொழிலு மிருக்கக் கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டே மறிவில் லாமல்
இடமுளமோ கனமாடக் கழைக்கூத் தாடச்
செப்படிவித் தைகளாடத் தெரிந்தோ மில்லைத்
தடமுலைவே சையராகப் பிறந்தோ மில்லைச்
சனியான தமிழைவிட்டுத் தைய லார்தம்
இடமிருந்து தூதுசென்று பிழைத்தோ மில்லை
என்னசென்ம மெடுத்துலகி லிரக்கின் றோமே.

157. பண்டிதராசர்

(1689)

இவரூர் ஈழநாட்டிலுள்ள திருக்கோணமலை. குலம் பிராமணர் குலம். சமயம் சைவம். இவர் வடமொழி தென்மொழி என்னும் இருமொழிகளையும் நன்கு கற்றவர். இவர் செகராஜசேகர மன்னன் காலத்தவர். இவர் இயற்றியநூல் தக்கிண கைலாச புராணம்.

தக்கிணகைலாசபுராணம்

பூவெலாம் தூய்ய வாசம் புனமெலா முனிவர் வாசம்
மாவெலாம் குயிலி னோசை மலையெலாங் குயிலி னோசை
காவெலா முயர்ந்த தாழை கரையெலாங் கமழுந்தாழை
பாவெலா மானோர் தஞ்சீர் பகர்வரி தன்னோர் தஞ்சீர்.

158. பரஞ்சோதிமுனிவர்

(1066)

இவரூர் சோழமண்டலத்துள்ள வேதாரணியம். குலம் அபிடேகத்தர்குலம். சமயம் சைவம். காலம் ஏறக்குறைய இற்றைக்கு எண்ணூற்றைம்பது வருடங்களுக்கு முன் என்பர். இவர் வடமொழி தென்மொழிகளிலுள்ள பலவகை நூல்களையுங் கற்றவர். வேதாரணியமான்மியத்தையும், ஆலாசியமான்மியத்தையுந் தமிழிற் பெயர்த்து முறையே வேதாரணியபுராணம் எனவும், திருவிளையாடற்புராணம் எனவும் செய்யுள் வடிவமாகச் செய்தவர். திருவிளையாடற்புராணம் சிவஸ்தல யாத்திரையிற் சென்று மதுரையில் வசிக்கும்போது பெரியோர் சிலர் விரும்பியவாறு பாடிச் சோமசுந்தரக்கடவுள் முன்னிலையிலே அறுகாற்பீடமீதிருந்து அரங்கேற்றியது. இவையன்றித் திருவிளையாடற் போற்றிக்கலிவெண்பா,

மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி என்பவைகளுஞ் செய்தவர் என்பர்.

வேதாரணியபுராணம்

வேத நாயகனே போற்றி விண்ணவர் தலைவா போற்றி
மாதொரு பாகா போற்றி மறுசம யங்கண் மாளப்
பேதகஞ் செய்வாய் போற்றி பிஞ்ஞகா போற்றி யான்செய்
பாதக மனைத்துந் தீர்க்கும் பராபரா போற்றி போற்றி.

திருவிளையாடற்புராணம்

காதுவே லன்ன கண்ணார் கங்கைநீர் சுமந்த தேதுக்
கோதுமி னென்றார் நம்பா லுண்பலி யேற்க வென்றான்
ஏதுபோ லிருந்த தைய னிசைத்தசெப் பென்றா ரீசன்
கோதறு வமுதன் னீர்நுங் கொங்கைபோ லிருந்த தென்றான்.

இது வளையல்விற்கச் சென்ற சோமசுந்தரக் கடவுளுக்கும் வீதியில்வந்த மகளிர்க்கும் நிகழ்ந்த சல்லாபம். இங்கே கங்கை, செப்பு என்பன சிலேடை. கங்கை - ஒருநதி, கம்-தலையோடு. கை-கரம். செப்பு-வார்த்தை, செப்பு என்னுஞ் சிமிழ். இவ்விரு பொருள்களுள்ளே மகளிர் முதலாம் பொருள்களைக் கருதியே வினவினர். கடவுள் இரண்டாம் பொருளைச் சுட்டியே விடை கூறினர். இதனை அலங்காரகாரர் வக்கிரோக்தி என்பர். தார்க்கிகர் சலஞ்சாதித்தல் என்பர். சலஞ்சாதித்தல் ஒரு கருத்துப் பற்றிக் கூறிய சொற்கு மற்றொரு பொருள் படைத்துக்கொண்டு நகுதல், பின்வருவதும் இது.

கறுத்ததை யெவன்கொ லைய கந்தர மென்றார் வேளை
வெறுத்தவன் மாரி பெய்தற் கென்றனன் விழியால் வேலை
ஒறுத்தவர் யாவ தென்றீ ருத்தர மென்றார் கூற்றைச்
செறுத்தவன் றென்பா னின்று நோக்கினற் றெரிவ தென்றான்.

இங்கே கந்தரம், உத்தரம் என்பன சிலேடை. கந்தரம் - கழுத்து. மேகம். உத்தரம் - மறுமொழி, வடக்கு.

159. பரணர்

இவர் கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவர். கபிலர்க்கு நண்பர். சூடாமணிநிகண்டிற் சொல்லப்பட்ட ஓரி, ஆஅய் என்னும் வள்ளல்களையும், சேரசோழ பாண்டியர்களையும் வேறுசிலரையும் உறையூர் வேங்கைமலை முதலியவைகளையும் வியந்துபாடினவர். அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, பதிற்றுப்பத்து என்னுந் தொகைநிலைகளில் வருஞ் செய்யுள்களுள்ளே பல செய்யுள் பாடினவர். திருக்குறட் றும்பாயிரம் பாடினவர்.

குறுந்தொகை

இல்லோ னின்பங் காமுற் றாஅங்
கரிது வேட்டனையா னெஞ்சே காதலி
நல்ல ளாகுத லறிந்தாங்
கரிய ளாகுத லறியா தோயே

160. பரிமேலழகர்

(1272)

இவரூர் தொண்டைமண்டலத்துள்ள காஞ்சிபுரம். "காஞ்சிவாழ் பரிமேலழகன்-வள்ளுவனூர்க்கு வழிகாட்டினான் றொண்டை மண்டலமே" என்பது தொண்டைமண்டலசதகம். குலம் வேதியர்குலம் சமயம் வைணவம் என்பர். இவர் வடமொழி தென்மொழிகளிலுள்ள பலவகை நூல்களையுங் கற்றவர். திருக்குறட்கும் பரிபாடற்கும் உரைசெய்தவர். திருக்குறளுரை மற்றை உரைக ளெல்லாவற்றுள்ளும் மிக்கது. கொற்றங்குடியார், சிவஞானமுனிவர் முதலிய அருட்புலமையாளர்களும் வியந்தது. திருக்குறளுரையிலே தருக்கம், வியாகரணம், சாங்கியம், யோகம் முதலிய வடநூற் பொருள்களையும், சங்கநூன் முதலிய சான்றோர் நூற் பொருள்களையுஞ் சான்றாகக் கூறுவர்.

இவரை வேறுசிலர் "கோளில் பொறியில்" என்னுங் கவியுரை கொண்டும், மெய்யுணர்வு, அவாவறுத்தல் என்னும் அதிகாரங்களில் வருஞ் சில கவிகளினுரை கொண்டும் சைவர் என்பர். வித்துவான் ரா. இராகவையங்கார் வைஷ்ணவர் என்பதற்கு "நீணிலங் கடந்தோன் குடொழுமரபிற் - பரிமேலழக னுரிமையி னுணர்ந்தே" என்னும் பரிபாடற் பாயிர பாகத்தையும், பின்வரும் வெண்பாவையுஞ் செந்தமிழ்ப் பத்திரிகையிற் காட்டுவர்.

வெண்பா

விரும்பி யருணீல வெற்பிமயக் குன்றின்
வரும்பரிசு புள்ளூரு மாலே — சுரும்பு
வரிபாட லின்சீர் வளர்துளவத் தோளாய்
பரிபாட லின்சீர்ப் பயன்.

161. பவணந்தி முனிவர்
(1216)

இவரூர் தொண்டை மண்டலத்துள்ள சனகாபுரம். குலம் வேதியர் குலம் என்பர். சமயம் ஆருகதம். காலம் இற்றைக்கு எழுநூறு வருடங்களுக்குமுன் என்பர். இவர் வடமொழி தென்மொழி என்னும் இருமொழி நூல்களையுங் கற்றவர். அருங்கலை விநோதன் அமராபரணன் திருவேகம்பமுடையான், சீயகங்கன் என்னுஞ் சிற்றரசன் விரும்பியவாறு முன்னூல் வழியே நன்னூல் என்னும் இலக்கணஞ் செய்தவர். இந்நன்னூல் பாணிநீய வியாகரணம்போலச் சில்வகையெழுத்திற் பல்வகைப் பொருள்சொலுந் திட்பநுட்பத்தாற் சிறந்தது. இதனருமை பெருமைகளைப் பாராட்டி "முன்னூலொழியப் பின்னூல் பலவினுள் நன்னூலார்தமக்கு எந்நூலா

ரும் இணையோ என்னுந் துணிவே மன்னுக" என்று இலக்கணக்கொத்து நூலார் கூறுவர். இது மயிலைநாதர், ஆண்டிப் புலவர் முதலிய பலருரையுடையது.

சூத்திரம்

(நூலினியல்பு)

நூலி னியல்பே நுவலி னோரிரு
பாயிரந் தோற்றி மும்மையி னொன்றாய்
நாற்பொருட் பயத்தோ டெழுமதந் தழுவி
ஐயிரு குற்றமு மகற்றியம் மாட்சியோ
டெண்ணான் குத்தியி னோத்துப் படலம்
என்னு முறுப்பினிற் சூத்திரங் காண்டிகை
விருத்தி யாகும் விகற்ப நடைபெறுமே.

162. பாண்டித்துரைத்தேவர்

(1867—1911)

இவர் நகரம் இராமநாதபுரம். குலம் சேதுபதியரசர் குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு நான்கு வருடங்களுக்குமுன். இலக்கிய லக்கணங்களும் சித்தாந்தமும் பிறவும் நன்கு கற்றவர். இலக்கிய லக்கணங்களைப் பலர்க்குக் கற்பித்தவர். கற்றவர்க்கெல்லாம் நற்றுணையாளர். புலவர்பாடும் புகழாளர். "தேடினர் யாவரே கொலெழுவகையாலுஞ் சீர்த்தி" என்புழிக் கூறப்பட்ட நூல் செய்தலாலும், அதற்கினமாகிய நூல் செய்வித்தலாலும், பழந்தமிழ்ப் பரிபாலனத்தாலும் பெரும்புகழ் தேடிய பிரபுதிலகர்.

சிவஞானசுவாமிகளிரட்டைமணிமாலை, இராசராசேசுவரிபதிகம், சைவமஞ்சரி, பன்னூற்றிரட்டு முதலிய நூல்களும், பல தனிநிலைக்கவிகளுஞ் செய்தவர். செந்

தமிழ்ப்பஞ்சிகையிலுஞ் செந்தமிழ் வளர்ச்சிக்குரிய சில விடயங்கள் எழுதினவர். பலரையும் ஏவி எழுதுவித்தவர். தணிகைப்புராணச் சிலேடைக்கவிகளுக்கும் பொருள் எழுதினவர். திருக்குறளைப்பற்றிய சில கதைகளும் எழுதினவர்.

பழந்தமிழ்நூல்களைப் பரிசோதித்தச்சிடலிற் சிறந்து விளங்கும் மகாமகோபாத்தியாயர் சாமிநாதையர் வெண்பாமாலை முதலிய சில நூல்கள் அச்சிடற்குந் துணைபுரிந்தவர். வேறுசிலர் வேறு சிலநூல்கள் அச்சிடற்குந் துணைபுரிந்தவர். நமக்குந் தண்டியலங்காரவுரை அச்சிடப் பெருந்தொகை உதவிப் பெருந்துணை புரிந்தவர். இவருடைய தமிழ்ப்பரிபாலனம் முதலியவைகளைத் தண்டியலங்கார முகவுரையிலுஞ் சைவமஞ்சரிப் பாயிரத்திலுங் கூறினும். இவர் பெருமை புலப்பட அவைகளுள்ளும் சில காட்டுதும்.

தண்டியலங்காரமுகவுரை

"பாலவனத்தம் ஜமிந்தார் என்றும், மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைவர் என்றும், தலைமைப்புலவர் என்றும், செந்தமிழ்க்கலாவிநோதர் என்றும், செந்தமிழ்ப் பரிபாலகர் என்றும், பிரபுசிகாமணி என்றுஞ் சொல்லப்படும் ஸ்ரீமான். பாண்டித்துரைத் தேவர் என்போம். மூவேந்தரும் போய் முச்சங்கமும் போய்ப் பாவேந்தருங் குறைந்து பழைய நாலுரைகளும் மறைந்து படிப்பாருமின்றிக் கேட்பாருமின்றித் தமிழ்க்கல்வி மழுங்கிவரும் இக்காலத்திலே மதுரைமாநகரில் வித்துவசங்கங் கூட்டியும், அருந்தமிழ் நூல்களை ஈட்டியும், படித்து வல்லரானார்க்குப் பரிசில் கொடுத்தும், செந்தமிழ் என்னும் மாசிக வாசிக பத்திரிகையை வெளிப்பட விடுத்தும் பிரபு

சிகாமணியவர்கள் பலவாறுகச் செய்து வருஞ் செந்தமிழ்ப் பரிபாலனச் செயல்களுள் இத் தண்டியலங்காரவுரையையும் ஒன்றுக மதிப்பார்கள் என்பது நமது கருத்து."

சைவமஞ்சரிப்பாயிரம்

திக்குலவும் புகழாளன் பிரபுகுல சிகாமணியாய்ச் சிறந்த சீலன்
அக்கிரகண் ணியன்பொன்னு சாமியெனு நரபால னருளும் பாலன்
நக்கனடி யவர்பாலன் பேறளத்தன் வெண்ணீறு நண்ணும் பாலன்
தக்கபொரு ணிலவுகலை விநோதனுயர் சற்சங்க சனனு கூலன்.

பூதேவன் புகலியர்கோன் முதலறிஞர் தமிழ்நூலின் பொருள்களுள்ள, மீதேவன் பறமருவப் பதித்தேவன் றேவனெனும் வெளிறு நீங்கி, நீதேவ னெனக்கொண்டு நிலத்தேவன் பகைகடந்து நெறிநின்றீசன், மாதேவன் பதத்தேவன் மகிழ்பாண்டித்துரைத்தேவ மன்னன்மாதோ.

பூதேவன் - பிராமணன். உள்ளமீதே வன்புற பதித்து ஏவன் தேவன். வெளிறு - வெள்ளறிவு- நிலத்தேவன்பகை. மாதேவன் - பதத்து ஏவல். இனித் திருக்குறளைப்பற்றிய கதைகளையுஞ் சுருக்கி எடுத்துக் காட்டுவாம்.

புலவரிருவர்

புலவரொருவர் பொதிசோறுங் கொண்டு தூரமான ஓரூருக்குப் போயினர். இடைவழியில் ஒரு குளமும் மரநிழலும் எதிர்ப்படக் கண்டு மர நிழலிலே பொதிசோற்றை வைத்துவிட்டுக் குளத்திலே முழுகி வழிபாடும் முடித்துப் பசி மிகுதியாற் பொதி சோற்றை அவிழ்த்தார். அவிழ்த்தலை நெடுவழி நடந்த களைப்பினுல் அங்கே தங்கி முழுகி வழிபாடும் முடித்துப் பசியோடிருந்த வேருெரு புலவர் கண்டு சிறிதிரந்துண்ண எண்ணி "ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற் கிரவி னிழி

வந்த தில்" என்னுங் குறளை நினைத்து நேரே கேட்டு வாங்க நாணித் தமது கருத்தை,

> விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
> மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

என்னுங் குறளைச் சொல்லிக் குறிப்பாக அறிவித்தார். பொதிசோறவிழ்த்த புலவர் அக்குறிப்பை அறிந்து உண்ணுமளவன்றி அதிகமின்மையாற் கவலையுற்றுப் பிரித்துண்டால் இருவர் பசியும் நீங்காதே என்பதுங் கருதி ஒரு சோற்றவிழை மாத்திரம் எடுத்து அவர் கரத்திலே விழ எறிந்து,

> தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
> கொள்வர் பயன்றெரி வார்

என்னுங் குறளையுஞ் சொன்னார். இரு குறளும் ஒன்றினொன்று வலிதாயிருத்தலை இருவரும் நோக்கிப் பின்னர் ஒருவரை ஒருவர் அளவளாவி நண்புபூண்டனர்.

பொய் சொல்லாமை

திருடன் ஒருவன் நெடுவழியிலே நின்று போக்கு வரவு செய்வோர் வைத்திருக்கும் பொருளைப் பறித்துச் சீவனஞ் செய்துவந்தான். ஒருநாள் அவ்வழியில் ஒரு சந்நியாசியும் வந்தான். திருடன் அடித்துப் பறிக்க ஆரம்பித்தான். சந்நியாசி "இது காஷாய மூட்டை உனக்கேன்?" எனத் தடுத்து, "வயிறு வளர்த்தற்குப் பல தொழிலிருக்கவும், பாவத் தொழிலை ஏன்செய்கின்றாய்?" என அவன் இத்தொழில் செய்யாமல் என் பெண்டு பிள்ளைகளைப் பேணமுடியாது என்றான். சந்நியாசி "களவு செய்தாலும் பொய் ஒருகாலும் சொல்லாதே: அதனால் அதிக லாபம் வரும்" என்று சொல்லிப்,

பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

என்ற குறளின் பொருளையும் அறிவுறுத்திப் போயி னன். அதனைத் திருடனுந் தலைமேற்கொண்டு அற்பமும் பொய் பேசாமல் வந்தான். ஒருநாளிரவு நகரி சோதித்து வரும் அரசன் களவுக்குப் போன திருடனை வழியிற் கண்டுபேசி அவன் வாயால் உண்மை அறிந்து, "எனக்கும் பங்கு; யானுங் கூட வருகிறேன்" என்று கூட்டிக் கொண்டு போய்த் தனது திரவியசாலையுட் புகும் வழியையுங் காட்டிவிட்டு வெளியிலே நின்றான். திருடன் புகுந்து விலையுயர்ந்தனவா யிருந்த மூன்று இரத்தினங்களுள்ளே இரண்டு மாத்திரம் எடுத்துக்கொண்டு வெளியில் வந்துஒன்றை அரசனுக்குக் கொடுத்துவிட்டு ஒன்றைத் தான்கொண்டுபோனான். மறுநாள் அரசன் கட்டளைப்படி களவுபோனபொருள்களைப் பரிசோதித்து வந்த மந்திரி எஞ்சிய ஒன்றையுந் தான் எடுத்துக்கொண்டு மூன்று இரத்தினமுங் களவு போயின என்றான். அரசன் விசாரணைசெய்து பொய் கூறிய மந்திரியை விலக்கி உண்மை கூறிய திருடனையே மந்திரியாக்கி நன்கு மதித்தான்.

இரட்டைமணிமாலை

நற்பாலர் வேண்டின் மயிலம்மை யார்தவ நாடுகநூல்
கற்பா னசையிற் சிவஞான தேவன் கலையுணர்க
சொற்பா லறத்துற வுன்னிலன் ஞானிற் றுறக்கவிப்பா
ரிற்போகம் வேண்டிற் சிவயோக மேவிரைந் தெய்துகவே.

163. பிங்கலர்

இவர் பிங்கலம் என்னும் நிகண்டு நூல் செய்தவர். பவணந்தி முனிவர்க்கும், மண்டல புருடர்க்கும்

முந்தியவர். பிங்கல நிகண்டு இராமாயணம், பாரதம் முதலியவற்றில் வரும் துமிதம், புள்ளிமலை, பெருக்காளர் முதலிய அருஞ் சொற்கள் பலவற்றின் பொருள்களையும் பிறவற்றையும் அறிவிப்பது.

இராமாயணம்

குமுத னிட்ட குலவரை கூத்தரிற்
றிமித மிட்டுத் திரியுந் திரைக்கடல்
துமித மூர்புக வானவர் துள்ளினர்
அமுத மின்னு மெழுமெனு மாசையால்.

இக்கவியைச் சோழன் சபையிற் கம்பர் பிரசங்கிக்கும்போது துமி என்பதற்குத் துளி என்று பொருள் கூறற்குப் பிரமாணம் யாது என வினவிய ஒட்டக்கூத்தர்க்கு "மோர்த்துமி தெறிக்கப்போகின்றது" என இடைக்குலக் கிழவி கூறியதைக் கம்பர் பிரமாணமாகக் காட்டினர்என்பர். துமிதம் என்பது பிங்கலம்போல இங்குக் கொள்ளக்கிடத்தலின் அது பொருந்தும் வகைஅரிது.

பிங்கலநிகண்டு
(பார்ப்பார் பெயர்)

அறவோர் பூசு ரறுதொழி லாளர்
இருபிறப் பாள ரெரிவளர்ப் போரே
ஆதிவருணர் வேதிய ரந்தணர்
வேள்வியாளர் மறையவர் விப்பிரர்
மேற்குலத்தோர்முற் குலத்தோ ரையர்
வேத பாரகர் முப்புரி நூலோர்
தொழுகுலர் பார்ப்பார் தொல்பெய ராகும்.

164. பீதாம்பரப் புலவர்
(1819)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள நீர்வேலி. குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். காலம் சேனாதிராய

முதலியார் காலம். இவர் சேனுதிராய முதலியார்க்கு மாணவகர். இலக்கியலக்கணங் கற்றவர் கவிபாடுந் திறமுடையவர். மறைசைக் கலம்பகம், நீர்வை வெண்பா, மறைசைத் திருப்புகழ், வல்லிபுரநாதர் பதிகம் முதலிய நூல்கள் செய்தவர்.

மறைசைக்கலம்பகம்

மேவுமலை மானை விழைவோ டிடம்வைத்தி
வாவுமலை மானைமுடி வைத்தவா — காவகமேல்
வந்துவழங் கும்மறைசை வானவா வாழ்த்தெனக்கு
வந்துவழங் குன்றூண் மலர்.

மலைமான் - உமாதேவி. வாவும் அலைமான்-கங்கை. வந்து - காற்று. மறைசை - வேதாரணியம்.

165. புகழேந்திப் புலவர்
(1110)

இவரூர் தொண்டை மண்டலத்துள்ள பொன்களத்தூர். குலம் வேளாளர் குலம், சமயம் வைஷ்ணவம். காலம் ஒட்டக்கூத்தர் காலம். வெண்பா இயற்றும் பண்பான் மிக்கவர். "வெண்பாவிற் புகழேந்தி" என்னும் புனைந்துரையும் பெற்றவர். வரகுண பாண்டியன் சபைப் புலவராயும் வசித்தவர். படிக்காசுப் புலவராற் "பாட்டாலுயர்ந்த புகழேந்தி" எனப்பட்டவர். நளவெண்பா, இரத்தினச் சுருக்கம் முதலிய தொகைநிலைச் செய்யுள்களும், பல தனிநிலைச் செய்யுள்களும் பாடினவர். வாணிதாசருடன் வாதுகொண்டும் பாடினவர். தற்கோலி என்ற சந்த விருத்தத்தால் அவரை வென்றவர் என்றுங் கூறுவர்.

நளவெண்பா

க. மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப—முல்லையெனும்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது.

உ. வையம் பகலிழப்ப வான மொளியிழப்பப்
பொய்கையு நீள்கழியும் புள்ளிழப்பப்—பையவே
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது.

ங. பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—இன்னடிசிற்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்.

சந்தவிருத்தம்

தற்கோ விப்பூ சற்பா சத்தே தப்பா மற்சா கைக்கே கிற்பீர்
முற்கோ விக்கோ விப்பூ சித்தே முட்டா மற்சே வித்தே கிறபீர்
வற்றுநெட்டோ டைப்பாரைச்சேன் மைப்பூகத்தே றித்தாவிப்போய்
செற்று ளுற்று லைப்பா கிற்சேர் செய்த்தா னத்தா னைத்யா னித்தே.

தொண்டைமண்டலசதகம்

நூலார் கலைவல்ல செம்பியன் கேட்க நுனித்துமிக்க
கோலா கலனொட்டக் கூத்தனை யன்றதற் கோவியென்று
மேலார் கவிசொல்லி செய்த்தானத் தேசென்று வென்றுகொண்ட
மாலார் களந்தைப் புகழேந்தி யுந்தொண்டை மண்டலமே.

163. புத்தமித்திரர்

(1416)

இவரூர் சோழ மண்டலத்துள்ள பொன்பற்றியூர். சமயம் பௌத்தம். காலம் ஏறக்குறைய இற்றைக்கு ஆயிரத்தைந்நூறு வருடங்களுக்கு முன் என்பர். இவர் ஒரு சிற்றரசர். இடையிடை வடமொழி விதிகளையுங் கூட்டி எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களையும் வேறுவேறு

காட்டி, வீரசோழன் என்னும் பேரரசன் பெயரை நாட்டி வீரசோழியம் என்னும் பேரிலக்கணஞ் செய்தவர். திகழ் + தசக்கரம் = திகட சக்கரம் என வரும் புணர்ச்சி விதி முதலிய அரிய விதிகள் பல இதிலே காணப்படும். பெருந்தேவனாருரையுடையது. செய்யுள் கட்டளைக் கலித்துறை,

வீரசோழியம்

நாமே வெழுத்துச்சொ னற்பொருள் யாப்பலங் காரமெனும்
பாமேவு பஞ்ச வதிகார மாம்பரப் பைச்சுருக்கித்
தேமே வியதொங்கற் றேர்வீர சோழன் றிருப்பெயராற்
பூமே லுரைப்பன் வடநூன் மரபும் புகன்றுகொண்டே.

167 பூதன்றேவனார்

இவர் மதுரைக் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர்; ஈழத்துப் பூதன்றேவனார் எனவும் சொல்லப்படுவர். கடைச்சங்க காலத்திலே நமது ஈழமண்டலத்திலிருந்து பாண்டிமண்டலம் போய், மதுரைச் சங்கத்திலும் புலவராய் நிலவினர்போலும். ஈழத்துப் பூதன்றேவனார் என்னும் பெயர் நற்றிணையிலுங் குறுந்தொகையிலும், கவிகளின் முகப்பில் வரையப்பட்டிருக்கின்றது. இவர் நற்றிணை, குறுக்தொகை, அகநானூறு என்னுந் தொகை நூல்களிற் சிலசில கவிகள் பாடியிருக்கின்றார். இவராற் பாடப்பட்டன பாலையுங் குறிஞ்சியும்.

குறுந்தொகை

நினையாய் வாழி தோழி நனைகவுள்
அண்ணல் யானை யணிமுகம் பாய்ந்தென
மிகுவ லிரும்புலிப் பகுவா யேற்றை
வெண்கோடு செம்மறுக் கொளீஇய விடர்முகை

கோடை யொற்றிய கருங்கால் வேங்கை
வாடு பூஞ்சினையிற் கிடக்கும்
உயர்வரை நாட னொடுபெயரு மாறே,

168. பெரியாழ்வார்

(750)

இவரூர் பாண்டி மண்டலத்துள்ள சிறீவில்லிபுத்தூர். குலம் அந்தண வகுப்பைச் சார்ந்த வேயர்குலம். சமயம் வைஷ்ணவம். இவர் விஷ்ணுசித்தர் என்றும் அழைக்கப்படுவர். திருமாலிடம் பேரன்பு பூண்டவராய்ப் பாண்டியன் முன்னிலையில் பரசமய வாதிகளோடு வாதாடி வெற்றிபெற்றுப் பொற்கிழிப் பரிசும், பட்டர்பிரான் என்ற பட்டமும் பெற்றவர். இவருடைய பாக்களில் கிருஷ்ணருடைய வாழ்க்கை வரலாறுகள் விரித்துக் கூறப்பட்டுள்ளன.

நம்பனே நவின்று ஏத்தவல் லார்கள்
நாத னே!நா சிங்கம தாயினாய்!
உம்பர் கோன்உலகு ஏழும் அளந்தாய்!
ஊழி ஆயினாய்! ஆழிமுன் ஏந்தி!
கம்ப மாகரி கோள்விடுத் தானே!
கார ணா!கட லைக்கடைந் தானே!
எம்பி ரான்!என்னை ஆளுடைத் தேனே!
ஏழை யேன்இட ரைக்களை யாயே!

169. பெருந்தேவனார்

(800)

பெருந்தேவனார் என்னும் பெயருடைப் புலவர் பலர். இங்கே கூறப்படும் புலவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். இவர் நாடு "பாரதம் பாடும் பெருந் தேவர்

வாழும் பழம்பதிகாண் * * * தொண்டை மண்டலமே" என்று படிக்காசுப் புலவர் கூறுவர். இவர் புறநானூறு குறுந்தொகை முதலிய தொகைநிலைச் செய்யுள்களில் வருங் கடவுட் பாட்டுக்கள் பாடினவர். புறநானூற்றிற் சிவபிரானுக்கு வணக்கங் கூறுவர், குறுந்தொகையில் முருகவேளுக்கு வணக்கங் கூறுவர். நற்றிணையிலே நாராயணமூர்த்திக்கு வணக்கங் கூறுவர்; வெண்பாவும் அகவலும் உரைப்பாட்டுமாகப் பாரத கதையைப் பாடினவர் கடைச்சங்கப் புலவருள் ஒருவர்.

நற்றிணை

மாநிலஞ் சேவடி யாகத் தூநீர்
வளைநரல் பௌவ முடுக்கை யாக
விசும்பு மெய்யாகத் திசைகை யாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணாக
இயன்ற வெல்லாம் பயின்றகத் தடக்கிய
வேத முதல்வ னென்ப
தீதற விளங்கிய திகிரி யோனே.

பாரத வெண்பா

இந்நோய் நமக்குண்டென் றெண்ணாதே யெவ்வுயிரும்
முன்னேவக் கொன்றுண்ணு மூர்க்கர்தாம்—எந்நோவும்
பண்ணப் படுநரகிற் பாவிகளிற் பாவிகளென்
றெண்ணப் படுவ ரிசைந்து.

170. பெரும்பற்றப்புலியூர் நம்பி

இவரூர் பாண்டி மண்டலத்துள்ள செல்லிநகர் என்பர். குலம் வேதியர் குலம். சமயம் சைவம். இவர் இலக்கியலக்கணங்கள் நன்கு கற்றவர். பழைய திருவிளை

யாடல் எனப்படுந் திருவாலவாயுடையார் திருவிளையாடல் என்னும் பிரபந்தஞ் செய்தவர். இதன்கண் "கருதிடின் வலவை மாவலி கங்கை கம்பளை கல்லணையென்னும் சமனொளிசூழ் நதிகள்" என இலங்கையிலுள்ள நதிகளையும் சமனொளி என்னும் மலையையுங் கூறுவர்.

திருவிளையாடல்

ஓது பாலர் மழலை யுரையையும்
தாதை தாயர் தயாவுறக் கேட்டெனப்
பேதை யேன்புன் மொழிபெரு மான்புகழ்
ஆத லானல் லறிஞர் வியப்பரே.

171. பெருவாயின் முள்ளியார்

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள கயத்தூர். சமயம் சைவம். காலம் கடைச்சங்க காலம். இவர் ஆசாரக்கோவை என்னும் பிரபந்தஞ் செய்தவர். இதன்கண் காலை மாலைகளிற் செய்ய வேண்டிய முறையும், பெரியோர்முன்னிலை, போசனபந்தி, பிரயாணம், வழி, திவசம், விவாகம், திருவிழா முதலியனவற்றிற் செய்யவேண்டிய முறையும் பிறவும் குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா முதலிய வெண்பாக்களில் அமைத்துக் கோவை செய்யப்பட்டிருக்கின்றன. ஆசாரம் - ஒழுக்கம். ஒழுக்கம் - நடக்குமுறை. கோவை – கோத்தது.

ஆசாரக்கோவை

கல்யாணந் தேவர் பிதிர்விழா வேள்வியென்
றைவகை நாளு மிகழா தறஞ்செய்க
பெய்க விருந்திற்குங் கூழ்.

பயணத்தடை

எழுச்சிக்கட் பிற்கூவார் தம்மார் வழுக்கியும்
எங்குப்போ கின்றீரோ வென்றேர—முன்புக்
கெதிர்முக மாகநின் றுரையா ரிருசார்வுங்
கொள்வர் குரவர் வலம்.

172. பொய்யாமொழிப் புலவர்

(1106)

இவரூர் தொண்டைமண்டலத்துள்ள செங்காட்டக் கோட்டத் துறையூர் என்பர். சமயம் சைவம். காலம் இற்றைக்கு ஆயிரம் வருடங்களுக்கு முன் என்பர். இவர் வரகவி. பல தனிநிலைக் கவிகளும், தஞ்சை வாணன் கோவை என்னும் பிரபந்தமுஞ் செய்தவர். தஞ்சைவாணனுவான் பாண்டி மண்டலத்திலே தஞ்சாக்கூரிலே பாண்டியர்க்கு மந்திரியும், படைத் தலைவனுமாயிருந்த ஒரு வேளாளப் பிரபு. தஞ்சை - தஞ்சாக்கூர்.

இந்த வாணன்கோவை, இவர் பாண்டிமண்டலஞ் சென்று சஞ்சரித்தபோது பாடியது. பாண்டி மண்டல வழியிலே ஒரு பாலை வனத்தருகிலே முருகவேள் ஒரு வேடனுய் நின்று பயமுறுத்தி, "என் பெயர் முட்டை என வைத்து, இப் பாலைவனத்தையுஞ் சுட்டி நற்ருயிரங்கலாக ஒன்று பாடுக" என ஒரு வெண்பாப் பாடினவர். அது சுவையில்லை என்று தம் பெயர் வைத்து முருகவேள் பாடிய வெண்பாவும் பெற்றவர்.

பொய்யாமொழி பாடியது

பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கியைந்தனளே—மின்போலும்
மானவேன் முட்டைக்கு மாருய தெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங் காடு.

முருகவேள் பாடியது

விழுந்த துளி யந்தரத்தே வேமென்றும் வீழின்
எழுந்து சுடர்சுடுமென் றேங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தே பெய்வளையும் போயினுள்
பொய்யா மொழிப்பகை ஞர்போல்.

கள்ளிப் பொறி பறக்குங் காட்டிலே வேலமரத்தின் முள் வெந்தெரியாமற் கிடந்து தைக்கும்வகை எப்படி? என முருகவேள் இவர் கவியில் வினவினர் எனவுங் கூறுவார். இச் சம்பவத்தை அருணகிரிநாதர் "முற்பட்ட முரட்டுப் புலவனை — முட்டைப் பெயர் செப்பிக் கவி பெறு பெருமாளே" என்பர். படிக்காசுப் புலவர் "கையா றிரண்டுடைக் காளைதன் வாயிற் கவிதை கொண்ட - பொய்யாமொழி" என்பர்.

இவர் சோழ மண்டலஞ் சென்று, சோழ ராசன் மீதுஞ் சீனக்க வள்ளன்மீதும் வேறு சிலர்மீதும் கவி பாடினவர் என்பர்.

வாணன் கோவை

தண்பட்ட மேவும் வயற்றஞ்சை வாணன் றமிழ்ச்சிலம்பிற்
பண்பட்ட தேமொழிப் பாவையன் னீர்பனை பட்டகையும்
மண்பட்ட கோடு மதம்பட்ட வாயும் வடிக்கணைதோய்
புண்பட்ட மேனியு மாய்வந்த தோவொரு போர்க்களிறே.

173. பொன்னம்பலப்பிள்ளை

(1836—1902)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள நல்லூர். குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்குப் பத்தொன்பது வருடங்களுக்கு முன். இவர் ஆறுமுக நாவலர்க்கு மருகரும் மாணவகருமாவர். இளம்பூரணம் நச்சினார்க்கினியம் முதலிய உரைகளோடு தொல்காப்பி யம் முதலிய இலக்கணங்களையும், சிந்தாமணி, சிலப்பதி காரம், கந்தபுராணம், இராமாயணம், முதலிய இலக்கி யங்களையும் பலமுறை ஆராய்ந்து கற்றவர். அவைகளைப்

பல மாணவர்க்குங் கற்பித்தவர். பரிமேலழகருரையை ஒருபோதும் மறவாதவர். பாரதத்தில் ஆதி பருவத்துக்கும், மயூரகிரிப் புராணத்துக்கும் உரை செய்தவர்.

கந்தபுராணம் முதலிய சில புராணங்களுக்கும், இராமாயணத்துக்கும் அறிஞர் பலர் கூடிய சவையிலே பதவுரையும், விரிவுரையும் பிழையறக் கூறிப் பிரசங்கஞ் செய்யும் வன்மையினாலும், இராகத்தோடமைந்த இனிய மிடற்றிசையாலும் பலரும் பாராட்டப்பெற்றவர். வித்துவசிரோமணி என யாவராலும் புகழப்பட்டவர். இராமாயணப் பொருளுணர்ச்சியில் இணையில்லாதவர்.

வெண்பா

செஞ்சடிலன் வெண்ணீற்றன் சிற்றம் பலமுதல்வன்
மஞ்சடையுங் கண்ட னடிமறவா—செஞ்சடைய
ஆறுமுக வையற்கே யாட்செய்யப் பெற்றனம்யாம்
வேறறங்கள் வேண்டுமோ மேல்.

174. மாவைப் பொன்னம்பலப்பிள்ளை
(1891)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள மாவிட்டபுரம். குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு முன் என்பர். மாவையந்தாதி, சித்திரகவி முதலிய பிரபந்தங்கள் செய்தவர். மாவையந்தாதி மாலைபோல வரும் யமகாவலியுடையது. யமகாவலி - யமகவரிசை.

மாவையந்தாதி

மாவைய மாவைய முப்புரஞ் செற்றவர் மைந்ததரு
மாவைய மாவைய தாழ்க்கிற் கடிகை வரைநிலைக்கு
மாவைய மாவைய மன்கொள ஞான்று மலிநரிக்கா
மாவைய மாவைய வீதோநா னென்று வருந்தினனே,

175. மண்டலபுருடர்

(874—914)

இவரூர் தொண்டை மண்டலத்துள்ள பெருமண்டூர் எனப்படும் வீரபுரம் என்பர். "வீங்குநீர்ப் பழனஞ் சூழ்ந்த வீரைமண்டலவன்" என இவர் தாமுங் கூறுவர். வீரை என்பது வீரபுரம் என்பதன் மரூஉ. சமயம் ஆருகதம். காலம் கிருஷ்ணதேவராயர் காலம். இவர் சூடாமணி என்னும் நிகண்டு செய்தவர். சூடாமணி நிகண்டிலே சிறப்புப்பாயிரமுந் தாமே கூறுவர். பல வடசொற்களுக்குந் தமிழ்ச் சொற்களுக்கும் பொருள் கூறுவர். முதலிரு தொகுதியும் சொற்களுக்குப் பொருள் கூறி அச்சிட்டிருக்கின்றும்.

சூடாமணி நிகண்டு

(சிவன் பெயர்)

சங்கர னிறைபோன் சம்பு சதாசிவன் பேயொடாடி
பொக்கர வணிந்த மூர்த்தி புராந்தகன் பூதநாதன்
கங்கை வேணியன் கங்காளன் கடுக்கையங் கண்ணிசூடி
மங்கையோர் பாகன் முன்னோன மகேச்சுரன் வாமதேவன்.

176. மணவாளதாசர்

(1616)

இவரூர் சோழ மண்டலத்துள்ள திருமங்கையூர். குலம் வேதியர் குலம். சமயம் வைஷ்ணவம். காலம் ஏறக்குறைய இற்றைக்கு முந்நூறு வருடங்களுக்கு முன்னர் என்பர். வேறுங் கூறுவர். இவர் பிள்ளைப்பெருமாளையங்கார் எனவுஞ் சொல்லப்படுவர். பெரும்பாலுஞ் ஸ்ரீரங்கத்தில் வசித்தவர். விட்டுணு பத்தியிலும் ஆழ்

வார் பத்தியிலும் மிக்கவர். தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையுஞ் சங்கச் சான்றோ ரிலக்கியங்களையும், வேதம், வேதாங்கம் முதலிய நூல்களையும் நன்கு கற்ற வர். சொல்லும், பொருளுந், தொடையும், நடையுஞ் சுவைபெற அமைத்துக் கவிபாடுந் திறமுடையவர். சொற்கள் இலகுவிற் பிரிந்து பொருள்படுமாறு திருக்கு, மடக்குச், சிலேடைகள் பாடுந் திறமு முடையவர்.

திருவரங்கயமகவந்தாதி, திருவரங்கக் கலம்பகம், திருவேங்கடமாலை, திருவேங்கடத் திரிபந்தாதி, அழகரந் தாதி, எதிராசரந்தாதி முதலிய பல பிரபந்தங்களுஞ் செய்தவர்.

திருவரங்க யமகவந்தாதி

தருக்கா வலாவென்று புல்லரைப் பாடித் தனவிலைமா
தருக்கா வலாய்மயி லேகுயி லேயென்று தாமசராய்த்
தருக்கா வலாநெறிக் கேதிரி வீர்கவி சாற்றுமின்பத்
தருக்கா வலாயுதன் பின்றோன் றரங்கர்பொற் றாளிணைக்கே.

தரு - கற்பக தருவே. விலைமாதருக்கு ஆவலாய் - பொதுப் பெண்களை விரும்பி. தருக்கா அலா நெறிக்கு - செருக்குற்றுத் தீய வழியிலே. பத்தருக்கா - அடியார் பொருட்டு. அலாயுதன் - பலராமன்.

திருவரங்கக் கலம்பகம்

தேனமருஞ் சோலைத் திருவரங்க ரெப்பொருளும்
ஆனவர்தா மாண்பெ ணலியலர்கா ணம்மானை
ஆனவர்தா மாண்பெ ணலியலரே யாமாகிற்
சானகியைக் கொள்வரோ தாரமா யம்மானை
தாரமாய்க் கொண்டதுமோர் சாபத்தா லம்மானை.

சானகி - சீதை. சாபம் - சபிப்பு, வில்லு.

திருவேங்கடமாலை

நாலு திசைமுகமு நண்ணுதலா லொண்கமல
மேலுறலால் வேதாவாம் வேங்கடமே—சாலுறையும்
மண்மயக்கந் தேற்றுவித்தான் மாற்றுதல்போ லாரியனால்
உண்மயக்கந் தேற்றுவித்தா னூர்.

கமலம் - தாமரை, நீர். சால் - ஒருவகைப் பாத்திரம். மண்மயக்கம் - மண்ணோடு கலந்த நீர். தேற்றுவித்து - தேற்றாங்கொட்டை. உள் மயக்கம் - மனமயக்கம். தேற்றுவித்தல் - தெளிவித்தல்.

இம் மணவாளதாசரும், எல்லப்ப நாவலரும் ஒரே காலத்தவர் என்றும் மணவாளதாசர் தாம் பாடிய திருவரங்கக் கலம்பகத்தை எல்லப்ப நாவலர் பார்க்கும்படி அனுப்பினர் என்றும், எல்லப்ப நாவலர் 'அதனைப் பார்த்தபின் தாமும் அருணைக் கலம்பகம் என ஒரு கலம்பகம் பாடி அதனை மணவாளதாசர் பார்க்க அனுப்பினர் என்றும், எல்லப்ப நாவலர் தேவி திருவரங்கக் கலம்பகத்திலே "வாடியோட வனச மன்னன்" என்னுங் கவியில் வரும் சிவநிந்தையை நோக்கி, அதற்கு மாறாகக் "கருடனோட" என ஒரு கவிபாடிச் சிவ பரத்துவங் கூறினர் என்றும் சில கூறுவர். வேறு கதைகளுங் கூறுவர்.

திருவரங்கக்கலம்பகம்

வாடியோட வனசமன்ன னிருகண்வெள்ள மருவிபோன்
மருவியோட மதனன்வாளி யருவியோட வாடையூ
டாடியோட வன்றிலோசை செவியிலோட வண்டுழாய்
ஆசையோடு மெங்கள்பேதை யாவியோட னீதியோ
மோடியோட வங்கிவெப்பு மங்கியோட வைங்கரன்
முடுகியோட முருகனோட முக்கணீசன் மக்களைத்
தேடியோட வாணனா யிரம்புயங்கள் குருதிநீர்
சிந்தியோட நேமிதொட்ட திருவரங்க ராசரே.

நாவலர் தேவிபாட்டு

கருடனோட மற்சமாமை கமலமோட முற்காங்
காட்டிலோட மூன்றிராமற் கண்டமட்டி லோடவே
மருளிவந்த சிங்கமோட வாமனென்பு பாறவே
வஞ்சமுள்ள கண்ணனோட மாரனீறச் சேனனும்
இருளினோட முண்டகத்த னேங்கியோட வென்றவர்க்
கீறுருதங் குயிரளித்த வேந்தல்யாவன் வேதமே
அருளுமந்த முதல்வன்யாவ னருணைகண்டு வாழ்மினோ
ஆராதி மூலமென்ப தறிகிலாத மாக்களே.

177. மயில்வாகனப் புலவர்

(1779—1816)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள மாதகல். குலம் "பரராசசேகரன் பேர்சிறுவி - மெய்யாக நல்ல கலைத் தமிழ் நூல்கள் விரித்துரைத்த - வையாவின் கோத்திரம்" என்பர். சமயம் சைவம். காலம் ஏறக்குறைய நூறு வருடங்களுக்கு முன் என்பர். இவர் கூழங்கைத் தம்பிரானுக்கு மாணவகர் என்றுங் கூறுவர். இலக்கிய லக்கணங் கற்றவர். புலியூர் யமகவந்தாதி, யாழ்ப்பாண வைபவம் முதலிய நூல்கள் செய்தவர். புலியூர் யமகவந் தாதி உரையாசிரியர் வேற்பிள்ளை யுரையுடையது. யாழ்ப்பாண வைபவம் வசன வடிவம்.

புலியூர் யமகவந்தாதி

பாயசங் கண்டு பரியாக்கி யத்தபத் தர்க்கினிய
பாயசங் கண்டு நிகர்புலியூா பகையை வெல்லு
பாயசங் கண்டு காத்தாற் கரியவ பாழ்வினைக்குப்
பாயசங் கண்டொட ராதெனை யாள்க பராபரனே.

பாய் அசம் - பாய்கின்ற ஆடு. பரி - வாகனம். பாயசம் - பாற்சோறு. கண்டு - கற்கண்டு. வெல் - உபாய

வெல்லும் உபாய முடையவரே. சங்கு அண்டு கரத தாற்கு - விட்டுணுவுக்கு. குப்பாயம் - சட்டை. சம் - பிறப்பு

178. மருதனிளநாகனுர்

இவருர் பாண்டிமண்டலத்துள்ள மதுரை. சமயம் சைவம். காலம் கடைச் சங்ககாலம். இவர் புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை என்னுந் தொகைநிலைகளிலே சிலசில கவிகள் பாடினவர். இறையனுரகப்பொருளுக்கு உரையும் ஒன்று செய்தவர். புறநானூற்றுச் செய்யுள் ஒன்றிலே சிவபிரானுடைய திரிபுர தகனத்தையும், திருச்செந்தூரையும் வியந்து பாடினவர்.

குறுந்தோகை

அம்ம வாழி தோழி யாவதுந்
தவறெனிற் றவறோ விலவே வெஞ்சுரத்
துலர்ந்த வம்பல ருவவிடு பதுக்கை
நெடுநல் யானைக் கிடுநீ ழாகும்
அரிய கானஞ் சென்றோர்க்
கெளிய வாகிய தடமென் றோளே.

179. மறைஞானசம்பந்தர்

(1313)

இவருடைய வாசஸ்தானம் சிதம்பரம். நிலை துறவு. வடமொழி தென்மொழி என்னும் இருமொழியிலும் வல்லவர். சைவாகமங்களையும் சித்தாந்த சாத்திரங்களையும் தேவாரம் முதலியவைகளையும் நன்குணர்ந்தவர். ஆகம சாரங்களை எடுத்துத் தமிழிற் பெயர்த்துப் பலநூல் செய்தவர். அந் நூல்கள் சிவ தருமோத்தரம் சைவசமய நெறி, சங்கற்ப நிராகரணம் முதலியன. இவரும் வேறே. சந்தான குரவராகிய மறைஞான சம்பந்தரும் வேறே என்பர். இவை ஒருவர் சொன்னவை.

சிவதருமோத்தரம்

ஆதி நாத னமல னரன்றிருப்
பாத முன்னினர் பாவம் பயிற்றினும்
வேத ஞான சக்குழி வீழ்வரோ
நாத ரேயவ னிக்கவர் நாடினே.

சைவசமய நெறி

உலகமும் பல்லுயிரு மொன்றிநிறைந் தோங்கி
இலகுஞ் சிவனெம் மிறை.

180. மாங்குடிமருதனர்

இவர் மாங்குடி கிழார் எனவும்படுவர். பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு நிலையாமை அறிவுறுத்தற் பொருட்டுப் பாடிய மதுரைக்காஞ்சிபற்றிக் காஞ்சிப்புலவர் எனவும்படுவர். இவரூர் சோழ மண்டலத்துள்ள மாங்குடி என்றும், குலம் வேளாளர் குலம் என்றுங் கூறுவர். காலம் கடைச்சங்க காலம். இவர் நெடுஞ்செழிய னவைக்களப் புலவராயும் இருந்தவர். இவர் பாடிய மதுரைக் காஞ்சி ஏறக்குறைய எண்ணூறடிகளுடையது. அகநானூறு, புறநானூறு, நற்றிணை முதலிய தொகைநிலைகளிலுஞ் சில கவிகள் பாடினவர். எழினியாதனையும் பரிசில் வேண்டிப் பாடினவர். "ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி — மாங்குடி மருதன்" எனப் புறநானூற்றிற் பாடவும்பட்டவர்.

குறுந்தொகை

பொன்னே ராவிரைப் புதுமலர் மிடைந்த
பன்னூன் மாலைப் பனைபடு கலிமாப்
பூண்மணி கறங்க வேறி நாணடப்
பழிபட ருண்ணோய் வழிவழி சிறப்ப

இந்நாள் செய்த திதுவென முன்னின்
றவன்பழி நவலு மிவ்வூர்
ஆங்குணர்ந் தமையினீ ரேகுமா றளனே.

181. மாமூலனார்

இவர் கடைச்சங்கப் புலவருள் ஒருவர். வேதியர் குலத்தினர். தொல்காப்பிய வுரையிலே "யோகிகளாய் உபாயங்களால் முக்காலமுமுணர்ந்த மாமூலர் முதலியோர்" என நச்சினார்க்கினியராற் புகழப்பட்டவர். பாரதப் போரிற் சோறளித்த பெருஞ்சேரலாதன் கொடை, சிற்றரசனாகிய நன்னன் வேண்மான் கொடை முதலியவைகளையும், துளுநாடு, குட்டநாடு முதலியவைகளையும் அகநானூற்றிலே தாம் பாடிய கவிகளிற் புகழ்ந்தவர். நற்றிணை குறுந்தொகைகளிலுஞ் சில கவிகள் பாடினவர். வள்ளுவ மாலையிலும் ஒன்று பாடினவர்.

வள்ளுவர் மாலை

அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவனென் பானோர் பேதையவன் வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார்.

182. மாரிமுத்துப்பிள்ளை

(1786)

இவரூர் சிதம்பரத்துக்குச் சமீபமான தில்லைவிடங்கம். குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு நூற்று முப்பது வருடங்களுக்கு முன் என்பர். இவர் புலியூர் வெண்பா, சிதம்பரேசர் விறலிவிடு தூது முதலிய பிரபந்தங்கள் செய்தவர். புலியூர் வெண்

பாவிலே திருக்கு, மடக்கு, சிலேடை முதலியவற்றால் இருபத்தைந்து ஒருவகையாக நான்குவகை கூறுவர். "ஐயைந் தொருவயண மையைந் தொருவயணம்--ஐயைந் தொருவயணமாம்" என்பர்.

புலியூர் வெண்பா

பொன்னூருந் தில்லைப் புலியூர்வெண் பாவுக்குப்
பன்னூரு மேத்திப் பணிகுவாம்—நன்னாரி
கக்குஞ் சரப்பூங் கடுக்கையோ னீன்றகப்ப
கக்குஞ் சரப்பூங் கழல்.

நல் நாரி - நல்ல தேன். சரம் - மாலை. கடுக்கை - கொன்றை. குஞ்சரம் - யானை. கழல் - பாதம்.

183. மீனாட்சிசுந்தரக்கவிராயர்

(1894)

இவரூர் பாண்டி மண்டலத்துள்ள முகவூர். சமயம் சைவம். காலம் ஏறக்குறைய இற்றைக்கு இருபது வருடங்களுக்கு முன் என்பர். இவர் எட்டயபுர சமஸ்தானப் புலவராயும் இருந்தவர். எட்டயபுர சமஸ்தான பதியாகிய "இராஜ ஜகத்வீர ராமகுமார எட்டப்ப மகாராசா" அவர்கள் வேண்டுகோளின்படி மொழிபெயர்க்கப்பட்ட குவலயானந்தம் என்னும் அலங்காரத்துக்கு உதாரண கவிகள் பாடினவர். வேறும் பல பிரபந்தங்கள் பாடினவரென்பர்.

குவலயானந்தம்

காகமே கத்துகநீ கத்துமுன்மே லென்னகுற்றம்
கோகிலமோ நின்னையுமே கூர்மதரா—மாகியதோர்
மாவினிடைச் சேர்த்திடுநால் வத்திரத்தோன் றன்னையல
வாவிகழ வேண்டு வது.

184. மீனுட்சிசுந்தரம்பிள்ளை

(1815 — 1875)

இவரூர் சோழமண்டலத்துள்ள திரிசிரபுரம். குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். காலம் ஏறக்குறைய இற்றைக்கு முப்பத்தைந்து வருடங்களுக்குமுன் என்பர். இவர் திருவாவடுதுறையாதீனத்திற் சிறந்த வித்துவானு யிருந்தவர். தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்க ணங்களும் சங்கச்சான்ருேரிலக்கியங்களும் மற்றைச் சான் ருேரிலக்கியங்களும் சைவசித்தாந்த சாத்திரங்களும் பிற வுங் கற்றுத் தெளிந்தவர். தியாகராசச் செட்டியார், மகா மகோபாத்தியாயர் சாமிநாதையர் முதலிய பற்பல மாண வர்களைக் கல்விவிற்பனர்களாக்கி நல்லாசிரியராய் அமர்ந் தவர்.பாக்களையும் பாவினங்களையும் நோக்கமையப்பாடும் நுண்மையிற் சிறந்தவர். திருக்கு, சிலேடை, மடக்கு முதலிய அருங்கவி பாடும் வன்மையும் அமைந்தவர். சித் திர கவிபாடுந் திறமும் இயைந்தவர். கவிகளில் அமைக் கும் சொல், பொருள், தொடை, அணி முதலியவற்றின் நயங்களெல்லாம் நன்கறிந்தவர். பாடற் சிறப்பு "ஆயி ரங்கர வாணன் பொறிக்கினும்" அமைவதொன்றன்று.

தேசிகர் வணக்கமுஞ் சிறப்புப் பாயிரமும் பிறவு மாகப் பல தனிநிலைக் கவிகளும், புராணம், அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், கோவை, மாலை என்னும் பிர பந்த வகைகள் ஒவ்வொன்றிலும் பற்பல பிரபந்தங்க ளும் பிறவும் பாடினவர். அவையெல்லாந் தனித்தனி உரைக்கப்புகின் மிகப் பரக்கும். சிலசில உரைத்து முதலிய என்பதனுல் அடக்கி முடித்தும்.

புராணங்கள் : நாகைக் காரோண புராணம், திருப்பெருந்துறைப் புராணம், தியாகராஜலீலை, உறை

யூர்ப் புராணம், ஸ்ரீ காசி ரகசியம், கோயிலூர்ப் புராணம், திருக்குடந்தைப் புராணம், மாயூரப் புராணம் முதலியன. அந்தாதி: தில்லையமகவந்தாதி. துறைசை யமகவந்தாதி, திருச்சிராமலை யமகவந்தாதி, குடந்தைத் திரிபந்தாதி, திருவானைக்காத் திரிபந்தாதி, தண்டபாணி பதிற்றுப்பத்தந்தாதி, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் பதிற்றுப்பத்தந்தாதி, முதலியன. கலம்பகம்; வாட்போக்கிக் கலம்பகம், அம்பலவாண தேசிகர் கலம்பகம் முதலியன. பிள்ளைத் தமிழ்: அகிலாண்டநாயகி பிள்ளைத் தமிழ், காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ், மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ், அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழ் முதலியன. கோவை; சீகாழிக் கோவை, குளத்தூர்க்கோவை முதலியன. மாலை: சுப்பிரமணிய தேசிகர் மாலை, சித்திர சத்திரப் புகழ்ச்சிமாலை, அகிலாண்டநாயகி மாலை, சிதம்பரேசர் மாலை முதலியன. தூது: சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடு தூது. உலா; திருவிடை மருதூர் உலா. சரித்திரம்: குமர குருபர சுவாமிகள் சரித்திரம், மயில்ராவணன் சரித்திரம் முதலியன. மான்மியம்: குருபூசை மான்மியம். பதிகம்; காசி விநாயகர் பதிகம், சுப்பிரமண்ய சுவாமி பதிகம் முதலியன. இவற்றை விடப் பல தனிநிலைக் கவிகளும் இயற்றியிருக்கின்றனர்.

பெருங்காப்பியநிலை பெறுமாறு சில புராணங்களிலே மலை, கடல், நாடு, நகர் முதலியவற்றின் வருணனைகளைப் பெரிதும் அமைப்பர். அவற்றோடு சில புராணங்களிலே சைவாகமத்தின் கிரியாகாண்டப் பொருள்களாகிய நித்திய கரும விதிகளையும், ஞானகாண்டப்பொருள்களாகிய கடவுளிலக்கணம் முதலியவைகளையுங் கூறுவர். நாகைக் காரோண புராணத்திலே கோமூத்திரி, கூட சதுர்த்தம் முதலிய சித்திர கவிகள் கூறுவர். தில்லை

யந்தாதி, துறைசையந்தாதி, முதலியவைகளிலே சில கவி களில் ஐந்தாஞ் சீர்வரையும் யமகம் வரக் கூறுவர். குடந்தையந்தாதி முதலியவைகளிலே அங்ஙனந் திருக்கும் வரக் கூறுவர். வாட்போக்கிக் கலம்பகம் முதலியவை களிலே பலவகை மடக்கு முதலியன வரக் கூறுவர். குமர குருபரசுவாமி சரிதத்திலே வாதிகள் கூறும் பக்க மும், சுவாமி கூறும் மறுப்புஞ் சிறப்புறக் கூறுவர்.

தியாகராசலீலை

பெருகலை யருட்கொப் பாக்கிப் பிங்கலை யிடைமாற் றிக்கால்
கருகலை யுறாதெ ழுப்பிக் கருங்கலை கிகர்த்தி ருப்பார்
ஒருகலை யிடக்கை வானத் தொளிர்கலை முடிவைத் தார்வாய்
வருகலை யனைத்து மோர்ந்தார் வற்கலை யுடுத்த மேலார்.

வாட்போக்கிக் கலம்பகம்

எம்மா தவரு மிறைஞ்சுஞ் சடாடவியார்
செம்மா மணிவான் சிலம்பர்கா ணம்மானை
செம்மா மணிவான் சிலம்பரெனி னுய்கர்பொருள்
அம்மா விரும்புவர்கா ணற்றவரோ வம்மானை
ஆசை யுடையார்கா ணரியரே யம்மானை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

பதிற்றுப்பத்தந்தாதி

அழகிய மயிலை யத்தியைப் பூவை
அரசுசெய் தனையுத வாமை
பழகிய பெண்ணை பலவுமின் குரும்பை
பலகொளப் பாடினை பற்பல
கழகமுற் றோக்கு மாலவா யமுதே
கவுணியர் பெருங்குல விளக்கே
மழவிளங் களிறே யென்மனந் திருத்தின்
மற்றுமப் புகழொடொப் பாமே.

திருப்பெருந்துறைப் புராணம்

தொழுபவ ரொருபால் துதிப்பவ ரொருபால்
துதித்துளம் நெக்குநெக் குருகி
அழுபவ ரொருபால் இவரெலாம் நிற்க
அடியனேன் றனைப்பிடித் தாண்டாய்
பழுதில்நின் கருணைத் திறத்தையென் புகல்கோ
பாண்டிநா டியற்றிய தவத்தால்
கொழுமலர்ச் சோலைத் திருப்பெருந் துறையிற்
குருந்தடி யிருந்தருள் பரனே.

185. முத்துக்குமாரகவிராயர்

(1780 — 1851)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள சுன்னுகம். குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். காலம் ஏறக்குறைய இற்றைக்கு அறுபத்தைந்து வருடங்களுக்குமுன். இவர் உடுவில் அம்பலவாணர்க்குப் புத்திரர். சுப்பிரமணியருக்குப் பௌத்திரர். சந்திரசேகரப்பிள்ளைக்குப் பிரபவுத்திரர். நமது தாதைதன்றுதைக்குச் சியேட்டர். அங்கில திராவிட பண்டிதராயிருந்த தாமோதரம்பிள்ளைக்குத் தமிழாசிரியர். அவரச்சிட்ட வீரசோழியம் முதலிய நூல்களின் பதிப்புரைகளில் அவர் கூறிய குருவணக்கம் பெற்றவர்.

இலக்கணவிளக்கப் பதிப்புரை

திங்க டங்கிய செஞ்சடை முடியினன் றிருத்தாட்
பங்க யங்கவி லாயநா தனைமுனிப் பழிச்சிச்
சங்க மங்களத் தமிழ்முத்துக் குமாரன்றன் மலர்ப்பா
தங்கள் வங்கமாத் தமிழ்க்கட லிடைப்படி குவனே.

சொல்லும் பொருளும் சுவைபட வைத்து, நல்லிசையமையக் கவிபாடும் பெருமையிற் சிறந்தவர்.

திருக்கு, மடக்கு, சிலேடைகளும் பாடவல்லவர். பல தனிநிலைக் கவிகளும், ஞானக்கும்மி, யேசுமத பரிகாரம் ஐயனாருஞ்சல், நடராசர் பதிகம், முதலிய பிரபந்தங்களும் பாடினவர். தனிநிலைக் கவிகளுள்ளே மாவைக் கடவுண்மீதும், நல்லைக் கடவுண்மீதும், சுன்னைச் சந்திரசேகர விநாயகர்மீதும், ஐயனார்மீதும் பாடிய துதிகளும் பிறவுமாக இருபத்தைந்து கவிகள் அரிதிற் பெற்றுச் சிலவற்றிற்கு உரையுங் கூறி, முத்தகபஞ்சவிஞ்சதி என்னும் பெயருமிட்டு அச்சிட்டிருக்கின்றோம். நடராசர் பதிகம் அகப்படவில்லது.

கட்டளைக் கலித்துறை

வாட்டானை யன்னமை தீட்டா விழிமினிர் மான்மகளைத்
தாட்டானை யானுக்கு வேட்டானை யன்பர் சஞ்சலங்கள்
மீட்டானை யென்கவி கேட்டானைச் சுன்னையின மேவுநரை
மாட்டா னருளொரு கோட்டானை நாளும் வணங்குவனே.

கட்டளைக்கலிப்பா

முடிவி லாதுறை சுன்னாகத் தான்வழி
　　முந்தித் தாவடிக் கொக்குவின் மீதுவந்
தடைய வோர்பெண் கொடிகாமத் தாளைசைத்
　　தானைக் கோட்டை வெளிகட் டுடைவிட்டாள்
உடுவி லான்வரப் பன்னாலை யான்மிக
　　உருத்த னன்கடம் புற்றமல் லாகத்துத்
தடைவி டாதனை யென்று பலாலிகண்
　　சார வந்தன ளோரிள வாலையே.

இது நாமாந்தரிதை என்னும் பிரகேளிகை. நாமாந்தரிதையாவது கருதிய பொருள்களை வேறு நாமங்களிலே மறைத்து வைப்பது. பிரகேளிகை கருதிய பொருளை மறைத்துக் கூறும் பாட்டு. இங்கே வேறு நாமங்களாய் நின்றவை சுன்னாகம், தாவடி, கொக்குவில், கொடிகாமம், ஆனைக்கோட்டை, கட்டுடை, உடுவில்,

பன்னாலை, மல்லாகம், பலாலி, இளவாலை என்னும் ஊர்ப் பெயர்கள். சுன்னாகம் - வெள்ளிமலை. சுல் - வெள்ளி. வழி - மகன். கொக்கு - குதிரை. உடுவிலான் - சந்திரன். ஆலையான் - மன்மதன். ஆகம் - சரீரம். பலாலி - பல துளி.

கட்டளைக்கலிப்பா

பன்னி ரண்டு கரகந் தனையெட்டுப்
பானை யைத்துண் டதரக் குயவனை
முன்னி ரண்டு குடங்கையி லேந்தியை
முட்டி முட்டிமல் லாய்மாவைச் சாடியைப்
பொன்னி ரண்டு பெறும்பெருஞ் செட்டியைப்
போற்று வீர்புல வீர்சக ரந்தனை
முன்னர் வைத்த கலசம்பத் தும்பெறீஇ
முதன்மை சால்பெரு வாழ்வுறன் மெய்ம்மையே.

இதுவும் காமாந்தரிதை. நாமங்கள் கரகம், பானை, குடம், முட்டி, சாடி, கலசம், சால் என்னும் பாத்திரப் பெயர்கள். கரகந்தனை - கையையுடைய முருகவேளை. எள் துப்பு ஆனையை (முறையேயொத்த) துண்டம், அதரம், குயம், அனை. துப்பு - பவளம். துண்டம் - மூக்கு. குயம் - தனம். அனை - அன்னை. குடங்கை - உள்ளங்கை. சாடி - சாடினவன். சகரம் என்னும் எழுத்தை முன் வைத்த கலசம்பத்து - சகல சம்பத்து.

மடக்குக் கவி. சிலேடைக் கவி முதலியவைகளை முத்தகபஞ்சவிஞ்சதியிற் காண்க.

ஞானக்கும்மி

(காப்பு)

சீர்கொண்ட வேதாக மங்களைப் பொய்யென்று
செப்பு மிலேச்சர் விவிலிய நூலினிற்
சார்கொண்ட பொய்ம்மை விளங்கவோர் மெய்க்கும்மி
சாற்றப் பரசிவன் காப்பாமே.

யேசுமதபரிகாரம்

தங்கள்சபை யிடைசேர்ந்தி யேசுமத மல்லாது
சற்சமய மில்லையென்று
சாற்றிவே டமுமாற்றி மிகமிக மருட்டியே
தாங்களிட ரொடுகொடுத்த
பொங்கு பலகிதியாடை போசனங் கல்விதரு
பத்தகமெலாங் கவர்ந்து
புறமேகி மூழ்கிமெய்ந் நீறணிந்துயர் பத்தர்
போற்சிவா லயமேகியே
மங்கலப் பூசைக்கு வேண்டுதிர வியமீந்து
மறைவாக வேதொழுதுபின்
மறுவேட மோடுதஞ் சபைசேரும் வஞ்சகரை
மகிழ்வோடு தழீஇ மிலேச்சர்
அங்கணுயர் கதிமருவு சுத்தரவ ரென்கிறு
ரவர் வார்த்தை கேட்பதறிவோ
அமலபூ ரணசுத்த சச்சிதானந்தமய
மாஞ்சிவனை யறிவதறிவே.'

186. முத்துராசர்

இவரூர் சோழ மண்டலத்துள்ள உறையூர். சமயம் சைவம். தந்தையார் செந்தியப்பர். இவர் சிங்கையாரியச் சக்கரவர்த்தி இங்கே வந்து நல்லூரிலே தங்கி அரசியல் நடாத்திய வரலாற்றையும், அவன் கைலாசநாதர் கோவில் முதலிய சைவாலயங்கள் தாபித்த வரலாற்றையும் சோழ மண்டலம் முதலிய மண்டலங்களிலிருந்து பலரை யாழ்ப்பாணத்திற் கொண்டுவந்து குடியேற்றிய வரலாற்றையும் பிறவற்றையுங் கலிவெண்பாவில் அமைத்துக் கைலாயமாலை என்னும் பிரபந்தஞ் செய்தவர். குடியேற்றப்பட்டவருட் சிலர்க்குப் பேரும், முன்னிருந்த ஊரும் இங்கே இருத்திய ஊரும் பிறவுங்

கூறுவர். இங்கே இருந்த ஊர் முதலிய கூறிச் சிலரை நாமுங் காட்டுதும்.

1. நல்லூர். புவனேகவாகு. மதுரை வேதியர். "இலகிய சகாத்த மெண்ணூற் றெழுபதா மாண்ட தெல்லை—அலர்பொலிமாலை மார்பனும் புவனேகவாகு—நலமிகும் யாழ்ப்பாணத்து நகரிகட்டுவித்து நல்லைக்—குலவிய கந்தவேட்குக் கோவிலும் புரிவித்தானே" என்பதும் இக்கைலாயமாலையிற் கண்டது.

2. திருநெல்வேலி, பாண்டிமழவன். அவன் தம்பி செண்பகமழவன், இவர்கள் பொன்பற்றியூர் வேளாளர்.

3. மயிலிட்டி, நரசிங்க தேவன். காவிரியூர் வேளாளன்.

4. தெல்லிப்பழை, செண்பகமாப்பாணன், சந்திரசேகர மாப்பாணன். இவர்கள் வாலிநகர் வேளாளர். பூப்பாணன்: கனகராயன். இவர்கள் காயல்நகர வசியர்.

5. இணுவில் பேராயிரவன். இவன் கோவலூர் வேளாளன். இவனை "ஆதிக்க வேளாளன்" என்பர்.

6. பச்சிலைப்பளி, நீலகண்டன். அவன் தம்பியர் நால்வர். இவர்கள் கச்சூர் வேளாளர்.

7. புலோலி, கனகமழவன். அவன் தம்பியர் நால்வர்; இவர்கள் சிகரிமாநகர வேளாளர்.

8. தொல்புரம், கூபகாரேந்திரன், நரங்குதேவன். இவர்கள் கூபகநாட்டு வேளாளர்.

9. கோவிலாக்கண்டி, தேவராசேந்திரன். இவன் புல்லூர் வேளாளன்.

10. இருபாலை, மண்ணுடுகொண்ட முதலி. இவன் சோழ மண்டல வேளாளன். இவனைக் "கம்பனுரைத்த கவியோ ரெழுபதுக்குஞ்—செம்பொ னபிஷேகஞ் செயுங் குலத்தான்" என்பர்.

11. நெடுந்தீவு, தனிநாயகன். இவன் சேயூர் வேளாளன். இவனை "இனியொருவரொவ்வா விருகுலமுந் துய்யன்" என்பர்.

முதலாழ்வார் மூவர்

ஆழ்வார் யாவர்க்கும் முன்னர்த்தோன்றிய முறையினாலும், முதலிற் பிரபந்தஞ் செய்த முறையினாலும் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்னும் மூவரையும் முதலாழ்வார் என்பர். மூவரும் துறவுநிலையிலும், விட்டுணுபத்தியிலும், தலயாத்திரையிலும், அறிவிலும் மிக்கவர் என்றுங் கூறுவர்

187. பொய்கையாழ்வார்
(950)

இவரூர் தொண்டை மண்டலத்துள்ள காஞ்சிபுரம். அவதாரம் பாஞ்சசன்னியம் என்னும் சங்கின் அவதாரம். பொற்றாமரைப் பொய்கையிலே தோன்றிய காரணத்தாற் பொய்கையாழ்வார் எனப்பட்டவர். முதலாந் திருவந்தாதி பாடினவர். இவர் சாவவும் கெடவும் பாடவல்ல முக்காலமும் உணர்ந்த இருடி.

188. பூதத்தாழ்வார்
(950)

இவரூர் தொண்டைமண்டலத்துள்ள கீழைக்கடற் கரையிலிருக்குந் திருக்கடன்மல்லை எனப்படும் மாவலி

புரம். அவதாரம் கௌமோதகி என்னுந் தண்டாயுதத்தின் அவதாரம். உளனுந்தன்மை அறிதலாற் பூதத்தாழ்வார் எனப்பட்டவர் என்பர். இரண்டாந் திருவந்தாதி பாடினவர்.

189. பேயாழ்வார்
(950)

இவரூர் தொண்டைமண்டலத்துள்ள மயிலாப்பூர். அவதாரம் நாந்தகம் என்னும் வாட்படையின் அவதாரம். விட்டுணுவிற் பத்திமிக்குத் தொழுதல், சிரித்தல், அழுதல், ஆடுதல், பாடுதன் முதலிய தொழில்களை இயற்றிப் பேய்பிடித்தவர்போன்று திரிதலாற் பேயாழ்வார் எனப்பட்டவர். மூன்றாந் திருவந்தாதி பாடினவர்.

இம்மூவரும் ஒருவரை ஒருவர் அறியாமலே தேச சஞ்சாரஞ் செய்துவரும் நாள்களிலே ஒருநாளிரவு பொய்கையாழ்வார் நடுநாட்டிலுள்ள திருக்கோவலூரிற் போய் ஒருவர் வீட்டின் இடைகழியிலே படுத்திருந்தார். அப்பொழுது பூதத்தாழ்வாரும் அங்கே வந்துநின்றார். நிற்றலைக்கண்டு "இவ்விடம் ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம்" என்றார். பின்னர் இருவரும் அளவளாவி இருக்கும்போது பேயாழ்வாரும் அங்கே வந்தார். வந்த பேயாழ்வாரை இருவருங் கண்டு "இவ்விடம் ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம். மூவர் நிற்கலாம்" என்றனர். பின்னர் மூவருங்கூடி நின்றுகொண்டே நாராயணமூர்த்தியின் குணங்களை ஒருவர்க்கொருவர் சொல்லியுங் கேட்டுங் களித்து மகிழ்ந்தனர்.

அப்பொழுது நாராயணமூர்த்தி மழையையும் இருளையும் அதிகம் மிகும்படி செய்து தாமும் பெருவடிவந்தாங்கி அவர்களுட் புகுந்து மிகவும் நெருக்கினர்.

மூவரும் "இப்பொழுது நெருக்கம் மிகுத்தவாறு என்னே?" என்று ஐயுற்றனர். பொய்கையாழ்வார் பூமி தகழியாகக் கடல் நெய்யாகச் சூரியவிளக்கை ஏற்றினர். பூதத்தாழ்வார் அன்பு தகழியாக ஆர்வம் நெய்யாக நெக்குருகும் நெஞ்சு திரியாக ஞானவிளக்கை ஏற்றினர். இவ்விரு விளக்கினாலும் இருளறப் பேயாழ்வார் பெருமானைக் கண்டமை கூறினர். மூவரும் பெருமானைத் தரிசித்து மகிழ்ந்தனர். பாடலுங் கூறினர்.

பொய்கையாழ்வார்பாடல்

வையந் தகழியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் — செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே யென்று.

பூதத்தாழ்வார்பாடல்

அன்பே தகழியா வார்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா — நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினே னாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.

பேயாழ்வார்பாடல்

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்க னணிநிறமுங் கண்டேன் — செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரசங்கங் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பா லின்று.

இச்சம்பவத்தைப் பாரதபாயிரகாரர் சுருக்கியமைத்து நாட்டிலேற்றிப் "பாவருந்தமிழாற் பேர்பெறு பனுவற் பாவலர் பாதிநாளிரவில்—மூவரு நெருக்கி மொழிவிளக்கேற்றி முகுந்தனைத் தொழுத நன்னாடு" என்பர்.

சோழன் செங்கணனிட்ட சிறையினின்றுஞ் சேரன் கணைக்காலிரும்பொறையை மீட்டற்குக் களவழிநாற்பது என்னும் பிரபந்தம் பாடினவர் எனக்கொண்டு கலிங்கத்துப்பரணியிலே "களவழிக்கவிதை பொய்கை யுரை செய்யவுதியன்—கால்வழித்தளையை வெட்டியரசிட்ட பரிசும்" என்புழிக் கூறப்படும் பொய்கையாரும், புறநானூறு முதலியவற்றிற் சிலகவிகளுக்கு ஆக்கியோர் எனப்படும் பொய்கையாரும் மேற்கூறப்பட்ட மூவருள் ஒருவராகிய பொய்கையாழ்வாரே என அநுமானிப் பாரும் உளர். ஆராய்க.

களவழிநாற்பது

வெள்ளிவெண் ணாஞ்சிலான் ஞால முழுவனபோல்
எல்லாக் களிறு நிலஞ்சேர்ந்த — பல்வேற்
பணைமுழங்கு போர்த்தானைச் செங்கட் சினமால்
கணைமாரி பெய்த களத்து.

190. முருகேசபண்டிதர்
(1830—1900)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள சுன்னுகம். குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்குப் பதினறு வருடங்களுக்கு முன்.

வெண்பா

ஆண்டு விகாரிவரு மாவணிமூ வேழு செவ்வாய்
மாண்ட முதற்பிரத மைத்திதிமார்த்—தாண்டனுள்
மூடுபெருங் கீர்த்தி முருகேச பண்டிதனூர்
நாடுங் கதிக்குரிய நாள்.

இவர் பூதத்தம்பிக்கு மைந்தர், சுப்பிரமணியருக்குக் கனிட்டர். சிவசப்புப்புலவ ரிடத்துஞ் சங்கரபண்டித

ரிடத்துஞ் சிலசில நூல்கள் கற்றவர். பாரதம், இராமாயணம், சேதுபுராணம் முதலிய இலக்கியங்களும், நன்னூல், அகப்பொருள் முதலிய இலக்கணங்களும் நன்கு பயின்றவர். பஞ்சலக்கணமும் வல்லவர். பஞ்சலக்கணப் பயிற்சியை வித்துவான் புன்னைக் கணேசையர் கட்டளைக் கலித்துறையும் புலப்படுத்தும்.

கட்டளைக்கலித்துறை

எழுத்தொடு சொற்பொருள் யாப்பணி யென்னு மிலக்கணங்கள்
பழுத்துள நாவினன் பாக்களோர் நாலொடு பாவினங்கள்
வழுத்திடப் பாடு முருகேச பண்டிதன் வாதியெனத்
தொழத்தகு விற்பனன் சென்று பாகதி துன்னினனே.

யாழ்ப்பாணத்திலும் சிதம்பரம், கும்பகோணம், சென்னை, திருப்பற்றூர் முதலிய இடங்களிலுந் தமிழ் உபாத்தியாயராயிருந்தவர். அங்கே பலர்க்குத் தமிழாசிரியர். இங்கே சித்தாந்தப்பிரசாரகர் சரவணமுத்துப் புலவர்க்கும், பல தமிழ்நூலாக்கியோர் முத்துத்தம்பிப் பிள்ளைக்கும், நமக்கும், பிறர்க்குந் தமிழாசிரியர். யாழ்ப்பாணத்திற் கற்பித்த இடங்களைப் பின்வருங் கொச்சகங் காட்டும்.

தரவுகொச்சகம்

சுன்னைநகர் புன்னைநகர் சொல்லியதென் கோவைநகர்
மன்னுசிறப் பிட்டியளை வெட்டியொடு மல்லாகந்
துன்னியகல் லைமுதலாந் தொன்னகர்வாழ் மாணவர்க்குப்
பன்னுதமிழ் சொன்னவன்மன் முருகேச பண்டிதனே.

பலவகையழகுந் தொடைநயம் முதலியவைகளும் பொருந்த விரைந்து கவிபாடும் பெருந்திறலுமுடையவர். மடக்குச் சிலேடை முதலிய கவிபாடும் வன்மையுமுடையவர்.

கட்டளைக்கலித்துறை

விரும்பிய வாசு கவிக்கொரு காளமன் மேகமென்பர்
கரும்பியல் பாகப் பொருட்டொடை யாற்கவிக் கம்பனென்பர்
அரும்பொருள் கூறு மறிவிற் பரிமே லழகனென்பர்
வரம்பில சீர்த்தி முருகேச பண்டித வள்ளலையே.

மயிலணிச்சிலேடை-வெண்பா, ஊஞ்சல், பதிகம், சந்திரசேகர விநாயகருஞ்சல், குடந்தைவெண்பா, நீதிநூறு, பதார்த்ததீபிகை முதலிய பிரபந்தங்களும், பலதனிநிலைக்கவிகளும் பாடினவர். மயிலணி - சுன்னுகத்தைச் சேர்ந்த ஓரிடம். குடந்தை - கும்பகோணம். பதார்த்ததீபிகை - தர்க்கசங்கிரகமூலத்தைக் கட்டளைக் கலித்துறையில் அமைத்துப் பாடியது.

குடந்தைவெண்பா

மாமியொடு கூடி மகிழ்ந்து மனைதோறுங்
கோமி யுறையுங் குடந்தையே — ஏமுனையில்
தாரணித் தேரார் தலையெரித்தார் பூமகனார்
தாரணித் தேரார் தலம்.

கோமி - சரசுவதி. ஏ-அம்பு. தார் - கொடிப்படை. தேரார் - பகைவர். பூமகன் - பிரமா. தாரணி - பூமி.

நீதிநூறு

கள்ளொடு காமங் கடுங்கோபஞ் செய்தகுடி
தள்ளரிய துன்பந் தனில்வீழும் — பிள்ளைகளைப்
பெற்றவ தென்ன பெரும்பழக்க மன்னவர்கருக்
கற்பிப்ப தேயரிது காண்.

விரோதச்சிலேடை

செட்டையிலை வைத்திருக்குஞ் செவ்வே ளல்ல
நெடிதோங்கித் தண்டேந்து மாலு மல்ல
கட்டுவா ஞாளிக்கும் பிரம னல்ல
கனிவெட்டி யெடுத்தலாற் சுரங்க மல்ல

நட்டவரைத் தனபதியா யிருக்கச் செய்யும்
நன்மையினு ளும்வணங்கு மீச னல்ல
சிட்டரெலாங் கொள்ளுமொரு பொருளே யாருஞ்
சேகமறிய விப்பொருளைச் செப்பு வீரே.

இங்கே குறிக்கப்பட்ட பொருள் வாழை. நெட்டை யிலை - நெடியவேலை. நெடிய இலை. வான் ஆர் - ஆகாயம், பூமி. கனி - சுரங்கவஸ்து. நட்டவர் - நண்பர், தாபித்தவர்.

நடுவெழுத்தலங்காரம்

மைந்தன்விதை மாமிகவர் வழிமீ னென்று
மதனவேள் புரவிதழிவ் வேழின் மீது
வந்தநடு வெழுத்தெனக்குச் செய்தான் மற்றை
வரிகள்பதி னன்கிளையுந் தானே கொண்டான்
அந்தநாள் வளைத்துச்சி தரித்துத் தம்மை
அருச்சிக்கு மவர்க்ககற்றி யங்கை யேந்தி
முந்தவதன் கீழிருந்து நடனஞ்செய்து
முனிந்துரித்தான் மயிலணிவாழ் முதல்வன் றானே.

இங்கே நடுவெழுத்தாற் கொள்ளப்பட்ட பொருள் தத்துவராமற் செய்தான் என்பது. நடுவெழுத்து எடுக்கும்படி கொள்ளப்பட்டசொற்கள் "மைந்தன், விதை" முதலியவற்றுற் பெறப்பட்ட. மதலை, வித்து, மாதுலை, கவலை, ஆரால், காமன், புல்லி என்னும் ஏழு சொற்களும் என்க. வரிகள் பதினன்கு—இவைகளிலே நடுவெழுத்து நீங்கிய மற்றை எழுத்துகள். அவற்றை மலை முதலியன வாகக்கொண்டு வளைத்து முதலிய எச்சங்களோடும் முறையே சேர்த்துப் பொருள் அறிக.

இவர் நிரம்பிய புலமையிலார் நூலுரைகளிற் குற்றங்காட்டி வாதஞ் செய்யும் வழக்குமுடையவர். பஞ்

சிகைகளிலே வாதவிஷயமாகப் பல கடிதங்கள் வரைந்தவர். நாவலரவர்களையும் பிறரையும் வெல்லக்கருதித் தம்பத்திரிகையிலே சைவவிரோதமும் பிறவுமாகப் பல விடயங்கள் எழுதிய கத்தோலிக்கு வித்துவான் அருளப்ப முதலியார் செய்த அலங்காரபஞ்சகம் என்னும் நூலிலே குற்றங்காட்டி அலங்காரபஞ்சகசண்டமாருதம் எனக் கண்டனம் ஒன்று வரைந்தவர். ஒன்று காட்டுதும்.

அலங்காரபஞ்சகசண்டமாருதம்

> அரும்பிரா மணத்தினிய கனிபுதவு மருங்கொடி
> பருதியம் பாத்தி
> இருந்தரா சாத்தி கழுமொரு நீதியிறைமகள்
> இணையறு மறத்தி
> பொருந்தவெஞ் ஞான்று ஞானசக் கிலிச்சிபுல்லனை
> யருள்கானன் குறத்தி
> மருந்தெனப் புகழு மருத மடுவினில்வதிசெப
> மாலைமா மரியே,

அருங்கொடி இருந்தராசு என்னும் தொடர்களை அரும் - கொடி, இரும் - தராசு எனப்பிரித்தது ஏன்? இவற்றிற்கு மை இறுதியாவதன்றி "இனமிகல்" என்பதனுற்றேற்றிய மகரவொற்றும் இறுதியாகுமா? மணத்தினியகனி என்பதற்கு வாசனையைக்கொண்ட இன்பமாகிய கனி என்றுரைத்தவர் மணத்து இனிய எனப் பதம் பிரித்தது என்னை? மணத்து என்னும் வினையெச்சம் வாசனையைக்கொண்ட என்னும் பெயரெச்சப் பொருளைத் தருமா? இனிய என்பதற்கு இன்பமாகியது எனப் பொருளுரைத்தது என்னை? இனிமைக்கு இன்பம் பிரதிபதமாகுமா? சக்கிலிச்சி என்பதில் இச்சி என்பதற்கு விரும்பி எனப் பொருளுரைக்க ஆன்றோர் வழக்கும் உண்டா?

இவர் கந்தபுராணசவையில் விருத்தியுரை சொல்ல வல்லவரல்லர் என்று சிலர் சொல்லியதை நோக்கி உரை கூறுவாரை முன்னிலையாக்கி உரைகூறும் நெறியை அசதியாடி இலங்கைநேச பஞ்சிகையில் யாம் எழுதிய கடிதத்தையும் இப்பொழுது நூல்களை நிரம்பக்கல்லாது விரிவுமாத்திரம் பாடமாக்கிச் சொல்வார்க்குத் திருத்தஞ் சித்திக்கும்பொருட்டும் கற்பவர்பொருட்டுஞ் சுருக்கிக் காட்டுதும்;

கந்தபுராண வியாக்கியானம்

கந்தபுராணத்து வள்ளியம்மை திருமணப் படலத்துக்கு விருத்தியுரை பேசும் உரையாசிரியர்களே!

நீவிர் எத்தனையோ பெண்சனங்களும் ஆண்சனங்களும் புராணங் கேட்டற்கண் நம்பிக்கையோடும் வந்து உங்கள் வாய்களையே எதிர்பார்த்திருக்க நீவிர் அவர்களுக்குக் கொஞ்சமும் விளங்காமல் வெளிப்படையான இயற்சொற்களை யெல்லாம் திரிசொற்களாக மாற்றிச் சொல்லுகிறீர்கள்! பூ என்பதற்கு வீ என்கிறீர்கள்! மறைந்து போனார் என்பதற்கு அந்தர்த்தானமாயினார் என்கிறீர்கள்! சித்தியாரிற் சில செய்யுள்களையும் அவற்றின் கடினவாக்கியம் அமைந்த பெரிய வியாக்கியானங்களையும் எடுத்துப் படிக்கிறீர்கள்! சில கவிகளில் வேதாந்த சித்தாந்தப் பிரசங்கமும் நடாத்துகிறீர்கள்!

அதிகாரம், அவாய்நிலை முதலியவற்றால் வேண்டுமிடத்து உரைகளை வருவித்துரைக்க வேண்டும் என்னும் விதியினை அறியாது வாயில் வந்தன வந்தனவற்றை விரித்து அங்ஙனம், இங்ஙனம், என்புழி, இருப்புழி, ஈண்டு விரிப்பிற் பல்கும், ஆண்டுக் காண்க, என்பன

முதலிய இலக்கணச்சொற்களையும் இடையிடைவைத்து நெடுநேரஞ் சொல்லி எக்கவிகளிலும் வித்தியாகம்பீரம் விளக்குகிறீர்கள்! அரியனவும் இன்றியமையாதனவுமாய சில அணிகளை எடுத்துக் கூறுதலே சிறப்பென அறியாது தன்மையணி, உவமையணி, ஒட்டணி, பரவணி முதலிய பல வணிகளையுஞ் சொல்லுகிறீர்கள்! தேமா, புளிமா, கருவிளம் முதலிய யாப்பிலக்கண வாய்பாடுகளையுங் கூறுகிறீர்கள்! அகப்பொருள்விளக்கம், நன்னூன் முதலியவற்றிலே நெட்டுருப்பண்ணிய சூத்திரங்களையும் நெடுநேரம் படிக்கிறீர்கள்!

எத்தனையோ சனங்கள் ஏனிங்கே வந்தோம்? என்று பெருமூச்சுவிட நீவிர் ஒரு மூச்சும் விடாமல் வாணன்கோவையுந் திருக்கோவையும் படிக்கிறீர்கள்! சில கவிகளில் ஞானக்கருத்துஞ் சொல்லுகிறீர்கள்! வேங்கைமரமாதல், காந்தருவ மணஞ்செய்தல் முதலியவற்றிற்கு ஒன்றும் பேசாமல் இங்ஙனம் மணமயர்ந்தது உலகில் இல்லறம் நிகழ்தற்கென்று சொல்லித் "தென்பாலுகந் தாடும்" என்னுந் திருவாசகத்தையும் "போகியா யிருந்துயிர்க்குப் போகத்தைப் புரிதலோரார்" என்னுஞ் சித்தியாரையும் பலவிடத்தும் பழம்பாடமாகப் படிக்கிறீர்கள்! முராரி என்பதற்கு முரன் என்னும் அசுரனுக்குப் பகைவர் என்கிறீர்கள். தேவர் என்பதற்கு ஒன்றுஞ் சொல்லாது சும்மாவிடுகிறீர்கள்.

உங்கள் விருத்தியுரையாற் சிலவிடங்களிற் "செந்தினை யிடியுந்தேனும்" என்ற பாட்டுவர "வைகறை விடியல் செல்ல" மற்றை நாளிலும் மத்தியானமாகின்றதே. இப்படி விருத்தியுரை கூறும் நீவிர் உரையில்லாத ஒரு நூலுக்காவது இப்படலத்துக்காவது உரை

யெழுதி வெளிப்படுத்தலாமே! அங்ஙனஞ் செய்யாத தென்னேயோ! உரையெழுதி வெளிப்படுத்திஞற் பொருளும் புகழும் ஒருங்கு சித்திக்குமே!

இங்கே சில திருத்தி மாற்றப்பட்டன. இதனைக் கண்ட உரையாசிரியர்கள் சிலர் மாருகக் கடிதங்கள் வரைந்தனர். அக்கடிதங்களுக்கு உத்தரம் மாத்திரம் நாவல ரவர்களைக்கொண்டு எழுதுவித்துப் பிரசுரிக்கப் பட்டது. புராண சவையிலே சென்று உரைகூறும் முறை அமைந்திருத்தலால் உரை கூறுவார்க்குப் பயன் படும் என்பது நோக்கி அதனையுஞ் சற்றே சுருக்கிக் காட்டுதும்.

கடிதர்க் குத்தரம்

கடிதர்களே!

பலவூர்களிலுள்ள பலரையும் பொதுப்படக் கண்டித்த கண்டனத்தை நீங்கள் உங்கள் உங்கள் மேலே இட்டுக்கோபிப்பது நீதியன்று. புராணப் பிரசங்க சபையிலே வந்திருக்கிறவர்களுள்ளே சிலரொழிய மற்றவர்க ளெல்லாரும் கல்வியில்லாதவர்களே. ஆதலால் மிக வெளிப்படையாகிய நடையிலே பிரசங்கிப்பதே முறை. அங்கே இலக்கணங்கள் எடுத்துச் சொல்வது தகுதி யன்று. உங்கள் பிரசங்கங்கள் தங்களுக்கு விளங்கவில்லை என்றே வெகு சனங்கள் குறைசொல்லிக்கொண்டு திரிகிருர்கள். சிவபுராணபடன விதியிலே இருபத்தேழாம் பிரிவைப் பாருங்கள்!

சிவஞானசித்தியார் முதலிய சித்தாந்த நூல்கள் படித்தற்குரியார் இவர் என்பது திருக்கோவையாருரை யிறுதியிலுள்ள தமிழ்ப் புலமையிலே பதினேந்தாம் பிரிவிலும், இரண்டாஞ் சைவவினுவிடையிலும் கண்டு

கொள்ளக் கடவீர். எங்காயினும் இன்றியமையாத இடத்திலே ஒரு துண்டு வாக்கியம் உதாகரிப்பது தகுதி:

மயிலணிச்சிலேடை வெண்பா

வெற்றிவடி வேன்முருகன் மேவு மயிலணியைப்
பற்றிச் சிலேடைவெண் பாநூற — சொற்றிடவே
கம்பொருகை யானனத்தன் காணு னருளுநன்மே
கம்பொருகை யானனத்தன் காப்பு.

நூல்

1 பூவிரத நீத்தமுனி புங்கவரு மாவணமும்
மாவிரதஞ் சேரு மயிலணியே — மேவிருவர்
மாதனத்து வந்தார் மகிழ்ந்து வரைக்கந்த
மாதனத்து வந்தார் மனை.

2. சேயவிளங் காளையருஞ் செய்தவரு மோதனத்து
வாயச மூட்டு மயிலணியே — பாயத்
தகரை நயந்துகைத்தான் ஞானவர்க ளாம்பா
தகரை நயத்துகைத்தான் சார்பு.

3. பூங்குழலார் கண்ணும் புரவதன்றி யார்முகமும்
வாங்கலை நோக்கா மயிலணியே — மாங்கனியைக்
கண்ணிமையிற் சேவலார் கைக்கொளப்பூச் சூழ்கடம்பின்
கண்ணிமையிற் சேவலார் காப்பு.

4. கோகனகப் பூமேலுங் கோவேந்தர் வீதியிலும்
வாகனங்க ளேறு மயிலணியே — ஆகவத்தில்
வந்துகைக்குந் தேரார் மடிந்தருளப் பாகனென
வந்துகைக்குந் தேரார் மனை.

5. விண்ட மலர்போல் விரும்பிவர மென்ஞான்றும்
வண்டிசை பாடு மயிலணியே — தொண்டர்கள்போய்
ஆறக் காத்தா னமைத்தங் கவர்க்கருளும்
ஆறக் காத்தா னகம்.

6. போய்க்கழனி வித்துநரும் போராச ருஞ்செவியின்
வாய்க்கவிதை நாடு மயிலணியே — சீர்க்கனற்கு
மாரனெனத் தோன்றினன் வள்ளிக்கு மையல்செய்
மாரனெனத் தோன்றினன் வாழ்வு.

7. ஊற்றூர் புனற்றடமு மூர்ப்புறஞ்சே ருங்கடமும்
வாற்று மனைசேர் மயிலணியே — போற்று
தவருக் கினியான் றமிழ்முனிவ னாகியமா
தவருக் கினியான் றலம்.

8. மாணிக்க மேடையினும் வண்புலவோர் நாவினுமே
வாணிவந் தோங்கு மயிலணியே — வேணுவைக்கொண்
டாக்குவித்தார் மெய்ய ரபத்தரெனக் கண்ணிடவன்
பாக்குவித்தார் மெய்ய ரகம்.

9. காரிகை யார்வதனங் கண்டமிவை கண்டுதட
வாரிசங் கோடு மயிலணியே — சேரமார்
வேந்தைகேட் டுக்களித்தார் மெய்ம்மையைப் பொனென்னு
வேந்தைக்கேட் டுக்களித்தார் வீடு. [மொரு

10. பேறுபெற்றார் தம்மனமும் பேணிநக ரப்புறமும்
மாறுருக்கங் காட்டு மயிலணியே — சீறியபின்
வேட்டுவரை மேவினர் மெல்லியலாம் வள்ளிதனை
வேட்டுவரை மேவினர் வீடு.

11. மாயாத வன்பினரும் வான்வீரர் தாணிகளும்
வாயாரப் பாடு மயிலணியே — போயாத
வந்தருங்கா னங்கடந்தார் வண்டணிகை யின்வாழ்ந்து
வந்தருங்கா னங்கடந்தார் வாழ்வு.

12. தப்பா மொழிப்புலவர் தாமுந் துவசமுங்கோ
வைப்பாடல் செய்யு மயிலணியே — இப்பாரில்
ஊரு மொருவினை ஞேதுகுகா திப்பெயரோ
ரேரு மொருவினு னூர்.

13. வாதையின்மா மாத்திரரும் வண்டு மெழும்பித்த
வாதசுர மாற்று மயிலணியே — ஓதும்
வியாகத் துதித்திடுவார் வேடிச்சி யைத்தே
வியாகத் துதித்திடுவார் வீடு.

14. அஞ்சநடை யாரடியு மம்பகமுஞ் செவ்விய
மஞ்சரியை மானு மயிலணியே — நஞ்சஞ்சு
வைத்தானை வேலினன் மல்குசுரந் தண்ணெனச்செய்
வைத்தானை வேலினன் வாழ்வு.

15. தண்டலையும் பொன்னின் றளியுந் தவமதுவார்
வண்டுறக்கங் காட்டு மயிலணியே — தொண்டிலார
கத்தினிறை வாகநத்தர் காங்கேயர் மேலையுல
கத்தினிறை வாகநத்தார் காப்பு.

16. விண்டலஞ்சேர் கோபுரமு மெய்யோ கருமேக
மண்டலந் தாங்கு மயிலணியே — வண்டமைத்தன்
பத்துக் களித்திடுவான் பாவைவள்ளி நாயகியின்
பத்துக் களித்திடுவான பற்று.

17. மாசுதவிர் தங்குழலின் மானூர்கண் பேணிலையில்
வாசம் புரியு மயிலணியே — மாசுறுசூர்
அங்கங் கெடுத்தா ரரிவைவள்ளி காணவுரு
அங்கங் கெடுத்தா ரகம்.

18. புஞ்சநிதி யெட்டியரும் போர்வீர ருங்கட்டா
மஞ்சிகையுள் வைக்கு மயிலணியே — தஞ்சமென
வேதனைமுன் னிட்டார் வினைகெடுத்தார் வெஞ்சிறையில்
வேதனைமுன் னிட்டார் வீடு.

19. ஓசைபெறும் வண்டினமு மும்பரொடு நாடோறும்
வாசவரும் பாடு மயிலணியே — பாசிழையாம்
அட்ட கலாபத்தா ராலடியேற் செய்துவினை
அட்ட கலாபத்தா ரகம்.

20. பத்தர் மனமும் பகியோரு முன்னுபர
வத்து வரையா மாமிலணியே — முத்தப்
பழனி மலைபார் பயந்தருளும் வேற்கைப்
பழனி மலையார் பதி.

21. கிள்ளைமொழி யார்விழிபங் கேள்கிளரும் வார்காதும்
வள்ளைமிலை மானு மயிலணியே — கொள்ளானி
உத்தரத்திற் சாற்றிணு ருண்மையைக்கும் பற்கிருக்கின்
உத்தரத்திற் சாற்றிணு ரூர்.

191. மெய்கண்டதேவர்

(1230)

இவருடைய பிள்ளைத்திருநாமம் சுவேதவனப் பெருமாள் என்பது. இவர் ஏறக்குறைய இற்றைக்கு அறுநூற்றெண்பது வருடங்களுக்கு முன்னே நடுநாட்டிலே திருப்பெண்ணாகடம் எனப்படுந் திருத்தூங்கானை மாடத்திலே வேளாளர் குலத்திலே சிவபத்தியிற் சிறந்த அச்சுதர் களப்பாளருடைய அருந்தவத்தாலே சாமுசித்தராய் வந்து பிறந்தவர். திருவெண்ணெய் நல்லூரிலே காங்கேயபூபதி எனப்படும் மாதுலர் வீட்டில் வளர்ந்தவர். திருக்கயிலையினின்றுந் தென்பொதியஞ் செல்லவந்த பரஞ்சோதி முனிவராற் சிவஞானபோத உபதேசமும் மெய்கண்டார் என்னுந் திருநாமமும் அடைந்தவர். பொல்லாப் பிள்ளையார் முன்னிலையிற் புனித சிவாகமப் பொருள்களெல்லாம் பொருந்த ஆராய்ந்து தெளிந்தவர். பெரியதோர் மலை சிறியதோர் கண்ணாடியிலே அடங்கித் தோன்றல்போலப் பெரிய ஞான சாத்திரங்கள் கூறும் பெரும் பொருளெல்லாம் சிறியவான சூத்திரங்களிலே அரும்பொருளாக அடங்கித் தோன்றவைத்துச் சிவஞான போதம் என்னுஞ் சித்தாந்தஞ் செய்தவர். இவர் வளர்ச்

சிக்குந் தெருட்சிக்கும் பிரமாணங்களாக, 'வெண்ணெய் நல்லூர்க் காங்கெய பூபதி மனையிற் கலப்பித்தானே" என்னும் வெண்காட்டுப் புராணத்தையும் "வெண்ணெய்ப் பொல்லாத விபமுகத்துப் புத்தேடன்பாற் புனித சிவாகமப் பொருண்மை பொருந்த வாய்ந்து" என்னுஞ் சேது புராணத்தையும் நோக்குக.

இவர் சந்தான குரவருள் ஒருவர். தாயுமானவராற் சுத்தாத்துவித மெய்கண்டநாதர் எனவுஞ் சேதுபுராண காரரால் "நில்லாத நிலையிதுமற் றென்றுமொன்றாய் நிற்கு நிலையிதுவென மெய்ந்நெறி தேர்ந்தவர்" எனவுந் துதிசெயப்பெற்றவர்.

தாயுமானவர்

> பொய்கண்டார் காணாத புனிதமெனு மத்துவித
> மெய்கண்ட நாதனருண் மேவுநா ளெந்நாளோ.

புனிதமெனு மத்துவிதம் சுத்தாத்துவிதம். சுத்தாத்துவிதமாவது விசிட்டம், கேவலம் என்னும் அடைமொழிகளால் விசேடிக்கப்பட்டு விசிட்டாத்துவிதம், கேவலாத்துவிதம் என நிற்கும் அவைபோல ஒன்றான் விசேடிக்கப்படுதலின்றிச் சுத்தமாய் நின்று பொருளுணர்த்தும் அத்துவிதம். சுத்தம் - வேறொன்றொடுங் கலவாத தூய்மை. வேறொன்றால் விசேடிக்கப்படாமை என்றவாறு.

அத்துவிதம்

அத்துவிதம் என்பதன் பொருள் இருபொருள் இருவகையன்றித் தம்முட் கலந்து பிரிவற நிற்கும் ஒற்றுமை நிலை என்பதாம். அ - அன்மை. துவிதம் - இருவகை. துவிதம் என்பதனால் மலத்தொடு கூடலுங் கூடாமையும்

பற்றி இறைவனும் ஆன்மாவும் என இருபொருளாய் வேருதலும் அன்மைப் பொருளுணர்த்தி அதன் முன்னின்ற அ என்னும் இடைச்சொல்லால் நிறைவுபற்றி உலகெலாமாதலும் பிரிவின்றி உடனுதலும் பெறப்படும். "உலகெலா மாகிவேரு யுடனுமாய்" என்ற சித்தியாரும் இப்பொருட்டு. இந்தச் சுத்தாத்துவிதமே சைவர் கொள்வது. விசிட்டாத்துவிதம் வைஷ்ணவர் கொள்வது. விசிட்ட என்பது குணமுடைமை முதலியவற்ருல் விசேடிக்கப்பட்ட எனப் பொருள்படும். கேவலாத்துவிதம் வேதாந்திகள் கொள்வது. கேவலம் - தன்னின் வேருன்றில்லாத தனி. அத்துவிதம் என்பதற்கு அவர் கூறும் பொருள் ஒன்று என்பதேயாம். அ - இன்மை என்பர்.

வேதாந்திகள், ஒன்றே என்னும் பொருளை விரித்துப் பிரமம் ஒன்றே அறிவுடைப் பொருளாகிய உயிரும் அறிவில் பொருளாகிய மண், புனல் முதலானவைகளுமாய்ப் பரந்து காணப்படுகின்றது. எல்லாம் பிரமம்; பிரமந் தவிர வேருரு பொருளும் இல்லை என்று கூறுவர். இக்கொள்கைக்குப் பிரமாணம் வினவுங்கால் வேதம் பிரமாணம் என்பர். பிரமாணம் என்பது அளந்தறிதற் கருவி. பிரமம் இத்தன்மையது என அளந்தறிதற்கு வேதம் அளவைக் கருவியாகுமாயின், அளவைக் கருவியாகிய வேதம், அளக்கப்படும் பொருள் என இரு பொருளாகும்; அளக்கின்றவனுஞ் சேர முப்பொருளாகும். பின் எல்லாம் பிரமம் என்பதும் ஒன்றே என்பதும் எப்படி! வேதம் பிரமத்தின் வேரு!

இவர்கள் "தனையெனப்—பேசன்மித்தை பிறிதில்லையாவியுந்—தேசு மேவு சிவனுமொன்ருகுமே" என்பது தழுவி ஆன்மா ஒன்றே என்றும் பல ஆன்மாக்கள் இல்லை என்றும் வாதித்தலால் ஏகான்மவாதிகள் எனப்

படுவர். ஆன்மாக்களெல்லாம் ஒன்றேயாயின் ஒரு சரீரத்துள்ள ஆன்மா நடக்க விரும்பும் சமயத்தில் மற்றொரு சரீரத்துள்ள ஆன்மா கிடக்க விரும்புவ தென்னையோ! ஓரான்மா அதுவும் இதுவும் வேறன்று நானே பிரமம் என வாதபித்தங் கொள்ளும்போது மற்றோரான்மா அதுவும் வேறே இதுவும் வேறே எனப் பேதசித்தங் கொள்வது என்னையோ! இங்ஙனம் குணம் தொழின் முதலியவற்றால் வேறுபடுவன ஒன்றாவது எப்படி! மாயாவாதிகளும் இவர்களேயாவர்.

இந்த ஏகான்மவாதிகள் முதலிய சமய வாதிகள் பலர் சிவஞான போதத்திலும், சிவஞான போத பாடியத்திலுங் கண்டிக்கப்பட்டனர். பாடியத்திலே ஆருஞ் சூத்திரவுரை முதலிய பிற்பாகம் நமது நண்பர் சுவாமிநாத பண்டிதராற் பெரு முயற்சியோடும் அச்சிடப்பட்டிருக்கின்றது. இதிலே அத்துவிதம் என்னும் சொல்லின் பொருளும் ஏகான்மவாதம் முதலிய பல சமயநூற் கொள்கைகளும் அவற்றின் மறுப்புக்களும் சித்தாந்தத் துணிவும் தலைமைபெற உரைக்கப்பட்டிருக்கின்றன. சிவஞானபோதம் பாண்டிப் பெருமாள் விருத்தியுரையுமுடையது.

சிவஞானபோதம்

பண்ணையு மோசையும் போலப் பழமதுவும்
எண்ணுஞ் சுவையும்போ லெங்குமாம் — அண்ணாலவ்
அத்துவித மாத லருமறைகள் ளொன்றென்று
தத்துவித மென்றறைபு மாங்கு.

192. மோசிகீரனார்

இவரூர் பாண்டி மண்டலத்துள்ள மோசிகுடி என்பர். இவர் கடைச்சங்கப் புலவருள் ஒருவர். இவர்

சேரமான் தகடுரெறிந்த சேரலிரும்பொறை என்பவனுற் சாமரை வீசப்பெற்றவர். அவனை இயன்மொழி வாழ்த் துப்பாடி உவப்பித்தவர். இவ்வியன்மொழி வாழ்த்தும் இவர் பாடிய பிற கவிகளும் புறநானூற்றிலே வருகின் றன. இவர் கவி சில குறுந்தொகையிலும் வருகின்றன. திருவள்ளுவமாலையிலும் ஒன்று வருகின்றது. வேறும் உண்டு என்பர்.

புறநானூறு

நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனல், யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே.

193. வடமலையப்பர்

(1696)

இவரூர் சிறீரங்கத்தின் அருகிலுள்ள ஒரு கிரா மம் என்றும், குலம் வேளாளர் குலம் என்றும், காலம் ஏறக்குறைய இற்றைக்கு இருநூற்றிருபது வருடங்க ளுக்கு முன் என்றும் அரசராய் வீற்றிருந்த பிரதான நகரி பாண்டி மண்டலத்துள்ள திருநெல்வேலி என்றுங் கூறுவர். சமயம் சைவம். இவர் பல தனிநிலைக் கவி களாலும் புலவராற்றுப்படையாலும் புகழப்பட்டவர். சைவபுராணத்துள் ஒன்ருகிய மச்சபுராணத்தைத் தமி ழிற்பெயர்த்துப் பாடினவர். புலவராற்றுப்படைகாரர் "நானூற்றுக் கோவையும் நாற்கவி வண்ணமும்—பலர் புகழ் நீடூர்த் தலபுராணமும்—இருநிலம் புகழுமொரு கலம்பகமும்" பாடினவர் என்றும், "செந்தமிழ்க்குதவுந் தியாகவாரிதி" என்றும், "சத்திய வாசகமுந் தமிழறி புல னும்—புத்தி சாதுரியமும் பொலிவுறு நிபுணன்" என்

றும், "இரசைப் பதிவள ரிருவப்பனையருள்—வரிசைப் பெரிய வனவட மலையப்பனை" என்றும் இவ்வாறே இவரைப் புகழ்வர்.

மச்சபுராணம்

வேரி நாண்மல ருற்றிடும் வேங்கையே
கோர மின்றிக் குலவிடும் வேங்கையே
சார வெங்குஞ் சரிக்குமா தங்கமே
பாரின் மன்னிப் பரம்புமா தங்கமே.

வேரி - தேன். வேங்கை - ஒரு மரம், புலி. மாதங்கம் - யானை, பெரிய பொன். இது கடைமடக்கு.

194. வரதபண்டிதர்
(1656—1716)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள சுன்னுகம். குலம் காசிமாநகர வேதியர் குலம். சமயம் சைவம். தந்தையார் பெயர் அரங்கநாதையர். காலம் ஏறக்குறைய இற்றைக்கு இருநூறு வருடங்களுக்கு முன் என்பர். இலக்கண இலக்கியங்களும், வைத்தியசாத்திரமும் பிறவுந் தெரிந்தவர். வரகவித்துவம் அமைந்தவர். சிவராத்திரிப் புராணம், ஏகாதசிப்புராணம், அமுதாகரம், கிள்ளைவிடு தூது, பிள்ளையார்கதை முதலிய பிரபந்தங்கள் செய்தவர். அமுதாகரம் - வைத்திய நூல். கிள்ளைவிடுதூது காங்கேயன்றுறைக்கு அருகிலுள்ள கண்ணியவளையில் வீற்றிருக்குங் குருநாதசுவாமி மேலது.

கிள்ளைவிடுதூதிலே சிவபிரான் பரவைக்குத் தூது போனகதை, பாண்டவற்குக் கண்ணபிரான் தூதுபோன கதை, இராமருக்கு அனுமான் தூதுபோனகதை, இந்திரற்கு நளன் தூதுபோனகதை, சடையப்பமுதலியார் பீதாம்பரங் கிழித்துக் காலிற் சிலந்தியைச் சோழனுக்குக் காட்டியகதை முதலிய கதைகளையும், மாவிட்டபுரத்துள்ள கோவிற்கடவை, தெல்லிப்பழையிலேயுள்ள

தோதரை முதலிய தலங்களையும், மாவிட்டபுரம் முதலிய ஊர்களில் வசிக்கும் வேளாளர் முதலியோரையுங் கூறினவர். இறுதியில் "இறுதிபயப்பினு மெஞ்சாதிறைவற்-குறுதி பயப்பதாந் தூது" என்னுந் திருக்குறளையும் எடுத்துக் கூறினவர். இவற்றால் இவர் திருக்குறள், பெரியபுராணம். திருக்கைவழக்கம் முதலியன கற்றவர் என்பது பெறப்படுகின்றது. கிள்ளைவிடுதூது இவர் வழித்தோன்றலாகிய உபாத்தியாயர் இரத்தினேசுரையரால் அச்சிடப்பட்டது.

சிவராத்திரிப் புராணம்

காவரசு மலரயன்மால் கடவுளர்க்காய்ச் சென்றமர்செய் காமனைமம்
பூவரசு படவிழித்துப் புனவேங்கை யத்தியதள் புனைந்து போர்த்த
தேவரசு மனமகிழத் திருப்பதிக மிசைத்தமிழிற் சிறக்கப் பாடும்
நாவரசு பதம்பரசு நமக்குயர்பொன் னாட்டரசு நல்கு மன்றே.

காவரசு - இந்திரன். ஐம்பூவரசு - மன்மதன். வேங்கை - புலி. அத்தியதள் - யானைத்தோல்.

கிள்ளைவிடு தூது

சீர்தங்கு தெள்ளமுதுஞ் செந்திருவு மைந்திருவுங்
கூர்தங்கு நாற்கோட்டுக் குஞ்சரமு — மேர்தங்கும்
ஆரத் தனத்தே வரம்பையரும் வந்துதித்த
கீரக் கடற்றோன்றும் கிள்ளையே — பாருலகில்
இந்துதவு நன்னுதலார்க் கின்பமுடன் தூதுபோய்
வந்துதவுங் கிஞ்சுகவாய்க் கிள்ளையே..................
....

195. விசாகப்பெருமாளையர்

(1866)

இவரூர் தொண்டைமண்டலத்துள்ள தணிகையம்பதி. குலம் சங்கமர்குலம். சமயம் வீரசைவம். காலம்

ஏறக்குறைய இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்குமுன். இவர் கந்தப்பையருக்கு மைந்தர். இவர் சென்னை இராசதானிக் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பண்டிதராக விருந்தவர். நைடதம், பிரபுலிங்கலீலை என்பவற்றின் முற்பாகங்களுக்கு உரைசெய்த சரவணப்பெருமாளையருக்குச் சியேட்டர். இலக்கண இலக்கியங்களில் வல்லவர். இலக்கணச்சுருக்கவினாவிடையும், நன்னூற் காண்டிகையுரையும் பிறவுஞ் செய்தவர். இலக்கணச்சுருக்கவினாவிடையிலே எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணமுஞ் சுருக்கிக் கூறுவர். தமிழ்-ஆங்கில அகராதி எழுதிய உவின்சிலோவுக்குத் துணை புரிந்தவர்.

தற்சிறப்புப்பாயிரம்

உலகு மேதகு மிவனெனக் கொருமுத லெனக்கொண்
டிலக வாழரு ளிடத்தன மீசனை யிறைஞ்சிக்
குலவு நூற்பொரு ளுணர்த்திய குரவரைப் பழிச்சி
அலகில் சீரெழுத் தாதியைந் தறைகுவ னமைந்தே.

196. விசுவநாதசாத்திரியார்

(1836)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள அராலி. குலம் வேதியர்குலம். சமயம் சைவம். காலம் ஏறக்குறைய இற்றைக்கு எண்பது வருடங்களுக்கு முன். இவர் இலக்கிய லக்கணங்களுஞ் சோதிடசாத்திரமுங் கற்றவர். அப்பொழுதைய பரசினரால் "இராசாவின் கணிதர்" என்னும் பட்டமும் பெற்றவர் என்பர். கவிபாடுந்திறமுமுடையவர். வண்ணைக் குறவஞ்சி, நகுலமலைக் குறவஞ்சி முதலிய பிரபந்தங்களும், பலதனிநிலைக்கவிகளும் பாடினவர்.

வண்ணைக் குறவஞ்சி

1. சித்திர முளரிக் கண்ணர் சிறந்தவா மனத்த ராசை
வத்திர முடைய ரஞ்சக் காத்தர்பொன் வனத்தா மத்தர்
இத்திற வயன்மா லீச ளிவர்களி லிறைவ ரான
அத்தர்தாள் வணங்கி வண்ணைக் குறவஞ்சி யறைகு வேனே.

இக்கவியில் முன்னீரடியும் பிரமா, விட்டுணு, சிவன் என்னும் மூவருக்கும் சிலேடை. முப்பொருளையும் இலக்கமிட்டு முறையே எழுதுவாம். சித்திரம் - அழகு.

முளரிக் கண்ணர்—

1. தாமரைமலரை ஆசனமாகவுடையவர். முளரி - தாமரை. கண் - இடம்.
2. தாமரைமலர்போலுங் கண்ணுடையவர்.
3. அக்கினிக் கண்ணுடையவர். முளரி - அக்கினி.

சிறந்து அவாம் அனத்தர்—

1. சிறப்புற்று விரும்பப்படுகின்ற அன்னவாகனமுடையவர். அவாவும் என்பது வகரவுகரம் நீங்கி அவாம் என நின்றது.

சிறந்த வாமனத்தர்—

2. சிறந்த குறளுருவமுடையவர். வாமனம் - குறளுருவம்.

சிறந்த ஆம் மனத்தர்—

3. அன்பினாற் சிறந்தனவாகிய மனங்களில் இருப்பவர்.

ஆசை வத்திரமுடையர்—

1. திக்குமுகமுடையவர். ஆசை - திக்கு. வத்திரம் - முகம்.

2. பொற்சீலையுடையவர். ஆசை - பொன். வஸ்திரம் - சீலை.

3. திக்காகிய சீலையுடையவர்.

அஞ்சம் கரத்தர்—

1. அன்னக்கொடி தாங்கிய கையுடையவர். அஞ்சம் - அன்னம்.

அம் சக்கரத்தர்—

2. அழகிய சக்கராயுதமுடையவர்.

அஞ்சு அக்கரத்தர்—

3. ஐந்தெழுத்தாகிய மந்திரமுடையவர்.

போன் வனம் தாமத்தர்—

1. பொன்னிறமாகிய ஒளியுடையவர். தாமம் - ஒளி.

2. அழகிய துளசிமாலையுடையவர். வனம் - துளசி.

3. பொன்போற் கொன்றைமாலையுடையவர். தாமம் - கொன்றை.

நகுலமலைக் குறவஞ்சி

2. சுலவுதிரு வனம்பரிதரோர் பொன்சா ரங்கர்
கோத்தரணி நன்குடைய தாகக் கொண்டோர்
நிலவுறமெண் கோவுடைய ரத்தி தன்னை
நீடுவந்த பகவரென நின்ற மூவர்
உலகுபுகழ் மலரயன்மால் சிவனெ னச்சொல்
லுற்றவரிற் றலைவர்பத மூவந்து போற்றிக்
கலவமயி னடனமிடு நகுல சையக்
காமர்குற வஞ்சிதனைக் கழறு வேனே.

இக்கவியிலும் முன்னீரடியும் பிரமா, விட்டுணு, சிவன் என்னும் மூவர்க்குஞ் சிலேடை. குலவுதல் - விளங்கல்.

திரு அனம் பரித்தோர்—

1. அழகிய அன்னத்தாற் சுமக்கப்பட்டவர்.

திரு வனம் பரித்தோர்—

2. இலக்குமி வசிக்குந் துளசியைத் தரித்தவர்.

3. சிறந்த நீராகிய கங்கையைத் தரித்தவர்.

பொன் சார் அங்கர்—

1. பொன்னிறஞ் சார்ந்த சரீரமுடையவர்.

பொன் சாரங்கர்—

2. அழகிய சாரங்கம் என்னும் வில்லுடையவர்.

3. பொன்மயமாகிய மானையுடையவர். சாரங்கம் - மான்.

தரணி கோ நன்கு உடையது ஆகக் கொண்டோர்—

1. பூமி கடனீரை நன்குடையதாகச் சிருட்டித்துக் கொண்டவர். தரணி - பூமி. கோ - நீர்.

கோ தரணி நன் குடையதாக கொண்டோர்—

2. பசு மலையாகிய நல்ல குடையுடையதாகக் கொண்டவர். கோ - பசு. தரணி - மலை. கோ - சாதியொருமை

கோ தரணி நன்கு உடையது ஆக கொண்டோர்—

3. கண்ணுனது சூரியனை நன்குடையதாகக் கொண்டவர்.

எண் கோ உடையர்—

1. எட்டுக் கண்களையுடையவர். கோ - கண்.

2. எண்ணப்படும் அரசியலுடையவர்.

3. எட்டுத்திக்காகிய வஸ்திரமுடையவர் உடை - சீலை.

அத்தி தனை நீடு உவந்த பகவர்—

1. * * * * *

2. பாற்கடலைப் பெரிதும் விரும்பிய பகவர்.

3. எலும்பு மாலையைப் பெரிதும் விரும்பிய பகவர்.

197. வில்லிபுத்தூராழ்வார் (1400)

வில்லிபுத்தூராழ்வார் என்பது முன்னரே பாண்டி மண்டலத்திலேயுள்ள வில்லிபுத்தூரிலே அவதரித்துப் பெரிய பிரபந்தம் பாடிய பெரியாழ்வார் என்னும் விட்டுணு பத்தர்க்கு வழங்கப்பட்ட பெயராயிருக்கும் பெருமை நோக்கிப்பின்னர் இவர்க்கும் இடப்பட்டு வழங்கியதோர் பெயர். இவரூர் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள சனியூர். குலம் வேதியர் குலம். சமயம் வைஷ்ணவம். காலம் ஏறக்குறைய இற்றைக்கு ஐந்நூறு வருடங்களுக்கு முன்என்பர். இவர் பாயிரம் பாடிய வரந்தருவார்க்குத் தந்தையார். வீரராகவாசாரியர்க்கு மைந்தர் என்பர். வரந்தருவார் வீரராகவர் குரு என்பது போதர "வீர ராகவ னருள்பெறு வில்லிபுத்தூரன்" என்பர். இவர் விட்டுணுவிடத்தும் விட்டுணுபத்தரிடத்தும் பத்திமிக்க வர். வரந்தருவாரும் "பைந்துழாய் முடிப் பரமனைப் பலகவித் துறையுஞ்—சிந்தையான் மொழிந் தன்பர்தந் திருவுளம் பெற்றேன்" என்பர்.

இவர் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழிலும் வடமொழிக் கலைகளிலும் முறைபோகிய உத்தம பண்டிதர். ஐந்து பாவுடை நால்வகைக் கவிக் அதிபதியாய் வந்தவர். சந்தக்கவி பாடுதலிலுஞ் சமர்த்தர். தென்னர், சோழர், சேரர் என்னும் மன்னர் மூவரும் வழங்கிய வரிசை பெற்றவர். வாதுகளிலே தோற்ற புலவர்காதுகளைக் குடைந்து தோண்டி அறுத்தலாற் "குறும்பியளவாக் காதைக் குடைந்து தோண்டி எட்டினமட்டறுப்பதற்கோ வில்லியில்லை" எனப் பாடப்பட்டவர். சங்கத் தமிழ்நூல்களை நன்கு கற்றுணர்ந்து வக்கபாகையில் அரசுவீற்றிருந்த ஆட்கொண்டான் என்னுங் கொங்கர் குலவரசர் "நீயும் நானும் பிறந்த திசைக்கு இசை நிற்பப் பாரதமாம் பெருங்கதையைப் பெரியோர் தங்கள் சிறந்த செவிக்கு அமுதமெனத் தமிழ்மொழியின் விருத்தத்தாற் செய்க" என்றபடி பாரதம் என்னும் பிரபந்தம் பாடினவர்.

பாரதத்திலே கொங்கர்குல அரசருடைய வெற்றி, வீரம், பாவலர் மானங் காத்தல், பரிசு கொடுத்தல், யாவருக்கும் இல்லையென்னுமல் ஈதல் ஆதிய உயர்குணங்களைச் சில கவிகளில் உவமையாய் வைத்துக் கூறுவர். சோழ பாண்டியர்களையும் வியந்து கூறுவர். விட்டுணுமூர்த்தியையும், விட்டுணுபத்தர்களையும், சிவபிரானையுஞ் சிவபத்தர்களையும் பெருமையிற் சிறக்க அருமையில்வைத்துஞ் சில விடங்களில் எடுத்துக் கூறுவர்.

கோங்கர் குலவரசர் கோடை

1. **கோவல்சூழ் பெண்ணை நாடன் கொங்கர்கோன் பாகை வேந்தன்
பாவலர் மானங் காத்தான் பங்கயச் செங்கை யென்ன
மேவல ரெமரென் ஞமல் வெங்களந் தன்னி னின்ற
காவலன் கன்னன் கையும் பொழிந்தது கனகமாரி.**

சோழனுடைய வெற்றி புலப்படுமாறு "வடமண்டலிகர் திறைவாரிய நேரியன்" என்றும், "எங்கு மொரு

குடையா லிடு நீழலன்" என்றும், "வென்றி வளவனை யார் நிகர்வரே" என்றுங் கூறுவர். பாண்டியனுடைய வீரம் புலப்படுமாறு "வானவர் முதல்வன் சென்னி வரி வளை யுடைத்து மீண்டோன்" என்றும், தமிழ் வளர்க்கும் பெருமை புலப்படுமாறு "முழுதுணர்ந்தருள் முனிவரன்புகன் மும்மை வண்டமிழும்-பழுதறும்படி தெளிந்தேறிய பலகை யொன்றுடையான்" என்றுங் கூறுவர். நாராயணமூர்த்தியின் தலைமை புலப்படுமாறு "சீதநாண் மலர்க் கோயின்மேவு செந்திருவினாயகன்-பூதநாயகன் விரதநாயகன் விபுதநாயகன்" என்றும், முத்தொழின் முதன்மையும் முற்றறிவும் நிறைவும் புலப்படுமாறு "ஞாதவுமுலகம் படைத்தளித்தழித்து ஞானமாயகிலமு நிறைவுற்று" என்றுங் கூறுவர். சிவபரத்துவம் புலப்படுமாறு "தன்னேர்வடிவிலொருகூறு தையலாளு முன்னோன்" என்றும், "ஓரேனந் தனைத்தேட வொளித்தருளு மிருபாதத் தொருவன்" என்றுங் கூறுவர். திருமங்கையாழ்வார் பெருமை புலப்படக் "கலியனெங்கண் மங்கையாதி" என்றும், திருஞானசம்பந்தர் பெருமை புலப்படுமாறு "கூறிய செஞ்சொலேடு குறித்தெதிர் கொண்டவையை" என்றுங் கூறுவர்.

வடமொழியிலுள்ள சங்கிருதி, பிரகிருதி, விகிர்தி முதலிய சந்தவகைகளையும், தத்திதம் அவ்வியயம் முதலிய சொல்வகைகளையும் பெரும்பாலும் பிரயோகிப்பர். "அண்டர் குலபதியாம் விடைவாகனன்" என்பது சங்கிருதி என்னும் சந்தம். குந்தி, யாதவி, யாதவி, மாருதி, ஆநிலி முதலியன தத்திதச் சொற்கள். ஆபாதம், அதவா முதலியன அவ்வியயச்சொற்கள். குந்தி என்பதிலே தத்தித விகுதி புணர்ந்து கெட்டுப்போயிற்று. கெடினும் புணர்ந்ததுபோனின்று குந்தி என்பது குந்திதேசராசன் எனவும், குந்திதேசராசன் பூமி எனவும், குந்திதேசராசன் மகள் எனவும் பொருள்படும். பெற்ற பிதாவாகிய சூரன் என்பவனாலே தத்தபுத்திரியாகக் குந்திபோசனுக்குக் கொடுக்கப்பட்டுக் குந்திபோசன் வீட்டிலே வந்து வளர்ந்த கார

ணைத்தாற் பாண்டவர் தாயுங் குந்தி என்னும் பேருடைய ளாயினுள்.

பாரதம்

2. புந்தியாற் கலைமகள் பொற்பினுற் பூந்திருப் புனைகற்பால்
அந்திவா யருந்ததி பெரும்பொறை யினிலவனிமானிக ரென்னக்
குந்திபோசனிற் சூரனென் பவன்மகள் குருகுலந் தழைத்தோங்க
வந்தி யாவரும் பிருதைபொன் நடிதொழ வளர்கின்றுள்.

சூரன் என்பவன் மகள் குந்திபோசன் இல் வந்து வளர்கின்ருள் என இயைக்க. சூரன் - வசுதேவன் மைந்தன். குந்திபோசன் - சாத்துவன் மகன். இல் - வீடு. பிருதை என்பது சூரனிட்ட பிள்ளைத்திருநாமம். "முன்னுரைத்திட்டசூரன் மொய்குழற் பிருதைதன்னைத்—தென்னுறு குந்திபோசன்றனக்குத் தெத்தெனவளித்தான்" என மச்சபுராணகாரருங் கூறுவர்.

வியாசபாரதத்திலுள்ள சில கதைகளை மிகச் சுருக்கிக் குறிப்பால் விளங்கும்படியும் பாடுவர். ஒருநாள் பசியினுல் வருந்தித் தன்பால்வந்த வியாசமுனிவரைக் காந்தாரியானவள் உணவு முதலியன கொடுத்து மகிழ்வித்த கதையை "ஆர்வமுற்றி" என்பதில் அமைத்துக் கூறுவர்.

பாரதம்

3. பூந்தார் வியாதமுனி தாளிணை போற்றி யன்பு
கூர்ந்தார் வமுற்றியவன் பால்வரங் கோட லெய்திக்
காந்தாரி நூறு மகவான கருப்ப மொன்று
வேந்தா தரிக்கத் தரித்தாள்வட மீனெ டொபபாள்.

ஆர்வம் முற்றி என்பதற்கு வியாசமுனிவருக்குப் பசிகாரணமாக எழுந்த வேட்கையை அன்ன பானுதிகள் கொடுத்து முடித்து எனப் பொருள் கொள்க. ஆதரித்தல்- விரும்பிப் புணர்தல். வடமீன் - அருந்ததி.

வடசொல்லன்றி வடசொற்றொடராக ஐந்தாறு சொற்கள் தொடர்ந்துநிற்கும் பிரயோகங்களுங் கூறுவர்.

அவை : "மானகவசவரராச துரியோதனன்" "பரதநாத வேதபரத்து வாசன்" "கபோல விகடகட கரிதுரகம பதாதியிரதம்" மாதவ யாதவ வாசவ கேசவ" முதலியன. இவர்க்குஞ் சகோதரர்க்குமுண்டாய தாயபாக வழக்கு, தாயபாகத்தாற் போர்பிரிந்தழிந்த பாண்டவர் நூற்றுவர் சரித்திரந் தெரிந்தால் ஒருபோது தணிந்துவிடும் எனக் கருதி அரசர் ஆஞ்ஞைசெய்தபடி இப்பாரதத்தைப் பாடினார் என்றுங் கூறுவர்.

பாரதம்

4. மன்னு மாமறை முனிவருந் தேவரும் பிறரும்
பன்னு மாமொழிப் பாரதப் பெருமையும் பாரேன்
மன்னு மாதவன் சரிதமு மிடையிடை வழங்கும்
என்னு மாசையால் யானுமீ தியம்புதற் கிசைந்தேன்.

இக்கவியோடுஞ் சிறப்புப்பாயிரத்தோடும் தாயபாகங் காரணமாகப் பாடுவித்தார் என்பது மாறுபாடுறும். பாரதப் பெரிமையாவது பாரதர் கதை கூறும் நூலின் பெருமை. பாரதராவார் பரதன் என்னும் பிரபல அரசனுடைய மரபிற் பிறந்த அத்தி, குரு, சந்தனு, வீட்டுமன், பாண்டு, திருதராட்டிரன், பாண்டவர், நூற்றுவர் முதலானோர். பரதனுவான் துட்டியந்தனுக்குச் சகுந்தலையிடம் பிறந்தவன். பாரதர் கதை கூறும் நூல் பாரதம் என்க.

பாரதப் பெருமையாவது எண்ணிலவாகிய புண்ணிய கதைகளையுடைமையும், வேதப்பொருளால் அலங்கரிக்கப்பட்டு விளங்குதலும், ஐந்தாம் வேதம் எனப்படுதலும், விநாயகர் ஏடாக மாமேரு வெற்பாக வங்கூர் எழுத்தாணி தன் கோடாக எழுதப் பெறுதலும், சகல சாத்திரங்களுக்கும் உபப்பிருங்கணமாதலும் பிறவுமாகிய பெருமை என்க. "மன்னு மாதவன்" என்புழி மாதவன் என்பதை மாது+அவன்=மாதவன் எனக்கொண்டு சிவசரிதமும் இடையிடை வரலாற் பாடினார் என்றும்,

அருணகிரிநாதர் சாபத்தால் இழந்த கண் பெறலே அதன் காரணம் என்றுங் கூறுவாருமுளர். நிற்க.

வடநூலார் சுலோகம் ஒன்றிற் சுருக்கிக் கூறிய பாரத மொழி பெயர்ப்புப் பாட்டினையும் படிப்பவர் பாரதகதையைச் சுருக்கி அறியும்பொருட்டுக் காட்டுதும்.

ஏகவிருத்த பாரதம்

ஐவர்நூற் றவர்க டோற்ற மரக்குமா ளிகையும் வேதல்
கைவரு சூதிற் றோல்வி கானகஞ் செலல் விராடன்
தெய்வநல் வீட்டில் வாழ்க்கை திகழ்கிரை மீட்டல் போர்க்கு
மெய்வெளி தூது நூறு வீரர்சா வைவர் வாழ்வே.

198. விளம்பிநாயனர்

இவர் பதினெண்கீழ்க்கணக்குள் ஒன்றாகிய நான்மணிக்கடிகை என்னும் நீதிநூல் செய்தவர். இதன்கண் இன்னிசைவெண்பாவும் நேரிசைவெண்பாவும் வரும். ஒவ்வொரு பாவிலும் இரத்தினத்துண்டம்போன்ற நான்கு பொருள் கூறலால் நான்மணிக்கடிகை எனப்பட்டது. கடிகை-துண்டம். இதன்கண் பலவகை நீதிகளையுங் கூறுவர். தனக்குத் துணைவேண்டினுல் தருமஞ் செய்க என்பர். வெல்ல விரும்பினுல் கோபம் விடுக என்பர். கொடுக்க விரும்பினுல் அன்னங்கொடுக்க என்பர். படிக்க விரும்பினுல் இளமையிற் படிக்க என்பர். இங்ஙனம் பல கூறுவர்.

நான்மணிக்கடிகை

1. மனைக்கு விளக்கம் மடவாண் மடவாள்
தனக்கு விளக்கந் தகைசால் புதல்வர்
காதற் புதல்வர்க்குக் கல்வியே கல்விக்
கோதிற் றகைசா லுணர்வு.

ஒரு வெண்பாவிலே நூல் பல கற்றலால் வரும் பயனைச் சாலவும் நுண்மைபெறக் கூறுவர். ஒருவன் நூல்

பல கற்பதனால் அவனுடைய மிக்க அறியாமை குறையும்; அறியாமை குறைதலால் அவன் புல்லறிவுநீங்கி இவ்வுலகியலின் பொய்மை மெய்மைகளை அறிவான்; அவையறியவே மெய்ந்நெறியிற் செல்லுவான்; அந்த மெய்ந்நெறியால் இங்கேபுகழை நாட்டிவிட்டுப் பின் அங்கேயுள்ள வீட்டுலகிற் புகுவான். வெண்பாவையும் கூறுதும்.

நான்மணிக்கடிகை

2. கற்பக் கழிமட மஃகும் மடமஃகப்
புற்கந்தீர்ந் திவ்வுலகிற் கோளுணரும் கோளுணர்ந்தாற்
றத்துவ மாய நெறிபடரு மந்நெறி
இப்பா லுலகத் திசைநிறீஇ யப்பால்
உயர்ந்த வுலகம் புகும்.

199. வீரகவிராசர்
(1516)

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள நல்லூர் என்றும், குலம் பொற்புலவர் குலம் என்றும், காலம் ஏறக்குறைய இற்றைக்கு நானூறு வருடங்களுக்குமுன் என்றும், இவர் காளி வழிபாட்டினர் என்றுங் கூறுவர். இவர் அரிச்சந்திரபுராணம் பாடினவர். அதனைப் புல்லாணித் திருமால் சந்நிதியில் அரங்கேற்றினவர்.

அரிச்சந்திரபுராணம்

செங்கோ லறத்தின் முறையே செலுத்து
திறலோ னெவர்க்கு முரவோன
வெங்கோப யானை விறன்மன்ன னெம்மை
விடுவிக்க வெண்ணி வருநாள்
பங்கே ருகத்து மலர்போல் விளங்கு
வதனு மகிழ்ந்த பரிவால்
எங்கேயெ னுசை மகனென் றுரைக்கின்
இனியேது சொல்வன் மகனே.

200. வீரமாமுனிவர்

(1680—1746)

இவர் தத்துவபோதகசுவாமி எனவும், தைரிய நாதசுவாமி எனவுஞ் சொல்லப்படுவர். இவரூர் மேலைத் தேசத்துள்ள இத்தாலி. சமயம் கத்தோலிக்க சமயம். காலம் இற்றைக்கு நூற்றெழுபது வருடங்களுக்கு முன் என்பர். இவர் பரதகண்டத்தின் தென் பாகத்திலுள்ள தமிழ்நாட்டில் 1708-ம் ஆண்டில் வந்து திரிசிரபுரம், காயற்பட்டணம் முதலிய நகரிகளிலே வசித்தவர். மேலைத்தேச பாஷைகளுள்ளும் பரதகண்ட பாஷைகளுள்ளுஞ் சில சில பாஷைகள் கற்றுணர்ந்தவர் என்பர்.

தமிழ்ப் பாஷையிலே பலவகை இலக்கியங்களையும், இலக்கணங்களையும், வேறு நூல்களையுங் கற்றவர். நூலுரைகள் செய்யுந் திறமுமுடையவர். எழுத்து, சொல் முதலிய பஞ்சலக்கணங்களையும் விளக்கித் தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கண நூலும், திவாகரம் முதலிய நிகண்டுச் சொற்களையும், வேறு சொற்களையுங் கூட்டிப் பெயரகராதி முதலிய வகைகளுங் காட்டிச் சதுரகராதி என ஓர் ஆபிதாநிக நூலுஞ் செய்தவர். அவிவேகபூரணகுரு கதை என்பது இவரியற்றிய வசன நூலாகும்.

இவையன்றிக் கதலிக சமயச் சார்பாய்த் தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம், வேதியரொழுக்கம், வேதவிளக்கம், அடைக்கலமாலை முதலிய நூல்களுஞ் செய்தவர். இவர் தமிழ்நாட்டில் மணற்பாறை என்னுமிடத்தில் காலகதியடைந்தார்.

தேம்பாவணி

மருடரு வலியுருவே மருளறு சினவுருவே
அருடரு தயையுருவே யளவறு திருவுருவே
தெருடரு கலையுருவே செயிரறு மனுவுருவே
பொருடரு மணியுருவே பொழிமண வடிதொழுதேன்.

201. வெள்ளிவீதியார்

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள மதுரைமா நகரம். கடைச்சங்கப் புலவருள்ளே ஒருவர். கணவனைப் பிரிந்திருந்தவர். திருவள்ளுவமாலையிலும் ஒரு செய்யுள் செய்தவர். நற்றிணை குறுந்தொகைகளிலுஞ் சில கவிகள் செய்தவர்.

குறுந்தொகை

காலே பரிதப் பினவென் கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத் துப் பிறரே

202. வென்றிமாலைக்கவிராசர்

இவரூர் பாண்டிமண்டலத்துள்ள திருச்செந்தூர். குலம் வேதியர் குலம். சமயம் சைவம். இவர் வரகவி எனவும்படுவர். திருச்செந்தூர்ப் புராணம் என்னும் பிரபந்தஞ் செய்தவர். புராணத்திலே சில கவிகளிலே மடக்குஞ் சிலேடையும் வரலாலும், சிலேடை ஒன்றிலே காசு, நாள், மலர், பிறப்பு என்னும் யாப்பிலக்கண வாய்பாடு வரலாலும் இலக்கணந் தெரிந்தவர் என்பது அநுமானிக்கப்படும்.

திருச்செந்தூர்ப்புராணம்

ஆசின் மிக்கமென் மதுரமாய்ச் சித்திரத் தளவி
ஓசை பெற்றுவித் தாரமா யைந்திணை யுடன்று
காசு நாண்மலர் பிறப்புடன் காட்டிமெய்க் கலசப்
பூசு ரன்றமி ழொத்தது வித்தகப் பொருநை.

203. வேதகிரிமுதலியார்

(1856)

இவரூர் தொண்டை மண்டலத்துள்ள களத்தூர். குலம் வேளாளர் குலம். காலம் ஏறக்குறைய இற்றைக்கு அறுபது வருடங்களுக்கு முன் என்பர். இவர் இராமாநுச கவிராயருக்கு மாணவகர். இலக்கிய லக்கணங்கள் நன்கு கற்றவர். யாப்பருங்கலக் காரிகை, நாலடியார் முதலியவைகளைப் பரிசோதித்து அச்சிட்டவர். பாடுந் திறமுமுடையவர். நீதி சிந்தாமணி, மநுநீதி சதகம் முதலிய நூல்களுஞ் செய்தவர் என்பர். உதயதாரகைப் பஞ்சிகை முதலாம் புத்தகம் முதலியவைகளிலே இலக்கணக் களஞ்சியம், இலக்கியக் களஞ்சியம் முதலிய பல விடயங்கள் எழுதினவர்.

இலக்கணக் களஞ்சியத்திலே அகத்தியம், தொல்காப்பியம், இலக்கணத் திரட்டு, பிரபந்ததீபம், கவிசாகரம், குவலயானந்தம், அரியவிதி, மயேச்சுரம், அவனியம், பஞ்சலட்சணப் பயன் முதலிய இலக்கணங்களிலிருந்து பல சூத்திரங்கள் எடுத்து எழுதினவர். இலக்கியக் களஞ்சியத்திலே ஆசிரிய நிகண்டு, கயாகர நிகண்டு, பொதிய நிகண்டு முதலிய நிகண்டுகளும் பிறவும் எடுத்து எழுதினவர். அவற்றுள்ளே கற்பவர்பொருட்டு அரியன சில காட்டுதும்.

அகத்தியம்

பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
வினைநிலை யுரைத்தல் வினாவிற் கேற்றல்
பண்பு கொளவருதல் பெயர்கொள வருதல்
என்றிவை யனைத்தும் பெயர்ப்பய னிலையே.

இது பயனிலையிலக்கணங் கூறுஞ் சூத்திரம். பெயர்-எழுவாய். உ-ம். பசு இது; பொருண்மை சுட்டல். பசு வாழ்க. வியங்கொள வருதல். பசு வந்தது; வினை நிலையுரைத்தல். பசு யாது? வினாவிற்கேற்றல். பசு வெள்ளை; பண்புகொள வருதல். பசு நான்கு; பெயர் கொள வருதல்.

இலக்கணத்திரட்டு

தலைமாணுக்கன்

1. *தலைமா ணுக்கன் றனக்கோ தியபொருள்*
பொற்கலத் தமுதம் பொழிந்தது போலுமே.

இடைமாணுக்கன்

2. *இடைமா ணுக்கற் கீந்த நற்பொருள்*
தேனொடு கீர்சமஞ் சேர்த்தற் றுமே.

கடைமாணுக்கன்

3. *கடைமா ணுக்கன் காதுறப் புகல்பொருள்*
கமரினு ளான்பால் கவிழ்த்ததை யொக்கும்.

பண்புந்தொழிலும்

4. *இஉ ஐம்முத லேறிய மெய்கள்அம்*
அர்அல் விகுதி குணந்தொழிற் பெயர்க்குமாம்.

இ ஏறிய மெய் விகுதிகள்

இ ஏறிய மெய்விகுதிகள் சி, தி, வி முதலியன. அவைகட்குப் பண்புப் பெயரில் மாட்சி, நன்றி முதலி

யனவும், தொழிற்பெயரில் புணர்ச்சி, மறதி முதலியன வும் உதாரணங்களாய் வரும். எல்லா விகுதிகளும் இரண்டுக்கும் வருவனவல்ல. ஏற்புழி அறிந்துகொள்க.

உ ஏறிய மெய் விகுதிகள்

உ ஏறிய மெய்விகுதிகள் கு, சு, து, பு முதலியன. அவைகட்கும் பண்புப் பெயரில் நன்கு, சேது, நன்று முதலியனவும், தொழிற் பெயரில் போக்கு, பாய்த்து, வளர்ப்பு முதலியனவும் உதாரணங்களாய் வரும்.

ஐ ஏறிய மெய் விகுதிகள்

ஐ ஏறிய மெய்விகுதிகள் கை, மை, வை முதலி யன. அவைகட்குப் பண்புப் பெயரில் செம்மை, மழவை முதலியனவும், தொழிற்பெயரில் வருகை, பொறுமை முதலியனவும் உதாரணங்களாய் வரும்.

அம் என்னும் விகுதிக்குப் பண்புப் பெயரில் நலம், திண்ணம் முதலியனவும், தொழிற் பெயரில் கூட்டம், வாட்டம் முதலியனவும், அர் என்னும் விகுதிக்குப் பண் புப் பெயரில் நன்னர் என்பதும், அல் என்னும் விகு திக்கு வாடல், பாடல் முதலியனவும் உதாரணங்களாய் வரும்.

இன்மை நன்மை

5. அ அந் நிர் தர் அபஅவ நிருமொழி
ஆதிக் கின்மையாஞ் சத்சு நன்மையாம்.

இ-ள்; அ முதலியன சொல்லின் முதலிலே இன்மை என்னும் பொருளை உணர்த்தி நிற்கும். சத், சு என்னும் இரண்டும் நன்மை என்னும் பொருளை உணர்த்தி நிற்கும் என்க. இவை வடமொழி. உதாரணம்

அமலம், அநசனம், நிர்க்குணம், துர்க்கீர்த்தி, அபநயம், அவமானம், நிருமலம், சற்குணம், சுகுணம் என வரும்.

உயிர்ப்பொருள்

6. உயிர்ப்பொரு ளுயிரிலாப் பொருளிரு வகைய
ஊருதல் பறத்த னடத்த லெனவே
மூவகை யாகு முயிரினப் பொருளே.

உயிரிலாப்பொருள்

7 இயற்கை செயற்கை யிருவகை யினமும்
உயிரிலாப் பொருளென றுரைத்தனர் புலவர்.

சவலைவெண்பா

8. இருகுறள் சவலை யொருவிகற் பாகும்.

(இ - ள்.) தனிச்சொலின்றி இரு குறள்வெண்பா அமைந்து வருவது சவலை வெண்பாவாகும். அது விகற்பம் ஒன்றாகி வரும். விகற்பம் - எதுகை வேறுபாடு.

உதாரணம்

அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலு நண்பல்லர் நண்பல்லர்
கெட்டாலு மேன்மக்கண் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

பிரபந்ததீபம்

1. வினவும் விடையும் விரவியோர் செய்யுளிற்
காட்டல் சல்லாபக் கவியென் றாகும்.

சல்லாபம் வினவும் விடையுங் கூடியது. முன் சொன்ன பரஞ்சோதி முனிவர் சரித்திரத்தில் வரும் "கறுத்ததையெவன்" என்னுங் கவி இதற்கு உதாரணமாகக் கொள்ளற்பாலது.

சீட்டுக்கவி

2. சீட்டுக் கவிதைனச் செப்பு மிலக்கணம்
தெய்வ வணக்கமுந் தேசிக வணக்கமும்
தன்பெரும் புகழ்ச்சியுந் தலைவன் புகழ்ச்சியும்
எய்த வாசிரிய விருத்தத் தியம்பலே.

தீட்டுக்கவி என்பதே தகரசகர வொற்றுமைபற்றிச் சீட்டுக்கவி என வழற்கிற்று என்பது சிலர் கருத்து. தீட்டு - எழுதப்படுவது. தேசிகன் - குரு. தலைவன் - பாடப்படும் பிரபு.

சமுத்திரகவி

3. சொன்ன வெழுத்தினுஞ் சொன்ன பொருளினும்
அந்நிலை தன்னி லிருவகைப் பொருட்கும்
முன்னிய கருத்து முடிவுறப் பாடல்
சமுத்தி யென்று சாற்றுவ ரதுவே
கொடுத்த பொருளெல்லாங் குறைபா டின்றித்
தொடுத்த யாப்பிற்றுய்த் தகளற நிற்றலே.

சமுக்தி என்னும் வடமொழி சமுத்தி எனத் தற்பவ மாயிற்று. சமுத்தி - நன்கு சொன்னது. சுருக்கமாகச் சொல்வது. வடநூலார் சமசியை என்றதும் இதனையே யாம். சமசியையாவது பாடுவோன் முட்டுறும்படி இதனை வைத்துப் பாடுக என எழுத்து, சொல், அடி முதலியவற்றுட் கொடுக்கப்படும் ஒன்று. சமுச்சை எனவும் வழங்குவர். எழுத்துஞ் சொல்லுஞ் கொடுக்கப் பட்டுப் பாடியதற்குச் சிவப்பிரகாச சுவாமிகளுடைய "குடக்கோடு" என்னும் விருத்தத்தையும், பொருள் கொடுக்கப்பட்டுப் பாடியதற்குப் பொய்யாமொழிப் புலவருடைய "பொன்போலுங் கள்ளிப்பொறி" என்னும் வெண்பாவையும் உதாரணமாகக் கொள்க. அவைகள் முன்னர்க் காட்டப்பட்டன.

கவிசாகரம்

கட்டளைக்கலித்துறை

1. முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையா
கடைச்சீ ரொன்றும் விளங்கா யுடைத்தாய்
நேர்பதி னாறு நிரைபதி னேழுமாய்க்
கடையேக் கொண்டிறுங் கட்டளைக் கலித்துறை.

திருக்குக்கவி

2. ஈரெழுத்து முதலா வீரா றெழுத்தினும்
ஓரடி போல நான்கடி தன்னிலும்
முதலெழுத்து வேறு மொழிவது திருக்கே

(இ - ள்) நான்கடிகளிலும் முதலெழுத்து வேருய் நிற்க இரண்டு எழுத்து முதலாகப் பன்னிரண்டு எழுத்துக்களுள்ளே ஓரடிபோல எழுத்துக்கள் வருப்படி பாடப்படுங் கவி திருக்குக்கவி எனப்படும். எ - று. இதனைத் திரிபு எனவுஞ் சொல்லுவர். திருக்குக் கவிகளைப் புகலூரந்தாதி, மறைசையந்தாதி முதலியவைகளிற் காண்க. புகலூரந்தாதியில் ஒன்று காட்டுதும்.

புகலூரந்தாதி

நோக்க மருக்கும் விழிச்செல்வர் பாற்கவி நூறுரைத்துத்
தாக்க மருக்கு முருகா வருளென்பர் தன்செருந்தி
பூக்க மருக்குல வும்புக லூரரைப் போற்றியுய்யார்
பாக்க மருக்குகுத் தென்கொல்சொல்சொல் வாணர் பரிவிதவே.

(இ—ள்) நோக்கம் - பார்வை. அருக்கும் - குறைக்கின்ற. தாக்கு அமருக்கு. மரு - பரிமளம். கமருக்கு - நிலப் பிளப்புக்கு. உகுத்து - சொரிந்து எ—று.

இக்கவியிலே நான்கடியிலும் முதலா மெழுத்து வேருய் நிற்க, இரண்டாம் எழுத்து முதல் ஆரும் எழுத்துவரையும் ஓரடிபோல எழுத்துக்கள் வருதல் காண்க.

யமகக்கவி

3. ஈரெழுத்து முதலா வீரைந் தெழுத்தினும்
ஓரடி போல நான்கடி யுரைத்தல்
யமக மென்றே யறைந்தன ரறிஞர்.

(இ—ள்) இரண்டெழுத்து முதலாகப் பத்தெழுத்துக்களுள்ளும் நான்கடியும் ஓரடிபோல வரப் பாடும் கவி யமகக்கவி எ—று.

யமகம் - முன்வந்த எழுத்துக்கள் வேறு பொருளிலே பின்னும் வருவது. யமகத்தைத் தண்டியாசிரியர் நான்கடியும் முதன் மடக்கு என்பர்.

மதுரையமகவந்தாதி

வையம் படைத்த மலரோன் வலாரி வலக்கையின்மேல்
வையம் படைத்தனி யாழிப் பிரானுவழி வந்துதன்மேல்
வையம் படைத்த மதனைவென் றான்மதிற் கூடல்பெற்றால்
வையம் படைத்தகை வாம்பரி பொங்குங்கைம் மாவருமே.

(இ—ள்) வையம் - பூமி. வலாரி - இந்திரன். வை - வைத்த. அம் - அழகு. ஆழி - சக்கரம். வை - கூர்மை. அம்பு அடைத்த - அம்பை அடைவித்த. வையம் - தேர். படை - காலாள். கைம்மா - யானை என்க.

இக்கவியிலே முதலாம் எழுத்துத் தொடங்கி ஏழாம் எழுத்து வரையும் நான்கடியும் ஓரடி போல வருதல் காண்க.

குவலயானந்தம்

இலக்கணமு மிலக்கியமும்

1. இலக்கணக் கருத்தே யிலக்கிய மறிநெறி
இலக்கிய மென்ப திலக்க ணத்தினைத்
தந்நெறி யானே யமைவ தென்ப.

கருத்து

2. பொருளென நல்லோர் புகல்வது கருத்தே
கருத்தெனப் பெறுவதைத் தொகைவகை விரியாற்
சொல்லிப் பயனைத் தோற்றுவ தேபொருள்.

தொகையி னிலக்கணம்

3. பொதுமொழி பிண்ட மெனவே கருத்தைப்
புகலப் பெறுவது தொகையென வறையும்.

(இ—ள்) தொகையாவது பொதுமொழியாகவும் பிண்டமாகவுங் கருத்தினைச் சொல்வது என்க.

பொதுமொழியாவது ஒரு பெயராய்ப் பலபொருட்குப் பொதுவாய் வைக்குஞ் சொல். அது தலைமையும் பன்மையும்பற்றி வரும். பிறர் சரிதமு முளவாயினும் மார்க்கண்டேயப்படலம் என்றது தலைமை பற்றிய பொதுமொழி. பதம் முதலிய பிறிது முளதாயினும் எழுத்ததிகாரம் என்றது பன்மைபற்றிய பொதுமொழி. நன்னூலாரும் "விரவிய பொருளாற் பொதுமொழி தொடரி னதுபடலமாகும்" என்பர்.

இங்ஙனமே சூத்திரம், நூல், கவி முதலியவற்றின் முகப்பிற் பெயராய் இட்டுக்கொள்ளும் பொதுமொழி களும் அவற்றின் கருத்தைச் சுருக்கி விளக்கும் என்க. "அ இ உத் தனிவரிற் சுட்டே" என்னுஞ் சூத்திரத்தின் தலையிற் சொல்லும் பெயராகிய சுட்டு என்னும் பொதுமொழியானது அச்சூத்திரத்திற் சொல்லக் கருதிய கருத்தைச் சுருக்கி விளக்குதல் அறிக. சூத்திரங்களின் முன் சுட்டு, வினா என்பனபோலப் பெயர்கூறிப் போதலே பொதுமொழியாகக் கருத்துரைத்தல் என்க.

பிண்டமாவது பலவற்றையும் திரட்டிக் கூறுவது.

வகையி னிலக்கணம்

4. *சருத்தின் விரிவைக் கற்றோர்க் கினிதாய்*
வகுத்துக் காட்டல் வகையென வறையும்.

விரிவி னிலக்கணம்

5. *இலக்கிய வழக்க முடனே கருத்தின்*
விதப்பி னுரைப்பது விரிவா கும்மே.

மிஞ்சுகரு

6. *விதாரண சௌரிய மெனும்வினை மொழியாற்*
பொய்த்தோற் றம்பெறக் கூறிடி னதனை
மிஞ்சு கருவென விளம்பினர் புலவர்.

(இ—ள்) கொடையும், வீரமும் எனப்படுஞ் செயல்கள் சொல்லும் வகையினாலே போலியாகத் தோன்றும்படி சொல்லப்படுமாயின் அதனை மிஞ்சுகரு என்று புலவர் சொல்லினர் *எ—று.*

விதாரணம் - கொடை. சௌரியம் - வீரம். மிஞ்சு தல் - மிகுதல். கரு - காரணம்.

வாதக் கருப்பொருள்

7. *பிரமாணம் பிரமேய மையங் காரியம்*
நிதர்சனஞ் சித்தாந்த மவயவந் தர்க்க நிர்ணயம்
ஆபாசம் விதண்டஞ் சலகிக் கிரகம்
வாதஞ் செற்பஞ் சாதி யெனும்பதி
னாறும் வாதக் கருப்பொரு ளாமே.

1. பிரமாணமாவது பொருள்களை அறிவினாற்ற லால் அளந்து அறிதற்குக் கொள்ளும் அளவைக்கருவி. அது காண்டல், கருதல், உரை முதலியனவாகும்.

2. பிரமேயமாவது காண்டல் முதலிய அளவைக் கருவிகளால் அளந்தறியப்படும்பொருள். அது ஆன்மா,

உடம்பு, இந்திரியம், அர்த்தம், புத்தி, மனம், பிரவிருத்தி, தோடம், பிரேத்தியபாவம், பலம், துக்கம், வீடு எனப் பன்னிரு வகைத்து.

ஆன்மாவாவது அறிவிற்கு இடனுயுள்ளது. அது சீவாத்துமா, பரமாத்துமா என இருவகை. உடம்பு உயிரின் போகத்திற் கிடனுயுள்ளது. அது அண்டசம் முதலிய நால்வகை யுடையது. இந்திரியம் மெய் வாய் முதலியன. அர்த்தம் பிருதிவி, அப்பு முதலியன. புத்தி அறிவு. மனமாவது சுகம் முதலிய அநுபவிக்குங் கருவியாகிய இந்திரியம். பிரவிருத்தியாவது தொழிற்பாடு. தோடம் - குற்றம். அது காமம், வெகுளி, மயக்கம் என மூவகை. பிரத்தியேகம் மறுபிறப்பு

3. ஐயமாவது பலவிதமான அறிவு.

4. காரியமாவது சுகம் முதலிய பயன்.

5 திருட்டாந்தம் துணிவுக்கு அநுகூலமாகக் கொள்ளப்படும் பொருள். திருட்டாந்தம் காணப்பட்ட முடிவு.

6. சித்தாந்தமாவது பிரமாண முடைமையால் அங்கீகரிக்கப்பட்ட பொருள். சித்தாந்தம் - சித்தித்த முடிவு.

7. அவயவமாவது வழியளவையின் உறுப்புக்களாகிய பிரதிஞ்ஞை முதலியன.

8. அர்த்தமாவது நெருப்பில்லையாயிற் புகையுமில்லை என்பது போன்ற பிறழ்ச்சி யுணர்வு. தர்க்கம் - ஆராய்வு.

9. நிர்ணயம் - நிச்சயமான அறிவு.

10. ஆபாசமாவது மெய்போலத் தோன்றும் போலியேது. அது அசிதம் முதலியன. ஆபாசம் - போலி.

11. விதண்டமாவது தன்பக்கத்தை நிறுத்தாது எதிரிபக்கத்தை மாத்திரம் மறுத்துரைக்கும் விவாதம்.

12. சலமாவது ஒரு பொருள் கருதிச் சொன்ன சொற்கு வேறுபொருள் படைத்துக்கொண்டு பழித்தல்.

13. நிக்கிரகமாவது தோல்விக்குக் காரணமான நிலை. அது மேற்கோளழிவு, வேறுமேற்கோள் முதலியன.

44. வாதமாவது மெய்யறிய விரும்பிய இருவர் தம்முட்கூறும் வினுவிடை.

15. செற்பமாவது பிறன்மதம் மறுக்கும் வாயிலாகத் தன்மதம் நிலைபெறச் சொல்லும் வார்த்தை.

16. சாதியாவது தனக்குக் கேடு பயப்பதாய்ப் பிறனுக்கு நயம் பயக்கும் போலி யுத்தரம்.

இப்பதினறும் வாதி, பிரதிவாதி என்னும் இருவரும் வாதஞ்செய்தற்கண் அறியப்படும் கருப்பொருள் என்க. கருப்பொருள் - காரணமான பொருள், உட்பொருள். இந்தப் பதினறு பொருள்களையும் நியாய சூத்திரம் முதலிய தருக்க நூல்களுட் காண்க.

அரியவிதி

பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழில்வினை
இடையுரி யொன்பது மேற்கு மடுக்கே.

உதாரணம்; 1. பொருள், பாம்பு பாம்பு. 2. இடம், வீடு வீடு. 3. காலம், விடியல் விடியல். 4. சினை, கை கை. 5. குணம், நன்று நன்று. 6. தொழில், செய்யாமை செய்யாமை. 7. வினை, பாடுவான் பாடுவான். 8. இடை, ஏ ஏ. 9. உரி, சிவ சிவத்த.

மயேச்சுர சூத்திரம்

அகவல் வெண்பா வடிநிலை பெற்றுச்
சீர்நிலை பெறாஉந் தொடைநிலை தெரியாது
நடைவயி னோடி செய்வார்ந் தன்ன
நலமுடைத் தாகிய பொருளொடு புணர்ந்த
எழுத்தறி யாதே யியலுமென் றிசைப்பர்,

பூதபுராண விலக்கணம்

அகப்பா வகவலில் வஞ்சிக் குரிய வடியிரண்டும்
புகப்பான் மையவல்ல வெண்பர்தொல் லோர்கள் புகரில்வஞ்சி
அகப்பாப் பொருளணை யசவெண்ப நாவல ராற்கருதிப்
புகப்பான் மையுமொரு சார்புல வாணர் புகன்றனரே.

இலக்கியக் களஞ்சியம்

கயாகரநிகண்டு

பரிதி யாதித்த னிமகரன் பதங்கன் பனிப்பகை விண்மணி யென்றாழ், அருணன்மார்த் தாண்டன் பாற்கரன் கதிரோ னுயிரங் கதிரினன் றபனன், இருள்வலி சண்டன் சூரியன் மித்திரனெல்லியம் போருக நண்பன், தருமொழி வேந்தன் சூரனே சவிதா தரணிகன் சுடரவ னென்பார்.

ஏகபாதநிகண்டு

அத்திரி யொட்டகம் விண்ணுங் கருணையு மாகுமென்பர்
அத்திரி மாவும் வரையுங் கழுதையு மாகுங்கண்டாய்
அத்திரி திக்கயந் தன்னுடனே மிக்க வஞ்சனமாம்
அத்திரி தானுங் கறுப்புமென் றோதுவ ரான்றவரே.

போதியநிகண்டு

பொன்னி னிலக்கணம்

தட்டுநீட் டுக்குற றணவினின் றுருகல் தன்னெடை குறைதவில் லாமை, கொட்டு கடினமின் மையா ணிக்குக் கூறுமாற் றறிவித்தல் சோதி, விட்டுவிட் டொளிர்தல் மிருபடத் திருத்தல்

வெவ்வழல் வென்றியைக் கொள்ளல், கட்டிசாய்த் திடுகிற் பன்
ளங்கொண் டதிக கனங்கொளல் கனகலக் கணமே.

ஔவை நிகண்டு

பதினறுவகைவாசப்பொருள்

ஏலந்தக் கோலஞ் சூட னிலவங்கஞ் சாம்பி ராணி
காலஞ்செல் லகில்சந் தோங்கு கத்தூரி பளுகு மௌவல்
கோலமார் மருக் கொழுந்து வெட்டி குங்கும மிலாமிச்சம்வேர்
சாலுஞ்சண் பகஞ்சவ் வாது சாற்றுஞ் சோடசவா சப்பேர்.

204. வேதநாயகம்பிள்ளை

(1824 — 1889)

இவரூர் சோழ நாட்டிலுள்ள திரிசிராப்பள்ளிக் கருகிலுள்ள வேளாண்குளத்தூர். இவருடைய பிற்கால வாசஸ்தானம் மாயவரம். சமயம் கத்தோலிக்க கிறீஸ்தவ சமயம். இவர் அரசாங்கத்தில் 'முன்சீப்' உத்தியோகத்தில் இருந்தவர். இவர் மீனாக்ஷி சுந்தரம்பிள்ளைக்கு மாணவகர். இவர் சர்வசமய சமரசக் கீர்த்தனை, நீதிநூல் பெண்மணிமாலை முதலிய செய்யுள் நூல்களும், பிரதாப முதலியார் வரலாறு, சுகுணசுந்தரி வரலாறு என்னும் கட்டுக்கதைகளும் இயற்றியுள்ளார். நகைச்சுவை ததும்பும் அநேகம் தனிப் பாடல்களும் இவரால் இயற்றப்பட்டுள்ளன.

சுப்பிரமணியதேசிகர்மீது பாடியது

சூர்வந்து வணங்கு மேன்மைச் சுப்பிர மணிய தேவே
நேர்வந்து நின்னைக் கண்டு நேற்றிராத் திரியே மீண்டேன்
ஊர்வந்து சேர்ந்தே னென்ற னுளம்வந்து சேரக் காணேன்
ஆர்வந்து சொலினுங் கேளே னதனையிங் கனுப்பு வாயே.

205. வேலையசுவாமி

(1720)

இவர் சிவப்பிரகாச சுவாமியுடைய சகோதரர், வெள்ளியம்பலத் தம்பிரானுக்கு மாணவகர். இலக்கண லக்கியங் கற்றவர். நல்லூர்ப் புராணம், வீரசிங்காதன புராணம் முதலியவைகளையுஞ் சீகாளத்திப் புராணத்துப் பின்னிரு சருக்கங்களையும் பாடினவர்.

சீகாளத்திப்புராணம்

பின்னவரு முன்னவரும் பேசு கதைநிரம்பத்
தன்னைநிகர் காளத்தி தன்னில்வாழ்—முன்னவவென்
னெஞ்சந் தியங்காம னீயென் னுளத்திருந்தே
அஞ்சந்தி யானே யருள்.

206. வைத்தியநாத தேசிகர்

(1696)

இவரூர் சோழமண்டலத்துள்ள திருவாரூர். குலம் அபிடிக்தர் குலம். சமயம் சைவம். காலம் இற்றைக்கு இருநூற்றிருபது வருடங்களுக்கு முன் என்பர். இவர் வன்மீகநாத தேசிகர்க்கு மைந்தர். படிக்காசுப் புலவர்க்கு ஆசிரியர். தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும் சங்கச் சான்றோரிலக்கியங்களையும் நன்கு கற்றவர். எழுத்து, சொல் முதலிய ஐந்திலக்கணங்களையும் அமைத்துக் கூறிச் சூத்திரமுமுரையுமாக இலக்கணவிளக்கம் என்னும் இலக்கணமும், திருவாரூர்ப் பன்மணிமாலை, நல்லூர்ப் புராணம், மயிலம்மை பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்களுஞ் செய்தவர். இலக்கண விளக்கத்திலே எழுத்தும், சொல்லும் தொல்காப்பியத்துள்ள எழுத்துச்

சொல்லையும் நன்னூலையும், பொருளிலே அகப்பொருள் நம்பியகப்பொருளையும், புறப்பொருள் தொல்காப்பியப் புறப்பொருளையும், அணி தண்டியலங்காரத்தையும், யாப்பு, யாப்பருங்கலக்காரிகையையுந் தழுவிப் பெரும்பாலும் வேறுபாடின்றி வருதல் அறிவார்க்கு நன்கு புலப்படும். சில சூத்திரங்களிலும் உரைகளிலும் சிலசில பாகங்களை அவற்றினின்று படியெடுத்துங் கூறுவர்.

உரையிலே நற்றிணை, குறுந்தொகை, அகம், புறம், நாலடி, நான்மணி, சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய வற்றிலிருந்து பல செய்யுள்கள் உதாரணமாகக் காட்டுவர். அகத்திணையிலே திருக்கோவை, வாணன்கோவை, கப்பற்கோவை முதலிய பல கோவைகளுங் காட்டுவர், சில நூற்களுக்குப் பெயருங் கூறுவர். இறையனாரகப் பொருளுரை, பரிமேலழகருரை முதலியவைகளையுஞ் சிலவிடங்களில் எடுத்துச் சேர்ப்பர்.

கப்பற்கோவை

காவைப் பொருவுசெங் கைக்கரு மாணிக்கன் கப்பல் வன்னிக்
கோவைப் பொருசெய்ய வேற்கொற்ற வாகின் குறைநயந்து
மாவைக் குளிர்நிழ லாக்கிய வென்னை மறப்பினுமென்
பூவைக்கு நல்லுயிர் நீயுடம் பேகொண்டு போகின்றதே.

பாண்டிக்கோவை

பெருந்தா மரைப்பதம் போற்றிநிற் பார்பிற விப்பிணிக்கு
மருந்தா கியபெரு மான்மது ரேசர் வரையிலிந்தக்
கருந்தாரை வேற்கண்ணிக் கென்னகண் மாயங் கலந்தவண்டர்
அருந்தா வமுதருந் தப்புகுந் தாலு மருந்திலளே.

திருவாரூர்ப்பன்மணிமாலை

காவா யெனச்சிறு தெய்வந் தனைத்தினங் கைதொழுது
நாவாய் தழும்பப் புகழ்ந்தென் பயன்கதி நாடினமும்மைத்
தேவாயத் தேவிற்குங் கோவாய் மணிப்பொற்சிங் காதனஞ்சேர்
பூவாய் மதிக்கண்ணி யாரூர்ப் பிரான்பதம் போற்றுமினே.

207. வைத்தியநாத முனிவர்
(1616)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள அளவெட்டி. பிற்கால வாசம் சிதம்பரம். குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். காலம் ஞானப்பிரகாச முனிவர் காலம் என்பர். வடமொழி தென்மொழிகளில் வல்லவர் என்றுங் கூறுவர். கவிபாடுந் திறமுடையவர். மடக்குத் திருக்கு முதலியனவும் பாட வல்லவர். வியாக்கிரபாத மான்மியத்தைத் தமிழிற் பெயர்த்து வியாக்கிரபாதபுராணம் எனப் பாடினவர்.

வியாக்கிரபாதபுராணம்

1. மாதங்க வரைவி லேந்தி மாலம்பாற் புரங்க ளெய்த
மாதங்க மொருபா லுற்ற வானவன் மைந்தன் வாழும்
மாதங்க மார்பி னன்றன் மருகனுன் மங்கை முக்கண்
மாதங்க முகத்தி னன்றன் மலர்ப்பதம் வழுத்து வாமே.

மாதங்கவரை - மேரு. மாது அங்கம். மா தங்கு அமார்பினுன் - விட்டுணு. நான்ம் அங்கை - தூங்கிய அழகிய கை. நாலும் என்பது "செய்யுமெண்" என்னுஞ் சூத்திர விதிப்படி உகரம் நீங்கலகரம் னகரமாகி நான்ம் என நின்றது. மாதங்கம் - யானை;

நடராசர்

2\. ஏதமில் கார ணத்தாற் சராசர மெவையுமாகி
ஆதியாய் நடுவா யீரு யநாதியா யருளா யோங்குஞ்
சோதியோர் வடிவ மாகிச் சுரர்தொழச் சுடர்சேர் பொன்னின்
போதமார் சபையு ளாடும் புனிதனைப் போற்றல் செய்வாம்.

208. வைத்தியலிங்கப்பிள்ளை
(1852—1901)

இவரூர் யாழ்ப்பாணத்துள்ள வல்லிபட்டித்துறை. சமயம் சைவம். காலம் ஏறக்குறைய இற்றைக்குப் பதினைந்து வருடங்களுக்கு முன். இவர் சிவசம்புப் புலவருக்கு மாணவகர். இலக்கியலக்கணங்கள் கற்றவர். சிந்தாமணி நிகண்டு முதலிய நூல்களும், கந்தரலங்காரவுரை முதலிய உரைகளுஞ் செய்தவர். சைவமகத்துவத்துக்கு மாறாயெழுந்த சைவமகத்துவ திமிரபானு முதலிய கண்டனங்களையெல்லாம் சைவமகத்துவபானு முதலிய நூல்களாற் கண்டித்தவர். உதயபானு முதலிய பத்திரிகைகளிலுஞ் சில விடயங்கள் எழுதினவர்.

சிந்தாமணிநிகண்டு

சீர்செறி செஞ்சடைக்கட் டிகழ்மதிப் பிளவு தாங்கும்
ஏர்செறி கரிமுகன்ற னிணைமல ரடியை யேத்தி
நேர்செறி யிளைஞ ரோர்சொற் கொருபொரு ணோராயோரப்
பார்செறி நிகண்டுசிந்தா மணியெனப் பகர்வ னென்றே.

சுருக்கியும் விரித்துங் கவியொடு பெயர்மாத்திரையு மாக எடுத்துக் கூறற்குரிய புலவர்கள் சங்கப்புலவருள்ளும் மற்றைப் புலவர்களுள்ளும் பலருளர். அவர் நாமங்களுள்ளுஞ் சில கூறுவாம்:

சங்கப் புலவர்

அகம்பன்மாலாதனார்
அஞ்சிலஞ்சியார்
அஞ்சிலாந்தையார்
அண்டர்மகன்குறுவழுதி
அணிலாடுமுன்றிலார்
அம்மள்ளனார்
அம்மூவனார்
அரிசில்கிழார்
அழிசிநச்சாத்தனார்
அறிவுடைநம்பி
ஆதிமந்தியார்
ஆதிவாயிலார்
ஆலங்குடிவங்கனார்
ஆலத்தூர்கிழார்
ஆலம்பேரிசாத்தனார்
இளங்கீரனார்
இளந்திரையனார்
இளந்தேவனார்
இளநாகனார்
இளம்போதியார்
இளவெயினனார்
இளவேட்டனார்
இறையனார்

உக்கிரப்பெருவழுதி
உல்லோச்சனார்
ஐயூர்முடவனார்
ஓரம்போகியார்
கங்குல்வெள்ளத்தார்
கடுகுபெருந்தேவன்
கடுவன்மள்ளன்
கடுவனிளமள்ளனார்
கண்ணகனார்
கண்ணங்கொற்றனார்
கண்ணம்புல்லனார்
கணக்காயனார்
கயத்தூர்கிழார்
கயமனார்
கவுணியனார்
கள்ளம்பாளனார்
காசிபன்கீரனார்
காப்பியஞ்சேந்தனார்
காமஞ்சேர்குளத்தார்
காரிக்கண்ணனார்
காவன்முல்லைப்பூதனார்
கிள்ளிமங்கலங்கிழார்
கீரங்கீரனார்

குட்டுவன்கீரனார்
குடவாயிற்கீரத்தனார்
குண்டுகட்பாலியாதனார்
குதிரைத்தறியனார்
குளம்பனார்
குப்பைக்கோழியார்
குமட்டூர்க்கண்ணனார்
குறுங்குடிமருதன்
குன்றியனார்
குறுங்கோழியூர்கிழார்
கூகைக்கோழியார்
கூடலூர்க்கண்ணனார்
கொட்டம்பலவனார்
கொடிஞாழன்மாணிபூதனார்
கொள்ளம்பக்கனார்
கொற்றங்கொற்றனார்
கொற்றனார்
கோவூர்க்கிழார்
சல்லியங்குமரனார்
சாத்தந்தையார்
சிறுகருந்தும்பியார்
சிறைக்குடியாந்தையார்
செங்கண்ணனார்
செங்குன்றூர்கிழார்
சேகம்பூதனார்
தாமோதரனார்
தாயங்கண்ணனார்
திப்புத்தோளார்
தும்பிமோசிகீரன்
தூங்கலோரியார்
தொல்கபிலர்
நக்கண்ணையார்
நத்தத்தனார்
நப்பாலத்தனார்
நப்பூதனார்
நம்பிகுட்டுவனார்
நல்கூர்வேள்வியார்
நல்லந்துவனார்
நல்லாவூர்கிழார்
நல்விளக்கனார்
நற்சேந்தனார்
நற்றங்கொற்றனார்
நற்றமனார்
நாகன்றேவனார்
நெடுங்கழுத்துப்பரணர்
நெய்தற்றத்தனார்
பனம்பாரனார்
பாண்டியன்மாறன்வழுதி
பாலைபாடியபெருங்கடுங்கோ
பிரமசாரி
பிரான்சாத்தனார்
பூதங்கண்ணனார்
பூதன்றேவனார்
பூதம்புல்லன்
பெருங்கண்ணனார்
பெருங்கவுசிகனார்
பெருங்குன்றூர்க்கிழார்
பெருஞ்சித்திரனார்
பெருந்தலைச்சாத்தனார்
பெரும்பதுமனார்

பெருவழுதி
பேராலவாயிலார்
பொதும்பில்கிழார்
பொத்தியார்
பொன்மணியார்
போதனார்
மார்க்கண்டேயனார்
மாறன்வழுதி
மீளிப்பெருந்தூண்டிலார்
மீனெறிதூண்டிலார்
மோசிகொற்றன்
வடமவண்ணக்கர்
வன்பரணர்
வாலம்பேரிசாத்தனார்
விட்டகுதிரையார்
வெண்கொற்றன்
வெண்பூதன்
வெண்மணிப்பூதியன்
வெள்ளைக்குடிநாகனார்
வேட்டக்கண்ணன்

மற்றைப் புலவர்

அகோரதேவர்
அம்பலவாணக்கவிராயர்
உலகநாதர்
உலகுடையநாயனார்
கடவுண்மாமுனிவர்
கவிராசபண்டிதர்
கவிவீரராகவமுதலியார்
காங்கேயர்
குணசாகரர்
குமாரதேசிகர்
குலசேகரபாண்டியர்
கோனேரியப்பமுதலியார்
சத்திமுற்றப்புலவர்
சத்தியஞானி
சபாபதிமுதலியார்
சர்க்கரைப்புலவர்
சிவவாக்கியர்
சுப்பிரதீபக்கவிராயர்
சேந்தனார்
தண்டியாசிரியர்
தாண்டவமூர்த்தி
தாண்டவராயர்
திருப்பாற்கடனாதர்
திருவரங்கத்தமுதனார்
தோலாமொழிப்புலவர்
நமச்சிவாயக்கவிராயர்
நல்லாதனார்
நல்லைநாதர்
பத்திரகிரியார்
பரமானந்தர்
மதுரகவியாழ்வார்
மனவாசகங்கடந்தார்
மார்க்கசகாயதேவர்
வரதுங்கபாண்டியர்
விசுவநாதப்பிள்ளை
வீரபாண்டியப்புலவர்.

இங்ஙனம் இன்னும் பலர் எடுத்துக்கூறற்குரியராய் விளங்குகின்றனர். ஆங்காங்குக் காண்க.

வினாக்கள்

I

1 — 50

